
ரசிகமணி
டி.கே.சிதம்பரநாத முதலியார்



வித்வான் ல. சண்முகசுந்தரம்

ரசிகமணி

டி. கே. சிதம்பரநாத முதலியார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூஸியம், புது தில்லி.)

ரசிகமணி

டி. கே. சிதம்பரநாத முதலியார்

நூலாசிரியர்:

வித்வான் ல. சண்முக சுந்தரம்

சாகித்திய அக்காதெமி

Rasikamani *T. K. Chithambaranatha Mudaliar*—Monograph in Tamil by La. Shanmugha Sundaram, Sahitya Akademi, New Delhi (1987), Rs. 12.

முதல் வெளியீடு: 1987

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:

ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001

கிளை அலுவலகங்கள்:

29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018

பிளாக் V-B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா 700 029

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014.

ரூ. 12.

அச்சிட்டோர்: டயோசிசன் அச்சகம், சென்னை 600 007

உள்ளடக்கம்

1. பிறப்பு—அவதாரம்

தமிழ் 1057-ஆம் ஆண்டு ஆவணி மாதம் 4-ஆம் தேதி வியாழக்கிழமை—ஸ்ரீவிஹு வருடம்—இன்றைக்குச் சரியாக நூற்று நான்கு வருடங்களுக்குமுன் அவதரித்தார்கள், மகான் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

ரசிகமணி டி. கே. சி. திருஅவதாரம் செய்த நாளை இங்கிலீஷ் காலண்டர்படி சொல்வதானால் கி.பி. 1881-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் பதினெட்டாம் தேதியாகும்.

ரசிகமணியின் அவதார நட்சத்திரம் ரோகிணி. ஸ்ரீ ஜயந்தி என்று நாம் கொண்டாடுகிற புண்ணிய நாள்.

தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியார் பிறந்தது இதே ரோகிணி நட்சத்திரம். ஸ்ரீ ஜயந்தி நாள்தான். மகாவிஷ்ணுவாகிய கண்ணபிரான் பிறந்ததும் இதே ரோகிணி நட்சத்திரத்தில் தான்—ஸ்ரீ ஜயந்தி நாள்தான்.

இன்னும் எத்தனையோ பேர் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறார்கள், பிறக்கப் போகிறார்கள். ஆனாலும் தாம் பிறந்த நட்சத்திரத்திற்கும் நாளுக்கும், அழகையும் ஆனந்தத்தையும் சிரஞ்சீவித்வத்தையும் கொடுத்த பெரியார் ரசிகமணி டி. கே. சி. அவருக்கு இணை அவரேதான்.

உண்மை என்பது ஒன்று. அது ஒன்றுதான் உண்மை. அந்த உண்மையானது தன்னைப் பார்ப்பதற்கு ஆசைப்படுகிறது. ஆவலோடு மேலும் மேலும் உணர்ந்து பார்க்கிறது. அப்பொழுது உண்மை அறிவுமயமாக இருக்கிறது. அறிவுமயமாய் நின்று பார்த்துப் பார்த்து ஆனந்தமயமாய்ப் பொங்குகிறது உண்மை.

இப்படியாக ஒரே உண்மை அறிவு, ஆனந்தம், உண்மை என்று மூன்று கோலங்களில் தரிசனம் கொடுக்கிறது. மேலே குறிப்பிட்ட சத்தியம், ஞானம், இன்பம் ஆகிய மூன்றும் ஒன்றாய் நின்று சச்சிதானந்தம் என்றும் அவதாரம் எடுக்கிறது.

சச்சிதானந்தம் என்னும் அற்புத தத்துவமே சிதம்பரநாதன் என்னும் பெயரில் (18-8-81 ஸ்ரீ ஜயந்தியில்) மனித உருத்தாங்கி வந்தது.

ஆயிரக்கணக்கான வருடங்களாக ரோகிணி நட்சத்திரம் தவம் செய்தது. கண்ணுக்கும் மனதுக்கும் நிறைந்த—யாதொரு குறையும் இல்லாத—பரிபூரணமாய் நிறைந்த ஒரு உத்தமனைப் பெற்றெடுத்து வளர்க்கவேண்டும் என்று ரோகிணி நட்சத்திரம் தவம் செய்தது. சச்சிதானந்தத்தையே தன் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து மடியில் வைத்து வளர்க்கும் தாயாக வேண்டும் என்று தவம் இருந்தது ரோகிணி நட்சத்திரம்.

ரோகிணி நட்சத்திரத்தின் தவம் 18-8-81 வியாழக்கிழமை நிறைவேறியது. ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் அன்று பிறந்தார்கள்.

ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் என்னும் மந்தி ரச்சொல் புதுப்புது அவதாரம் எடுத்து தமிழ் மக்களை உற்சாகப் படுத்தியது.

லட்சக்கணக்கில் ஆடவர்களும் பெண்டிரும் குழந்தைகளும் ஆவலோடு அந்த மந்திரச் சொல்லை ரசிகமணி என்று சொல்லி இன்புறுகிறார்கள். டி. கே. சி. என்றும் சொல்லி இன்புறுகிறார் கள். ரசிகமணி டி. கே. சி. என்றும் சொல்லி இன்புறுவதுண்டு.

ரசிகமணியின் தந்தையார் பெயர் தீத்தாரப்ப முதலியார். தீத்தாரப்ப முதலியாரும், அவர்களுடைய தந்தையார், பாட்டனார் முதலியவர்களும் தென்காசியைச் சார்ந்தவர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசி நீர்வளமும் நிலவளமும் நிறைந்த ஊர். மந்தமாருதம் என்று மனங்குளிர அனுபவிக்கும் தென்றல் காற்றும், உள்ளத்துக்கும் உடம்புக்கும் புத்துயிர் கொடுக்கும் அருவிகளும் நிறைந்த குற்றால மலையின் சாரலில் உள்ள ஊர் தென்காசி. குற்றாலக் குறவஞ்சி என்னும் நாடகக்கவியை இயற் றிய திரிகூடராசப்பக் கவிராயர் பிறந்து வளர்ந்த மேலகரம் என்னும் ஊர் தென்காசியின் அருகில் இருக்கிறது. தென்காசிக் கும் குற்றாலத்துக்கும் இடையில் இருக்கிறது மேலகரம்.

''சிற்றாறு என்னும் ஓர் பேராறு'' என்று போற்றப்படுகிற சித்ரா நதிக்கு இக்கரையில் இருக்கிறது தென்காசி. அக்கரையில் இருக்கிறது மேலகரம்.

ஐந்நூறு வருடங்களுக்குமுன் ஸ்ரீ அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்னும் அரசன் இருந்து ஆண்ட ராஜதானி நகரம் தென்காசி. வானளாவிய கோபுரத்தோடு பிரமாண்டமான கோவிலை (உலகநாயகர் ஆலயத்தை) அந்த மன்னன் கட்டி உதவினான். பக்தி, பண்பாடு, ஞானம் மூன்றும் ஒன்று சேர்ந்து

உலகிற்கே தன்னை இனங்காட்ட எழுந்து நிற்பதுபோல் கம்பீர மாக நிற்கிறது உலகநாயகர் திருக்கோவில்.

குற்றுலத்தில் குற்றுலநாதர் கோவில்—கூத்தப்பிரான் சந்நிதி. பைம்பொழிலில் முருகப்பெருமான் திருக்கோவில். இப்படியாகத் தென்காசியும் அதன் சுற்று வட்டாரமும் பண்பாட்டு மயமாய்ப் பொங்கித் ததும்பியது.

கோவிலும், கோபுரமும், தேரும், திருவிழாவும், கவியும், இசையும், பரதநாட்டியமும், ஓவியமும், சிற்பமும் எல்லாம் சேர்ந்து மேளதாள முழக்கத்தோடு இருந்தது தென்காசி. கலைக்கும் பண்பாட்டுக்கும் நாயகமாய் விளங்கியது தென்காசி நகரம்.

தென்காசி நகரில் உள்ள சம்பாத் தெரு என்னும் தெரு ஒரு சிறிய தெரு. ஆற்றங்கரையில் அமைந்த தெரு. வானுற ஓங்கிய மரங்களும் செடிகொடிகளும் நிறைந்த தோப்பினுல் சூழப்பட்டு இயற்கை அன்னை கொலுவிருக்கும் வீதியாக இருந்தது சம்பாத் தெரு.

சம்பாத் தெரு என்னும் சிறிய வீதியில் உள்ள ஒரு வீடுதான் ரசிகமணி டி. கே. சியின் தந்தையார்—ஏன் பாட்டனர் காலம் முதல் வாழ்ந்த வீடாகும்.

ரசிகமணியின் பாட்டனருக்கு முந்திய தலைமுறையினர் தென்காசியை ஒட்டிய களங்காடு என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர்கள். இன்றும் களங்காடு என்னும் அச்சிற்றூரில் டி. கே. சி. குடும்பத்தார்க்குக் குலதெய்வம் இருக்கிறது. அத்தெய்வத்திற்கு வழிபாடும் பூசையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

டி. கே. சியின் முன்னேர்கள்—அதாவது பாட்டனருக்கு முந்திய தலைமுறையினர் வாழ்ந்தது தென்காசியை ஒட்டிய களங்காடு என்னும் சிற்றூரில். டி. கே. சியின் பாட்டனர் காலம் முதல் வசித்தது தென்காசியில். டி. கே. சி. பிறந்ததோ ஸ்ரீவில்லிபுத்தூரில்.

டி. கே. சியின் தாயார் மீனம்மாள் அண்ணி பிறந்தது ஸ்ரீவில்லிபுத்தூரில். திருமதி மீனம்மாள் அண்ணி பிறந்த குடும்பம் பெரிய குடும்பம். செல்வம், கல்வி, பண்பாடு, செல்வாக்கு எல்லாவற்றிலும் பெரிய குடும்பம். இடம், பொருள், ஏவல் என்னும் வசதி முழுவதும் நிறைந்த குடும்பத்தாரை அந்தக் காலத்தில் ஜமீன் என்பார்கள், குறுநில மன்னர் என்பார்கள், பிரபு என்றும் சொல்வார்கள். அப்படி ஜமீன் தோரணையில் இருந்த உயர்ந்த குடும்பம் மீனம்மாள் அண்ணி பிறந்த வீடு.

மீனம்மாள் அண்ணியுடன் பிறந்த சகோதரர்கள் பத்துப் பேர். மீனம்மாள் அண்ணிக்கு அண்ணன்மார் ஐவர். மீனம் மாள் அண்ணிக்கு தம்பிமார் ஐவர். முன்னும் பின்னுமாக பத்து சகோதரர்களுக்கு மத்தியில் அரிய ரத்தினம் பிரகாசிப்பது போல் பிரகாசித்த அருங்குணவதி மீனம்மாள் அண்ணி.

அந்த மீனம்மாள் அண்ணியே டி. கே. சியின் தாயார். டி. கே. சிக்கு ஒரு தமக்கையாரும், ஒரு தமையனாரும் இருந் தார்கள். தமக்கையார் பெயர் கோதை அண்ணி. தமையனார் பெயர் குற்றாலலிங்க முதலியார். டி. கே. சி. தான் கடைக்குட்டி. தீத்தாரப்ப முதலியார், மீனம்மாள் அண்ணி இவர்களுக்குச் செல்லக் குழந்தை டி. கே. சி. இவர்களுக்கு மட்டுமா, பத்துத் தாய்மாமன்மார்களுக்கும் அவர்கள் குடும்பத்தார் அத்தனை பேர்களுக்கும் டி. கே. சி. ஒரு செல்லக் குழந்தை.

ஏன், தமையனார் குற்றாலலிங்க முதலியாருக்கும், தமக்கை யார் கோதை அண்ணிக்கும்கூட டி. கே. சி. ஒரு செல்லக் குழந்தைதான்.

செல்லத்தம்பியே தான்; அப்படி உற்றார் கூட்டமும், உற வினர் கூட்டமும் அன்பில் போட்டுப் புரட்டிப் புரட்டி எடுக்கச் செல்லமாய் வளர்ந்த குழந்தைதான் ரசிகமணி டி. கே. சிதம்பர நாத முதலியார்.

டி. கே. சி. தன் தாய் வழிப்பாட்டனார் வீட்டில் ஸ்ரீவில்லி புத்தூரில் பிறந்தார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வளமான ஒரு பெரிய ஊர். வைஷ்ணவ சமயத்து ஞானிகள்—ஆழ்வார்களில் தலைமையானவர், முதன்மை யானவர், பெரியாழ்வார். கண்ணபிரானை அவர் அனுபவித்துப் பாடி உள்ள பாசுரங்கள் தெய்வீகமானவை. மாசு மறுவற்ற ஞானமும், எல்லை இல்லாத பக்தியும் பெரியாழ்வார் பாடல்களில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.

பெரியாழ்வார் பிறந்து வளர்ந்து பெருமாளுக்குச் சேவை செய்தது ஸ்ரீவில்லிபுத்தூரில். பெரியாழ்வார் பல பாசுரங்களை அருளிச்செய்ததும், அப்பாசுரங்களால் இறைவனை அர்ச்சனை செய்ததும் ஸ்ரீவில்லிபுத்தூரில்.

கண்ணனே என் காதலன், அவனே என் கணவன் என்ற ஒருமை உணர்ச்சியோடு வாழ்ந்து தேனினும் இனிய பாசுரங்களை அருளிச்செய்தவர் ஆண்டாள். சூடிக்கொடுத்த நாச்சியாராகிய ஆண்டாள் பிறந்து வாழ்ந்தது ஸ்ரீவில்லிபுத்தூரில்.

பிறப்பு—அவதாரம்

திருமாலுக்கு இருக்கும் பெருமாள் கோவில்போல, திருமால் மேல் பக்தி பரவசத்தோடு பாடிய ஆண்டாளுக்கும் தனியான பெரிய கோவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கிறது. வழிபாடு, தேர், திருவிழா எல்லாம் ஆண்டாளுக்கும் நடக்கின்றன. தினந் தோறும் நடைபெறுகிற நாச்சியார் கோவில் வழிபாட்டு முறை களும், ஆண்டுதோறும் இடைஇடையே நடைபெறும் திருவிழா முறைகளும் தமிழையும், தமிழ்ப் பாடல்களையும் மதித்து வழி படுகிற பண்பாட்டுக்கு ஒரு சின்னமாகும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பக்தியும் ஞானமும் பூத்துக்குலுங்கும் ஊர். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் மதித்து வழிபடும் ஊர். நீர்வளம், நிலவளம் மிக்க செழிப்பான ஊர். நெல், கரும்பு, வாழை, பருத்தி முதலிய பொருள்களுக்கு ஒரு களஞ்சியம் என்று சொல்லலாம் ஸ்ரீவில்லிபுத்தூரை.

வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் அழ காகவும் கலைநயத்தோடும் செய்து கொடுக்கும் தொழிலாளிகள் நிறைந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர். மண்பாண்டங்கள், வெண்கல பாத்திரங்கள், ஆடை அணிகள், எண்ணெய், நெய் முதலியவை, பூ வேலை, மருந்து, கட்டிடத் தொழில், அலங்காரத் தொழில் இப்படி வாழ்க்கைக்கு இன்றியமையாத அவ்வளவு பொருள்களை யும் நேர்த்தியாக உற்பத்தி செய்து வழங்கும் மக்கள் நிறைந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர்.

இசை, நடனம், நாடகம், பக்தி, உபந்யாசம் முதலிய துறைகளும் நிறைந்த இடம் ஸ்ரீவில்லிபுத்தூர்.

விவசாயம், தொழில், கல்வி, கலை, பக்தி எல்லாவற்றினும் சிறந்த ஞானபூமியாக விளங்கியது ஸ்ரீவில்லிபுத்தூர்.

அந்த ஸ்ரீவில்லிபுத்தூரில்—தாய்வழிப் பாட்டனார் வீட்டில் பத்துத் தாய்மாமன்மார்களுக்கு மத்தியில், ஆரவாரமும் கோலா கலமும் நிறைந்த பெரிய குடும்பத்தில் ரசிகமணி டி. கே. சிதம்பர நாத முதலியார் பிறந்தார்கள்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தின் கொலுமண்டபமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் கண்ணபிரான் பிறந்த ஸ்ரீ ஜயந்தியில்—ஜன்ம நட்சத்திரமாகிய அதே ரோகிணியில், டி. கே. சி. பிறந்தார்கள். இந்த அவதாரம் நூற்று நான்கு வருடங்களுக்குமுன் நடந்த ஒரு அற்புதம்.

கரைபோட்டுத் தடுக்கமுடியாத அன்பாலும், உள்ளத்தை உருக்கி உணர்ச்சிமயமாகப் பொங்கவைக்கும் இசையாலும்,

பொய்மையும் பித்தலாட்டத்தையும் களைந்தெறிந்து உண்மையை நிலைக்கவைக்கும் செயலாலும் கண்ணபிரான் நம் வாழ்க்கைக்கு உயிர் கொடுக்கிறார். ஒளி கொடுக்கிறார். அருள் கொடுக்கிறார். டி. கே. சியும் தம் அன்பாலும் கலையாலும் செயலாலும் வாழ்க்கைக்கு உயிரும் ஒளியும் கொடுக்கிறார். அருள்பாலித்து உதவுகிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரையும் அதன் வளத்தையும் அனுபவித்த பக்தர் ஒருவர்,

''கோதை பிறந்தஊர்;
  கோவிந்தன் வாழும்ஊர்;
சோதி மணிமாடம்
  தோன்றும்ஊர்; நீதியால்
நல்லபத்தர் வாழும்ஊர்;
  நான்மறைகள் ஓதும்ஊர்;
வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர்''

என்று பாடி இருக்கிறார். பக்தர் பூர்வமானவர். டி. கே. சி. பிறப்பதற்கு பல ஆண்டுகள் முன்பே பிறந்தவர். டி. கே. சி. காலத்தவராக இருந்தால் கவிஞர் என்ன செய்திருப்பார்? கோதை, கோவிந்தன் இவர்களோடு ரசிகமணி டி. கே. சியையும் சேர்த்து வைத்துப் பார்ப்பார். அனுபவிப்பார். பாடலிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், கோவிலிலும், ஆண்டாள் மேலும், எம்பெருமான் மேலும் ஒரு புதிய ஒளி, கலைஞான ஒளி வந்து விழுந்து பிரகாசிக்கும்படியாக அவரிடமிருந்து பாடல் உதித்திருக்கும்.

டி. கே. சி. பிறந்த பதினொருவது நாள் பெயர்சூட்டு விழா நடந்தது. உல்லாசமும், மகிழ்ச்சியும் நிறைந்த அந்த விழாவில் சிதம்பரநாதன் என்று குழந்தைக்குப் பெயர்வைத்து மகிழ்ந்தார்கள்.

மூன்று மாதங்கள் கழிந்தபின் மீனம்மாள் அண்ணி தன் செல்வக் குமரன் சிதம்பரநாதனை எடுத்து அணைத்துக்கொண்டு தென்காசிக்கு வந்து சேர்ந்தார்.

டி. கே. சியின் தந்தை திரு. தீத்தாரப்ப முதலியாருக்கு சகோதர சகோதரிகள் இல்லை. அவர் ஒருவர்தான். ஆனால், தீத்தாரப்ப முதலியாருடைய தந்தையாருடன் பிறந்தவர்கள் இருவர். அதாவது டி. கே. சிக்குப் பெரியப்பா, சித்தப்பா என்றோ அத்தை என்றோ இல்லை. ஆனால் பெரிய பாட்டனார், சிறிய பாட்டனார் என்று உண்டு. பெரிய பாட்டனார் மகள்—

முறைக்கு அத்தைதானே. அந்த அத்தையை, ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்த டி. கே. சியின் தாய்மாமன்மார் பத்துப் பேரில் மூத்த மாமனுருக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தனர்.

அந்தப் பெரிய மாமனுருக்கு இரண்டு புதல்வர்கள். இருவரில் இளையவருக்கு டி. கே. சியின் தமக்கை, கோதை அண்ணியைத் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.

தென்காசியில் டி. கே. சியின் குடும்பம் வசதியான குடும்பந்தான். நன்செய், புன்செய், தோப்பு, பால், நெய், தங்கம், வெள்ளி, ஆபரணம், கல்வி, சுற்றம், நட்பு, பணியாளர், செல்வாக்கு எல்லாம் நிறைய இருந்தது.

தென்காசியிலும் தென்காசிச் சுற்று வட்டாரத்திலும் உள்ள மக்களுக்கு டி. கே. சி. குடும்பத்தைப் பற்றி நன்கு தெரியும். அதனுல் எல்லோரும் டி. கே. சி. குடும்பத்தை மதித்து வைத்திருந்தார்கள். பொது நிகழ்ச்சிகள், விசேட காரியங்கள் நடைபெறும் இடங்களில் டி. கே. சி. குடும்பத்தார்க்கு தனித்த வரவேற்பும் முதல் மரியாதையும் தொடர்ந்து இருந்து வந்தன.

டி. கே. சியின் குடும்ப நிர்வாகம் முழுவதும், வரவு செலவு முழுவதும் தமையனுர் குற்றுலலிங்க முதலியார் வசமே இருந்தது. குற்றுலலிங்க முதலியார் துணிச்சலும் ஊக்கமும் நிறைந்தவர்கள். சொத்து முழுவதையும் திறம்பட நிர்வகித்து வந்தார்கள். திருக்குற்றுலம் கோவிலில் பல ஆண்டுகள் தொடர்ந்து தர்ம கர்த்தாவாகவும் இருந்தார்கள். கோவில் நிர்வாகத்தைச் சுத்தமாகவும் திருத்தமாகவும் நடத்தி வந்தார்கள்.

உயர்ந்த குடிப்பிறப்பு, செல்வம், அதிகாரம் ஆகியவற்றேடு நேர்மையும், ஒழுங்கும், ஊக்கமும் சேர்ந்து பிரகாசித்தால் அதற்கு ஒரு தனி சோபை உண்டாகிவிடும். மக்களுக்கு அதன்மேல் மரியாதை வரும். பக்தியே வந்துவிடும். பயத்திலிருந்து உண்டாகிறது இல்லை அது. பண்பிலிருந்து உண்டாகிற பக்தி இது.

தென்காசிக்கு பக்கத்தில் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது கடுவாய் அகற்றி என்னும் ஊர். அந்தக் கிராமம் டி. கே. சி. குடும்பத்துக்குச் சொந்தமானது. அங்குள்ள வயல், தோப்பு முதலியவற்றைப் பார்த்துவிட்டு ஒருநாள் குற்றுலலிங்க முதலியார் வில்வண்டியில் வருகிருர். தன் சகோதரியின் மகன் தீத்தாரப்பன் என்னும் இளைஞனும் வண்டியில் அம்மானுடன் வருகிருர். வண்டி தென்காசியை நெருங்கிவிட்டது. சிற்றுற்றைக் கடக்கவேண்டியதுதான் பாக்கி. சிற்றுற்றுப் பாலத்தில் நுழைந்து

விட்டது வண்டி. அதே நேரத்தில் சிற்ருற்றுப் பாலத்தில் எதிர்ப் பக்கம் இருந்து ஒரு கூட்டம் வருகிறது. இறந்துபோனவரை வைத்துக் கட்டிய பாடையைச் சுமந்துகொண்டு கூட்டம் பாலத்துள் நுழைந்துவிட்டது. சிற்ருற்றுப் பாலம் குறுகலானது. வண்டி ஒன்று வந்துவிட்டால் ஆள்கூட விலகமுடியாது. அவ்வளவு குறுகலானது சிற்ருற்றுப் பாலம். இதில் ஒரு கூட்டமே எதிர்த்திசையிலிருந்து வருகிறதென்ருல் வண்டி எப்படிப் போக முடியும்? அதனுல் வண்டிக்காரன் வண்டியை நிறுத்தினுன். குற்ருலலிங்க முதலியார் வண்டியைவிட்டு இறங்கினுர். இளைஞன் தீத்தாரப்பனும் இறங்கினுர்; இருவரும் வண்டியைப் பின்னுக்குக் கொண்டுபோக வேண்டியதுதான் என்று செயல்பட முனைகிருர்கள்.

இன்னுர் வீட்டு வண்டி என்று கூட்டம் தெரிந்துகொள்கிறது. பாலத்துள் வந்த கூட்டம் பின்வாங்கி இடம் கொடுத்து விலகி நிற்கிறது. கூட்டத்திலிருந்து ஓடிவந்த ஒருவன் ''வண்டி போகட்டும், வண்டி போனபின் ஈம ஊர்வலம் போய்க்கொள்ளும்'' என்று சொல்கிருன்.

குற்ருலலிங்க முதலியாருக்கு மனதுக்கு மிகவும் இது சங்கடமாகத்தான் இருந்தது. ஆனுலும் கூட்டம் பிடிவாதமாக, தன் நிலையிலேயே நின்றதால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

முதலில் பாலத்தில் வண்டி தடதடவென்று ஓடியது. அதுவரை காத்திருந்த ஊர்வலம் அதன்பின் மளமளவென்று போனது.

இப்படி ஒரு செல்வாக்கு டி. கே. சி. குடும்பத்திற்கு இருந்தது.

2. இளமையும் பள்ளிக்கூடமும்

டி. கே. சிக்கு வயது ஐந்து ஆனவுடன் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்தார்கள்.

பள்ளிக்கூடம் திண்ணைப் பள்ளிக்கூடந்தான். பெஞ்சு, நாற்காலி, கரும்பலகை ஒன்றும் இல்லை. வெறும் கூரைவேய்ந்த குடிசைதான் பள்ளிக்கூடம். தரையில் மணலைக் கொட்டிப் பரப்பி இருக்கும். மாணவர்கள் உட்காருவது அதில்தான். ஆசிரியர் உட்காருவதும் அதே மணலில்தான். மாணவர்களுக்குப் பாடம் தமிழ்ப் பாடல்களும், கணக்கும் ஆக இரண்டுமே. விவேக சிந்தாமணி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நீதிநெறி விளக்கம் முதலிய நீதிப்பாடல்களை ஆசிரியர் பாடிக் காட்டுவார். மாணவர்களும் ஆசிரியருடன் சேர்ந்து பாடுவார்கள். பிறகு பொருள் சொல்லி விளக்குவார். விஷயம் ஒருவாறு விளங்கும். விஷயம் அரைகுறையாக விளங்கினாலும் விளங்காவிட்டாலும் பாட்டை ஆசிரியர் பாடுகிற சந்தம், மெட்டு எல்லாம் மனதில் அப்படி அப்படியே நின்றுவிடும். பாட்டு மனப்பாடம் ஆகிவிடும்.

கணக்கும் அப்படியே. கூட்டல், வகுத்தல், பெருக்கல், குழிப்பெருக்கம், ஈவு ஆகிய கணித அம்சம் ஒவ்வொன்றையும் ஒரு குறிப்பிட்ட ராகத்தில்—சந்தத்தோடேயே ஆசிரியர் பாடிக் காட்டுவார். பிள்ளைகளும் சேர்ந்து பாடுவார்கள். கணிதத்திலுள்ள வாய்ப்பாடுகள் எல்லாம் மாணவர்கள் மனதில் அப்படி அப்படியே நிற்கும்.

பிள்ளைகளுக்கு, யூனிபாம் டிரஸ் கிடையாது. சிலேட்டுக் கிடையாது. புத்தகம் கிடையாது. நோட்டுச் சுமை கிடையாது. பேனா, காம்பஸ் பாக்ஸ் ஒன்றும் இல்லைதான்.

ஏடும் எழுத்தாணியுமே உண்டு. முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். பிறகு ஏட்டில் எழுத்தாணி வைத்து எழுதிப் பழகுவார்கள். திண்ணைப் பள்ளிக்கூடம் என்றால் இது இப்படித்தான். தமிழகம் முழுவதும் இப்படித்தான் திண்ணைப் பள்ளிக்கூடம் நடந்து வந்தது.

இங்கிலீஷ் படித்த வாத்தியார்கள் அந்தக் காலத்தில் மிகக் குறைவு. தம் குழந்தைகள் இங்கிலீஷ் படிக்கவேண்டும் என்று விரும்புகிற பெற்றோர்களும் அந்தக் காலத்தில் குறைவுதான்.

வசதி உள்ள குடும்பத்தார் தமது பிள்ளைகள் இங்கிலீஷ் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அதற்காக இங்கிலீஷ் தெரிந்தவர்களைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்கள்.

இங்கிலீஷ் படித்த வாத்தியார் சும்மா இருக்கமாட்டார். அவர் தனக்குத் தெரிந்த அபத்தங்களை எல்லாம் கொட்டித் தொலைப்பார். கடுகளவுகூட சம்பந்தம் இல்லாத கதைகளை இது தான் சரித்திரம் என்று சொல்லித் தொலைப்பார். உணர்ச்சியோடு ஒட்டாத எதை எதையோ விஞ்ஞானம் இதுதான் என்று கொட்டிக் குவிப்பார். இவ்வளவையும் இங்கிலீஷ் வார்த்தைகளைப் போட்டே அமுது தீர்ப்பதும் உண்டு.

ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்பே இங்கிலீஷ் பாஷையானது, புறம்பான விஷயங்களின் கழுத்தைக் கட்டிக்கொண்டு இளஞ்சிறுர்களை கசக்கிப் பிழிந்திருக்கிறது. டி. கே. சியும் அதிலிருந்து தப்ப முடியவில்லை. திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று, இங்கிலீஷ் டியூசன் ஒன்று. ஆக இரண்டும் சேர்ந்து இளைஞன் சிதம்பரநாதனை அம்மியில் போட்டுத் தட்டி நொறுக்குவது போலத் தட்டி நொறுக்கி இருக்கிறது.

உற்சாகமான சிறுவன் சிதம்பரநாதன். துள்ளிக் குதிக்கும் மனம். சந்தோஷமான முகம். இளமையும் துடிதுடிப்பும் எழுந்து நிற்கும் வயது. ''அது என்ன, இது என்ன'' என்று பார்த்துப் பரவசம் அடைவதில் ஆவலும் வேகமும் கொண்ட பருவம். வேலை செய்வதிலும் விளையாடுவதிலும் தினவெடுக்கும் ரத்த ஓட்டம். சுறுசுறுப்பான கைகள். துருதுருப்பான கண்கள். சோம்பலே இல்லாத மூளை.

மேலே சொல்லிய பண்புகள் இளைஞர்களிடம் குடிகொண்டிருக்கும். சிதம்பரநாதனிடமும் அவ்வளவும் குடிகொண்டிருந்தன. அவ்வளவையும் மட்டந்தட்டி மழுங்க வைக்கவேண்டுமே! அப்படி மழுங்கவைக்கிற காரியந்தான்—படிப்பு, டியூசன்.

இந்த அலங்கோலத்தைப்பற்றி—சின்னஞ் சிறு வயதிலேயே பள்ளிக்கூடத்திலும் பாடப்படிப்பிலும் தான் பட்ட அவஸ்தையைப்பற்றி டி. கே. சி. சொல்வதைப் பாருங்கள்:

''எனக்கு ஐந்து வயதிருக்கும். என் தாயாரின் அன்பும் பரிவும் அப்படியே என் கண்முன் இன்னமும் நிற்கின்றன. வீட்டு வேலை முடிந்தபின் தினந்தோறும் மாலையில் பாரதம், திருவிளை யாடல் புராணம் வசன நூல்களை என் அன்னையார் எடுத்துப் படிப்பார். பக்கத்து வீட்டுப் பெண்கள் கதைகேட்க எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அவர்களுக்கு கதையை அனுபவித்த நயத்தோடு எடுத்துச் சொல்வார் என் அன்னையார். ராகத் தோடு வசன காவியத்தைத் தொடர்ந்து வாசிக்கிறதும் உண்டு. பெரியவர்களோடு நானும் கதையைக் கேட்பேன். கதையின் போக்கோடு போக்காய் உருண்டு ஓடிக்கொண்டிருப்பேன். விஷ யம், சம்பவம், உணர்ச்சி எல்லாம் கண்முன் அப்படி அப்படியே வந்து நிற்கும்.

கதை கேட்கும் நேரம் தவிர மற்ற நேரத்தில் ஏதாவது வேலை செய்வதில்தான் எனக்கு ஆசை. பத்து வயதிலேயே தென்னை மரத்தில் ஏறித் தேங்காய் பறித்துப் போட்டேன். தலையில் ஒரு தண்ணீர்க்குடம், கையில் ஒரு தண்ணீர்க்குடம். இப் படியாக ஒரே வேளையில் இரண்டு குடங்களை அனுயாசமாகக் கொண்டுவருவேன். அதில் எனக்கு அளவற்ற இன்பம். ஒரு நாள் ஒரு வண்டி நிறைய விறகைக் கொண்டு வந்து முற்றத்தில் தட்டினான் வேலைக்காரன். காளையை வண்டியில் பூட்டிவிட்டுப் போய்விட்டான். அப்பொழுது வீட்டில் நான் மட்டுமே இருந் தேன். வேறு ஒருவரும் இல்லை.

முற்றத்தில் குவிந்து கிடக்கும் விறகைப் பார்த்தேன். குவி யலைப் பார்க்கப் பார்க்க எனக்கு விறுவிறுப்பு ஏற்பட்டது. வேட் டியை மடித்துத் தார்ப்பாய்த்துக் கட்டினேன். விறகு முழு வதையும்—ஒரு துரும்புகூடப் பாக்கி இல்லாமல்—வண்டி விறகு முழுவதையும் சமையலறைக்குக் கொண்டு வந்தேன். சமைய லறையில் அமைத்திருந்த பரணில் விறகு முழுவதையும் ஏற்றி அடுக்கிவிட்டேன். தன்னந்தனியாய் நின்று செய்துவிட்டேன்.

சொந்தக்காரர் வீட்டுக்குப் போய்விட்டு வந்த என் அன்னை யார், வண்டி விறகு முழுவதையும் தன் மகன்—பத்து வயதுப் பாலகன் முற்றத்திலிருந்து சமையல் கட்டுக்குள் கொண்டு வந் திருக்கிறான். அதுமட்டும் அல்ல, பரண்மேல் ஏற்றி அழகாக அடுக்கியும் வைத்திருக்கிறான் என்பதை நினைத்து நினைத்து இன் புற்றாள்.

தாய்க்கு இதைவிட ஆனந்தம் தருகிற காரியம் வேறொன்றும் இருக்க முடியாதுதானே! அன்னையின் ஆனந்தத்தைவிட எனக்கு

ஆனந்தம். வேலை என்றால்—அது எவ்வளவு கடினமான வேலையாக இருந்தாலும் சரி அதைச் செய்யச் செய்ய என்னிடம் ஆனந்தம் பொங்கிக்கொண்டே இருக்கும்.

விளையாட்டிலும் எனக்கு அப்படி ஒரு ஆசை. தணியாத ஆசை. குற்றாலத்திற்குப் போவேன். நடந்தே போவேன். தடாகத்தில் விழுந்து விழுந்து குதிப்பேன். அருவியில் மாறிமாறி நீராடுவேன். அதுமட்டுமல்ல, பொங்குமா கடலுக்குப் போய், அதில் பாய்ந்து, முங்கி முழுகித் திளைப்பதில் எனக்கு ஒரே ஆனந்தம்.

விளையாட்டிலும் ஆனந்தம். வேலையிலும் ஆனந்தம். என் தாயாரும் மற்ற பெரியோர்களும் சொல்கிற சம்பவம், கதை இவற்றைக் கேட்டு அனுபவிப்பதிலும் ஆனந்தம். ஆனால் பள்ளிக்கூடமும் பாடமும் எனக்கு ஒரே கசப்புதான். ஒருநாளாவது பள்ளிக்கூடத்திலோ, படிப்பிலோ எனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை.

பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வரவேண்டியது. எனக்கு விளையாடுவதில் நோக்கம் இருக்கும். விளையாடுவதற்குச் சேக்காளிகள் இல்லை என்றால் ஏதாவது வேலை இருக்காதா என்று தினவெடுக்கும். ஆனால் சனியன்போல் டியூசன் வாத்தியார் வந்துவிடுவார். பண்டம் சாப்பிடக்கூட நேரம் இருக்காது. அப்படி விரட்டுவார்கள் என் தந்தையார். ''வாத்தியார் வந்து விட்டார். 'கிளம்பு', கிளம்பு! பாடத்தை எடு! டியூசனில் உட்காரு! படிபடி! படிப்பில் அக்கரை வேண்டாமா, விளையாட்டு ஓடியா போகிறது! புறப்படு புறப்படு'' என்று நச்சரித்து டியூசன் வாத்தியார் முன் நிறுத்திவைப்பார்கள் என் தந்தையார். வாத்தியார் கையில் சிக்கினபின் தப்பமுடியுமா? இரவு எட்டு மணி, எட்டரை மணி வரை ஒரே டியூசன்தான். இங்கிலீஷ் வாத்தியார் வந்து டியூசன் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போகவேண்டியது. அவர் எப்பொழுது போவார் என்று காத்துக் கொண்டிருப்பார் திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியார். அவர் கிளம்பியதும் இவர் வந்து உட்கார்ந்துகொள்வார். இப்படியாக டியூசன் டியூசன் என்றும், பாடம் என்றும் என்னைச் சித்திரவதையே செய்துவிட்டார்கள் என் தந்தையார்''.

''என்னையும் என் போக்கையும் பார்த்துப் பார்த்து என் தாய்க்கு என்மேல் ஒரே ஆனந்தம். என் தாயின் அன்பும் பிரியமும் என்னை அணு அணுவாக வளர்த்தன. ஆனால் என் தந்தையோ பாடம், டியூசன். இவைகளுக்குள்ளேயே என்னை மேலும்

மேலும் தள்ளினார்கள். என்னை அக்கம் பக்கம் பார்க்கவிடாமல் வாத்தியார் கைக்குள்ளேயே என்னைச் சிக்கவைத்தார்கள். அது என்னை அணு அணுவாகச் சிதைத்தது.''

பழைமையை நினைந்து ஆற்றாமைப்பட்டு இப்படி அடிக்கடி சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இதன் மூலம் குழந்தைகளின் மனநிலை என்ன என்று தெரிகிறது. அந்த மனநிலையைப் பள்ளிக்கூடமும், பாடத்திட்டமும் எப்படிக் குழப்பிவிடுகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது.

உண்மையான கல்வி என்றால் குழந்தைகளிடம் உள்ள மன நிலையை வளர்க்கவேண்டும். குழந்தைகளிடம் உள்ள சக்தியை வெளிக்கொண்டு வரவேண்டும். அந்த சக்தியானது மனித வாழ்க்கையை வளப்படுத்த உதவவேண்டும். ஆனால் கல்வியில் உண்மை இல்லை. அதனால் வெறும் விவரங்களை—வெறும் வார்த்தைகளை—வைத்து உருப்போடவைக்கிற வறட்டுச் சடங்காகப் போய் விட்டது கல்வி.

பள்ளிக்கூடம், பாடத் திட்டம் இவற்றில் தன்னை எப்பொழுதும் விடாமல் மாட்டவைக்கும் தந்தையின் காரியம் டி. கே. சிக்குச் சங்கடமாக இருந்தது. ஆனாலும் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியவில்லை. பள்ளிக்கூடப் பாடத்தை நெட்டுருப் போட்டுத் தொலைக்க வேண்டித்தான் இருந்தது. டியூசனிலும் முடங்கிக் கிடக்கவேண்டித்தான் இருந்தது. ஆனாலும் தம் தந்தையார் தனக்குச் செய்த பேருதவி ஒன்றை மறக்காமல் டி. கே. சி. அடிக்கடி நினைவுகூர்ந்து சொல்வார்கள்.

''நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபொழுது, சொந்தக்காரர் குடும்பங்களில் நடக்கும் கல்யாணங்களுக்கு என்னையும் அழைத்துக்கொண்டு போவார்கள். அந்தக் காலத்தில் கல்யாணம் தடபுடலாக நடக்கும். மூன்று நாள், நான்கு நாள், ஐந்து நாள்கூடத் திருமணச் சடங்குகள் நடக்கும். மாப்பிள்ளை அழைப்பு, பெண்ணழைப்பு, பட்டினப்பிரவேசம், நாதசுரம், வாணவேடிக்கை, நலுங்கு, ஊஞ்சல், விருந்து, வரவேற்பு, உபசரிப்பு இவை நடந்தவண்ணமாக இருக்கும்.

ஒருவார காலத்துக்கு கல்யாண வீடு கோலாகலமாக இருக்கும். விருந்தினர் கூட்டம் நிறைந்திருக்கும்.

கல்யாண வீடு என்றால் கதாகாலட்சேபமும், பரதநாட்டியமும் இருக்கும்.

கல்யாண வீட்டுக்குப் போவது என்றால் எனக்கு உற்சாகந்தான். ஆரவாரம் மிக்க கூட்டத்தைப் பார்க்கலாம். நல்ல

நல்ல கதைகளைக் கேட்கலாம், பரதநாட்டியத்தைப் பார்க்கலாம். இவை எல்லாம் எனக்குத் தெவிட்டாத அமிர்தமாக இருந்தது. அதனால் கல்யாண மாதம் எப்பொழுது பிறக்கும் என்று ஆவலோடு நான் எதிர்பார்ப்பேன். சொந்தக்காரர்கள் வீட்டில் அடிக்கடி திருமணம் நடைபெற வேண்டுமே என்று ஆசைப்படுவேன்.

என் தந்தை என்னைத் திருமண வீடுகளுக்கு அடிக்கடி அழைத்துப் போனது எனக்கு மிக்க பிரயோசனமாக இருந்தது. நான் படித்த உண்மையான படிப்பு திருமண வீடுகளில் பார்த்த அதிசயங்கள்தான். அத்துடன் கல்யாண வீடுகளில் ஓடி ஆடி வேலை செய்ய எனக்கு இடம் கிடைத்தது. கல்யாண வீட்டுக்குத் தேவையான தண்ணீரை இளைஞர்கள்தான் எடுத்துக்கொண்டு வருவார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்துகொள்வேன். அது எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. மேலும் பந்திக்கு இலை போடுவது, தண்ணீர் வைப்பது, பரிமாறுவது, இதுபோன்ற இன்னும் பல எடுபிடி வேலை செய்வதும் எனக்கு ஆனந்தமாக இருந்தது.

''வேலைக்கு வேலை, கலைக்குக் கலை'' என்று மனசோடு ஒட்டி காரியம் நடைபெறுவதால் திருமண காரியங்களுக்குப் போவதை நான் விரும்பினேன். கல்யாண வீட்டை விட்டு ஊருக்குப் புறப்படுவது என்றால் எனக்கு வேதனையாக இருக்கும்.

பாகவதர்கள் கதையை எடுத்தாள்கிற முறையும், கதையை விளக்குகிற நயமும், இடைஇடையே கதைக்கு உயிர் கொடுப்பதற்காகப் பாடுகிற பாடல்களும், பாடல்களை இசையோடும், அபிநயத்தோடும் பாடிக்காட்டுகிற பாங்கும், இழுத்த இழுப்பிற்கு எல்லாம் தமிழானது வளைந்து நெளிந்து வருகிற சுகமும் என்னைப் பரவசப்படுத்தின. எனக்கு அதுதான் உண்மையான படிப்பாக இருந்தது. நல்ல படிப்பாக இருந்தது. விளங்குகிற படிப்பாகவும் இருந்தது.

பரதநாட்டியமும் அப்படியே அழகாக விளங்கியது. நன்றாக இருந்தது. உண்மையில் அனுபவிக்க முடிந்தது. கல்யாண வீட்டு வேலை, பரதநாட்டியம், கதாகாலட்சேபம் இவற்றை அனுபவித்ததுபோல் பாடங்களில் ஒன்றைக்கூட நான் அனுபவித்தது இல்லை.''

தாம் இளமையில் கற்ற கல்வி பற்றி இப்படிச் சொல்கிற டி. கே. சி. அந்தக் காலத்தில் சமூகம் இருந்த நிலையையும் எடுத்துச் சொல்வார்கள். ''படாடோபம், ஆடம்பரம் இல்லாமல் அமைதி

யாகவும் ஆரோக்கியமாகவும் மக்கள் வாழ்ந்தார்கள். மக்களின் வாழ்க்கையில் எளிமை இருந்தது. இனிமை இருந்தது. உண்மை இருந்தது. அழகுமயமாக இருந்தது. அந்தக் காலத்து வாழ்க்கை'' என்று அழுத்தம் திருத்தமாகவே சொல்வார்கள்.

தொண்ணூறு வருடங்களுக்குமுன் தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்க்கைநிலையை நேருக்கு நேராகப் பார்த்து அனுபவித்த டி. கே. சியின் வாக்குமூலம் நமக்கு இன்று ஒரு கனவுபோல இருக்கிறது. அவ்வளவு மாற்றத்திற்கு ஆளாகிவிட்டது நம் வாழ்க்கை.

டி. கே. சி. சொல்வதை இனிக் கேட்போம்:

''நான் சிறுவனாக இருந்தபொழுது வீடுகளில் வெண்கல பாத்திரங்கள் பழக்கத்தில் இல்லை. பெரிய செல்வந்தர் வீடுகளில் தான் வெண்கல பாத்திரங்கள் இருக்கும். தண்ணீர் குடிப்பது கூடப் பெரும்பாலானவர் வீடுகளில் மண்கலயத்தில்தான். சட்டை, ரவிக்கை என்று ஒன்றும் இல்லை. வேட்டியும், துண்டும், சேலையுமே உடை. அவற்றை ஒவ்வொருநாளும் களைந்து நனைத்து நன்றாகத் துவைப்பார்கள். துவைத்ததைப் பிழிந்து உதறிக் கொடியில் காயப்போடுவார்கள்.

துவைத்துத் துவைத்துக் கட்டுவதால், வேட்டியிலும் துண்டிலும் பழுப்பு ஏறிவிடும்.

சாமான்கள் வைப்பதற்கு பீரோ என்பது கிடையாது. அடுக்களைப் பலகை என்று சுவருடன் பொருத்தி இருக்கும். அதில் தான் வீட்டில் உள்ள சாமான்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

காபி, டிபன் என்றெல்லாம் கிடையாது. பெரும்பாலான வீடுகளில் காலை ஆகாரம் பழையதுதான். கல்யாண வீட்டில் கூட காலைச் சாப்பாடு பழையதுதான்.

தம்பிடிக்கு மூன்று தீப்பெட்டிகள் வாங்கலாம். ஆனாலும் நூற்றுக்கு ஒருவர் இருவர்தான் தீப்பெட்டி வாங்குவார்கள். அவர்கள் வீட்டில்தான் அடுப்பு எரிந்துகொண்டே இருக்கும். அந்த வீட்டிலிருந்துதான் பக்கத்து வீட்டுக்காரர்கள் நெருப்பு எடுத்துப்போவார்கள். எருவட்டியையோ தேங்காய்ச் சிரட்டை (கொட்டாங்கச்சி)யையோ கொண்டுபோய், நெல் உமியைப் போட்டு அதில் தீக்கங்கை எடுத்துவைத்து நெருப்பைக் கொண்டு வருவார்கள். கங்கில் உள்ள நெருப்பு அணைந்துவிடாமல் பக்குவமாகக் கொண்டுவருவார்கள். அப்படிக் கொண்டுவந்த கங்கை வைத்தே தீப்பற்றவைப்பார்கள்.

தெருக்கடந்துபோய் ஊரார் பலர் நெருப்பெடுத்து வந்து அப்போதைக்கு அப்போது தீப்பற்ற வைத்துக்கொள்வது வழக்கம். பெரிய பணக்காரர் வீடு என்று சொல்லக்கூடிய ஒன்றிரண்டு இடங்களில்தான் நாள்தோறும் மூன்றுவேளையும் அடுப்பு எரியும். அதாவது மூன்று வேளையும் சமையல் நடக்கும். அந்த வீடுகளில் மட்டுமே தணல் இருந்துகொண்டே இருக்கும்.

நெருப்பு அப்படி ஒரு அரிய வஸ்துவாக இருந்தது. நெருப்பின் அருமையை உத்தேசித்தே ''குற்றம் செய்து வழக்குக்குக் கட்டுப்படாதவர் வீட்டுக்கு, நெருப்பும் நீரும் கொடுக்கக்கூடாது'' என்று தடைவிதித்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

''நீரும் நெருப்பும் தள்ளி வைத்தல்'' என்னும் தீர்ப்பு இதை ஒட்டியே வந்திருக்கிறது.

''ஒரு வீட்டில் காலை, நண்பகல், இரவு மூன்று வேளையும் சமையல் ஆகிறது. மூன்று வேளையும் அடுப்பு எரிகிறது என்றால் அது மிக்க வசதியான வீடுதான். ஒரு ஊரில் ஒரு வீடு அல்லது இரண்டு வீடுதான் அப்படி இருக்கும்.''

தமிழ்நாட்டில் சித்தன்வாழ்வு என்று ஓர் ஊர் இருந்தது. அனேகமாக அந்த ஊர் பழனியாகக்கூட இருக்கலாம். ஆயிரம் வருடங்களுக்குமுன் சித்தன்வாழ்வு என்னும் ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் சீமான்களாக இருந்தார்கள். எல்லோருடைய வீட்டிலும் மூன்று வேளையும் சமையல் நடந்தது. மூன்று வேளையும் அடுப்பு எரிந்தது. இப்படி ஓர் ஊர் முழுவதும் பிரபுக்கள் மயமாக இருப்பது பெரிய விஷயமே. இதைக் கவிஞர் ஒருவர் பார்த்தார், அனுபவித்தார்.

''சித்தன் வாழ்வு
இல்லம்தொறும் மூன்(று)
எரியுடைத்து''

என்று அனுபவத்தை ஆனந்தமாக எடுத்துச் சொன்னார்.

நான் சிறுவனாக இருந்தபொழுது பணப்புழக்கம் குறைவு. ஆனால் வாழ்க்கைக்குத் தேவையானவற்றில் பற்றாக்குறை இல்லை. என்னுடைய வாத்தியாருக்கு மாதச் சம்பளம் நான்கு ரூபாய்தான். இந்த நான்கு ரூபாயில் அவருக்குக் கோட்டுத்தான், ஜரிகைத் தலைப்பாகைதான். நெய், பால், காய், கனியோடு நல்ல சாப்பாடுதான். கோவில்தான், குளந்தான், உற்றார் உறவினர்களுடன் உறவுதான், மகிழ்ச்சிதான். மொத்தத்தில் வாத்தியாருடைய வாழ்க்கையில் குறை ஒன்றும் இல்லை. அவரும் அவர் குடும்பமும் கலகலப்பாகவே இருந்தார்கள்.

இளமையும் பள்ளிக்கூடமும்

நான்கு ரூபாய்ச் சம்பளத்தில் வாத்தியார் தாராளமாகச் செலவழித்தும் ஒரு ரூபாய் மிஞ்சிவிடும். அந்த ரூபாயைச் சீட்டுப்போட்டுச் சேர்த்து வந்தார்.

இப்போது நானூறு ரூபாய் ஐந்நூறு ரூபாய் என்று மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள்கூட நான்கு ரூபாய்ச் சம்பளத்தில் வாழ்ந்தவர்கள்போல் நிம்மதியாக வாழ முடியவில்லை! இப்பொழுது வாழ்க்கைக்கு வேண்டியவை என்ன? வேண்டாதவை என்ன? என்று தெரியவில்லை. வேண்டியவற்றைவிட வேண்டாதவற்றிலேயே மக்கள் மாட்டிக்கொள்கிருர்கள். ஆடம்பரமும் டாம்பீகமும் வாழ்க்கைக்குள் புகுந்துவிட்டன. அவற்றின் அதிகாரத்தைத் தாண்டி வெளியில் வரமுடியவில்லை மனிதனுல். ஜனங்கள் தவிக்கிருர்கள்.

எனக்கு டியூசன் சொல்லிக் கொடுத்த வாத்தியாருக்கு வருடத்திற்கு ஒரு கோட்டை நெல் ஊதியமாகக் கொடுத்தோம். ஒரு கோட்டை நெல் விலை அப்பொழுது ஆறு ரூபாய்.

டியூசன் வாத்தியாருக்கு மாதம் கால் ரூபாய்தான் கொடுப்பது வழக்கம். அப்படியானுல் வருடத்திற்கு மூன்று ரூபாய். என் தந்தையார் மூன்று ரூபாய்க்குப் பதில் ஆறு ரூபாய் நெல்லை டியூசனுக்காகக் கொடுத்தார்கள்.

அவ்வளவுதான், டியூசன், டியூசன் என்று என் உயிரையே வாங்கிவிட்டார் என் வாத்தியார். எனக்கு விளையாட்டும் ஒய்ந்தது. என்னிடமிருந்த உற்சாகமும் ஒழிந்தது. சந்தோசமும் தொலைந்தது. சாப்பாடுகூட மனதோடு ஒட்டாமல் போய்விட்டது. அதனுல் தேகத்தோடும் ஒட்டாமல் போய்விட்டது சாப்பாடு. ருசித்து அனுபவித்துச் சாப்பிடுகிற காரியமே இல்லை என்று ஆகிவிட்டது. சாப்பிடுகிற வேளையிலும் டியூசன் ஞாபகந்தான். அந்தப் பயந்தான். ''வாத்தியார் வந்துவிட்டார். 'சீக்கிரம், சீக்கிரம்' என்ற தொந்தரவுதான். பிறகு எப்படி உணவில் ருசி தெரியும்? உடம்பில் அது எப்படி இறங்கும்?''

மூன்று ரூபாய் டியூசன் தொகை ஆறு ரூபாயாகப் போனதால் நான் பட்ட கஷ்டம் இன்னும் எவ்வளவோ இருக்கிறது.

பள்ளிக்கூடத்திற்கு மணல் சுமந்து வருவது, பெருக்குவது, குப்பையைக் கூட்டி அள்ளுவது இவை எல்லாம் மனதுக்கு உகந்த காரியங்கள். மாணவர்களோடு சேர்ந்து செய்கிற ஒவ்வொரு வேலையும் மனதுக்குச் சுகமாக இருக்கும்.

டியூசன் தொகை ஏறிவிட்டதால் என்னை எந்த வேலையும் செய்ய ஆசிரியர் அனுமதிக்கவில்லை. மற்ற மாணவர்கள் ஓடி ஆடி வேலை செய்வார்கள். நான் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே இருப்பேன்.

பள்ளிக்கூடம் முடிந்து மாலையில் மாணவர்கள் வீடுபோவார்கள். ஒவ்வொருநாளும் சில சில மாணவர்களை நிறுத்திவைப் பார் வாத்தியார். ஏன்? ''சிதம்பரத்தை வீடுவரை சுமந்து போங்கள்'' என்று அந்த மாணவர்களுக்கு உத்தரவு போடுவார். அவர்களும் அப்படியே என்னைச் சுமந்துபோவார்கள்; சுமக்காவிட்டால் அவர்களுடைய முதுகுத்தோல் உறிந்துவிடும்.

ஏறி உட்காராவிட்டாலோ, டியூசனில் என்னை ஒரு கை பார்த்துத் தீர்த்துவிடுவார் ஆசிரியர்.

பணம் மனிதனை என்ன பாடெல்லாம் படுத்துகிறது! இப்பொழுது பணம் வெள்ளமாய் ஓடுகிறது. ஆனாலும் மனிதர்கள் சாப்பாட்டுக்குக்கூடக் கஷ்டப்படுகிறார்கள். ருசி உள்ள சாப் பாட்டைச் சமைத்து குடும்பத்தோடும் வேண்டியவர்களோடும் இருந்து சாப்பிட முடியவில்லை மனிதனால்.

''பெண்களும் ஆபீஸ் போய் சம்பாதித்தால்தான் வாழ முடியும் என்கிற நிலை வந்துவிட்டது. அதற்காகவே பள்ளிக்கூடம் போகவேண்டி இருக்கிறது பெண்கள். பிறகு சாப்பாடு அநேக மாக ஓட்டலில்தான். வீடும் லாட்ஜில் உள்ள ரூம் மாதிரிதான். குழந்தைகள் தேவை இல்லை என்று ஆகிவிட்டது. ஒன்று இரண்டு இருந்தாலும் குழந்தைகள் அனாதைபோலவே திரிகின்றார்கள். அப்பா ஒரு ஆபீஸ், அம்மா ஒரு ஆபீஸ், பிள்ளைகளோ பள்ளிக் கூடம், தெரு, சினிமாக் கொட்டகை, ஓட்டல், இப்படி, இப்படி. பணம் தாராளமாக நடமாடியும், வாழ்க்கை ஒளி இல்லாமல் ஒடுங்குகிறது.

பரிதாபமான காரியந்தான்.''

இப்படி அடிக்கடி சொல்வார்கள், டி. கே. சி. சிறுவனாக இருந்த காலம் யாருக்கும் நினைவில் நிற்பதில்லை. வயதான உடன் மனிதர்களுக்கு எத்தனையோ பிரவர்த்திகள். அந்த வெள்ளத்தில் இளமை என்று தன்னிடம் ஒன்று இருந்ததுகூட மனிதர்களுக்கு ஞாபகம் இராது.

வயதாகி, விவரம் எல்லாம் தெரிந்த பிறகே, பிறந்து வந்த தாகத்தான் ஒவ்வொருவருக்கும் நினைப்பு. இந்த நிலைமையில் தன்னுடைய குழந்தைப் பருவத்தை யாரால் ஊடுருவிப் பார்க்க

முடியும்? நம்முடைய குழந்தைப் பருவத்தை நாம் பார்ப்பது நம்முடைய பூர்வ ஜென்மத்தைப் பார்ப்பது மாதிரி. ஆனால், டி. கே. சியோ தம் இளமைப் பருவத்தைப் பார்ப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அப்படியே மனதில் அதை நிறுத்தி வைத்தார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்தார்கள். பார்த்துப் பார்த்து ரசித்தார்கள். அந்தப் பார்வையும் ரசனையும் அவர்களுக்கு வாழ்க்கையில் புதுப் புது விவரங்களை தெளிவுபட வைத்தன.

இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன் இருந்த நிலையை—தன் உணர்ச்சியை—சமூகநிலையை அப்படி மனக்கண்ணால் பார்த்துப் பார்த்து டி. கே. சி. அனுபவித்ததுபோல் வேறு யாரும் அனுபவித்தது இல்லை.

ரசிகமணியின் இளமையும் படிப்பும் எப்படி என்பதை ஒருவாறு பார்த்தோம். மேலும் அவர்களுடைய இளமைப் பருவத்து நிகழ்ச்சி என்னென்ன என்பதையும், உயர்நிலைப் படிப்பு எப்படி இருந்தது என்பதையும் இனி நாம் பார்க்கலாம்.

3. உண்மையான சரித்திரம்

டி. கே. சியின் மேல்படிப்பு பற்றி நாம் பார்ப்பதற்குமுன் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது டி. கே. சியின் பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, இளமைப் பருவம் என்று சொல்லிய சமாச்சாரங்களும் சரி, உயர்நிலைப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, வழக்கறிஞர் தொழில், மேல்சபை உறுப்பினர் பதவி, தமிழ் வளர்ச்சி, கவி உணர்வு, ஆகிய எல்லாம் வெறும் ஜாதகக் குறிப்புதான். ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரின் உண்மையான வரலாற்றுக்கும் இந்த ஜாதகக் குறிப்புகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. டி. கே. சியின் உண்மையான சரித்திரம், அவர்களுடைய அவதார ரகசியம் இந்த ஜாதகக் குறிப்புகளில் இல்லை.

வாழ்க்கை, பண்பாடு, சமயம், கவி, கலை முதலிய ஒவ்வொரு துறைகளிலும் இது உண்மை, இது பொய் என்று டி. கே. சி. தெரிந்துகொண்டார்களே, அந்த மாசறு காட்சியில் இருக்கிறது அவர்களுடைய வரலாறு.

தெரிந்துகொண்டதோடு சும்மா இருந்துவிடவில்லை. டி. கே. சி. உண்மையை அனுபவித்து அனுபவித்து ஆனந்த பரவசத்தில் திளைத்தார்கள். அதை எல்லோருக்கும் சொன்னார்கள். இனிமையாகவும் எளிமையாகவும் சொன்னார்கள். உலகம் முழுவதற்குமே எடுத்துச்சொல்ல எழுந்து நின்றார்கள். அணு அளவு கூடப் பதற்றம் இல்லாமல், குழப்பம் இல்லாமல், பயம் என்பதே இல்லாமல், இதுதான் உண்மை என்று சொன்னார்கள். உலகம் எல்லாம் கேட்கும்படி சொன்னார்கள்.

ஆனந்த முழக்கத்தோடும் இன்ப வெறியோடும் உண்மையைப் பார்த்துப் பார்த்து—அனுபவித்து அனுபவித்து—அந்த அனுபவத்தையும் ஆனந்தத்தையும் டி. கே. சி. சொல்லச் சொல்ல, பொய்க்கும் பித்தலாட்டத்திற்கும் ஆங்காரம் வந்தது. ஆங்கார வெறியில் பொய்யும் பித்தலாட்டமும் டி. கே. சி. மேல் படம் எடுத்துச் சீறிப்பாய்ந்தன.

இழி சொற்களாலும் கொடுஞ் சொற்களாலும் திட்டி, டி. கே. சியை துன்புறுத்தின, பொய்யும் பித்தலாட்டமும்.

மலைமலையாக இடையூறுகள் வந்து வழிமறித்தாலும் துளிக் கூடக் கலங்காமல் உண்மை ஒன்றையே வாழ்க்கையாகக் கொண்டு அதை அழகாகவும் அன்பாகவும் சொல்லிக்கொண்டே இருந்தார்கள், டி. கே. சி.

உண்மை, உணர்ச்சி, ஆனந்தம் இவற்றையே லட்சியமாக வைத்து டி. கே. சி. வாழ்ந்தார்கள். மற்றவர்களும் இவற்றை லட்சியமாக வைத்து வாழவேண்டும் என்று துடித்தார்கள். அதற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள்.

டி. கே. சியின் உண்மையான வரலாறு மேலே சொல்லிய அர்ப்பணிப்பில் இருக்கிறது. அதாவது லட்சியத்தோடு கூடிய தியாகத்தில் இருக்கிறது.

மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர் என்று ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. நன்செய், தோப்பு, வீடு, மாடு, ரொக்கம், தங்கம், வெள்ளி என்பவையும் மனிதனோடு ஒட்டிய அங்கங்கள்தான். படிப்பு, பட்டம், உத்யோகம், சம்பாத்யம், தோரணை இவைகளும் மனிதனோடு சேர்ந்த காரியங்களே. ஆனாலும் ஒவ்வொரு மனிதனும் என்ன செய்கிறான்? மேலே குறிப்பிட்ட அம்சங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பலபல பிரச்சினைகளை உண்டாக்கிக்கொண்டே இருக்கிறான். அந்தப் பிரச்சினைகளோடு மல்லுக்கட்டிக்கொண்டே இருக்கிறான். முடிச்சைப் போடுவதும், அதை அவிழ்ப்பதும், அவிழ்ப்பதில் திணறுவதும், திக்குமுக்காடுவதும் இதுவே வாழ்நாள் முழுவதும் வேலையாகிவிட்டது மனிதனுக்கு. பிரச்சினைகளோடு முட்டி முட்டி மூக்கு உடைபட்டு, பல் உடைபட்டு, மூளை அழுகி, ரத்தம் கொதித்து அவஸ்தைப்படுவதே மனிதனுக்குக் காரியம் ஆகிவிட்டது. பிரச்சினைகள் இல்லாவிட்டால் மனிதனால் தூங்க முடியவில்லை. சாப்பிடமுடியவில்லை. வெளியில் நடமாட முடியவில்லை. எப்படியாவது பிரச்சினையைத் தேடிப் பிடிக்கிறான். அதோடு குஸ்தி போட்டுக்கொண்டே இருக்கிறான். இதுதான் உலகம் முழுவதும் நாம் பார்க்கிறது.

ரசிகமணி டி. கே. சிக்கும் வீடுவாசல், நன்செய் புன்செய், படிப்பு, உத்யோகம், மனைவி, மக்கள், உறவினர், நண்பர் இப்படி எல்லாச் செல்வமும் இருக்கவே செய்தன. வளமாகவும் இருந்தன. அவ்வளவு செல்வத்தையும் அவர்கள் அன்போடும் பார்த்தார்கள். உண்மையோடும் பார்த்தார்கள். எல்லாம் ஆனந்தமாக இருந்தன. டி. கே. சிக்கு அந்தச் செல்வம் ஆனந்தமாக இருந்தது. அந்தச் செல்வத்திற்கு டி. கே. சி. ஆனந்தமாக இருந்தார்கள். பிறகு, பிரச்சனை எப்படி உண்டாகும்? மல்லுக்கட்டுகிற

காரியமோ, வேதனைப்படுகிற காரியமோ, வேதனையிலிருந்து விடுபடுவதற்காக அங்கும் இங்கும் ஓடுகிற காரியமோ டி. கே. சியிடம் இல்லை. ஆனந்தமயமான வாழ்க்கை டி. கே. சியின் வாழ்க்கை. எல்லாம் இருந்தது. ஒன்ரேடு ஒன்று குஸ்தி போடவில்லை. விடுதலை இன்பத்தோடு வாழ்கிற அற்புத வாழ்க்கையாக இருந்தது டி. கே. சியின் வாழ்க்கை. இந்த அற்புத வாழ்க்கையில் திளைக்கிறவர்களையே ஜீவன்முக்தர் என்று சொல்வார்கள்.

ரசிகமணி டி. கே. சி. ஒப்பற்ற ஒரு ஜீவன்முக்தராக வாழ்ந்தார். உண்மையை ஊக்கத்தோடு உலகிற்கு எடுத்துச் சொன்னுர். குறுக்கிட்டு மறிக்கிற தொல்லைகளை எல்லாம் அன்பாலும் இன்சொல்லாலும் அறப்பண்பாலும் தவிடுபொடியாக நொறுக்கினுர். ஏதோ ஒரு நாள் இரு நாள் என்கிற கணக்கில் இல்லை. ஒரு மாதம் இரண்டு மாதம் என்கிற அளவிலும் இல்லை. ஒரு வருடம் இரண்டு வருடம் என்கிற வரம்பிலும் இல்லை. வாழ்நாள் முழுவதும், அப்படி ஆனந்தமாக வாழ்ந்தார். உண்மையை உலகம் கண்டுகொள்ள வேண்டும். பொய்யை உதறி எறிய வேண்டும் என்னும் ஒன்றுக்காகவே வாழ்நாள் முழுவதும் டி. கே. சி. செயல்பட்டார்.

புனிதமான அந்த லட்சிய தெய்வத்திற்கே தன்னுடைய காரியம் அவ்வளவையும்—வாழ்க்கை முழுவதையும் அர்ச்சனை பண்ணினுர். அபிஷேகமாகக் கொட்டினுர். தன்னுடைய அந்தஸ்து, செல்வாக்கு, பணம், அன்பு, உறவு, படிப்பு, பொழுது போக்கு, வாழ்க்கை எல்லாவற்றையுமே உண்மை ஒன்றுக்கே தத்தம் செய்தார்.

உலகில் யாராவது இப்படி மற்றவர்களுக்காக, தன் வாழ்க்கையைத் தியாகம் செய்து வாழ்ந்தது உண்டா? உண்டு! டி. கே. சி. போல் கோடியில் ஒருவர் என்று அபூர்வமாகவே உண்டு.

தவ வாழ்க்கை என்றுதான் டி. கே. சியின் வாழ்க்கையைச் சொல்லவேண்டும்.

டி. கே. சியின் உண்மையான சரித்திரம் இந்தத் தவ வாழ்க்கையில் இருக்கிறது.

பிரச்சினையே இல்லாதபடி காரியங்களை நயமாக வகுத்து வைத்துக்கொண்டு, லட்சியத்தையே குறியாக வைத்து அல்லும் பகலும் ஞான வேள்வி நடத்திவந்தார் டி. கே. சி.

அதற்காகவே அவர் எண்ணில் அடங்கா நூல்களைப் படித்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் படிக்காத புத்தகங்களே இல்லை என்று சொல்லலாம்.

படிப்பாளிகள் என்று சொல்லக்கூடியவர்கள் ஒன்றிரண்டு புத்தகங்களை மட்டுமே பார்த்திருப்பார்கள். அதுவும் அங்கே ஒரு பிடி இங்கே ஒரு பிடி என்று பார்த்து வைத்துக்கொள்வார்கள். தங்கள் பிழைப்பை நடத்துவதற்குத் தேவை எவ்வளவோ, அவ்வளவை மட்டும் படித்து வைத்துக்கொள்வார்கள்.

அதை வைத்தே மேடைதோறும் சிலம்பம் ஆடிவிடுவார்கள். ஆயுள் நாள் முழுவதும் அதை வைத்தே கட்டுரை எழுதிக்கொண்டிருப்பார்கள். இது ஒவ்வொருவரும் தம் தம்வண்டியை ஓட்டிப் போவதற்கு எடுத்துக்கொண்ட காரியம். ஆனால் டி. கே. சி. தன்னுடைய பிழைப்பை லட்சியமாகக் கொள்ளவில்லை. எப்படியோ காரியத்தை ஒப்பேற்றி சமாளித்துவிடுவதை மட்டும் வாழ்க்கையாகக் கொள்ளவில்லை.

டி. கே. சிக்கு உண்மை இது, பொய் இது என்று தெரிந்துவிட்டது. உண்மையை விட்டுவிட்டுப் பொய்யைக் கட்டி மனிதர்கள் அழுவதும் தெரிந்துவிட்டது. அந்த மயக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்னும் பரிவுணர்ச்சி வந்து டி. கே. சியைப் பற்றிக்கொண்டது.

மக்களுக்கு உண்மையை எளிதாகவும் இனிதாகவும் ஆதாரத்தோடும் எடுத்துச் சொல்லவேண்டும் என்பதற்காக எல்லா நூல்களையும் டி. கே. சி. படித்தார்கள். ''தாம் கண்டு தெளிந்த உண்மைக்கு ஆதாரம் அங்கங்கே கிடைக்காதா'' என்னும் ஆத்திர உணர்வோடு எல்லா நூல்களையும் ஒரு தடவைக்குப் பலதடவை படித்தார்கள். வாழ்நாள் முழுவதும் புதிது புதிதாகப் படித்துக் கொண்டே இருப்பார்கள்.

தாவர இயல், உயிரியல், உடலியல், வானியல், ரசாயன இயல், பௌதீக இயல், உலோக இயல், வரலாறு, உளஇயல் சமுதாய இயல், சமயம், பண்பாடு, கலை, இலக்கியம் எல்லாத் துறைகளையும் ஐயந்திரிபறக் கற்றார்கள்.

உலகில் உள்ள தத்துவ விஞ்ஞான இலக்கிய நூல்களில் பெரும்பாலானவை—முக்கியமானவை எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன.

டி. கே. சி. எண்பது வருடங்களுக்கு முன் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் ஆங்கிலேயர்களிடம் பி. ஏ. வரை படித்தவர்கள். அதற்குமேல் பி. எல்லும் படித்து முடித்தவர்கள். எல்லாவற்றிற்கும் மேல் இங்கிலீஷ் பாஷையின் மர்மங்களையும் நாடித் துடிப்புகளையும் கண்டு இங்கிலீஷ் பாஷையை அநாயாசமாகக் கையாளும் இதவு பெற்றவர்கள்.

அதனால் இங்கிலீஷ் பாஷையில் இருக்கிற பலவற்றை—வண்டி வண்டியாய்ப் படித்தவர்கள் டி. கே. சி.

டார்வின், டிண்டால், ஜூலியன் ஹக்ஸ்லி, நியூட்டன், ஐன்ஸ்டைன், குரேஷி, ஹெர்பர்ட் ஸ்பென்சர், எடிசன், எமர்சன், கார்லைல், ஏ. ஜி. கார்டினர், டிக்சன், ஷேக்ஷ்பியர், கீட்ஸ், ராபர்ட் பர்ன்ஸ், டாகுர்' ஈசாப், மாப்பசான், செகாவ், அரபு தேசத்து இரவுக் கதைகள், ஹோமர், வர்ஜில், கத்தே இப்படிப் பல ஆசிரியர்களையும் பல நூல்களையும் பலபல தடவை விடாமல் படித்து வந்தார்கள் டி. கே. சி.

தமிழில் அவர்கள் படிக்காத நூல்களே கிடையாது. சங்க நூல்கள், நீதி நூல்கள், இதிகாசங்கள், புராணங்கள், பிரபந்தங்கள், நாடோடிப் பாடல்கள், தற்காலத்துப் பாடல்கள், இசைப் பாடல்கள், நாடக நூல்கள், கல்வெட்டுகள், தனிப் பாடல்கள், பக்திப் பாடல்கள் ஒன்றுவிடாமல் அவ்வளவையும் படித்தார்கள். படித்துப் படித்து அனுபவித்தார்கள்.

குற்றாலம் அருவியில் குளிப்பதோடு திருப்தியடையாமல், அருவிக்கு மேலே உள்ள பொங்குமாங் கடலில் பாய்ந்து அந்த ரடித்து தரை மண்ணெடுத்து இளமையில் வீர விளையாட்டு விளையாண்டவர்கள் டி. கே. சி.

வயது ஆக ஆக ஆழமிக்க நீர்க்கசத்துள் பாய்ந்தும், நீந்தியும், முங்கியும் விளையாட முடியாதுதானே! ஆனாலும் அந்த வீரமும் ஊக்கமும் ஆழம் காணமுடியாத இலக்கியக் கடலுக்குள், தத்துவக் கடலுக்குள் பாய்ந்து முங்கி மூழ்கி அரிய பெரிய முத்துக்களை வாரிக்கொண்டு வரும்படி செய்தது டி. கே. சியை.

''ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதற்கோ, எழுதிப் பட்டம் பெறுவதற்கோ, பிறகு அதை வைத்து பதவி உயர்வு பெறுவதற்கோ, பணம் சம்பாதிப்பதற்கோ டி. கே. சி. இப்படிப் படிக்கவில்லை. அவர்கள் விழுந்து விழுந்து படித்தது தாம் கண்ட உண்மைக்கு ஒரு துணை வேண்டுமே, அந்தத் துணையை—உண்மைக்கு உற்றதுணையாகச் சேர்த்துவைத்துவிட்டால் மக்களுக்கு அது எளிதில் விளங்கிவிடுமே'' என்னும் ஆதங்கத்தில்தான்.

டி. கே. சியின் வரலாறு அவர்களுடைய இந்த ஆதங்கத்தில் இருக்கிறது.

தாம் கண்டு அனுபவித்த உண்மைக்கு தமிழ்ப் பாடல்களும், தமிழ்ப் பண்பாடும், சமயமும், பக்தியும், ஏன், தமிழ் மக்களின் வாழ்க்கையில் உள்ள எத்தனையோ அம்சங்கள் தெளிவு கொடுப்

பதை ரசிகமணி பார்த்துப் பார்த்து வியந்தார்கள். உண்மைக்கு உறுதியான, நம்பகமான சாட்சியங்களாக தமிழும் பாடல்களும் பிரகாசிப்பதைப் பார்த்துப் பார்த்து அதிசயப்பட்டார்கள்.

ஆங்கிலத்தில் தாம் படித்த ஆயிரக்கணக்கான நூல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில அடிகள்—சில துணுக்குகள் உதவி செய்தன. சாட்சியங்களையும், தீர்ப்பையும் ஆமோதித்தன. இந்த விந்தையைக் கண்டு டி. கே. சிக்கு ஊக்கம் பிறந்தது.

டி. கே. சி வாழ்ந்ததே உண்மைக்கு ஊக்கம் கொடுத்தது. அதனால் அது நிமிர்ந்து நின்றது. பொய்க்குக் கலக்கம் உண்டாகியது. குழப்பத்திற்கும் தடுமாற்றத்திற்கும் ஆளாகிவிட்டது பொய். அதனால் அதுதன் வாலைச் சுருட்டிக்கொண்டு அப்படியே உருவிப் போய்விட்டது.

இந்த அற்புதத் திருப்பணியில் டி. கே. சியின் அவதார ரகசியம் பொதிந்துவிட்டது.

வாழ்நாள் முழுவதும் மேலும் மேலும் படித்துப் படித்து கல்வியோடு கல்வியாய் டி. கே. சி. ஒன்றினார்கள். அப்படி ஒன்றித்தோய்ந்ததால் பாடப் புத்தகம், பள்ளிக்கூடம், நெட்டுருப் போடல், பரீட்சை இவைகளில் டி. கே. சிக்கு ஈடுபாடு ஏற்படவில்லை. அவை அருவருப்பாகவே இருந்தன. கசப்பாகவே அவை இருந்தன.

எல்லா இடத்திலும் உண்மை ஒளி பரவவேண்டும் என்ற ஆத்திரத்தில் காதல் வெறியோடும், பக்தி பரவசத்தோடும் படித்தவண்ணமாகவே இருந்தார்கள் டி. கே. சி.

அப்படி அவர்கள் படித்ததால் தெள்ளத்தெளிய அவர்களுக்குக் கீழ்க்கண்ட விஷயங்கள் விளங்கின. ஒன்று, உலகில் உள்ள எல்லா மொழிகளும் அந்தந்த இனத்தாரின் உணர்ச்சிகளை எடுத்துச்சொல்ல வசதியும் தகுதியும் பெற்றிருக்கின்றன. உணர்ச்சிகளையே எடுத்துச்சொல்ல முடியும் என்றால் மரத்தைப் பற்றியோ, மாட்டைப் பற்றியோ, ஏன் கடவுளைப் பற்றிக்கூட எந்த மொழியாலும் எடுத்துச் சொல்ல முடியும். அறிவியல் கலைகளை எல்லா மொழிகளிலுமே தாராளமாக எடுத்துச் சொல்லலாம். அறிவியல் கலைகளை எடுத்துச் சொல்வதால் மட்டும் ஒரு மொழி சிறந்த மொழி ஆகிவிடாது. அறிவியல்பற்றிச் சொல்லமுடியாவிட்டால் அது மொழியே இல்லையே.

இரண்டு—ஒரு மொழியில் கவி உண்டாவது அப்படி ஒன்றும் எளிதான காரியம் அல்ல. கவி உண்டாக வேண்டும் என்றால்,

அதற்கு அந்த பாஷை ஆயிரக்கணக்கான வருடமாகத் தவம் பண்ணி இருக்கவேண்டும். பாஷை மட்டும் அல்ல, அந்த பாஷைக் குரிய இனத்தார் எல்லோருமே ஆயிரம் ஆயிரம் வருடங்கள் தவம் செய்திருக்க வேண்டும். கடவுளுடைய அருளால் தான் கவி உண்டாகும்.

மூன்று—எந்த இனத்தாரும், எவ்வளவு கற்று வல்ல அறிஞ ராளுலும் இன்னொரு பாஷையில் உள்ள கவியை அனுபவிக்க முடியாது. விஷயம் இன்னதென்று தெரிய முடியும், கருத்தும் இப்படி என்று விளங்கும், உணர்ச்சியைக்கூட ஒருவாறு இப்படி என்று கண்டுகொள்ளமுடியும். ஆனல் கவியில் உள்ள கட்டுக் கோப்பு, பாஷையின் சிருஷ்டி, உணர்ச்சி, பாவத்தின் உருவம் இவை ஒன்றும் விளங்காது. தாய் பாஷையின் மூலந்தான் முடி யுமே ஒழிய அன்னிய பாஷை மூலம் முடியாது.

நான்கு—உணர்ச்சியே ராகங்களாக வடிவெடுக்கின்றது. தாளங்களோடு சேர்ந்த ராகங்களாக வடிவெடுக்கின்றது உணர்ச்சி. ராகங்கள் பாஷையோடு சேர்ந்து கவிகளாக விளைய வேண்டும். அப்படி விளைவதுதான் இசை. சாகித்யம் இல்லாத வெறும் ராகம்—தாளம் எல்லாம் சங்கீதம் இல்லை. அது ஒரு அபத்தம். ராகத்தைச் சிறிது நேரம் கேட்டு அனுபவிக்கிறது என்பது பின்னல் வரும் பாட்டை உத்தேசித்துத்தான்.

ஐந்து—பள்ளிக்கூடம், பாடம், பரீட்சை இவை எல்லாம் அறிவுக்கு மாறுன காரியங்கள். பொய்க்கு அடிமையாகும் இடம் பள்ளிக்கூடம். பாடத் திட்டமும் பாடப்புத்தகமும் மூளையை ஒற்றி ஒற்றி அதனிடமுள்ள புத்தியை உறிஞ்சி எடுத்துவிடுகிறது. இதயத்தில் உள்ள அன்பு, ஊக்கம், தயாளம் முதலிய உணர்ச்சி களையும் ஒற்றி எடுத்துவிடுகிறது. அறியாமை, பொறுமை, ஆணவம் இவைகளை உண்டாக்கி வளர்க்கிறது பள்ளிக்கூடம்.

பள்ளிக்கூடப் படிப்பு மனிதனைக் கெடுத்துவிடுகிறது. உலகில் உள்ள தீமைகளுக்கு எல்லாம் முதல் காரணம் பள்ளிக்கூடமும் பாடப்புத்தகங்களும் பரீட்சையுமேதான்.

வாழ்க்கையில் உண்மை இருக்கவேண்டும், அது உணர்ச்சி மயமாய்ப் பொங்கவேண்டும். அதை அனுபவிக்க வேண்டும். ஆனந்தமயமாய் அனுபவிக்கவேண்டும். அதைப் பார்த்து அதன் அற்புதத்தில் திளைப்பதுதான் கல்வி. குழந்தைகளுக்கு வேலை, விளையாட்டு, நல்ல பழக்கவழக்கம், கலந்துரையாடல், கூடிப் பழகுதல் இவை இருந்தால் போதும்; படிப்பு தானுக வந்து விடும்.

ஆறு—ஆடவர்களைவிட பெண்டுகளுக்கு உண்மை எளிதில் விளங்கிவிடும். அவர்கள் உணர்ச்சிமயமானவர்கள். உண்மையோடு ஒட்டிச் செயல்படுகிறவர்கள் பெண்கள். நாணலும் கரும்பும் தாவர இனத்தில் ஒன்று என்று சொல்லப்பட்டாலும் நாணலுக்கும் கரும்புக்கும் வேறுபாடு எவ்வளவோ இருக்கிறது. கரும்பைப் பிழிந்தால் சாறுவரும். சர்க்கரையாக விளையும். நாணலில் அவை ஒன்றும் இல்லை. பெண்கள் கரும்பு போன்றவர்கள். ஆண்கள் நாணல் தட்டைதான். பெண்களின் தேகத்தில் அமிர்தப்பாலோடு சேர்ந்து கருணைப் பாலும் ஓடிக்கொண்டே இருக்கிறது.

உண்மையான வீரமும் தயாளமும் பெண்களிடம் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றன. அதனால் அவர்களுக்கு உண்மை இயல்பாகவே விளங்கிவிடும். உண்மையை உணர்ந்து அனுபவிக்கும் பண்பு அவர்களிடம் இயல்பாகவே இருக்கிறது. அதனால் பெண்களுடைய அன்பு, சொல், செயல் எல்லாம் நேராக இருக்கும். தெளிவாக இருக்கும். கோணல் மாணல் என்பது இல்லை தான். தாறுமாறு என்பதும் வக்கிரம் என்பதும் ஆடவர்களிடந் தான்.

ஏழு—குழந்தைகளுக்குக் கற்பனை சக்தி அதிகம். அந்தக் கற்பனை சக்தியில் வேகமும் அதிகம். கற்பனை சக்தி என்பது குழந்தைகளிடந் தான் உண்டு. வயதான நம்மிடம் அது இல்லை என்று தாராளமாகச் சொல்லலாம். பள்ளிக்கூடப் படிப்பு குழந்தைகளின் மூளையைச் சுற்றி மதில் எழுப்பாமல் இருந்தால் போதும். பாடம், பள்ளிக்கூடம் இவை சேர்ந்து கல்கோட்டை கட்டிவிட்டால் அது பெரிய ஆபத்து. முதலில் அந்தக் கோட்டையை இடித்துத் தகர்த்தெறிய வேண்டும். அதன் பிறகுதான் அந்த மூளை கண்திறந்து உலகத்தைப் பார்க்கும்.

பள்ளிக்கூடம், பாடத் திட்டம் இவற்றால் பாதிப்படையாத குழந்தைகள் எதையும் தெளிவாகப் பார்ப்பார்கள். அவர்கள் பார்ப்பதுதான் நேரான பார்வை. விஷயம் எவ்வளவு ஆழமானதானாலும், எவ்வளவு நுட்பமானதானாலும் அவர்களுக்கு எளிதில் விளங்கிவிடும். அதற்காக அவர்களிடம் போய் கவிகளைச் சொல்லி விடக்கூடாது. கவியை அனுபவிப்பதற்கு மூளைமட்டும் போதாது. இதய வளம் வேண்டும். அதற்கு அனுபவம் எவ்வளவோ தேவை. வயதே ஆகவேண்டும் என்றாலும் குற்றம் இல்லை.

எட்டு—அற்புதம், அதிசயம், உண்மை, பேருண்மை என்றெல்லாம் சொல்கிறோமே! எங்கோ எட்டாத தூரத்தில்—நம்மோடு ஒட்டாத புலங்களில்தான் இவை உள்ளன என்று எண்ணிவிடக்

கூடாது. அற்புதம், உண்மை என்பதெல்லாம் நம்மிடமே இருக்கிறது. நம் உடம்பில் இருக்கிறது. நம் உணர்ச்சியில் இருக்கிறது. நம்மைச் சுற்றி உள்ள ஒவ்வொன்றிலும் இருக்கிறது. நமது வாழ்க்கை, பண்பாடு, கலை உணர்வு, உடை, கோவில், கோபுரம், விளையாட்டு, வேலை, நண்பர், வேண்டியவர், வேண்டாதவர் எல்லாவற்றிலும் இருக்கிறது அற்புதம். முட்டித் ததும்பி விம்மிப் புடைத்துக் கொண்டிருக்கிறது அற்புதம். ஆனால் நாம் பார்ப்பதில்லை. அங்கே, இங்கே என்று அற்புதத்தைத் தேடி அலைந்து கொண்டே இருக்கிறோம்.

ஒன்பது—உண்மையான வசனம் மக்கள் பேசும் பேச்சில்தான் இருக்கிறது. சாதாரண மக்கள் இயல்பாகப் பேசுகிற பேச்சுத்தான் உண்மையான வசனம். உண்மையாக இருப்பதால் அது உணர்ச்சியாய் இருக்கிறது. எளிதாய் இருக்கிறது. ஆனால் பள்ளிக்கூடம் போய் வந்தபிறகு உண்மையோடு ஒத்துப்போக முடியாது. விஷயத்தை—உணர்ச்சியை விட்டுவிட்டு வார்த்தைகளை முறுக்கியும், திருக்கியும், வளைத்தும், நெளித்தும் போராடுவதிலேயே போய்விடும் புத்தி. பிறகு எளிமை எப்படி வரும்? அருமை எப்படி வரும்?

மனதில் உதிக்கிற உணர்ச்சியை வெளிப்படுத்தத் திக்குமுக்காடினால், போகப்போக மனது தூர்ந்து போய்விடத்தானே செய்யும்? யோசிக்கிற பழக்கத்தையே விட்டுவிடுகிறது மனம். சாதாரண மக்களுக்கு—பெண்டு பிள்ளைகளுக்கு இந்தத் தொல்லை இல்லை. அவர்கள் எப்பொழுதும் உணர்வோடு இருக்கிறார்கள். தன் உணர்வோடு இருக்கிறார்கள். அதனால் விஷயத்தைக் கண்ணால் பார்க்கிறார்கள். உணர்ச்சியோடு சொல்கிறார்கள். சொற்கள் இயல்பாய் உதித்து வருகின்றன அவர்களிடம்.

சங்கீதமும் அப்படித்தான். பாடல்களைப் பாடுவதற்கு உரிய சங்கீதம் ஒவ்வொருவரிடமும் இயல்பாகவே இருக்கிறது. பாட்டை மதித்து அனுபவித்துப் பாடவேண்டும் என்கிற நினைப்பு இருந்தால் போதும். எந்தப் பாடலை எந்த முறையில் பாடவேண்டுமோ அந்தப் பாடலை அந்த முறையில் பாடுவதற்குரிய இசை தானாக வரும். எல்லோருக்குமே வரும். எல்லோரிடமும் உண்மையான சங்கீதம் இருக்கிறது. அது பாடலோடும் சேர்ந்தே கிடக்கிறது. ஆனாலும் சங்கீதத்தைப் படிக்கிறேன் படிக்கிறேன் என்று சங்கீதத்திற்குப் புறம்பானவற்றையே படித்துத் தொலைத்த பிறகு சங்கீதம் வரவா செய்யும்? விருத்தமோ, வெண்பாவோ, கிளிக்கண்ணியோ, காவடிச் சிந்தோ எதைக் கொடுத்தாலும் பாடமுடிகிறதில்லை. பேந்தப்

பேந்த விழிக்கவேண்டி ஆய்விட்டது. போதாக்குறைக்கு இப்படியும் ஒரு போடு போட்டுவிடுவார் பாகவதர். ''இவை எல்லாம் பாடல்கள் சார். இவை சங்கீதம் இல்லே. சங்கீதம் என்ருல் சுரம், தானம், பல்லவி, தாளம், ஜண்டை வரிசை, துரிதம், ஏற்றம், இறக்கம் அவ்வளவும் வேண்டும். இவை இல்லாமல் வெறும் பாட்டில் சங்கீதம் எப்படி வரும். சங்கீதம் இல்லே என்ருல் பாட முடியுமா?'' என்று செம்போடாய்ப் போட்டுவிடுவார்.

எல்லோரிடமும் சங்கீதம் இருக்கிறது. அந்த சங்கீதத்தை அப்படியே கையில் எடுத்துக் காட்டுவதுபோல்காட்டுகிறது நாத சுரம். வீணேயும் அப்படித்தான்.

சங்கீதமும் சாகித்யமும் சேர்ந்து வந்துவிட்டால் ஒரே மேள தாள முழக்கந்தான். அபிநயம் எழுந்து நிற்கும். நடனம் என்பது சங்கீதத்திற்கு உள்ளேயே இருக்கிறது. இசையை அனுபவிக்கிறதன் மூலம் நடனம் வெளிப்படுகிறது.

இப்படி அடிக்கடி ரசிகமணி சொல்வார்கள். ''பெண்களேப் பார்க்காமலே—குழந்தைகளே அனுபவிக்காமலே பெண்தெய்வம் பெண்தெய்வம் என்று கூப்பாடு போடுகிறது உலகம். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்று ஒரே கத்தாகவும் கத்துகிறது உலகம். இசைக்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டே நாதப் பிரம்மம் நாதப் பிரம்மன் என்று முழங்குகிறதுக்கும் குறைவில்லேதான்.''

ரசிகமணி டி. கே. சி பெண்களிடம் உள்ள அற்புதத்தைப் பார்த்தார்கள். குழந்தைகளிடம் உள்ள அதிசயத்தைப் பார்த்தார்கள். சங்கீதத்தில் உள்ள தெய்வீகத்தைப் பார்த்தார்கள். பார்த்து அனுபவித்தார்கள். அனுபவத்தையும் ஆனந்தத்தையும் அப்படியே எடுத்து வழங்கினுர்கள்.

ரசிகமணியின் வாழ்க்கையே ஒரு புரட்சிதான். பெண்ணின் பெருமை, குழந்தை அன்பு, சமுதாய இசை, பொது வசனம், கல்வி(யில்) இன்பம், கவி அருமை, கலேத்தெய்வம், வாழ்க்கை அனுபவம் இப்படி ஒரு புரட்சியை நடத்திக்கொண்டே இருந்தார்கள் ரசிகமணி.

எரிச்சலிலிருந்தோ வெறுப்பிலிருந்தோ பிறக்கவில்லே ரசிகமணியின் புரட்சி. சுயநலத்திற்காக உண்டான புரட்சி அல்ல அது. அறியாமையிலும் இருளிலும் மக்கள் கிடந்து தவிக்கிறதைப் பார்த்து அவர்கள்மேல் உண்டான கருணேயிலிருந்து பிறந்த புரட்சி ரசிகமணியின் புரட்சி.

அதனால் ரசிகமணி தம் புரட்சியை அன்போடு நடத்தினார்கள். விருந்தோம்பலோடு நடத்தினார்கள். உபசரிப்போடு நடத்தினார்கள். எல்லோரையும் மதித்துப் பாராட்டி எளிமையாகவும் இனிமையாகவும் நடத்தினார்கள். பக்திமயமாகவே நடத்தினார்கள் புரட்சியை.

ரசிகமணி நடத்திய இந்த அற்புதப் புரட்சியில் இருக்கிறது அவர்களுடைய வரலாறு.

பத்து—உணர்ச்சிதான் உண்மை. உணர்ச்சி இல்லை என்றால் அது உண்மை இல்லை. அது வெறும் வார்த்தைதான். உணர்ச்சிக் கண் கொண்டு பார்க்கிறபொழுதுதான் உண்மையின் பிரகாசம் தெரியும். இல்லை என்றால் இருட்டுத்தான். கும்மிருட்டுத்தான்!

அனுபவம் என்பது உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அழுத்தம் ஏற ஏற—உணர்ச்சிக்கு இறுக்கம் ஏற்பட ஏற்பட அது பாவ உருவத்தோடு எழும். உண்மையானது அப்பொழுது ஒளி ஊற்றாக இருந்து புதுப்புது ஒளிகளில் பிரகாசிக்கும். அப்படி உண்மைக்குப் புதிய புதிய பிரகாசத்தைக் கொடுக்கிற பாவ உருவத்தையே கலை என்கிறோம். கவி என்கிறோம்.

''கலை என்றால், கவி என்றால் அது விஷயம் மட்டும் அல்ல, சிருஷ்டித் தத்துவந்தான் கலை. சிருஷ்டித் தத்துவத்தோடுகூடிய கலையும் கவியும் உணர்ச்சி தத்துவத்துக்குள் புகுந்து கலந்துவிடுகிறது—கலந்து புதிய பிறப்பையே கொடுத்துவிடுகிறது.''

''கவியும், கலையுமே மனிதர்களுக்குத் துணை. வாழ்க்கைக்கு வழிகாட்டி.''

'' 'அது இப்படி, இது இப்படி' என்கிற விவரத்தை மட்டும் சொல்கிற காரியம் இல்லை கவி, கலை. உண்மையான கவி, கலை, என்ன செய்கிறதென்றால் மனிதனுக்கு வாழ்க்கையினிடத்து பிரியத்தை உண்டாக்குகிறது. பக்தியை உண்டாக்குகிறது. கசப்பை நீக்கி அன்பைப் பெருக்கி, நட்பும் காதலும் ஊறிப் பெருகச் செய்யும் வாழ்க்கையில்.''

''விஷத்தை முறித்து அமிர்தத்தை ஊட்டுகிறது அற்புதந்தான். இந்த அற்புதத்தைக் கலை செய்கிறது. கலைகளுக்கெல்லாம் அரசி என்று போற்றப்படும் கவி செய்துவிடுகிறது.''

''கலையும் கவியும் செய்கிற காரியத்தை வேறு எதனாலும் செய்யமுடியாது. ஆனால், மற்றவை செய்கிறதை—பணம் செய்கிறதை, உத்யோகம் செய்கிறதை, ரயில் செய்கிறதை, டெலிபோன் செய்கிறதை. கவியோ, கலையோ செய்துவிடும் என்று

எதிர்பார்க்கக்கூடாது. அந்தக் காரியங்களுக்கும் கலைக்கும் சம் பந்தம் இல்லை.''

இப்படி உண்மையைக் கையில் கொண்டுவந்து கொடுப்பார்கள் டி. கே. சி.

ஆங்கிலம், தமிழ் இவைகளில் உள்ள புத்தகங்கள் எல்லா வற்றையும் டி. கே. சி. படித்தார்கள். கலை, விஞ்ஞானம், இலக்கியம், தத்துவம் சம்பந்தமான புத்தகங்கள் எல்லாவற்றை யும் படித்தார்கள். இவைகளைப் படித்ததோடு நின்றுவிடவில்லை டி. கே. சி.

மனிதர்களைப் படித்தார்கள், வாழ்க்கையைப் படித்தார்கள், உலகத்தைப் படித்தார்கள். உலகங்கள் எல்லாவற்றையும் இயக்கு கிறதே ஒரு அற்புத சக்தி, அதைப் படித்தார்கள். வாழ்நாள் முழுவதும் இவற்றைப் படித்துக்கொண்டே இருந்தார்கள்.

படிக்கப் படிக்க அவர்களுடைய சத்திய தரிசனத்திற்குத் தெளிவு ஏற்பட்டது. உறுதி கிடைத்தது. உண்மையானது பழுத் துக் கனிந்து ஆனந்தத் தேன் சொட்டியது.

தமிழ் பாஷையைப்போல் எளிமையும் இனிமையும் நிறைந்த அருமையான மொழி உலகில் வேறு இல்லை. கவி என்றால் அது தமிழில்தான். இசை, நடனம், ஓவியம், கோவில் கோபுரம், காதல், வீரம், பக்தி எல்லாமே பல ஆயிரம் வருடங்களாகப் பண்பட்டு வந்திருக்கிறது தமிழகத்தில்.

இப்படி ஒரு பண்பாட்டை உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாது.

தமிழ், பண்பாடு, கலை, எளிமை, இனிமை இவற்றைத் தமி ழர்கள் அறிந்துகொள்ள முடியாதபடி ஆங்கிலக் கல்வியும் பள்ளிக் கூடமும் செய்துவருகின்றன. விதியும் அவற்றோடு ஒத்துப் பேசி சதிசெய்கிறதோ என்று சொல்லத் தோன்றுகிறது.

தமிழ் மக்கள் பொய்யையும் மயக்கத்தையும் உதறி எறிய வேண்டும். உண்மையைப் பார்க்கவேண்டும். தமிழர்களுக்குத் தமிழே துணை. அதுவே கதி.

இப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். இதையே வாழ்க்கையாகவைத்து—தவமாகக்கொண்டு அருள்நெறி காட்டி வந்தார்கள் டி. கே. சி.

டி. கே. சியின் அவதார மகிமை அவர்களுடைய தவ வாழ்க் கையில் இருக்கிறது. அருள் வாழ்க்கையில் இருக்கிறது. வெறும் ஜாதகக் குறிப்பில் இல்லை.

அது அவர்களுடைய கலாசாலைப் படிப்பிலும் இல்லை. சட்டப் படிப்பிலும், அவர்கள் வகித்த உத்யோகத்திலும் இல்லை. அவர்கள் வாழ்க்கை முழுவதும் இருக்கிறது.

ஆனாலும் சரித்திரம் என்கிற ஒன்று தொடர்ந்து போவதற்காக அவர்களுடைய ஜாதக வாழ்க்கையை நாமும் சேர்த்தே கொண்டுபோக வேண்டியதுதான்.

இன்று தமிழ்மொழிக்கு எவ்வளவோ பெருமை. சீரும் சிறப்பும் பெற்று தமிழ் அரசோச்சுகிறது. தமிழ் என்றால் பயந்து ஓடியவர்கள், ஒன்றுக்கும் உதவாதது தமிழ் என்று வெறுத்து ஒதுங்கியவர்கள், தமிழைக் கேவலமாக நினைத்தவர்கள், தமிழில் பேச வராது, எழுத வராது என்று ஜம்பம் பண்ணியவர்கள் எல்லோரும் இன்று தமிழை மதிக்கிறார்கள். தமிழை வானளாவிப் புகழ்கிறார்கள். தமிழில் பேசுவதையும் எழுதுவதையும் பெருமையாக நினைக்கிறார்கள். தமிழோடு தமிழாய்ச் சேர்ந்து உருள வேண்டும், இல்லாவிட்டால் பிழைப்பே போய்விடும் என்று பயப்படுகிறார்கள்.

எங்கு பார்த்தாலும் வள்ளுவர் கழகங்கள், கம்பர் கழகங்கள், முத்தமிழ்ச் சங்கங்கள், தமிழ் மன்றங்கள் இப்படிப் பெருகி உள்ளன. அவ்வளவிலும் அமைச்சர்கள் ஒட்டிக்கொள்கிறார்கள். ஐகோர்ட் ஜட்ஜுகள் சேர்ந்து கொள்கிறார்கள். பெரிய பெரிய அதிகாரிகள் மேடை ஏறி முழங்குகிறார்கள். ஆராய்ச்சி நூல்கள் எழுதுகிறார்கள். இப்படி எல்லாம் இன்று தமிழுக்கு பெருமையும் மரியாதையும் கிடைத்தற்குக் காரணம் ரசிகமணிதான். அவர்தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்குச் செய்த தொண்டுதான்.

தமிழில் இன்று பல அறிவியல் நூல்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. சிறுகதைகள், தொடர் கதைகள், நாடகங்கள், கவிதைகள் எல்லாம் பெருக்கெடுத்து ஓடுகின்றன. தமிழில் பல்வேறு துறைகள் பற்றிய பல்வேறு பத்திரிகைகள் வளர்ந்தோங்கி நிற்கின்றன. கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடங்கள் தமிழில் நடக்கின்றன. தமிழ் ஆசிரியர்கள் மதிக்கப்படுகிறார்கள். தமிழில் ஈடுபாடு உடையவர்கள் பெரிய பெரிய பதவிகளை வகிக்கிறார்கள். அந்நிய நாடுகள் பலவற்றில் தமிழுக்கு மரியாதை உண்டாகி இருக்கிறது. எந்த ஒரு அரசியல் கட்சியும் தமிழை மதிக்காவிட்டால், அது தமிழகத்தில் தலைதூக்க முடியாது. இப்படி எல்லாம் இன்று நிலைமை இருக்கிறதே, இதற்கு டி. கே. சி. செய்த தொண்டு அளவிட முடியாதது.

டி. கே. சியால் தமிழுக்கும் பெருமை, தமிழ்ப் பண்பாட்டிற்கும் பெருமை. டி. கே. சியினுல் தான் இன்று தமிழ் வசனம் இந்த உன்னதநிலையை அடையமுடிந்தது. வசனத்தின், கண்களைத் திறந்துவிட்டதும் நடைபயிற்றியதும் டி. கே. சிதான். அவர்களுடைய பேச்சையும் சொற்பொழிவையும் கட்டுரைகளையும் வழிகாட்டியாகக் கொண்டுதான் எளிதாகவும் இனிதாகவும் மற்றவர்கள் தமிழைக்கையாண்டார்கள்.

தமிழ்ப் பாடல்களை இன்று எல்லோரும் அனுபவிக்கிருர்கள். மனம் விரும்பிக் கவிகளைப் பாடி அனுபவிக்கிருர்கள் என்ருல் அதற்கு டி. கே. சிதான் காரணம்.

தமிழிசை இன்று உயிரோடு இருக்கிறது. வலுவாக இருக்கிறது. அதற்கும் காரணம் டி. கே. சிதான். பரதநாட்டியம், ஓவியம் இவற்றின் உல்லாச நடமாட்டத்திற்கும் டி. கே. சி. தான் காரணம்.

சமயம், பக்தி, பண்பாடு, ரசனே, ஆனந்தம் இவை எல்லாம் டி. கே. சியால் புத்துயிர் பெற்றன.

ஒருசில பண்டிதர்களின் சர்வாதிகாரத்துக்குள் கட்டுண்டு கிடந்த கவிகளை, கலைகளை, வசனத்தை, இசையை, நடனத்தை, பண்பாட்டை, பக்தியை, அனுபவிக்கிறதை, ஆனந்தத்தை எல்லாவற்றையும் மக்கள் எல்லோருக்கும் பொது உடைமை ஆக்கினுர்கள் ரசிகமணி டி. கே. சி.

முன்பு ஒரு பாடலைச் சந்தி பிரித்து வாசிக்க முடியாது. கற்றுவல்ல புலவர்களே பாடலை வாசிக்க முடியாது. இன்று ஆடவர், பெண்டிர், குழந்தைகள்கூடப் பாடல்களை எளிதில் வாசிக்க முடியும் பாடமுடியும். முத்தொள்ளாயிரமாக இருந்தாலும் சரி, குற்ருலக் குறவஞ்சியாக இருந்தாலும் தமிழில் உள்ள எந்தப் பாடலையும் இயல்பாக யாரும் பாடமுடியும். அனுபவிக்க முடியும், படித்தவர்களாலும் முடியும். பள்ளிக்கூடம் போய் அது இது என்று படிக்காதவர்களாலும் முடியும்.

பாடல்களைச் சந்தி பிரித்து, தெளிவுபடுத்தி, சந்தம் கொடுத்து எல்லோரும் பாடுவதற்கு ஏற்ற முறையில் ஒவ்வொரு பாடலையும் ஒழுங்குபடுத்திக்காட்டியது டி. கே. சிதான்.

தமிழ்ப் பாடல்களில் விழுந்துகிடந்த பிழைகளுக்கு அளவே இல்லை. எழுத்துப் பிழை, சொல் பிழை, கருத்துப் பிழை இப்படி எத்தனை எத்தனையோ பிழைகள். அவ்வளவு பிழைகளையும் களைந்து பாடல்களுக்குத் தெய்வ அவதாரம் கொடுத்தது டி. கே. சிதான்.

அதுமட்டும் அல்ல, ஒரு உண்மையான பாடல் இருந்தால் போதும். அதை அனுபவித்தவர்களில் பலர் அதுபோலவே பாடி விடுவார்கள். பாடிப்பாடி அந்த உண்மைக் கவியோடு சேர்த்தும் விடுவார்கள். இந்தப் போலிப் பாடல்கள் யாப்பு முறையில் கவி போல இருக்குமே தவிர, கவிக்குரிய இசைப்பண்பு, தாளப்பண்பு, சிருஷ்டி தத்துவம் ஒன்றும் இருக்காது. ஆனாலும் சாமான்ய மக்கள் இது உண்மைக்கவி, இது போலிப் பாடல் என்று பிரித்துப் பார்த்தது இல்லை. கற்றுவல்ல பண்டிதர்களும் போலிப் பாடல்பற்றி யோசித்ததே இல்லை. டி. கே. சியைத் தவிர உலகில் யாருமே போலிப் பாடல்கள், செருகு கவிகள் என்று ஒன்று இருக்கிறதைக் கண்டதே இல்லை. டி. கே. சிதான் அதைக்கண்டு, செருகுகவிகளை எல்லாம் களைந்து எறிந்துவிட்டு, உண்மையான பாடல்களை மட்டுமே எடுத்து மக்களுக்கு வழங்கினார்கள். அப்பாடல்களில் உள்ள உணர்ச்சி பாவங்களையும், சிருஷ்டி தத்துவங்களையும், நாடக உத்திகளையும் மக்கள் அனுபவிக்கச் செய்தார்கள்.

கவிகளில் விழுந்த பிழைகளைத் திருத்தியதும், போலிக் கவிகளை ஒதுக்கிவிட்டு உண்மைக் கவிகளை இது என்று இனங்காட்டியதும் ரசிகமணி டி. கே. சிதான்.

கவிக்கலை என்பது தெய்வ ஒளிபெற்று இன்று மக்களோடு மக்களாய் உறவாடுகிறது என்றால் அதற்கு டி. கே. சியின் அருளும் தியாகமுமே காரணம். இப்படியாக வசனம், கவி, இசை, நடனம், ஓவியம், பண்பாடு, சமயம், பக்தி, தமிழ், கல்வி எல்லாவற்றிலுமே பொய்யை அடித்து விரட்டிவிட்டு, உண்மையை அரியாசனத்தில் ஏற்றி அரசாளச் செய்த பெருந்தயாளன் ரசிகமணி டி. கே. சி.

இவ்வளவு பெரிய காரியத்தை டி. கே. சி. தன்னந்தனியாக நின்றே செய்தார்கள், சந்தோஷமாகவே செய்தார்கள். வாழ்நாளில் ஒரு நிமிடம்கூட ஓய்வு ஒழிவு இல்லாமல் தன் கடமையை அவர்கள் உற்சாகமாக நடத்திக்கொண்டிருந்தார்கள். ஒரு விநாடி கூட அவர்கள் அலுப்படையவில்லை, சலிப்படையவில்லை.

டி. கே. சி. கோபப்பட்டதை நான் பார்த்ததே இல்லை. அதே போல வருத்தப்பட்டதையும் நான் பார்த்ததில்லை. ஒருவருமே டி. கே. சியிடம் கோபமோ, வருத்தமோ, அலுப்போ, சலிப்போ ஒன்றையும் பார்த்தது கிடையாது. எப்பொழுதும் ஆனந்தமாகவே தன் காரியத்தைச் செய்துவந்தார்கள் டி. கே. சி.

கையில் இருக்கும் இன்பத்தை உதறி எறிந்துவிட்டு துன்பத்தைத் தேடி மனிதர்கள் அலைகிறார்களே என்னும் கருணைதான்

டி. கே. சியிடமிருந்து கோபமாகப் பிரகாசிக்கும். வருத்தமாக ஜொலிக்கும். மற்றப்படி கோபமோ, வருத்தமோ அவர்களிடம் தலைநீட்டியதே இல்லை.

டி. கே. சி. செய்த காரியம் ஒரு தனிமனிதனால் செய்ய முடியாத மாபெரும் காரியம். ஒரு சமுதாயமே செய்ய முடியாத காரியந்தான். ஒரு தலைமுறையில் அல்ல, பல தலைமுறைகள் தொடர்ந்து ஒரு சமுதாயமே செய்ய முடியாத காரியத்தை டி. கே. சி. தன்னந்தனியராய் நின்று செய்துவிட்டார்கள்.

ஒரு பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால் அதில் எத்தனை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆராய்ச்சி வல்லுநர்கள் இருந்து அலங்கரிக்கிறார்கள். எத்தனையோ துறைகளை எடுத்து வைத்துக்கொண்டு வருடக்கணக்கில் போதனையும் ஆராய்ச்சியும் பண்ணுகிறது பல்கலைக்கழகம்.

ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாய் செலவாகிறது பல்கலைக் கழகத்திற்கு. பல கோடி ரூபாய் இருந்தால்தான் பல்கலைக் கழகம் தொடங்கமுடியும்.

இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஒரு பல்கலைக்கழகங்கூட ஒரு துறையிலாவது ஒரு அம்சத்தையாவது இதுதான் உண்மை என்று துணிந்து சொல்லமுடிகிறதா? இது பொய் என்று அடித்து விரட்ட முடிகிறதா? எந்த விஷயத்தையாவது ஆனந்தமாக எடுத்துச் சொல்ல முடிகிறதா? விஷயம் சிறியதோ, பெரியதோ, விஷயத்தோடு விஷயமாகச் சேர்ந்து இருக்கிற அற்புதத்தை—அதிசயத்தை எடுத்துக்காட்ட முடிகிறதா? கல்வியிலும், கலையிலும் ருசியை உண்டாக்க முடிகிறதா? வாழ்க்கையைக் கசப்பில்லாமல் அமிர்தமாக அனுபவிக்கும்படி செய்கிறதா? இல்லை. பல்கலைக் கழகங்களால் முடியவில்லை.

பல்கலைக் கழகங்களுக்கே எது உண்மை, எது பொய் என்று தெரியாமல் இருக்கிறபொழுது, மற்றவர்களுக்கு அவை எப்படி விளக்க முடியும்? பல்கலைக் கழகங்களே பிழைப்புக்காகப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதையே அறிவு அறிவு என்று சொல்லி ஓடுகிற பொழுது கல்வியில் ஆனந்தத்தையும் வாழ்க்கையில் ருசியையும் அவற்றால் எப்படிக் கொடுக்க முடியும்?

கோடிக்கணக்கில் பணத்தை அள்ளி வீசி, பேராசிரியர்களைப் பட்டாளம் பட்டாளமாக வைத்துக்கொண்டு, கலைகளை எல்லாம் கொலுவில் இருத்திவைத்திருக்கிற பல்கலைக் கழகங்கள் செய்ய முடியாத காரியத்தை டி. கே. சி. தன்னந்தனியாக இருந்து செய்தார்கள். வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

டி. கே. சியின் மூலமாகப் பரிமளிக்கிற இந்தத் தெய்வச் செயலில் அவர்களுடைய உண்மையான வரலாறு இருக்கிறது.

கேள்வி கேட்பாரற்று புழுதிக்குள்ளும், குப்பைக்குள்ளும் கிடந்த அரிய பெரிய ரத்தினங்களைக் கண்டெடுத்தார்கள் டி. கே. சி. விலைமதிக்கமுடியாத கலைமாமணிகள் அவை. கவி, பண் பாடு, தமிழ், பக்தி, இசை முதலிய கலைத்தெய்வங்களை எடுத்து அவைகளைத் துடைத்துத் துப்புரவு செய்து, புண்களை ஆற்றி அவற்றின் தெய்வ ஒளியை எல்லோரும் அனுபவிக்கச் செய்தார் கள்.

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றுண்டு படாடோபமான வெறும் டாம்பீகக் காலம். குழப்பமும் கலக்கமும் நிறைந்த காலம். ஆணவமும் திமிரும் அரசோச்சுகிற காலம். உண்மைக் கும் எளிமைக்கும் இடம் எங்குமே இல்லை. அறியாமையும் இருட்டடிப்பும் நிறைந்த இந்த மாய வேளையில் ஞானசூரியனுக வந்து அவதரித்தார்கள் டி. கே. சி. அமிர்தத்தையே மழையாகப் பொழிவதைப் போல உண்மையின் ஒவ்வொரு அம்சத்தையும் தெளிவுபடுத்தினுர்கள், உறுதிப்படுத்தினுர்கள். அந்தத் தெய்வ ஒளியில் அறியாமையும் மயக்கமும் பொசுங்கிவிட்டன.—''ஐயோ, போய்விட்டனவே'' என்று வருந்துவது இயல்புதான். ஆனுல் போய்த் தொலையவேண்டியது அறியாமை ஒன்றுதான். அது ஒழிந்து போய்விட்டது. ''உண்மை விளங்கிவிட்டது'' என்று மனம் தெளியக் காலம் சிறிது பிடிக்கும். ஆனுல் தெளிவது உறுதி. அப்பொழுது பொய்யும் மயக்கமும் சமுதாயத்தில் இருக்க முடி யாது. உண்மையான கலையும் கலை ஆர்வமும் மக்களிடம் பொங் கும். உணர்ச்சிமயமாய்ப் பொங்கும். உண்மையைக் கண்டு கண்டு ஆனந்தத்தில் திளைக்க, கலையையும் வாழ்க்கையையும் பக்தியோடு பார்ப்பார்கள். அனுபவிப்பார்கள். மேலும் மேலும் படிப்பார்கள். கலை ஆர்வமும் பக்தியும் யானைப் பசியாக இருக்கும் சமுதாயம் முழுவதும்.

அப்பொழுது சொல்வார்கள் நம்மவர்கள், ''அடடா! இந்த டி. கே. சி. என்பவர் யார்? கலாதேவியின் பொன்முடியைச் சீவி, சிக்கெடுத்து, கொண்டை போட்டு, பூச்சூடி அலங்கரித்துப் போயிருக்கிறுரே அந்த மகான் யார்?'' என்று. சமுதாயம் முழுவதும் ஒத்துநின்று டி. கே. சியை ஆவலோடு விசாரிப்பதற்கு உரிய வேளை இப்பொழுதே வந்துவிட்டது. நிலங்கீறி பொழுது புலர ஆரம்பித்துவிட்டது.

டி. கே. சியின் அவதார ரகசியம் அந்த வெளிச்சத்தில் பிரகாசமாக ஜொலிக்கும்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஒன்றிலும் உணர்ச்சி வசப்பட மாட்டார். உணர்ச்சிவசப்பட்டாலும் அதை வெளியில் காட்ட மாட்டார். மகாத்மா காந்தியைக்கூட ஆகா, ஓகோ என்று புகழ்ந்துவிட மாட்டார். உண்மையைப் பொன் போல் பொதிந்து மனதுள் வைத்து அனுபவிப்பார், மதிப்பார். ஆனால் தம் அனுபவத்தைச் சொல்கிறபொழுது அளந்து நிறுத்து மஞ்சாடிகூட விஞ்சாதபடி ஜாக்கிரதையாக வார்த்தைகளைப் போட்டுப் பேசுவார். பேச்சிலேயே கண்டிப்பு இப்படி என்றால், அவர் எழுதுகிறதில், அளவும் கணக்கும் எவ்வளவு துல்லியம் என்று சொல்ல வேண்டியதில்லை.

உணர்ச்சியை உள்ளுக்குள் அமிழ்த்திவைத்து அறிவை அதன் மேல் ஏற்றி நிற்கவைத்துப் பார்க்கிறவர் ராஜாஜி.

அந்த ராஜாஜியினாலேயே ரசிகமணியைப்பற்றிய தம் உணர்ச்சியை அமுக்கிவைக்க முடியவில்லை. வெள்ளப் பெருக்கெடுத்து வந்து பொங்குகிறது ராஜாஜியின் உணர்ச்சி.

டி. கே. சி. பற்றி ராஜாஜி எழுதி இருப்பதைப் பாருங்கள். ''என்னைப் போன்ற ஒருவனையும் கூடத் தமிழில் ஆசை கொள்ளச் செய்தவர் டி. கே. சிதான். இதை இப்போது பலர் அறியச் சொல்கிறேன். உபசாரம் அல்ல—உண்மை.''

''என்னைத் தள்ளுங்கள்; தமிழ்நாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல வீரசேனை சேருமாறு இக்காலத்தில் ஊக்கம் உண்டாக்கியவர் டி. கே. சி. என்றே சொல்லுவேன். பலர் பல அரிய பணிகள் செய்திருக்கிறார்கள். செய்தும் வருகிறார்கள். ஆனால் டி. கே. சியின் தமிழ்ப்பணி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. அதை வேறு யாரும் செய்ததில்லை. இதய தத்துவமும் கவிதையின் தனிப் பண்பும் அறிந்து பெரும்பணி செய்பவர் டி. கே. சி.''

''மகனைப் பறிகொடுத்ததையும், உடல் நோயையும் ஆத்ம சக்தியைக்கொண்டு மறந்து, துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும் இடையில் யோகியைப்போல் நின்று தமிழ்ப்பணி செய்து வருகிறார்.''

''கவிதை என்றால் என்ன என்பதை வெகு சிலரே உணர்வார்கள். தாம் உணர்ந்ததைப் பிறரும் உணருமாறு விளங்கும் ஆற்றல் படைத்தவர்கள் அதிலும் குறைந்தவர்கள். ஆற்றல் படைத்தவர்களாயினும் விடாமுயற்சியுடன் சொந்த துக்கங்களையும் நோய்களையும் கவனியாமல் பணிசெய்பவர்கள் மிகமிகச் சிலர். அவர்களில் ஒருவர் டி. கே. சி. அவருடைய பணியும் புகழும் குறைவின்றி ஓங்க வேண்டும்.''

இது, நாற்பத்து இரண்டு வருடங்களுக்குமுன் ராஜாஜி 'கல்கி' யில் எழுதிய கட்டுரையின் பகுதி.

இனி முப்பது வருடங்களுக்குமுன் ராஜாஜி, டி. கே. சி. பற்றி எழுதியிருப்பதைப் பார்ப்போம். டி. கே. சியின் கம்பர் தரும் ராமாயணத்துக்கு ராஜாஜி எழுதிய முகவுரையிலிருந்து,

''டி. கே. சி. அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து கம்பன் பாடல்களைப் பாடி கவி வானம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார்; அதை நேரில் அனுபவித்தவர்கள் நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை; எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும்.

ஆனால், இப்போது டி. கே. சி. ஊனுடலை விட்டுப் போய் விட்டார். நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்தில் இருக்கும் நினைவுகளும், இந்த நூலும்.

ஸ்ரீ ராமபிரான் எப்படிக் கம்பன் உள்ளத்தில் மற்றும் ஒரு முறை அவதரித்தானோ, அவ்வாறே கம்பனும் டி. கே. சியின் உள்ளத்தில் மறுபடி அவதரித்தார் . . .

''முன்னுரை எழுதும் பதவியை அன்பினால் அடைந்தேன். புலமையாலோ திறமையாலோ அடைந்ததல்ல இந்தச் சிவிகை.

என்னையும் ஓர் பொருளாக்கி இந்தச் சிவிகையில் ஏற்றியது டி. கே. சி அவர்களின் அன்பே. அதன் சக்தியைக் கண்டு வியந்து பணிந்து வணங்குகிறேன்.''

இனி, இன்றைக்குப் பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் 'கல்கி' மலரில் டி. கே. சி. பற்றி ராஜாஜி எழுதியதைப் பார்ப்போம்.

'' . . . சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம். தமிழ் வசனநடை முன்னேற்றத்தின் ரகசியம். தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம். அன்பின் பரம மகிழ்ச்சி. வேஷங்களின் பொய்ம்மை அனைத்தையும் நன்றாகக்கண்ட பூரண ரசிகமணி டி. கே. சி. பிறந்த நாளும் சென்ற திங்கட்கிழமையே. அச்சுமரம் போன்ற ரோகிணி நட்சத்திரத்தில் கண்ணன் பிறந்தான். இந்த அச்சு மரத்தடியில் (அப்படியே) மற்றொருவர் அவதரித்தார். தமிழ்க் கவிக் காதலர் டி. கே. சி. என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

இவர்தான் 'கல்கி' கூட்டத்தின் குலபதியாக இருந்து பல் லாண்டு அந்தப் பத்திரிகையையும், அதை நடத்தியவர்களையும், அதைப் படிப்பவர்களையும் ஆசீர்வதித்து வந்தார்.

அவரைக் 'கல்கி' மறக்கமுடியுமா?

ஸ்ரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி. கே. சி. பிறந்த நாள்; என்றும் தமிழர் கொண்டாட வேண்டிய நாள்.''

இப்படி உணர்ச்சியை, உண்மை பொங்கப் பொங்கக் கொட்டு கிறார்கள் ராஜாஜி.

ரசிகமணியின் வரலாறு, அதாவது சரித்திர உண்மை ராஜாஜி சொல்வதில் இருக்கிறது. வாழ்நாள் முழுவதும் உண்மையை ஆனந்தமயமாக எடுத்து மக்களுக்கு விளக்கிக்கொண்டிருப்பதையே வாழ்க்கையாக நடத்தினார்களே டி. கே. சி. அந்தத் தவஞானத்தில் இருக்கிறது டி. கே. சியின் வரலாறு.

பாடல்களில் விழுந்த பிழைகளை நீக்கிய டி. கே. சியின் அருள்மயமான ஞான எழுச்சியிலும் அவர்களுடைய வரலாற்றைப் பார்க்கலாம். செருகு கவிகளைக் களைந்தெறிந்து உண்மையான கவிகளுக்கு வாழ்வளித்த அன்புமயமான தியாகத்திலும் டி. கே. சியின் சரித்திரத்தைப் பார்க்கலாம்.

டி. கே. சி. எழுதிய கம்பர்தரும் ராமாயணம், முத்தொள் ளாயிரம், இதய ஒலி, கம்பர் யார், அற்புத ரஸம், டி. கே. சியின் கடிதங்கள், இன்னும் எத்தனையோ கட்டுரைகள், சொற்பொழிவு கள், உரையாடல்கள், தமிழிசை, கோவிலின் பெருமை, கோபுரத் தின் அருமை, அன்பின் அற்புதம், உண்மையின் ஒளி, பற்றற்ற பக்தி, கலங்காமை, ஆனந்தம், தியாகம், பண்பாடு, தமிழ் இவ்வளவும் டி. கே. சியின் வரலாற்று நூல்களாகும்.

மேலே சொல்லியவைதான் உண்மையான வரலாற்று நூல் கள். இவைகளோடு, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடல்களும் டி. கே. சியின் வரலாறை உணர்த்தும் சரித்திரந் தான்.

டி. கே. சியைப் பார்த்து அதிசயித்து உணர்ச்சிமயமாய் உருகு கிறார் கவிமணி. உருகி ஓடும் உணர்ச்சி கவிதையாய் எழுந்து வருகிறது. எப்படி என்று பார்ப்போம்:

ரசிகமணி டி. கே. சியால் தமிழுக்கு யோகம். தமிழ்ப் பண்பாட்டுக்கு யோகம். கலை, இலக்கியம், பக்தி, ஆனந்தம் எல்லாவற்றுக்குமே யோகந்தான். எல்லாவற்றையும்விட உலகம்

முழுவதையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறதே உண்மை, அந்த உண்மைக்கே ஒரு பெரிய யோகந்தான். அப்படியானல் ரசிகமணி இல்லாத தமிழ்ப் பண்பில் ஒளி இருக்காது? உயிர் இருக்காது, உணர்ச்சியும் இருக்காதுதான்.

வாழ்க்கையில் உயிர் இருக்கவேண்டும் என்ருல் ரசிகமணி நம்முடன் வாழவேண்டும், எப்பொழுதும் வாழவேண்டும்.

இந்த உணர்ச்சி கவியாக அவதாரம் எடுத்து வருகிறது.

''கன்னித் தமிழேபோல்
கம்பன் கவியேபோல்
மன்னும் பொதிகை
மலேயேபோல்—பன்னு நம்
நாடு மகிழச்
சிதம்பர நாதநண்பா
நீடுநீ வாழ்க
நிலேத்து.''

ரசிகமணியைக் கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்து வேண்டிக் கொள்கிறது தமிழ். அவர்களும் ஒப்புக்கொண்டு அப்படியே நம்முடன் இருக்கிருர்கள். நூல்கள் மூலமாகவும், விளக்கங்கள் மூலமாகவும் நம்முடன் இருக்கிருர்கள். என்றென்றும் நம்முடன் அப்படி இருக்கவே செய்வார்கள்.

ஆனல், ரசிகமணியின் உபசரிப்பும், விருந்தோம்பலும், எளிமையும், இனிமையும் நம்மை விட்டுவிலகிப் போய்விட்டன. ரசிகமணி இருக்கும்வரை அன்பையும் அருளேயும் நட்பையும் நம் கண்களால் நாம் பார்க்க முடிந்தது. கையால் தொட்டுக்கூடப் பார்க்க முடிந்தது.

ரசிகமணி காலமானபின்பு அவைகள் எங்கோ, கண்காணு இடத்திற்குப் பறந்தோடிவிட்டன.

இந்த, சோக உணர்ச்சி கவியாய் உருவெடுக்கிறது:

''அன்னேபோல் என்னே
அருவியில் நீராட்டி
இன்னமிழ்தம் பக்கத்(து)
இருந்தூட்டி,—இன்னமும்
தங்குதங்(கு) என்று சொன்ன
தங்கக் குணத்தானே
எங்குபோய்க் காண்பேன்
இனி.''

தேசிய விநாயகம் பிள்ளை பாடல்களில் டி. கே. சியின் வரலாறு இருக்கிறது.

டி. கே. சி. ஒரு அவதார புருஷர். பெரிய காரியம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக அவதரித்தவர். உண்மையானது—அதாவது தமிழும் தமிழ்ப் பண்பாடும், வஞ்சகமான முறையில் ஏமாற்றப்பட்டு, அவமதித்து ஒதுக்கித் தள்ளப்பட்டு, சிறையில் பூட்டி வைத்ததுபோல் மூடி மறைக்கப்பட்டது. தமிழுக்கும் பண்பாட்டுக்கும் புறம்பான அம்சங்கள் அட்டகாசத்தோடும் திமிரோடும் ஆடம்பரம் பண்ணிக்கொண்டிருந்தன.

உண்மைக்கு—தமிழுக்கு விரோதமானவைகளின் கொட்டத்தை ஒடுக்கி, உண்மையை—தமிழையும் பண்பாட்டையும் வாழ வைக்கவேண்டும். அதற்காகவே டி. கே. சி. அவதரித்தார். அதை நிறைவேற்றி விட்டார்.

டி. கே. சியின் வரலாறு அவர் செய்த செயலில்—எழுதிய எழுத்தில்—சொல்லிய சொல்லில்—ராஜாஜி, கவிமணி போன்றவர்களையும் தன்வசப்படுத்தி ஈடுபடச்செய்ததில் தூய யோகநெறியில் நிறைந்து கிடக்கிறது.

வெறும் ஜாதகக் குறிப்பில் இல்லை.

முப்பத்து ஐந்து வருடங்களுக்குமுன் டி. கே. சி. அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். ''உங்களுடைய வரலாற்றை ஒரு புத்தகமாக எழுதவேண்டும், அதற்கு வேண்டிய குறிப்புகள் தேவை.'' என் கடிதத்திற்கு **18–12–49**ல் கீழ்க்கண்டபடி பதில் எழுதினார்கள் டி. கே. சி.

''என்னுடைய வரலாறு என்னிடம் இல்லை. தமிழிலும் தமிழ்ப் பாடல்களிலுமே இருக்கிறது. தமிழ்ப் பாடல்களை அனுபவித்ததிலும் ஆனந்தம் அடைந்ததிலும் இருக்கிறது. அது சம்பந்தமாக நான் சொல்கிறது, அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுதுகிறதுமே குறிப்புகள்.''

''தமிழையும் கவியையும் அனுபவிக்க வேண்டும். அது போதும்.'' ''என்னைப் பற்றிய சரித்திரம் ஒன்றும் வேண்டாம். வாசகர்களுக்கு முதலில் கஷ்டம், அடுத்தாற்போல் எனக்குக் கஷ்டம், கடைசியில் பதிப்பகத்திற்கு நஷ்டம்.''

''மேலும் என்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ பைத்தியக்காரத்தனங்கள் உண்டுதான். அவைகள் இப்பொழுது ஞாபகத்தில் இல்லை.

புஸ்தகம் எழுதாமல் இருந்தால்,

'கோடி நமஸ்காரம்—கோடி
கோடி நமஸ்காரம்'

வேறு என்னத்தைச் சொல்ல'' இப்படி வந்தது பதில்.

டி. கே. சி. சொல்வது நூற்றுக்கு நூறு உண்மையாக இருந்தாலும், தமிழை அனுபவிப்பதற்கும், டி. கே. சி. காட்டிய சத்திய ஒளியைக் காண்பதற்கும் ஒரு பிடிமானம் வேண்டி இருக்கிறது. டி. கே. சியின் இளமைப் பருவம், வாலிபப் பருவம், கல்யாணம், உத்யோகம் முதலிய காரியங்கள் அந்தப் பிடிமானமாக அமையும் என்று பார்க்கிறோம்.

இனி அடுத்து டி. கே. சியின் உயர் பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு பற்றிப் பார்ப்போம்.

4. திருச்சி உயர்நிலைப்பள்ளியில் படித்த படிப்பு

தொண்ணூற்று ஐந்து வருடங்களுக்குமுன், ரசிகமணி சிறுவனாக இருந்தபொழுது தென்காசியில் ஸ்கூல் இல்லை. தென்காசியைச் சுற்றி நூறு மைல் சுற்றளவுக்கு ஹைஸ்கூல் இல்லை. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய பெரிய பெரிய ஊர்களில்கூட எட்டாம் வகுப்புவரை உள்ள பள்ளிக்கூடங்களே இருந்தன. சிறிய ஊர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டாம்.

அந்தக் காலத்தில் மோட்டார் கிடையாது. ரயில்கூட தென்காசியிலிருந்து குறுக்கு வழியில் மதுரை முதலிய இடங்களுக்கு இல்லை. மின்சார விளக்கு முதலியவை இல்லை. சினிமாக் கொட்டகை இல்லை. காபி ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் இல்லை. சென்னைப்பட்டினம், கும்பகோணம் முதலிய ஒன்றிரண்டு இடங்களில்தான் கல்லூரிகள் இருந்தன. அன்றைய சென்னை மாகாணம் முழுவதிலும் இருபது இருபத்தைந்து ஹைஸ்கூல்கள்தான் இருந்தன.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்புவரை படித்து முடித்த டி. கே. சி. ஆறும் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை தென்காசியிலேயே படித்தார்கள்.

டி. கே. சி. ஐந்தாம் வகுப்பை முடித்த வருடம்தான் தென்காசியில் ஆறும் வகுப்புப் பாடம் நடத்துவதற்குரிய நடுநிலைப் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தது. அது அந்த வருடம் வராவிட்டால் ஆறும் வகுப்புப் பாடமே திருநெல்வேலி போய்தான் படிக்கவேண்டும். தென்காசியிலிருந்து திருநெல்வேலி முப்பது மைல். அதாவது ஐம்பது கிலோ மீட்டர். சாலைப் போக்கு வரத்து இல்லாத காலம். பிரயாணம் என்பது கோவில் குளங்களுக்குத்தான். அதுவும் நடைப்பயணந்தான். வசதி உள்ளவர்கள் மாட்டுவண்டி கட்டி கோவில் குளம் போய் வருவார்கள். ரொம்ப ரொம்ப வசதி உடையவர்கள்—ஒன்றிரண்டு பேர் தபால்

வண்டியில் போய் வருவார்கள். தபால் வண்டி திருநெல்வேலி போய்ச்சேர இரண்டு நாள் ஆகும்.

பத்து வயதுப் பையன் தினந்தோறும் தபால் வண்டியில் முப்பது மைல், முப்பத்து ஐந்து மைல் பிரயாணம் செய்யமுடியுமா? பிரயாணம் செய்தாலும் பள்ளிக்கூடம் போய் படிக்கமுடியுமா? முடியவே முடியாது.

திருநெல்வேலியில் தங்கிப் படிப்பதற்கு ஹாஸ்டல் கிடையாது. சாப்பாடு ஒட்டல்களும் இல்லை. இந்த நிலையில் டி. கே. சியின் திண்ணைப் படிப்பு முடிந்த உடனேயே நடுநிலைப்பள்ளி தென்காசியில் வந்துவிட்டது. அது ஒரு யோகம்.

டி. கே. சி. எட்டாம் வகுப்பு முடிய சொந்த ஊரில் இருந்தே படிப்பதற்கு வசதி கிடைத்துவிட்டது. இந்த வசதி கிடைக்காமல் போயிருந்தால், டி. கே. சி. மேல்கொண்டு படிக்கமுடியாமலே போயிருக்கலாம்.

எட்டாம் வகுப்பை தம் பதின்மூன்றும் வயதில் 1895-ஆம் ஆண்டு படித்து முடித்துவிட்டார் டி. கே. சி.

பிறகும் பிரச்சினைதான். சிதம்பரநாதன் என்னும் பதினுன்கு வயது இளைஞனை ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கவேண்டும். எப்படியாவது இளைய மகனை—செல்வக் குமரனுகிய சிதம்பரநாதனை ஹைஸ்கூலில் சேர்த்து மெட்ரிக்குலேசன்வரை படிக்க வைத்துவிட வேண்டும் என்று பெற்றோர் ஆசைப்பட்டனர். மூத்த மகன்—டி. கே. சியின் தமையனுர் ஐந்தாம் வகுப்புவரைதான் படிக்க முடிந்தது.

ஆனுல் அதற்கு வழி? தென்காசியில் உயர்நிலைப்பள்ளி இல்லை. திருநெல்வேலி ஜில்லாவிலேயே அநேகமாக இல்லைதான். மேற்கே போனுல் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத் தலைநகராகிய திருவனந்தபுரம் போய்ப் படிக்கவேண்டும். வடக்கே போனுல் திருச்சிராப்பள்ளியில்தான் ஹைஸ்கூல். வேறு ஒன்றிரண்டு இடங்களில் ஹைஸ்கூல்கள் இருந்திருக்கலாம். ஆனுல் அங்கு உள்ளூர்க்காரர்தான் படிக்க முடியும். அயலூரர்க்காரர் வந்து படிப்பதற்கு உரிய வசதி—அதாவது சாப்பாடு, தங்கும் இடம் ஒன்றும் இல்லை.

தொண்ணூறு வருடங்களுக்குமுன் தமிழகத்தில் ஹைஸ்கூல்கள் இருபதுக்கும் குறைவுதான். அவற்றில் 100-க்கு 90 ஆங்கிலேயரால் நடத்தப்பட்டவை. அவையும் கிறிஸ்துவ பாதிரிமாராலேயே நடத்தப்பட்டன. இந்நிலையில் திருச்சிராப்பள்ளியில்

திருச்சி உயர்நிலைப்பள்ளியில் படித்த படிப்பு

ஒரு உயர்நிலைப்பள்ளி இருப்பதும், அப்பள்ளியில் அயலூர் மாணவர் பலர் வந்து படிப்பதும் டி. கே. சியின் பெற்றோர்களுக்குத் தெரிந்தது. அதுமட்டும் அல்ல, திருச்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி இந்தியர்களால் நடத்தப்படுகிற பள்ளி என்பதும், இந்து மதத்தாரால் நடத்தப்படுகிற பள்ளி என்றும் தெரிந்தது. அயலூரிலிருந்து வந்து படிக்கிற மாணவர்கள் தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் உரிய இடங்கள் ஒன்றிரண்டு திருச்சிராப்பள்ளியில் இருக்கின்றன என்பதும் தெரிந்தது.

அதனால் சிதம்பரநாதனுடைய பெற்றோர்களுக்கு, ஒரு பெரிய பாரத்தையே இறக்கி வைத்ததுபோன்ற ஆனந்தம். சுற்றத்தார்களுக்கெல்லாம் ஒரே வியப்பு. ''சிதம்பரநாதன் திருச்சிராப்பள்ளி போய்ப் படிக்கப் போகிறான்'' என்பதை அவர்கள் நம்ப முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஆனந்தத்தில் அப்படித் தத்தளித்தார்கள் உற்றார் உறவினர் நண்பர் எல்லோரும்.

சிதம்பரநாதனுடைய மனநிலையைச் சொல்லவா வேண்டும்? ஆனந்தக் கனவிலேயே பறந்துகொண்டிருந்தான் பையன் சிதம்பரநாதன்.

திருச்சிராப்பள்ளியில் இருந்த தேசீய உயர்நிலைப்பள்ளியில் சிதம்பரநாதன் ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்பட்டான். இது **1895-ஆம்** வருடம். சிதம்பரநாதன் தங்கி இருந்து சாப்பிட்டது மலைக்கோட்டையில் உள்ள பாப்பம்மாள் அண்ணியின் வீடு.

பாப்பம்மாள் அண்ணியின் வீட்டில் பதினைந்து முதல் இருபது மாணவர்கள் தங்கி இருந்தார்கள், சாப்பிட்டார்கள்.

ஹைஸ்கூல் படிப்பில் டி. கே. சிக்கு உற்சாகம் இல்லை. வெறுப்பாக இருந்தது, கசப்பாக இருந்தது. என்றாலும் குற்றம் இல்லை. உற்றார் உறவினர், தாய் தந்தை, அண்ணன் அக்கா, சேக்காளிகள் இப்படி சதா உறவாடித் திளைத்துக்கொண்டிருந்த பதினான்கு வயதுப் பையனை கண்காணாத இடத்தில் கொண்டு போய் படிக்கப்போட்டால் அவனுக்கு எப்படிப் படிப்பில் மனம் ஓடும்? அங்கு வேண்டியவர் ஒருவரும் இல்லை. முற்றும் அன்னிய இடம் அது. வீட்டு வேலை என்று ஒன்றும் செய்வதற்கு இல்லை. உற்றார் உறவினர் வீட்டுத் திருமணம், சடங்கு இவற்றைப் பார்த்து அனுபவிக்க ஒன்றும் இல்லை. தேர்த் திருவிழா என்று எங்கும் போய் வருவதற்கும் வாய்ப்பில்லை.

போதாக்குறைக்குப் பாடமும் விளங்காத பாடங்கள். பையன்களுக்கும் அவர்கள் படிக்கும் பாடங்களுக்கும் சம்பந்தமே

இல்லை. அதுவும் இங்கிலீஷில்தான் பாடம். இங்கிலீஷ் கவிஞர்களுடைய பாடல்கள். தமிழ்நாட்டில் உள்ள சிறு பையன்கள் படிக்கவேண்டும். புரிந்துகொள்ளவேண்டும் என்றால் அது எப்படி முடியும்? பூமி சாஸ்திரம், வரலாறு இவைகள்கூட எங்கெங்கோ உள்ளவை. சம்பந்தமே இல்லாதவை. அவையும் இங்கிலீஷில்தான் பாடம் நடக்கும்.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது டி. கே. சிக்கு. இங்கிலீஷ் ஓரளவுக்கு நன்றாக வரத்தான் செய்தது. ஆனால் விஷயம் ஒன்றும் மனதோடு ஒட்டவில்லை. ஒரு அம்சத்தில்கூட பள்ளிப் படிப்பு ரசமாக இல்லை. அதனால் ஹைஸ்கூல் படிப்பு டி. கே. சியின் பிஞ்சு உள்ளத்தை வாட்டிவிட்டது. உணர்ச்சியைக் கனியவிடாமல் கன்னவைத்துவிட்டது.

மூன்று வருட ஹைஸ்கூல் படிப்பிலும் டி. கே. சிக்கு உத்சாகம் கொடுத்தவை, சக மாணவர்களுடன் தினந்தோறும் விளையாடுகிற விளையாட்டும், அவர்களுடன் பழகுகிற பழக்கமுந்தான். படிப்பில் வருகிற களைப்பையும் சோர்வையும் விளையாட்டும், நட்பும் ஓரளவு நீக்கிக் குணப்படுத்தின.

பாப்பம்மாள் அண்ணி வீட்டில்தானே சிதம்பரநாதன் சாப்பிட்டுத் தங்கி இருந்தார். அந்த அம்மாளுடைய அன்பும், பண்பும், பக்தியும் டி. கே. சிக்கு ஆறுதல் கொடுத்தன. தன் தாய் தன்னோடு இருந்து தன்னைப் பரிவோடு பாதுகாப்பது போன்ற ஆறுதல் டி. கே. சிக்கு இருந்தது. பள்ளிப் படிப்பு எவ்வளவு கசந்தாலும், பள்ளிக்கூடம் எவ்வளவு கொடியதாக இருந்தாலும் விளையாட்டு, நட்பு, தாய்மையின் பரிவு மூன்றும் டி. கே. சிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. அதனால் டி. கே. சி. படிப்பை விட்டுவிட்டு வந்துவிடவில்லை. தொடர்ந்து படித்து வந்தார். சொந்த வீட்டில் இருந்து படிப்பதுபோலவே இருந்து படித்து வந்தார்.

ஐம்பத்து ஐந்து வருடங்கள் கழிந்த பின்பும்—வாழ்க்கையில் பலபல நிலைகளைத் தாண்டி வந்தபிறகும் டி. கே. சி. தம் பள்ளிப் படிப்பை மறக்கவில்லை. ''எவ்வளவு ஏமாளித்தனமான காரியத்தைச் செய்திருக்கிறோம்? பல ஆண்டுகள் தொடர்ந்தல்லவா செய்து வந்திருக்கிறோம்?'' என்று அடிக்கடி சொல்வார்கள்.

அவர்கள் எழுபது வயதைத் தாண்டிய பிறகும் ஹைஸ்கூல் படிப்பை மறக்க முடியவில்லை. அது ஞாபகத்துக்கு வந்தவண்ணமாகவே இருக்கும்.

திருச்சி உயர்நிலைப்பள்ளியில் படித்த படிப்பு

தம் ஹைஸ்கூல் படிப்புப்பற்றி டி. கே. சி. சொல்வதை நேரில் கேளுங்கள்:

''ஹைஸ்கூலில் எனக்குப் பல விவரங்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். அத்தனை விஷயங்களையும் பாடமாகவே வைத்து நடத்தினார்கள். மத்திய அமெரிக்காவில் உள்ள மக்களின் வாழ்க்கை, வட துருவ-தென் துருவங்களின் சீதோஷ்ணநிலை, ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதியாகும் ஆட்டு ரோமத்தின் மதிப்பு, அமேஸான் நதியின் நீளம், கிரேக்க-ரோமானியர்களின் போர்க்கலையும் அவர்கள் உபயோகித்த படைக்கலங்களும், மத்திய தரைக்கடல் பிரதேசங்களில் வளரும் தாவர இனம், இப்படி எத்தனையோ விஷயங்களைப் படித்தேன். பாடம் பண்ணினேன். பரீட்சையிலும் எழுதினேன். ஒன்றுகூட எனக்கு விளங்கியதா? இல்லவே இல்லை.

எனக்கு இப்பொழுது வயது எழுபதைத் தாண்டிவிட்டது. அனுபவம் எவ்வளவோ பெற்றிருக்கிறேன். ஆனாலும் ஹைஸ்கூலில் படித்த விஷயம் இன்னமும் எனக்கு விளங்கியபாடாக இல்லை. உண்மை இப்படி இருக்க, பதினைந்து பதினாறு வயதுப் பையனாக இருந்து நான் படிக்கிறபொழுதே பாடம் எனக்கு விளங்கியது என்று நம்புவது அபத்தந்தானே! பள்ளிக்கூடமும், படிப்பும், மகிழ்ச்சியாக இருந்தன என்பது அயோக்கியத்தனந்தான்.

எனக்கு அப்பொழுது உற்சாகம் கொடுத்தவை நண்பர்களும் அவர்களுடன் விளையாடும் விளையாட்டுமே.

இன்னொன்றையும் நான் மறக்க முடியாது. உண்மையான கல்வியை எனக்குக் கொடுத்ததும் அதுதான். கல்வியில் ஆனந்தம், கல்வியில் உண்மை என்பதெல்லாம் எனக்கு அங்கிருந்து தான் கிடைத்தன.''

பாப்பம்மாளின் பரிவும் பண்பாடும் பற்றி டி. கே. சி. மறக்கமாட்டார்கள். அந்த அம்மாளை நினைத்தாலே டி. கே. சிக்கு ஒரு ஒளி உண்டாகும். பெண்ணின் பெருமையையும் கருணையையும் பாப்பம்மாளை வைத்தே அளந்துகாட்டுவார்கள் டி. கே. சி.

பாப்பம்மாள்பற்றி டி. கே. சி. சொல்வதைக் கேளுங்கள்:

''தஞ்சை மாவட்டம் திருவாரூர்ச் சரகத்தைச் சேர்ந்த குக்கிராமத்தில் பிறந்தவள் பாப்பம்மாள். தொண்டைமண்டல

முதலியார் இனம். பாப்பம்மாளின் பெற்றோர் வசதி இல்லாத எளியவர்கள். பாப்பம்மாளைப் பக்கத்து ஊரில் உள்ள ஒரு இளைஞருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். மாப்பிள்ளை பரம சாது. எது நல்லது, எது கெட்டது என்று தெரியாத அப்பாவி அவன். ஒரு வேலையும் செய்யமாட்டான். போஜனப் பிரியன். படிப்பில்லாதவன். எதற்கெடுத்தாலும் பயந்து பயந்துச் சாகிறவன்.

இந்த அப்பாவியின் தாய் இருக்கிறுளே—பாப்பம்மாளின் அத்தை, அவள் ஒரு பொல்லாத நீலி. பழிபாவத்திற்கு அஞ்சாத கொடுமைக்காரி. அடாபிடியும், ரௌடித்தனமும் உடைய ஒரு பிசாசு. அவளுடைய கணவர் இந்தப் பிசாசை நினைத்தாலே போதும். மூளை கிறுகிறுத்துவிடும். மானம் மரியாதைக்குப் பயந்தவர் அவர். அதனுல் தன் மனைவியின் தடித்தனம் சண்டித்தனம் ஒன்றையும் பார்க்கமாட்டார். தான் உண்டு தன் வேலை உண்டு என்று ஒதுங்கிவிடுவார்.

பாப்பம்மாளை படாதபாடு படுத்திஞள் அவளுடைய அத்தை. பம்பரமாக ஆட வைத்தாள் பாப்பம்மாளை. ஏச்சும் பேச்சும் தாங்கமுடியாது. வீட்டு வேலை முழுவதையும் பாப்பம்மாள் தான் செய்வாள். ஆனுலும் அது தப்பு, இது தப்பு என்று குத்திக் குத்தித் திட்டுவாள் அத்தைக்காரி.

மாமியாளின் கொடுமை வரவர அளவுக்கு மீறிவிட்டது. அவளுடன் வாழ முடியாது என்னும் நிலை வந்துவிட்டது. ''என்னுடன் வாருங்கள், எங்காவது வேருெரு ஊருக்குப் போய் நாலு வீடு வேலை செய்தாவது பிழைத்துக்கொள்வோம். மானந்தான் பெரிது. மானங்கெட்டு இங்கு வாழமுடியாது. வாருங்கள் போவோம்'' என்று கெஞ்சிக் கேட்டாள் கணவனிடம்.

அவள் கணவன் வரவில்லை. பெற்றோர் வீட்டுக்குப் போய் அவர்களை மேலும் மேலும் கஷ்டப்படுத்தவும் விரும்பவில்லை பாப்பம்மாள். எப்படியோ துணிந்து திருச்சி மலைக்கோட்டைக்கு வந்துவிட்டாள். அங்கு ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி இருந்தாள். பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குச் சாப்பாடு சமைத்துப்போட்டாள்.

மாணவர்கள் எல்லாருக்கும் அவள் தாயாக இருந்து உதவிஞள், பாதுகாத்தாள் என்றே சொல்லவேண்டும்.

மேழுலெந்தவாரியாகப் பார்க்கிறபோது பெண்கள் சாதாரணம் என்று தோன்றும். வீரதீரமான மனம் அவர்களிடம்

இல்லை என்றும், திடசித்தம் என்பது ஆடவர்களுக்கே உரியது என்றும் நெடுகிலும் சொல்லி வந்திருக்கிறோம்.

ஆனால் பாப்பம்மாள் போன்றவர்களைப் பார்த்தால், ஆடவர்களுடைய காரியம் சாதாரணம் என்பதும், பெண்களின் தியாகம், வீரம், தயாளம், ஊக்கம் இவைகளுக்குமுன் நிற்கமுடியாது என்றும் விளங்கும்.

மாணவர்களை, பெற்ற தாய்போல அன்போடும் ஆதரவோடும் பாதுகாத்து வந்தாள் பாப்பம்மாள். தன்னந்தனியளான பெண், வேறொரு ஊரில் இருபது மாணவர்களுக்கு ருசி உள்ள உணவை வேளா வேளைக்குக் கொடுத்துக் காப்பாற்றுகிறாள் என்றால் அது எவ்வளவு பெரிய காரியம்!

மாணவர்கள்மேல் பாப்பம்மாளுக்கிருந்த பரிவும் அந்தப் பரிவுக்குள்ளிருந்த வேகமும் ஆவேசமும் பார்க்கப் பார்க்கப் பரவசப்படுத்தும்.

காலை நான்கு மணிக்கே பாப்பம்மாள் எழுந்துவிடுவாள். வீடு முழுவதும் நன்றாக மெழுகுவாள். முற்றத்தைத் தெளித்துக் கோலம் போடுவாள். பாத்திரங்களை விளக்கி அடுக்குவாள். முகம்வைத்து முகம் பார்க்கலாம் அப்படி விளக்கிவிடுவாள். அப்படியே குளித்துவிட்டுத் தண்ணீர் எடுப்பாள். தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கும்பொழுது அன்றைக்குத் தேவையான காய், கீரை, தண்டு, கிழங்கு முதலியவற்றை வாங்கிவிடுவாள். அடுப்பைப் பற்றவைப்பாள். அரிசியைக் களைவாள். உலையில் போடுவாள். காய், கீரை முதலியவற்றைத் திருத்துவாள், வேக வைப்பாள்.

மாணவர்கள் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு வருவதற்குள் கமகம என்று சாப்பாடு தயாராகிவிடும். மாணவர்களுக்கு இலைபோட்டு அன்போடு பரிமாறுவாள். அன்றைக்கு அன்றைக்கு தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பாள். இலையைப் போட்டுவிட்டு உடனே நெய்யை உருக்குவாள்.

சாம்பார், ரசம், மோர், அவியல், பொரியல், அப்பளம் இப்படி ஜாம் ஜாம் என்றிருக்கும் சாப்பாடு. மாணவர்கள் சாப்பிட்டு முடிவதற்குள் அவரவர்களுக்கு வேண்டிய மத்தியானச் சாப்பாட்டையும் கட்டிக் கொடுத்துவிடுவாள்.

இரவுச் சாப்பாடும் ஒவ்வொருநாளும் மாலையில் தனிச் சமையல் பண்ணியே போடுவாள். நேரில் சென்று காய், கீரை முதலியவற்றை மாலையில் வாங்கிவருவாள். பிள்ளைகளுக்கு விலை

மோர் ஆகாது என்று இரண்டு கறவைப் பசுக்களை வாங்கி வளர்த்தாள். மாணவர்களுக்கு காய்ச்சல், மண்டையிடி, வயிற்று வலி என்றால் மருந்து, கஷாயம், கஞ்சி, பத்தியச் சாப்பாடு தயாரித்துக் கவனிப்பாள். விடுமுறையில் மாணவர்கள் ஊர் போக வேண்டும், செலவுக்கு பணம் குறைவாக இருக்கிறது என்றால் தேவையான பணம் கொடுத்து அனுப்புவாள். மாண வர்களைத் தேடி உற்றார் உறவினர் பெற்றோர் வந்தால் அவர்களைத் தன் சொந்தக்காரரை உபசரிப்பதுபோல் உபசரிப்பாள்.

எப்பேர்ப்பட்ட புண்ணியவதி பாப்பம்மாள்? அவளுடைய ஒழுக்கமும், பண்பாடும், அருளும் மலைக்கோட்டையில் உள்ள மனிதர்களை எல்லாம் அவள்மேல் பக்திகொள்ளும்படி செய்து விட்டது.

மாணவர்களாகிய நாங்கள் சிறுவர்கள்தாம். ஆனாலும் நாங் கள் பாப்பம்மாள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் போகிறபோது, எங்களைப் பார்த்தவர்கள் பக்தியோடு எழுந்து நிற்பார்கள். மரி யாதையோடு எங்களைப் பார்ப்பார்கள். எங்களிடமே ஊர் மக்க ளுக்கு இப்படி ஒரு அடக்கமும் பணிவும் என்றால், பாப்பம்மா ளிடம் அவர்களுக்கு எவ்வளவு பக்தி, எவ்வளவு மரியாதை இருக்க வேண்டும்?

பாப்பம்மாளின் சோம்பேறி மாப்பிள்ளை அங்கு அடிக்கடி வருவார். பத்துநாள் இருபது நாள் தங்கி இருப்பார். ஒரு வேலையும் பார்க்கமாட்டார். ஒன்றையும் கவனிக்கமாட்டார். வேளாவேளைக்கு நன்றாகச் சாப்பிடுவார். ஊர் சுற்றுவார். செலவழிப்பார். ஆனாலும் கணவனைத் தெய்வமாக மதித்து உப சரித்தாள் பாப்பம்மாள்.

பெற்ற தாயைவிட எங்களை அருளோடு பாதுகாத்த பாப்பம் மாளுக்கு மாதா மாதம் நாங்கள் ஒவ்வொருவரும் கொடுத்த ரூபாய் நான்குதான். இந்த ரூபாயில் மூன்று வேளையும் எங் களுக்கு ருசியான சாப்பாடு. தங்க இடம், உபசரிப்பு, கவனிப்பு, இவ்வளவும் போக தன் கணவனையும் அந்தப் பணத்தைக்கொண்டு பேணி உபசரித்தாள்.

''பாப்பம்மாள் ஒரு இதிகாச பாத்திரம் மட்டும் அல்ல, ஒரு இதிகாசமேதான்.''

இப்படி அடிக்கடி சொல்வார்கள் டி. கே. சி. இதுபோன்று பல உண்மைகள் டி. கே. சியின் உள்ளத்தில் பசுமையாக இருந் தன. அவற்றை நினைந்து நினைந்து இன்புறுவார்கள் டி. கே. சி. அதை அவர்கள் சொல்லச் சொல்ல ஆனந்தமாக இருக்கும்.

திருச்சி உயர்நிலைப்பள்ளியில் படித்த படிப்பு

1935-ஆம் வருடம் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் விளாத்திகுளத்திற்கு டிப்டி தாசில்தாராகப் போனார்கள். விளாத்திகுளம் ஒரு ஒதுக்குப்புறமான ஊர். அது பற்றி டி. கே. சிக்குக் கடிதம் எழுதினார்கள்.

டி. கே. சியின் பதில் பழைய சம்பவங்களை கட்டிப்பிடித்து எப்படி விளையாடுகிறது என்று பாருங்கள்:

''விளாத்திகுளம் ஒரு அந்தமான் தீவு என்று உத்தியோகஸ்தர்கள் சொல்வதுண்டு. ஆனால் எனக்கு அந்த ஊரினிடத்தில் ஒரு பிரியம். எனக்குக் கல்யாணமான 1908-ஆம் வருஷம் ஒரு மாதகாலம், பலவிதமான உபசாரங்களுக்கெல்லாம் உள்ளாகி வசித்த இடம் அது. என்னுடைய அம்மான், தாங்கள் பார்க்கும் டிப்டி தாசில்தார் வேலையை அப்போது பார்த்து வந்தார்கள். ஏதோ கிடையாத மாப்பிள்ளை கிடைத்துவிட்டதுபோல் எண்ணி இல்லாத மாப்பிள்ளை உபசாரமெல்லாம் செய்து புரட்டி எடுத்து விட்டார்கள் என்னை. அதை எப்படி மறக்கமுடியும்?

மேலும், மாப்பிள்ளை ஏதோ தீவாந்தரத்துக்குள் அகப்பட்டு விட்டதாக எண்ண ஆரம்பித்து விடக்கூடாதென்று எண்ணி அங்குள்ள புஸ்தகசாலையை அநேகமாக என்வசமே ஒப்புவித்து விட்டார்கள் என்று சொல்லலாம். சாப்பிடுகிற நேரம் போக காலை எட்டு மணி முதல் சாயங்காலம் காப்பி சாப்பிடுகிற நாலரை மணி வரையும் புஸ்தகசாலையிலே இருந்துகொண்டு ஆங்கில ஆசிரியர்கள் தமிழ் ஆசிரியர்களோடு அளவளாவிக் கொண்டேயிருந்தேன். அவைகளில் பிற்காலத்திலும் நின்று உதவும் படி படித்த புஸ்தகங்கள் இரண்டு. பாஸ்வெல் எழுதிய ஜான்ஸன் வரலாறு ஒன்று. ஆற அமர இரண்டு காண்டங்களையும் படித்தேன். அதிலிருந்து ஆங்கில இலக்கியங்களைக் கருத்தூன்றிப் படிக்கும்படியான முறை ஏற்பட்டது. மற்றப் புஸ்தகம் எது என்றால் அது தண்டியலங்காரம். விளாத்திகுளத்தில் தண்டியலங்காரம் இருந்தது 1908-ஆம் வருஷத்தில் என்றால், வியப்பாய் இருக்கும். தண்டியலங்காரத்தைப்பற்றித் தமிழ் ஆசிரியர்கள் பலவாகப் பேசியதைக் கேட்டதுண்டு. ஆனால் புஸ்தகத்தைப் பார்த்ததில்லை. அங்கேதான் முதன்முதலாகப் பார்த்தேன். அப்போதே மூலத்தில் விஷயம் இல்லை, உரையிலும் விஷயம் இல்லை என்று தெரிந்துகொண்டேன். ஆகவே மேற்கோள் செய்யுள்களை மட்டும் படித்தேன். தமிழ் இன்னது என்று தெரிய வந்தது. தமிழ் பாஷையின் அழகையும், தூய்மையையும் வளத்தையும் கண்டபோது பாணதீர்த்தத்திற்குப் போயிருந்தபோது

டி. கே. சிதம்பரநாத முதலியார்

தெள்ளத் தெளிந்த தண்ணீர்ப் பெருக்கு பாறைகளுக்கிடையே தாவியும் வட்டமிட்டும் வலசாரி இடசாரி பாய்ந்தும் போகிற அழகெல்லாம் மனசுக்கு முன் வந்தது. இருபது முப்பது கவிகளை அப்போதே மனப்பாடம் பண்ணிக்கொண்டேன். தமிழ்க் கவியை உய்த்துணர்வதற்கு அந்தக் கவிகள் இன்றைக்கும் உபயோகப் படுகின்றன. அடிக்கடி மேற்கோள் செய்யுள்களை வாசித்து அனுபவிப்பதுண்டு.

தாதளவி வண்டு
  தடுமாறும் தாமரைகொல்
மாதர் விழி யுலவு
  வாண் முகங் கொல்-யாதென்(று)
இருபாற் கவருற்(று)
  இடையூசல் ஆடி
ஒருபாற் படாதென்
  உளம்

என்ற பாட்டு அவைகளில் ஒன்று. நான் வாசித்து அனுபவித்த புஸ்தகசாலையில் இன்னும் இருக்கும் என்று நம்புகிறேன். பிறகு ஒரு புஸ்தகம் எனக்கு வாங்கினேன். அது எப்படியோ எங் கேயோ போய்விட்டது. தொலைப்பதற்குக் காரணம் நானாகவே இருந்திருக்க வேண்டும். யாருக்காவது ஒன்றிரண்டு செய்யுள்களை வாசித்துக் காட்டியிருப்பேன். அவர் புஸ்தகத்தைப் படிக்க வாங் கிக்கொண்டு போயிருப்பார். அவ்வளவுதான், அதற்குச் சிறகு முளைத்திருக்கும். புஸ்தகம் வேறொன்று விலைக்கு வாங்க வேண் டும் என்று எண்ணியது பல தடவை. ஆனால் காலம் கடந்து கொண்டே வந்தது. கடைசியாக இரண்டு மாதத்திற்குமுன் இங்கே வந்திருந்தபோது மனசைத் திடப்படுத்திக்கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குப் போய் ரூ. 1-14-0க்கு தண்டியலங்காரம் ஒன்றை வாங்கிவிட்டேன். மேற்கோள் செய் யுள்களை அடிக்கடி படித்துக்கொண்டிருக்கிறேன். படிக்கும் போதெல்லாம், விளாத்திகுளம் புஸ்தகசாலை, தெரு, வேப்ப மரம், மணல் வளம் பொருந்திய ஆறு, ஒரு கரையிலிருந்து எதிர்க்கரைக்கு பெரிய பருத்தி மாற்றுக்கட்டு ஒன்றை உருட்டிக் கொண்டே வந்த சண்டமாருதம் எல்லாம் கண்முன் வந்து நிற்கிறது. ஆகவே விளாத்திகுளத்தினிடம் எனக்கு ஒரு பிரியம் உண்டென்பது விளங்குகிறதல்லவா'' என்பதுதான் டி. கே. சியின் பழைய நினைவு.

சிதம்பரநாதனுடைய ஹைஸ்கூல் படிப்பு 1900-ஆம் வரு ஷத்தோடு திருச்சியில் முடிந்தது. உடனே காலேஜில் படிக்க

வேண்டும் என்று ஆசை உண்டாகியது. 1900-ஆம் வருஷம் காலேஜ் படிப்பு. சென்னையில் உள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்கள் டி. கே. சி.

சென்னையில் உயர்நீதிமன்றத்தை ஒட்டிய பகுதியில் ஒரு சிறிய கட்டிடத்தில்தான் கிறிஸ்துவக் கல்லூரி அப்போது இருந்தது. அதனால், ஐகோர்ட்டை ஒட்டிய ஒரு கட்டிடத்தில்—மாடியில் உள்ள ஒரு அறையை வாடகைக்கு அமர்த்தி அதில் தங்கி இருந்து படித்து வந்தார் டி. கே. சி.

திருச்சியில் ஹைஸ்கூல் பாடங்களில் டி. கே. சிக்கு ஈடுபாடு இல்லை. ஆனால் சில தமிழ் நூல்களில் டி. கே. சிக்கு அப்பொழுதே ஓரளவு பழக்கம் இருந்தது. காஞ்சிப்புராணம், திருவிளையாடல் புராணம், தேவாரம், திருவாசகம், திருக்குறள், கந்தபுராணம், நைடதம், இப்படிச் சில நூல்களுடன் பழக்கம்.

பழக்கம் என்றால் மேலே குறிப்பிட்ட நூல்களில் ஒன்றையும் முறையாகப் படித்தது இல்லை. அந்த நூல்களில் உள்ள பாடல்களில் அங்கொன்று இங்கொன்று என்று சில பாடல்கள் தெரியும். அத்துடன் அந்நூல்களில் உள்ள கதையும் போக்கும் ஓரளவு தெரியும். சில தனிப் பாடல்களும் தெரியும். சித்தர் பாடல்களிலும் சில தெரியும். பாடல்கள் எல்லாம் வீட்டில் உள்ள பெரியோர்கள்—வயதான சொந்தக்காரர் சொல்லக்கேட்டு அறிந்ததுதான். புராணப் பிரசங்கிகள் சொல்லக் கேட்டதும் உண்டு.

சிறுவயதில் டி. கே. சி. கேட்ட பாடல்கள் அவர்களை நன்றாகப் பற்றிக்கொண்டன. பள்ளிப் படிப்பில் ரசம் இல்லைதான். ஆனாலும் அந்தக் களைப்பை இந்தப் பாடல்கள் ஆற்றித் தேற்றிக்கொண்டே இருந்தன.

தமிழ்ப் பாடல் என்றால்—அது சாதாரணப் பாட்டாக இருந்தாலும், அதனிடம் இருக்கிற யாப்புமுறை அற்புதந்தான். யாப்பில் இருக்கிற சந்தம், மெட்டு, தாளம், எதுகை, மோனை எல்லாம் ஒரு கட்டுக்கோப்பில் இருக்கும். பாட்டை அடிக்கடி பாடிப் பழகிவிட்டால் பிறகு அந்தப் பாடல் ஒருவரை எளிதில் விட்டுவிடாது. வளைத்து வளைத்து கிறங்க வைத்துக்கொண்டே இருக்கும் பாட்டு. அப்படி ஒரு மந்திரசக்தி தமிழ் யாப்பு முறையிலேயே இருக்கிறது.

டி. கே. சியையும் தமிழ்ப் பாடல்கள் கிறங்கச் செய்தன.

தமிழ்ப் பாடல்களை அடிக்கடி பாடி அனுபவித்தார்கள் டி. கே. சி. அப்படி அனுபவித்த இன்பத்தை சக மாணவர்களிடம்

சொல்லி அடிக்கடி மகிழ்வார்கள். அதனால் மாணவர்களிடம் டி. கே. சிக்கு ஒரு மரியாதை. கல்லூரித் தமிழ்ப் பேரவைக்கு டி. கே. சியைத் தலைவராக்கிவிட்டார்கள் மாணவர்கள்.

கல்லூரித் தமிழ்ப் பேரவைக்குத் தலைவராகிவிட்டதால் இலக்கிய மன்றத்தை நடத்தும் பொறுப்பு டி. கே. சிக்கு வந்தது. அடிக்கடி இலக்கிய மன்றக் கூட்டங்களைக் கூட்டி பல பெரியோர்களை வரவழைத்து அவர்களுடைய உபன்யாசங்களை மாணவர் கேட்க ஏற்பாடு செய்தார்கள். பல சமயம் டி. கே. சியே தமிழ்ப் பாடல்களை விளக்கி, அவற்றின் நயங்களை எடுத்துச்சொல்லி மாணவர்களை வியக்கச் 'செய்தார்கள்.

டி. கே. சியின் பேச்சில் தெளிவும், நிச்சயமும் இருந்தன. எளிமையும் அழகும் பிரகாசித்தன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நயம் இருந்தது. அதனால் அடிக்கடி சக மாணவனாகிய சிதம்பரநாதனைப் பேசும்படி வற்புறுத்துவார்கள் மாணவர்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத் தாபகரும், வள்ளலும், தமிழறிஞரும் ஆகிய பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு, கிறிஸ்துவக் கல்லூரி தமிழ்ப் பேரவையில் ஒருசமயம் வரவேற்புக் கொடுத்தார்கள். இது 1902-ஆம் வருஷம் நடந்தது. வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பேராசிரியர்கள், உயர் அதிகாரிகள், பிரபுக்கள், புலவர் பெருமக்கள், பிரமுகர்கள், தாய்மார்கள், ஆயிரக்கணக்கில் வந்து மொய்த்துவிட்டார்கள். கூட்டத்தை மண்டபத்தால் தாங்க முடியவில்லை.

மகா மகா உபாத்யாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் (சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்) அவர்களும், வெள்ளகால் வி. பி. சுப்பிரமண்ய முதலியார் அவர்களும் வள்ளல் பாண்டித்துரையோடு கூட்டத்திற்கு வந்து அமர்ந்தார்கள்.

டி. கே. சிதம்பரநாதன் இவ்வளவு பெரிய சபையில் மேடை ஏறி வள்ளலுக்கு வரவேற்புரை நிகழ்த்தினர். வரவேற்றுப் பேசிய பேச்சில் விஷயமும் உணர்ச்சியும் உருண்டு புரண்டு விளையாடின. வார்த்தைக்கு வார்த்தை நொடிப்பும், கும்மாளியும், வந்து வந்து சபையைக் குலுங்க வைத்துவிட்டன.

பாண்டித்துரைத் தேவர் அவர்களின் வள்ளன்மையையும் புலமையையும் கையில் எடுத்து ஒவ்வொரு அம்சமாக உதறி உதறி உல்லாசமாக விளக்கிய விளக்கம் சபையோர்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

திருச்சி உயர்நிலைப்பள்ளியில் படித்த படிப்பு

''தமிழில் இப்படி எல்லாம் எடுத்துச்சொல்ல முடியும் என்பது இன்றுதான் எங்களுக்குத் தெரிகிறது'' என்று பலரும் பாராட்டினார்கள்.

பாண்டித்துரைத் தேவரும், சாமிநாத ஐயரும் மாணவன் சிதம்பரநாதனை அன்று பலபடப் புகழ்ந்து பாராட்டினார்கள். வெள்ளகால் முதலியார் அவர்கள், ''சிதம்பரநாதன் என் சொந்தக்காரன், உற்ற உறவினன். அவனுடைய தமிழ்ப் புலமையும் பேச்சு நயமும் எனக்குப் பெருமை தருகின்றன'' என்று பாராட்டினார்கள்.

கிறிஸ்துவக் கல்லூரிப் பிரின்ஸ்பாலுக்கு அன்று அளவிட முடியாத ஆனந்தம். பேராசிரியர்களின் ஆனந்தத்திற்கோ சொல்லவேண்டியதில்லை. மாணவர்கள் சிதம்பரநாதனைத் தங்கள் வழிகாட்டியாகவே மதித்தார்கள்.

டி. கே. சியுடன் கிறிஸ்துவக் கல்லூரியில் படித்த மாணவர்களில் சிலர் மிக்க புகழுடன் வாழ்ந்தார்கள். அவர்களில் சிலர், (1) ஐஸ்டிஸ் கே. சந்திரசேகர ஐயர் (முன்னாள் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்), (2) டாக்டர் ஜாண் மத்தாய் (இந்திய அரசின் முன்னாள் நிதி அமைச்சர்), (3) டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் (வைஸ்ராயின் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்), (4) டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் (முன்னாள் சென்னை சர்வகலாசாலை துணைவேந்தர்), (5) திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை (நெல்லையில் பிரபல வழக்கறிஞர்), (6) கடையம் திரு. சங்கராயர், (7) டாக்டர் நூரம்ப நாயுடு ஆகியோர் ஆவர்.

தமிழிலும், தமிழ்ப் பாடல்களிலும் சிதம்பரநாதனுக்கு மிக்க ஈடுபாடு இருந்ததால், வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை ஆகிய பாவினங்களில் சுயமாகப் பல பாடல்களைப் பாடினார்கள். கல்லூரியில் படிக்கும்போதே அரிய பாடல்கள் பலவற்றை டி. கே. சி. பாடினார்கள். அதுபற்றி தனியாகப் பார்ப்போம்.

கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார், டி. கே. சியைப்பற்றிக் கேள்விப்பட்டார். கிறிஸ்துவக் கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவன் தமிழில் தெளிவும் ஞானமும் பெற்றுத் திகழ்கிறான் என்று கேள்விப்பட்டார்.

டி. கே. சியுடன் பழக்கம் ஏற்பட்டது பாரதிக்கு. அடிக்கடி டி. கே. சியின் ரூமிற்குப் பாரதி வருவார். தாம் பாடிய பாடல்

களை டி. கே. சிக்குப் பாடிக் காட்டுவார். டி. கே. சி. பாடல்களைக் கேட்டு பாரதியாரை மனம் நிறைந்து பாராட்டுவார்கள்.

சிலசமயம் ''இதற்குப் பதில் இப்படி இருந்தால் நல்லது'' என்று தம் அபிப்ராயத்தை பாரதியாரிடம் டி. கே. சி. சொல்லி இருக்கிறார்கள். பாரதியார் அந்தத் திருத்தங்களை வைத்து பாடலைப் பாடிப் பார்த்து, ''பேஷ், பேஷ், அற்புதம், அற்புதம். நீர் ஒரு பெரிய கவிஞன்தான்'' என்று பாராட்டி அங்கீகரித்திருக்கிறார்.

சிதம்பரநாதன் படித்த காலத்தில், கல்லூரி ஆசிரியர்கள் எல்லோரும் அன்னிய நாட்டினர்தாம். தமிழாசிரியராக இருந்த மறைமலை அடிகள் (ஒருவர்) தவிர, எல்லோரும் ஐரோப்பியர்கள் தாம்.

பேராசிரியர்கள் எல்லோரும் அவரவர் துறையில் மகா நிபுணர்கள். அவர்களில் லாய் ஹெண்டர்சன், ஸ்கின்னர் இரண்டு பேராசிரியர்களின் அன்பைப்பற்றியும், பரிவைப்பற்றியும் டி. கே. சி. மறந்ததே இல்லை. அடிக்கடி அவர்களைப்பற்றிப் பாராட்டிப் பேசுவார்கள்.

''ஸ்கின்னருடைய அன்பும் எளிமையும் எனக்கு உற்ற துணையாக இருந்தன. ஒவ்வொரு செடி கொடிகளைப்பற்றியும் அவற்றை வைத்துக்கொண்டே பாடம் நடத்துவார். இரவு நேரத்தில் செடி கொடிகள் என்ன செய்கின்றன, எப்படி இருக்கின்றன என்பதைக்கூட எங்களுக்கு நேரடியாக விளக்குவார். அரிக்கேன் விளக்கைப் பொருத்தி கையில் பிடித்துக்கொண்டு, எங்களைக் காட்டுப்பக்கம் அழைத்துப்போவார். செடி கொடிகளைக் காட்டி விளக்குவார். அவருடைய போதனை எனக்கு ஊக்கம் கொடுத்தது. அந்த ஊக்கம் காரணமாகவே தாவர இயல், பிராணி இயல், உயிரியல், தேக இயல், ரசாயன இயல் சம்பந்தமாக, பல நிபுணர்கள் எழுதிய நூல்களை நான் ஆர்வத்தோடு படித்தேன். பாடப் புத்தகங்கள் எனக்கு இன்பம் தரவில்லை. அறிஞர்கள் எழுதிய புத்தகங்களை நூல் நிலையங்களில் போய் படிப்பதில்தான் நான் இன்பம் கண்டேன். கல்லூரிப் படிப்பில் எனக்கு ஆனந்தம் தந்தது நானாகப் பல நூல்களைத் தேடிப் படித்ததுதான். அதற்குக் காரணம் பேராசிரியர் ஸ்கின்னருடைய போதனையில் இருந்த நயமும் தெளிவுந்தான்'' என்று டி. கே. சி. பாராட்டுவார்கள்.

சிதம்பரநாதனுக்கு இங்கிலீஷ் பாஷை நன்றாக வந்தது. ஆனாலும் இங்கிலீஷில் பாடங்கள் படிப்பது ருசியாக இல்லை.

அதுவும் இங்கிலீஷ் கவிகளைப் படிப்பதும், அனுபவிப்பதும் ரம்மியமாக இல்லை. இதுபற்றியும் ஸ்கின்னர் அடிக்கடி சொல்வாராம். ''ஷேக்ஸ்பியர் போன்ற கவிஞர்களின் பாடல்கள் ஆங்கிலேயர்களுக்கே தெளிவாக விளங்குவதில்லை. அப்படி இருக்க, தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு அவை எப்படி விளங்கும்? தமிழர்களுக்குத் தமிழ்ப் பாடல்கள்தாம் விளங்கும். தமிழ்ப் பாடல்களைத்தான் படிக்கச் சொல்லவேண்டும். இங்கிலீஷ் பாடல்களைப் படி என்பது கொடுமை'' என்று வருந்துவாராம்.

கல்லூரிப் படிப்பில் சிதம்பரநாதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது, ஒன்று, தமிழ்ப் பேரவை. இரண்டு, ஸ்கின்னர், ஹெண்டர்சன் முதலிய பேராசிரியர்களின் இனிய போதனை; மூன்று, அறிஞர்கள் எழுதிய விஞ்ஞான நூல்களை ஆர்வத்தோடு படித்தல்; நான்கு, சுப்பிரமணிய பாரதியார் போன்ற கலைஞர்களின் உறவு ஆகியவைதான்.

இவைகளுடன் இன்னொன்றும் உண்டு. சிதம்பரநாதனுடன் படித்த மாணவர்களில் ஒருவர் ஆந்திர நாட்டைச் சேர்ந்த ஜமீன்தாரின் புதல்வர். அவர் திடகாத்திரமான சரீரம் படைத்தவர். வீரதீரச் செயல்கள் செய்வதில் ஆர்வம் உள்ளவர். அஞ்சாத நெஞ்சினர். அவர் தலைமுடி வளர்த்துக் கொண்டை போட்டிருந்தார். கைகளில் கனமான தங்கக் காப்புகள் அணிந்திருந்தார். கழுத்தில் பட்டை போன்ற கருப்புக் கயிறைக் கட்டி இருந்தார். அதில் ஒரு தங்க உருண்டையைக் கோத்துத் தொங்க விட்டிருந்தார். நெற்றியில் அகலமான பொட்டு வைத்துக்கொள்வார். காட்டுக்குள் போய் வேட்டை ஆடுவதில் அவருக்கு மிக்க பிரியம். துப்பாக்கி சுடுவதில் வல்லவர். பிச்சுவாள் போன்ற கூர்மையான கத்தியை இடுப்பில் சொருகி இருப்பார்.

ஒரு சமயம் அவர் மலைச்சரிவில் காடுகளுக்குள் வேட்டையாடப் போனார். வழியில் புலி ஒன்று எதையோ உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

பூனைபோல மெதுவாகப் பம்மிப் பம்மி புலியின் பின்பக்கமாகப் போனார் ஜமீன்தார். போய் என்ன செய்தார்? புலியின் முதுகில் ஒரு தட்டே தட்டிவிட்டாராம். அவ்வளவுதான், புலியானது பதறிக் கலைந்து ஓடியே போய்விட்டதாம்.

விடுமுறைக்காலம் என்றால் ஜமீன்தாருக்கு ஒரே கொண்டாட்டம். வேட்டையாடுவதிலும், ஆறுகளில் குதித்து எதிர் நீச்சல் அடித்து விளையாடுவதிலும் அவருக்கு உற்சாகம்.

கோதாவரி, கிருஷ்ணு நதிகளைப் பார்த்தால் அப்படியே ஆற்றுக்குள் பாய்ந்துவிடுவாராம் ஜமீன்தார். ஒரு சமயம் கிருஷ்ணு நதியில் குதித்தார். அதில் முதலைகள் அதிகம். முதலை களை வேட்டையாடுவதில் ஜமீன்தாருக்குக் கொண்டாட்டம்.

''ஆற்றில் குதித்த ஜமீன்தார் முங்கி முக்குளித்து நெடுந் தூரம் போனுர். முதலை இருக்கும் இடத்திற்கே போய்விட்டார். முதலையின் அடியில் முங்கியேபோய், கத்தியை எடுத்தார். முதலை யின் வயிற்றில் வைத்து கோடு கிழிப்பது போல் ஒரே கீருகக் கீறிவிட்டார். தண்ணீர் எல்லாம் ரத்தக்காடு.''

ஜமீன்தாரின் வீரதீர விளையாட்டுகள் இன்னும் எத்தனை எத் தனையோ உண்டு. அறுபது வருடங்கள் கழித்து அந்த ஜமீன்தார் மாணவரின் ஊக்கத்தையும் அஞ்சாமையையும் மறக்காமல் புகழ்ந்து சொல்வார்கள் டி. கே. சி.

டி. கே. சிக்கு கல்லூரிப் படிப்புக் காலத்தில் சந்தோஷம் கொடுத்தவைகளில் ஆந்திர தேசத்து ஜமீன் மாணவரின் வீரதீரச் செயல்களும் ஒன்ருகும்.

5. டி. கே. சியின் யோகம்

சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரிப் படிப்பு 1905-ஆம் வருடம் முடிந்தது. அதன்பிறகு இங்கிலாந்து போய்ப் படிக்கவேண்டும் என்று டி. கே. சிக்கு ஆசை. ஆனால் அருமை மகனை கண்ணுக் கெட்டாத நெடுந்தூரத்திற்கு—கடல்கடந்த அக்கரைச் சீமைக்கு அனுப்பப் பெற்றோர் சம்மதிக்கவில்லை.

சிதம்பரநாதனுக்கு இங்கிலாந்து போகவேண்டும், லண்டனை பார்க்கவேண்டும், ஐ. சி. எஸ். படிக்கவேண்டும், கனதனவான்க ளோடு பழகவேண்டும், உல்லாசமும் ஆடம்பரமும் மிக்க புதிய நாட்டில் புதிய பழக்கவழக்கங்களில் திளைக்கவேண்டும் என்று ஆசை.

ஐ. சி. எஸ். படிப்பிற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், பார்-அட்-லா என்னும் துறையையாவது படித்துவர வேண்டும் என்று ஒரே ஆசை. மோகவெறி என்று சொல்லும் அளவுக்கு இங்கிலீஷ் நாகரிகம் டி. கே. சியைச் சுண்டி இழுத்தது.

அதனால் பெற்றோர்களிடம் சிதம்பரநாதன் எவ்வளவோ முரண் டிப் பார்த்தார். பரண்டிப் பார்த்தார். இங்கிலாந்து போவ தற்காக அந்த நாட்டிற்குரிய உடைகள்கூட தைத்துக் கொண் டார். ஆனாலும் இங்கிலாந்து போக முடியாமலே போய்விட் டது.

இங்கிலாந்து, ஐ. சி. எஸ். பார்-அட்-லா என்னும் விஷயம் சிதம்பரநாதனுக்கும், குடும்பப் பெரியவர்களுக்கும் ஒரு பிரச்சினையாகி, அதுவும் இழுபறிப் பிரச்சினையே ஆகிவிட்டது. அதில் இரண்டு மூன்று வருடங்கள் வீணாய்ப் போய்விட்டன.

இந்த நிலையில் 1908-ஆம் வருடம் மே மாதம் பதினோராம் தேதி டி. கே. சிக்குத் திருமணம் நடந்தது. அப்பொழுது டி. கே. சிக்கு வயது இருபத்து ஏழு. டி. கே. சிக்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்த மாதரசியின் பெயர் பிச்சம்மாள் அண்ணி. டி. கே. சிக்குத் தாய் மாமனார் புதல்வி. டி. கே. சியின் தாய் மாமன்மார் பத்துப் பேர். அந்தப் பத்து அம்மான்மார்களில் கடைக்குட்டி அம்மான் தீத்தாரப்ப முதலியார். அன்றைருக்கும்

அவர்தம் மனைவியார் சுப்பம்மாள் அண்ணிக்கும் அருந்தவப் புதல்வியாக அவதரித்தவர் பிச்சம்மாள் அண்ணி.

பிச்சம்மாள் அண்ணியுடன் பிறந்த சகோதரர்கள் ஏழு பேர். சகோதரி ஒருவர். பெரிய தந்தையர் ஒன்பது பேர். குடும்பம் பெரிய குடும்பம்.

மாபெரும் குடும்பத்தைச் சேர்ந்த பிச்சம்மாள் அண்ணி அவதார புருஷனாகிய மாபெரும் மேதைக்கு வாழ்க்கைத் துணை யாக அமைந்தார்.

பிச்சம்மாள் அண்ணி அன்பும் அருளும் நிரம்பிய உத்தமி. பெண்களுக்குள்ளே அரிய ரத்தினம் என்றுதான் சொல்லவேண் டும். தயாளமும், அடக்கமும், எளிமையும், உறுதியும் நிறைந்த புண்ணியவதியாக விளங்கினார் பிச்சம்மாள் அண்ணி.

டி. கே. சி ஒரு பெரிய யோகக்காரர். கடவுளுடைய அருள் நிரம்பப் பெற்றவர்.

டி. கே. சி.யின் ஞானம், பக்தி, பண்பாடு இவ்வளவும் ஜக ஜோதியாய்ப் பிரகாசிப்பதற்கு சாதனங்கள் பொருத்தமாக அமைந்தன. சொல்லிவைத்தாற்போல் வாய்ப்பாக அமைந்தன சாதனங்கள்.

பிச்சம்மாள் அண்ணி மனைவியாக அமைந்தார் என்றால் அது தெய்வ அருள் என்றுதான் சொல்லவேண்டும். அதேபோல டி. கே. சியின் புதல்வன் தீத்தாரப்பனும் கலைஞானமும், பண் பாடும் மிக்கவராக விளங்கினார். அப்படியே டி. கே. சிக்கு உறு துணையாக இருந்த டி. கே. சியின் சகோதரியின் புதல்வர் இருவரும் பண்பாடும் சீலமும் நிறைந்த உத்தமர்களாகத் திகழ் கிறார்கள். ஒருவர் பெயர், டி. கே. தீத்தாரப்ப முதலியார், இன்னொருவர் பெயர், டி. கே. சண்முகசுந்தர முதலியார்.

மனையாள், மகன், சகோதரியின் புதல்வர்கள் ஆகியவர்கள் மட்டும் அல்ல, டி. கே. சியின் பேரன்மார், பேத்திமார், சகோதரியின் பேரன்மார், பேத்திமார், பூட்டன்மார், பூட்டிமார் எல்லோருமே அன்புக்கும் பண்பாட்டுக்கும் நிலைக்களமாக விளங்கு கிறார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்படியும் ஒரு அதி சயமா என்று டி. கே. சியின் குடும்பப் பண்பாட்டைப் பார்த்து மக்கள் வியக்கிறார்கள். அவ்வளவு அடக்கம், அவ்வளவு எளிமை, அவ்வளவு மரியாதை இவர்களிடம் நிறைந்திருக்கிறது.

டி. கே. சியின் யோகம்

இது ஒரு பெரிய யோகந்தானே! இதையும்விட யோகம் இருக்கிறது. டி. கே. சிக்கு நண்பர்கள் பலர். ஆயிரக்கணக்கில் நண்பர்கள் உண்டு. பலதிறப்பட்டவர்கள் நண்பர்கள். வேறு வேறு கொள்கையைக் கொண்ட அரசியல்வாதிகள், பேராசிரியர் கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பண்ணையார்கள், பிரபுக்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சாதாரணக் காய்கறிக் கடைக்காரர், ஓட்டலில் வேலைபார்ப்பவர், கோவில் பூசாரி, குமஸ்தா வேலை பார்ப்பவர், வயதானவர், இளைஞர், மாணவர் இப்படி விதம் விதமான பேர்வழிகள் டி. கே. சிக்கு நண்பர்களாக இருந்தார்கள். ஆதி முதல் அந்தம் வரை நண்பர்களாகவே இருந்தார்கள். ஒருவ ராவது ஒருவேளையாவது டி. கே. சியிடம் முரண்பட்டது இல்லை.

இது எவ்வளவு பெரிய யோகம் ஒரு மனிதனுக்கு. டி. கே. சி. வீட்டு வேலைக்காரர்கள், சமையல்காரர்கள்கூட கடைசிவரை டி. கே. சியிடம் பக்தியோடும் மரியாதையோடும் சந்தோஷத் தோடும் இருந்தார்கள்.

இப்படி வாய்ப்பதற்குத்தான் தெய்வ அருள் என்று பெயர். டி. கே. சிக்கு தெய்வ கடாட்சம் பரிபூரணமாக இருந்தது. அதனால் அவர்களுடைய ஞானவேள்வி—அறப்பணி தங்குதடை இல்லாமல் நடந்தது.

ஒரு சமயம் ராஜாஜி சொன்னார்கள்: ''நான் யாரையும் எளிதில் நம்பமாட்டேன். பழகுகிற ஒவ்வொருவரிடமும் ஜாக் கிரதையாகவே இருப்பேன். ஆனால் என்னை எப்படியோ ஏமாற்றி விடுகிறார்கள், காலைவாரியே விட்டுவிடுகிறார்கள். ஆனால். டி. கே. சி. எல்லோரையும் நம்பிவிடுகிறார். பார்த்த மாத்திரத்தி லேயே பழகிவிடுகிறார். பழகிய மாத்திரத்திலேயே ஐக்யமாகி விடுகிறார். தான் வேறு பிறர் வேறு என்னும் பேதம் இல்லாமல் அன்புமயமாய் எல்லோருடனும் உறவாடித் திளைக்கிறார் டி. கே. சி.

எத்தனை மெய்யன்பர்கள் டி. கே. சிக்கு இருக்கிறார்கள்? ஒருவர்கூட டி. கே. சியின் மனம்நோக நடந்ததே இல்லை. இது பெரிய அதிசயம். உலக அதிசயங்களில் தலைசிறந்த அதிசயம்.''

இப்படிச் சொன்னார் ராஜாஜி.

ஆம்! உண்மைதான். டி. கே. சிக்கு ஜாதகத்தில் யோகம் இருந்தது. நம்பமுடியாத யோகமே இருந்தது.

கண், காது, கால், கை, குடல், மூக்கு, நாக்கு முதலிய எண்ணிறந்த தத்துவங்கள் தேகத்தோடு சேர்ந்து செயல்படுவது போல—தேகம் உணர்ச்சியோடும், உணர்ச்சியானது உயிரோடும் இணைந்து இயங்குவதுபோல,—உற்றார், உறவினர், நண்பர், பணியாளர், குடும்பத்தார், மனைவி எல்லோருமே டி.கே.சியோடு ஒன்றி நின்று செயல்பட்டார்கள். ஒவ்வொருவரும் டி. கே. சி. மயமாகவே செயல்பட்டார்கள்.

6. புரட்சிக்காரர் டி. கே. சி.

1908-ஆம் வருடம் திருமணம் சிதம்பரநாதனுக்குக் கோலாகலமாக நடந்து நிறைவேறியது. புது மாப்பிள்ளையும் பெண்ணும் சக்தியும் சிவனும்போல ஒன்றுபட்டு இன்புற்று வாழ்ந்தார்கள்.

தன்னுடைய கல்யாணத்தில் சங்கீதக் கச்சேரி வேண்டாம், அதற்குப் பதில் கதாகாலட்சேபமும், பரதநாட்டியமுமே வேண்டும் என்று சொல்லிவிட்டார் சிதம்பரநாதன்.

அந்தக் காலத்தில் பாகவதர்கள் வேற்றுமொழிப் பாடல்களைத்தான் பாடுவார்கள். சாகித்யங்களின் பொருள் ஒருவருக்கும் தெரியாது. விஷயமே விளங்காவிட்டால் உணர்ச்சி எங்கிருந்து வரும்? பெரிய கழுத்தறுப்பாக இருக்கும் கச்சேரி.

ஆனாலும் எல்லோரும் ஆண்டாண்டு காலமாய்க் கச்சேரியைக் கேட்டுத் தொலைத்தார்கள். கல்யாண மாப்பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ கச்சேரியைப் பற்றியா கவலை? எந்த மாப்பிள்ளையும் பெண்ணும் அதுபற்றி யோசித்ததே இல்லை.

ஆனால் சிதம்பரநாதன் மட்டும் தன் இருபத்து ஏழாவது வயதிலேயே-இன்றைக்கு எழுபத்து ஏழு வருடங்களுக்கு முன்பே-அதுவும் புது மாப்பிள்ளையாகப் போகிற உல்லாச வேளையில்கூட ''விளங்காததைக் கட்டி அழுவது அபத்தம்'' என்று கண்டுவிட்டார். கண்டுகொண்டது மட்டும் அல்ல, அதைக் காரியத்தில் நிறைவேற்றியும் காட்டிவிட்டார். இந்தத் தெளிவும் துணிச்சலும் டி. கே. சியிடம் வளர்ந்துகொண்டே வந்தது. வாழ்நாள் முழுவதும் வளர்ந்துகொண்டே வந்தது. வானளாவ வளர்ந்து கொண்டே வந்தது.

கவி, கலை, வசனம், இசை, நடனம், கல்வி, பண்பாடு, சமயம், சடங்கு, பழக்கவழக்கம், ஞானம், பக்தி எல்லாத் துறையிலும் பொய்யை விரட்டி அடிக்கவும், உண்மைக்கு உயிரையே கொடுத்துக் காப்பாற்றவும் டி. கே. சியை உருவாக்கி வளர்த்துக் கொண்டே வந்தது மேலே குறிப்பிட்ட தெளிவு. அதாவது, உறுதி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

வாழ்நாள் முழுவதும் போலியை எதிர்த்தும், உண்மையை அணைத்தும் ஒரு மாபெரும் புரட்சியை நடத்தி வந்தார் டி. கே. சி. வெறுப்பையும் அருவருப்பையும் கொட்டுகிற காட்டேரிப் புரட்சியல்ல, டி. கே. சி நடத்திய புரட்சி.

அன்பிலிருந்தும் கருணையிலிருந்தும் பூத்துக் குலுங்கிய புரட்சி அது. விருந்தும் உபசாரமுமாக பாராட்டிப் பரவசப்படுத்துகிற புரட்சி அது. இசையும் நடனமும் சேர்ந்து அபிநயம் பிடிக்கிற கவிகளின் மூலம்—கலைகளின் மூலம்—மனித வாழ்க்கையின் தெய்வப் பண்புகளை தரிசிக்கவைத்த புரட்சி அது.

மனிதனுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை உண்டாகவும், பயம் ஒழியவும், கவலை ஓடவும், வீரமும் தயாளமும் பெருகவும் கலை களின் மூலம் சத்திய தரிசனத்தைக் காட்டிக்கொண்டிருந்தார் டி. கே. சி.

ஒவ்வொரு அம்சத்திலும் உண்மையையே லட்சியமாக மதித் தார். எத்தனை அதிகாரத்தோடும் ஆடம்பரத்தோடும் பொய் யானது அட்டகாசம் பண்ணினாலும் சரி, அதை அஞ்சாமல் எதிர்த்தார் டி. கே. சி. பொய்யின் கோட்டை கொத்தளங் களை எல்லாம் தவிடு பொடி ஆக்கினார் டி. கே. சி.

இந்த அற்புதப் புரட்சியை அன்போடு நடத்தினார், பண் போடு நடத்தினார். சிரித்துச் சிரித்து மகிழ மகிழ நடத்தினார் டி. கே. சி.

உயர்நிலைப் பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி, பாடமாகப் படித்த ஒன்றும் இதயத்தோடு ஒட்டவில்லை. அதனால் உண்மை விளங்கவில்லை. வார்த்தைகளும், வார்த்தைகளைக் குருட்டுப் பாடம் பண்ணுவதுமே படிப்பாக இருந்தது. இன்னமும் இருந்து வருகிறது.

கல்வி என்கிற பெயரால் நடக்கிற இந்தக் கொடுமை டி. கே. சிக்கு விளங்கிவிட்டது. சொந்த அனுபவத்திலிருந்தே விளங்கி விட்டது. அப்படி விளங்கிய உண்மையை வாழ்நாள் முழுவதும் சொல்லிக்கொண்டிருந்தார். யாருக்கும் பயப்படவில்லை டி. கே. சி.

தன் உற்ற நண்பர்கள் ராஜ்ய பரிபாலனம் செய்கிறார்களே—தம் ஆருயிர்த் தோழர்கள் இந்தப் படிப்பையே தொழிலாக வைத்துக் கொடிகட்டிப் பறக்கிறார்களே என்று பேரம்பண்ணிப் பேசவில்லை டி. கே. சி.

தன்னையே உதாரணமாக வைத்து—கல்விக்குப் பலியான கொடுமையைச் சொல்லி, படிப்பின் மோசடியை அம்பலப்படுத்தினுர் டி. கே. சி.

மதிப்புமிக்க நண்பர் ஒருவரின் மகள் பி. ஏ. பரீட்சையில் தோற்றுப்போனுள். அதனுல் கவலேக்கு ஆளானுள். இது தெரிந்த டி. கே. சி. அந்தப் பெண்ணே எப்படித் தேற்றுகிருர் என்று பாருங்கள்:

''இந்த அழகு படிப்பில் தோற்பது கேவலம். அதைவிடக் கேவலம் இந்தப் படிப்பில்—தேர்வில் வெற்றிபெறுவது.'' இப்படி டி. கே. சி. சொன்னவுடன் அந்தப் பெண்ணே கலகலவென்று சிரித்துவிட்டாள். அவள் வாழ்க்கைக்கு விளக்கேற்றி வைத்து விட்டார் டி. கே. சி.

புகழ்பெற்ற ஐ. சி. எஸ். அதிகாரி ஒருவர். அவர் டி. கே. சியின் நண்பர், அவருடைய செல்வப் புதல்வி அமெரிக்காவில் போய், தாவர இயல் படித்து வரப் புறப்பட்டாள். டி. கே. சியிடம் வந்து ஆசீர்வாதம் வேண்டினுள்.

டி. கே. சி. சொன்னுர்:

''அமெரிக்காவுக்குப் போ, அங்குள்ளவற்றை நன்ருகப் பார். ஆனுல் ஒன்றையும் படித்துவிடாதே. பார்த்துவிட்டு வந்துவிடு. நீ படிக்க வேண்டிய தாவரம் எல்லாம் இந்தக் குற்ருலமலேயில் நிறைய இருக்கின்றது. அங்கு ஐம்பதாவது மாடியிலோ, அறுபதாவது மாடியிலோ உள்ள வகுப்பறையில் என்ன இருக்கும்? வெறும் லெக்சர் இருக்கும், தாவரக் குடும்பங்களுக்கு லத்தீன் வார்த்தைகள் இருக்கும். செடியும் கொடியும் இங்கேதான்.''

டி. கே. சியின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பெண்—ஐ. சி. எஸ். அதிகாரியின் மகள்—செய்த காரியம் என்ன? அமெரிக்கா போவதை நிறுத்திவிட்டாள். ''படிக்கவேண்டியதை இங்கேயே படித்துக்கொள்ளலாம், அதற்கு அமெரிக்கா போகவேண்டியது இல்லே என்று விளங்கிவிட்டது அப்பெண்ணுக்கு.''

பள்ளிக்கூடம், பாடப்புத்தகம், ஆசிரியர்களின் பிரசங்கம், பரீட்சை அவ்வளவும் ஏமாற்று என்பது டி. கே. சி. கண்ட உண்மை. உண்மைக்கோ, உணர்ச்சிக்கோ, ஆனந்தத்துக்கோ பள்ளிக்கூடம் இடம் கொடுப்பதில்லே. பொய்க்கும் பித்தலாட்டத்துக்கும் தாயகமாக இருக்கிறது பள்ளிக்கூடம். ''இங்கிலீஷ் படிப்பு'' என்பது டி. கே. சியின் கொள்கை.

இதை அவர்கள் வாழ்நாள் முழுவதும் சொல்லிக்கொண் டிருந்தார்கள்.

டி. கே. சி. கல்வியை வெறுக்கவில்லை, கல்வியைத் தெய்வ மாக மதித்தார்கள். ''மனிதனிடம் உள்ள சக்தி—அளவிட முடியாத ஆற்றல், வெளிப்படுவதற்குச் சாதனமாக அமைய வேண்டும் கல்வி. அப்படி வெளிப்படுகிற ஆற்றல் அவனுக்கு மட்டும் அல்ல, சமுதாயம் முழுவதுக்கும் பயன்படவேண்டும்.''

இதற்கு உதவவேண்டும் படிப்பு. அத்தகைய படிப்பைச் சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடம் வேண்டும். அந்தப் படிப்பை எல்லோரும் படிக்கவேண்டும். ஆனால், ''உண்மையான கல்வி யும், உண்மைக் கல்வியைச் சொல்லிக் கொடுக்கும் பள்ளியும் இல்லையே!'' என்று டி. கே. சி. வருந்தினார்கள்.

ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு தம் காரியத்தைத் தமக்கு உகந்தபடி பார்த்துக்கொள்வது பொதுப்படையான உலக இயல். ஆனால் டி. கே. சியிடம் சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருந்தன.

தம் பேரன்மார் மூவரையும், பேத்தியையும் டி. கே. சி. பள்ளிக்கூடம் அனுப்பவில்லை. தாமே அவர்களுக்கு ஆசிரியராக இருந்தார்கள். பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராக இல்லை. வாழ்க்கையை—உ ண் மை ய, உணர்ச்சிமயமாய் வாழ்ந்து காட்டியது மூலம் அவர்களுக்கு ஞான குருவாக விளங்கி னார் டி. கே. சி. அப்படியே ஒவ்வொருவருக்கும் ஞான குருவாக விளங்கினார் டி. கே. சி.

எத்தனையோ நண்பர்கள்—புகழ்பெற்ற நண்பர்கள் சொல்லிப் பார்த்தார்கள். உற்றாரும் உறவினரும் கெஞ்சிப் பார்த்தார் கள். பேரன்மாரையும் பேத்தியையும் பள்ளிக்கூடம் அனுப்பி வைக்கும்படி.

டி. கே. சி. உடன்படவில்லை. உண்மைக்கு உறுதுணையாக விளங்கினார்கள் டி. கே. சி.

டி. கே. சி. அடிக்கடி சொல்வார்கள்:

''சையன்ஸ் இங்கிலீஷிலா இருக்கிறது? இல்லை. அஸ்ட் ரானமி வானத்தில் இருக்கிறது. ஜியாலஜி பூமிக்குள் இருக்கிறது. பாட்டனி காட்டில் இருக்கிறது. பிஸியாலஜி நம் தேகத்தில் இருக்கிறது. ஸைக்காலஜி நம் உள்ளத்தில் இருக்கிறது. இங்கி லீஷ் பாஷையில் எப்படி இருக்கும்? . . . சையன்ஸ் புஸ்தகத்தில் இருக்கிறது என்ற மூடபக்தி ஒழிந்தால் ஒழிய நம்முடைய கல்வி—முக்கியமாகத் தமிழ்—உருப்படப்போவது கிடையாது.''

''கல்யாணம்பண்ண விரும்புகிற ஒருவனுக்கு பெண் பாட சாலை ஒன்றின் ஆஜர் அட்டவணையைக் கொடுத்துப் புரட்டிப் பார் என்று சொன்ன கணக்குத்தான்.''

மேலும் டி. கே. சி. அடிக்கடி சொல்வார்கள்:

''பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களாய் இனி அமரப்போகும் மாணவர்களுக்கும் விஷய அனுபவம் என்பது இல்லாதபோது வார்த்தையை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றுதான் கேட்கிறேன். பள்ளிக்கூடங்களில் சையன்ஸ் கற்பிக்கவில்லை. கற்பிப்பது எல்லாம் அப்பாவி மாணவர்களுக்கு வார்த்தைகளைத் திணிப்பதுதான்.

குருட்டுப் பள்ளிக்கூடத்தில் விண்மீன்களையும் வானவில்லின் தத்துவங்களையும் பற்றிப் பேசி என்ன செய்ய? பெயர்களையும் இலக்கண சூத்திரங்களையும் பாராமல் படித்துக் கொட்டித் தீர்த்துவிடுவார்கள் குருடர்கள்! அதுபோலத்தானே பள்ளிக்கூடங்களில் சையன்ஸ் பாடங்கள் நடக்கின்றன. எல்லாம் அறிவைக் கெடுக்கிற காரியம் என்ருல் குற்றம் இல்லை.''

''நம்முடைய வயசான பி.ஏ., பி.எல்களிடம் ஐந்து நிமிஷம் பேசிப் பார்த்தால் போதும். எந்த விஷயமானுலும் தாறு மாருய்த்தான் பேச்சுவரும்.

இதெல்லாம் சாபமோ என்றுகூடச் சொல்லத் தோன்றும். ஆனுல் அது சாபம் அல்ல. பள்ளிக்கூடங்களில் படித்த படிப்பின் விளைவுதான்.''

''சரியான முறையில் சின்னஞ் சிறு விஷயமாகச் சில சையன்ஸ் அம்சங்களையாவது நேரில் பார்த்து ஆராய்ந்து அனுபவித்திருந்தால் 'குழப்பம்', 'கலக்கம்', 'அந்தகாரம்', 'சாபம்' என்றெல்லாம் பேச நேர்ந்திருக்குமா?

எல்லாம் நேர்முகமான கல்விமுறை இல்லாததால்தான்.''

டி. கே. சியின் வாக்குமூலத்திலிருந்து நாம் தெரிவது என்ன? கல்விதான் மனிதனுக்கு உயிர். அதுதான் ஆனந்தம். ஆனுல் தற்காலப் பள்ளிப் படிப்பில் கல்வி இல்லை. அதாவது கல்வியில் உண்மை இல்லை.

ஆயிரம் ஆயிரம் என்கிற கணக்கில் மனிதர்கள் படிக்கத்தான் செய்கிருர்கள். யாருக்காவது படிப்பின் கொடுமை—பித்தலாட்டம் தெரிந்ததா? இல்லை. டி. கே. சி. ஒருவருக்குத்தான் தெரிந்தது.

ஒன்றிரண்டு பேர் தெரிந்திருந்தார்கள். தெரிந்திருந்தும், மட்டமான பள்ளிப் படிப்பை ஒதுக்கிவைக்க முடியவில்லை. ஆனால் டி. கே. சி. இந்தப் படிப்பு வேண்டாம் என்று ஒதுக்கி வைத்து விட்டார்.

டி. கே. சிக்கு இருந்த வசதிக்கும் செல்வாக்குக்கும் பேரன் மார்களை அமெரிக்காவில் படிக்கவைக்க முடியும். பெரிய பெரிய பட்டங்களை அவர்கள் சுருட்டிக்கொண்டு வரும்படி செய்ய முடியும்.

மிக உன்னதமான பதவிகளில் அவர்களை ஏற்றி உட்கார வைக்கமுடியும்.

ஆனால் டி. கே. சி. அதைச் செய்யவில்லை.

எளிய இனிய உண்மைக்காக அட்டகாசம் மிக்க ஆடம் பரத்தையும் உல்லாசத்தையும் தூக்கித் தூர எறிந்த தியாக புருஷன் அவர். சத்தியத்திற்காக தன்னையே தியாகம்செய்த வள்ளல் அவர்.

சுமார் முப்பத்தாறு வருடங்களுக்குமுன் தமிழில் எம்.ஏ. வரை படித்துத் தேறிய பெண்மணி ஒருவர் டி. கே. சியைப் பார்க்க வந்தார். அந்த அம்மாள் அப்பொழுது ஒரு கல்லூரியில் துணை விரிவுரையாளராக இருந்தார். ஒரு சர்வகலாசாலையில் விரிவுரையாளராகப் போக விரும்பினார். அதற்காக, டி. கே. சியின் உதவியை நாடி அப்பெண்மணி வந்திருந்தார்.

அந்தப் பெண்ணிடம் டி. கே. சி. கேட்டார்கள், ''எம்.ஏ. வரை படித்திருக்கிறாயே நீ, உனக்குக் கோலம்போடத் தெரியுமா? குத்துவிளக்கைப் பூட்டுப் பூட்டாகக் கழற்றி, விளக்கி, மறுபடி பொருத்தி, சுடரேற்றி வைக்கத் தெரியுமா? துணிகளைத் துவைத்து, உதறி, காயப்போட்டு மடித்துவைக்கத் தெரியுமா? பசுவை அன்போடு உபசரித்து வளர்க்கத் தெரியுமா? பால் காய்ச்சி, உறையிட்டு, தயிர் கடைந்து, நெய் உருக்கத் தெரியுமா? வீட்டைப் பெருக்கவும், தட்டுமுட்டுச் சாமான்களை அந்த அந்த இடங்களில் அடுக்கிவைக்கவும் தெரியுமா? சமையல் தெரியுமா? ஒழுங்காகச் சாப்பிடத்தான் தெரியுமா? உற்றார் உறவினர்களை வரவேற்று உபசரிக்கத் தெரியுமா?''

இப்படிக் கேள்விகளை அடுக்கடுக்காக விட்டார்கள் டி. கே. சி. வந்த பெண்மணி மிரண்டுபோனாள். வேர்த்து விறுவிறுத்து விட்டது அவளுக்கு. பேந்தப் பேந்த விழித்தாள்.

அமர்ந்த குரலில் அன்போடு பிறகு கேட்டார் டி. கே. சி. ''படிப்பென்றால் இது எல்லாம் தெரியவேண்டும். இல்லாவிட்டால், உன்னிடம் ஒப்படைக்கும் குழந்தைகளை நீ எப்படி பண்புள்ளவர்களாக உருவாக்க முடியும்? நம்மிடம் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட பொருள்களையே காப்பாற்றத் தெரியாவிட்டால், நம்முடைய பொருளை—கணவனை, குழந்தையை, உற்றார், உறவினரை, சிநேகிதரை, விருந்தினரை எப்படி நம்மால் மதிக்க முடியும்?''

''கலையில் எல்லாம் சிறந்த கலை வாழ்க்கைக் கலை. அந்தக் கலையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரிவிக்காமல் இருட்டடிப்புச் செய்துவிடுகிறது பள்ளிக்கூடம். என்ன கொடுமை இது.''

இப்படி மனந்திறந்து சொன்னார் டி. கே. சி. அந்த அம்மாளும், அந்த அம்மாளை அழைத்துவந்த உறவினரும் ''ஏண்டா இங்கு வந்து தொலைந்தோம்'' என்று மயங்கினார்கள்.

அந்த வேளையில் நான் சொன்னேன்:

''நீங்கள் சொல்கிற கல்வியை—உண்மையைப்பற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பதற்குத்தானே பட்டம் கொடுக்கிறார்கள்! பதவி வழங்குகிறார்கள்! கை நிறையப் பணத்தைச் சம்பளம் என்று அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள்'' என்று.

டி. கே. சிக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ''அப்படிச் சொல்லுங்கள்'' என்று என்னைப் பாராட்டினார்கள். ''இந்தப் படிப்பின் கொடுமையை எவ்வளவு தெளிவாய் விளக்கிவிட்டீர்கள்! அடடா! இப்படி மற்றவர்களால் விளக்கமுடியாது'' என்று சொன்னார்கள்.

சொல்லிவிட்டு, அந்த அம்மாவைப் பார்த்துச் சொன்னார்கள்: ''சண்முகசுந்தரம் அசைக்கமுடியாதபடி உண்மைக்கு ஒரு தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் போனதில்லை. பாடம் படித்ததில்லை .வெறும் வார்த்தைகளோடு மாரடித்ததில்லை. உண்மையை நேருக்கு நேராகப் பார்க்கிறார்கள். உணர்ச்சிமயமாய்ப் பார்க்கிறார்கள். அப்படியே நம்மையும் பார்க்க வைத்துவிடுகிறார்கள்.

அதுதான் உண்மையான கல்வி.''

1953-ஆம் வருடம் திருக்குற்றாலம் வந்து தங்கி இருந்த நடன அரசி திருமதி ருக்மணி அருண்டேல் அவர்கள், ''நீங்கள் கல்வி மந்திரியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று டி. கே. சியிடம் கேட்டார்கள்.

''எல்லாப் பள்ளிக்கூடங்களும் கூரைக் கட்டிடங்களில்தான் நடைபெற வேண்டும் என்று உத்தரவு போடுவேன். உடனடியாக அமுலுக்கும் கொண்டுவந்துவிடுவேன்'' என்று சொன்னார்கள் டி. கே. சி.

''அதன்பிறகு என்ன செய்வீர்கள்?'' இது ருக்மணி தேவியின் கேள்வி.

''நூல் நிலையங்களில் உள்ள புத்தக பீரோக்களைத் திறந்து வைக்கச்செய்வேன்'' என்றார் டி. கே. சி.

''அதன்பின்?'' என்றாள் அம்மையார்.

''மண்ணெண்ணெ அல்லது பெட்ரோல் கொண்டுவரச் சொல்வேன்'' என்றார் டி. கே. சி.

''பின்பு?'' என்று கேட்டார் ருக்மணி தேவி.

''பின்பு என்ன பின்பு? தீக்குச்சியைப் பொருத்திப் போடுவேன். சொக்கப்பானையாக எரியும். மூடத்தனம் அவ்வளவையும் எரித்துத் தொலைத்துச் சாம்பலாக்கினால்தானே நம் குழந்தைகளும் மனிதர்களாக வாழமுடியும்!''

''அந்தச் சாம்பலைக்கூட, கடலில் கொட்டிவிட ஏற்பாடு செய்வேன். இல்லாவிட்டால் எப்படியாவது முளைத்து வந்து ஒட்டிக்கொள்ளும், இந்தப் படிப்பில் உள்ள அயோக்கியத் தனம்'' என்று சொன்னார்கள்.

வார்த்தைகளில் ஆங்காரமும் கொதிப்பும் இருந்தாலும், அவைகளுக்குள் அன்பும் பரிவுமே சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.

படிப்பில் உள்ள பித்தலாட்டத்தைத்தான் டி. கே. சி. கண்டித்தார்கள், மனிதர்களை அல்ல. ஆசிரியர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் டி. கே. சியிடம் பழகினார்கள். அவர்கள் எல்லோரிடமும் டி. கே. சி. உயிருக்கு உயிராக இருந்து உறவாடினார். கள்ளம் கபடம் இல்லாத குழந்தையாய் இருந்து மருவி மருவி எல்லோரிடமும் டி. கே. சி. பழகினார். யாரையும் அவர் வெறுக்கவில்லை. அவமதிக்கவில்லை. ஆனால் எல்லோரிடமும் இந்தப் படிப்பில் உள்ள கோளாறை எடுத்துச்சொல்வார். சிரிக்கச் சிரிக்க எடுத்துச் சொல்வார்.

உண்மைக் கல்வியைப்பற்றியும் போலிப் படிப்புபற்றியும் டி. கே. சி. சொல்லியது வெறும் யூகத்தில் அல்ல, வெறும் பிரச்சார தொனிக்காக அல்ல, அனுபவத்தில் கண்ட உண்மை அது. உண்மையை மூடி மறைத்துவைக்கிற சுயநலம் இல்லாதவர் டி. கே. சி.

இன்றைக்கு எண்பது வருடங்களுக்கு முன்பே ஆங்கிலேயர்களிடம் பி.ஏ. வரை படித்துத் தேறியவர் டி. கே. சி. அதன்பின் பி.எல்லும் படித்துத் தேறியவர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள எல்லா நூல்களையும் ஐயம் திரிபறக் கற்றுத் தெளிந்த மேதை. சகலகலா வல்லுநர். ஐம்பது வருடங்களுக்குமுன், எம்.எல்.சியாக இருந்தவர். இந்துமத பரிபாலன கமிஷனராக ஐந்து வருடம் உத்தியோகம் பார்த்தவர். நடமாடும் பல்கலைக் கழகமாக இருந்தவர். ஞானக் கொழுந்தாக விளங்கியவர்.

கல்விக்கடலாக விளங்கிய டி. கே. சிதான் பள்ளிப் படிப்பில் உள்ள பேதைமையைப் பிட்டு பிட்டு எடுத்துவைத்தார். அவ்வளவும் அனுபவம் பேசுகிற பேச்சு. உண்மையான பேச்சு. அதனால்தான் டி. கே. சியின் கொள்கை—கல்வி சம்பந்தமான கொள்கை—ஒவ்வொருவரையும் தாக்கியது.

பேராசிரியர்கள், பண்டிதர்கள், புலவர்கள், நிபுணர்கள் எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கியது. அரசாங்கத்தையே யோசிக்க வைத்தது.

அப்போதைக்கு அப்போது படிப்பில் பல பல மாற்றங்களைக் கொண்டுவர ஏவியது.

சுயநலத்தோடு பேசிய பேச்சு, வேஷம்போட்டு முழங்குகிற முழக்கமாக இருந்தால் ஒருவரும் அதைக் கவனித்திருக்க மாட்டார்கள். கேட்டுக் கேட்டு மறந்திருப்பார்கள்.

இன்று கல்வியில் பல சீர்திருத்தங்கள் வருகின்றன. இனி, பல பல சீர்திருத்தங்கள் கல்வியில் வர இருக்கின்றன. இது உண்மை. இதற்கு மூலகாரணம் டி. கே. சி. என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

7. பி. எல். படிப்பு

டி. கே. சிக்கும் பிச்சம்மாள் அண்ணிக்கும் 1908-ஆம் வருடம் திருமணம் நடந்தது. திருமணம் சிறப்பாக நடந்தது. திருமணத்தில் நடந்த சடங்குகள், ஊஞ்சல், நலுங்கு, பட்டணப் பிரவேசம், விருந்து, உபசாரம், கதாகாலட்சேபம், பரதநாட்டியம் எல்லாம் ஜாம் ஜாம் என்று நடந்தன. உற்றார் உறவினர் இல்லங்களில் மணமக்களுக்கு விருந்தும் உபசரிப்பும் தொடர்ந்து நடந்தவண்ணமாகவே இருந்தது. தாயுடன் பிறந்த அம்மான்மார் பத்துப் பேர், மற்றும் உறவினர் எல்லோரும் போட்டி போட்டு மணமக்களை உபசரித்தார்கள்.

1908-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் சென்னையில் உள்ள சட்டக்கல்லூரியில் பி.எல். படிப்பதற்கு டி. கே. சி. சேர்ந்தார். சைதாப்பேட்டையில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தங்கினார். அருமை மனைவியுடன் இருந்து இல்லறம் நடத்திக்கொண்டே சட்டக்கல்லூரியில் படித்துவந்தார் சிதம்பரநாதன். 1909-ஆம் வருடம் டிசம்பர் மாதம் டி. கே. சிக்கு ஆண்குழந்தை பிறந்தது. குழந்தையின் பெயர் தீத்தாரப்பன். பி. எல். தேர்வில் சிதம்பரநாதன் வெற்றிபெறவில்லை. சென்னையைவிட்டுத் தென்காசிக்கு வந்துவிட்டார் சிதம்பரநாதன். குடும்பம் தென்காசி வீட்டில் இருந்தது. சிதம்பரநாதன் திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். தேர்வில் வெற்றி பெற்றார். வழக்கறிஞர் என்னும் பட்டம் பெற்றார். 1915-ஆம் வருடம் முதல் டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ.,பி.எல். அட்வகேட் என்னும் பட்டத்துடன் திருநெல்வேலியில் குடி இருந்தார்.

திருநெல்வேலியில் ஒரு பகுதியாக விளங்கும் வண்ணார்பேட்டையில் ஒரு வீட்டில் டி. கே. சி. குடும்பத்தோடு வாடகைக்கு இருந்தார்கள். பிறகு அதே தெருவில் இரண்டு வீடுகளை விலைக்கு வாங்கினார்கள். 1915 முதல் 1928 வரை பதினன்கு வருடங்கள் திருநெல்வேலியில் இருந்தார்கள் டி. கே. சி.

பதினன்கு வருடங்களில் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் தான் அவர்கள் வழக்கறிஞர் பணியில் ஈடுபட்டார்கள். அதுவும் நீதிமன்றத்திற்கு வழக்காட போனது ஒரு சில தடவைகள்.

பி. எல். படிப்பு

டி. கே. சிக்கு மலேரியாக் காய்ச்சல் வந்தது. அடிக்கடி அந்தக் காய்ச்சல் விட்டுவிட்டு வந்தது. அது ஓரளவு வழக்கறிஞர் தொழிலைப் பாதித்தது. இந்த நிலையில் திருநெல்வேலியின் வழக்கறிஞராக இருந்த திரு. சுப்பையா முதலியார் அவர்கள் கம்பராமாயணம் புத்தகத்தைக் கொடுத்து டி. கே. சியைப் படிக்கச் சொன்னார்கள். டி. கே. சியும் பாடல்களைப் படித்துப் பார்த்தார்கள். ஒவ்வொரு பாடலும் டி. கே. சியைச் சுண்டி இழுத்தது. அற்புத உலகத்திற்கே கொண்டுபோய் வைத்தன பாடல்கள். கம்பர் பாடல்களில் உண்டான ஈடுபாடும் டி. கே. சியின் வழக்கறிஞர் தொழிலுக்கு வேட்டு வைத்தது. ஏழை, பணக்காரர், படித்தவர், படியாதவர், ஆண், பெண், வயதானவர், இளைஞர், முதலாளி, தொழிலாளி என்னும் இந்த வேற்றுமை அவரிடம் துளிக்கூட இல்லை. எல்லோரையும் அன்போடு உபசரித்தார், பண்போடு மதித்தார்.

வேற்றுமை இல்லாத ஞானநிலை—புனிதமான மெய்யுணர்வு நிலை டி. கே. சியிடம் மேலும் மேலும் உயர்ந்து ஓங்கியது. இந்த உண்மைநிலை கோடியில் ஒருவரிடம்கூட இருக்காது. பலகோடி பேர்களில் ஒருவரிடந்தான் உண்மையானது உணர்ச்சிமயமாய் இருக்கும்.

தமிழ்ப் பாடல்கள் டி. கே. சியிடம் பக்திமயமான ஞான நிலையை வளர்த்துவிட்டது.

இளமைப் பருவத்தில் கல்லூரிப் படிப்பு முடியும்வரை—ஏன், பி. எல். பரீட்சையில் தேறி வழக்கறிஞராய் வந்து கம்பராமாயணத்தில் ஈடுபடும் வரை—டி. கே. சியிடம் தாராளம் என்பது இருந்ததாகத் தெரியவில்லை. பெரும் சிக்கனக்காரராகவே இருந்தார். தான் உண்டு, தன் காரியம் உண்டு என்னும் போக்கில் தான் வளர்ந்தார். வம்பு தும்பான இடங்களுக்குப் போக மாட்டார். தடபுடலான பேர்வழிகளிடம் பழகமாட்டார். அனுவசியமாகக் கால் தம்படிகூடச் செலவழிக்கமாட்டார். தன்னுடைய துணிமணிகளைத் தானே துவைத்து, காயப்போட்டு எடுத்து, கையாலேயே தடவிக் கொடுத்துத் தேய்த்து, அவற்றை தலையணையின்கீழ் மடித்துவைத்தே கட்டினார். இதுபோல் எத்தனையோ காரியங்களில் சிக்கனமாகவே இருந்தார். ஒரு சில காரியங்களில் கஞ்சன் என்று சொல்லும்படியாகவே அவர் வளர்ந்தார்.

கிட்டத்தட்ட முப்பத்து ஐந்து வருடகாலம் இப்படி வாழ்ந்த டி. கே. சி. அதன்பின் மெள்ள மெள்ள உற்றார், உறவினர், நண்பர்,

பணியாளர், தமிழன்பர் எல்லோருக்கும் அள்ளி அள்ளி கொடுக்கும் வள்ளலாகவே உயர்ந்து வந்தார்.

அன்பர்கள் பலர்கூடி எப்பொழுதும் இருக்கவேண்டும். ஒவ்வொருநாளும் மூன்று வேளையும் இருபதுபேர் இருபத்தைந்து பேர் உடனிருந்து சாப்பிடவேண்டும். கல்யாண வீடாகவே இருந்தது டி. கே. சி. வீடு. அவ்வளவு பேரிடமும் அன்பைப் பொழிந்தார். மரியாதை செய்தார், உபசரித்தார், உபகாரம் பண்ணினர். எல்லாம் தமிழ்க்கவி செய்த காரியம்.

தனித்து ஒதுங்கி இருந்தோம் என்பது அவர் வாழ்நாளில் கிடையாது. இனி மலேரியாக் காய்ச்சல் என்பது ஒரு பொது நோய். அது ஒருவருக்கு மட்டும் சொந்தம் இல்லை. யாருக்கு வேண்டுமானுலும் வரும் மலேரியாக் காய்ச்சல். அநேகமாக ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கண்டுபேசிப் போய்விடுகிறது மலேரியாக் காய்ச்சல். ஒருவர்மேலும் அதற்கு விரோதம் இல்லை. எல்லோரையும் அப்போதைக்கு அப்போது வந்து ஒரு ஆலிங்கனம் செய்துவிட்டுத்தான் போகிறது மலேரியாக் காய்ச்சல்.

ஆனுல் ஒன்று, டி. கே. சி. விஷயத்தில் இந்த மலேரியாக் காய்ச்சல் சொந்தம் பாராட்டிவிட்டது. 1916-ஆம் வருடம் முதல் இருபத்து ஏழாம் வருடம் முடிய ஒரு வியாழ வட்டமே-பன்னிரெண்டு வருடகாலம்-டி. கே. சியை விட்டுப் பிரியாமல் சுற்றிச் சுற்றி வந்தது மலேரியாக் காய்ச்சல்.

விருந்தாளியாகத்தான் முதலில் வந்தது மலேரியாக் காய்ச்சல். முப்பது முப்பத்தைந்து நாட்கள் டி. கே. சியோடு டி.கே. சியாய் ஒட்டி நின்றது. பிறகு சிறிது விலகி அக்கம்பக்கம் சுற்றிக்கொண்டிருந்தது. இருபது இருபத்தைந்து நாட்களில் ஆவலோடு மறுபடி பாய்ந்துவந்து தொற்றிக்கொண்டது டி. கே. சியை. இப்படி மாறி மாறி—பன்னிரெண்டு வருடகாலமும் உறவு கொண்டாடியது. மாதக்கணக்கில் கூடிக் குலாவுவதும், பிறகு ஒரு வாரம் இரண்டு வாரம் தாய் வீட்டுக்குப் போய்வருவதுபோல அங்கும் இங்கும் சுற்றி வட்டம்போடுவதும், மறுபடி வந்து கொஞ்சி விளையாடுவதும் ஆக இப்படி ஒரு அந்தரங்க உறவை வைத்துக் கொண்டது மலேரியாக் காய்ச்சல். யாருடன்? டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ.,பி.எல். அட்வகேட்டுடன். எத்தனை நாள்? பன்னிரெண்டு வருடங்கள்.

கட்சிக்காரர், வழக்குக்கட்டு, நீதிமன்றம், குறுக்கு விசாரணை, தீர்ப்பு, வெற்றி தோல்வி ஒன்றும் இல்லைதான். பன்னிரெண்டு வருடங்களில் பன்னிரெண்டு முறைகூட நீதிமன்றம்

போனதில்லை டி. கே. சி. வீட்டின் தலைவாசல் முகப்பில் ''வழக்கறிஞர்,'' என்னும் விலாசப்பலகை இருந்தது. அவ்வளவுதான்.

மலேரியாக் காய்ச்சல் ஒரு தடவை வந்தாலே போதும். ஆளை உருக்குலைத்துவிடும். ஊனை உருக்கி இரத்தத்தை ஒட்ட உறிஞ்சிக் குடித்துவிடும். மலேரியாக் காய்ச்சல், இரண்டு மூன்று தடவை தொடர்ந்து வந்து ஒருவரைத் தாக்கிவிட்டால் அந்த நபர் யாராக இருந்தாலும் சரி—மதயானை போன்ற வல்லமை உடையவராக இருந்தாலும் சரி, அவரைச் சின்னு பின்னம் ஆக்கிவிடும்.

எழுந்திருக்க முடியாது, உட்கார முடியாது, நடக்க முடியாது, நிற்க முடியாது. கால் பின்னல் ஆடும், கை நடுங்கும், அம்மியில் வைத்துத் தட்டி நொறுக்குவதுபோல் துவைத்து எடுத்து விடும் உடம்பை.

கொடிய கொம்பேறிமூர்க்கன் போன்ற இந்த இரத்தக் காட்டேறி—மலேரியாக் காய்ச்சல் டி. கே. சியைப் புரட்டிப் புரட்டி எடுத்தது. ஆனாலும் டி. கே. சியின் பொன்னுடல் கட்டுக் குலையவில்லை, பூட்டுவிடவில்லை மேனி.

காரணம் என்ன? பச்சைத் தண்ணீர் வைத்தியந்தான், வேறு வைத்தியம் இல்லை. எந்த மருந்தையும் சாப்பிடவில்லை. சூடு ஏற ஏற உடம்பு நடுங்கும். குளிரில் கிடுகிடு என்று நடுங்கும். உடனே முற்றத்தில் வந்து உட்காருவார் டி. கே. சி. குளிர்ந்த தண்ணீரைக் குடம் குடமாகக் கொண்டுவந்து தலை வழியாகக் கொட்டச் சொல்வார். மழை பெய்கிற நேரமாக இருந்தால் டி. கே. சிக்கு ஒரே கொண்டாட்டம்தான். கொட்டும் மழையில் சப்பணம் போட்டு உட்கார்ந்துகொள்வார்.

தண்ணீரானது சூட்டைத் தணித்துவிடும். குளிரும் நடுக்கமும் ஓடிவிடும். துவட்டிவிட்டுக் கட்டிலில் வந்து படுத்துக் கொள்வார்.

இந்தப் பச்சைத் தண்ணீர் வைத்தியத்தால், எத்தனையோ தடவை ஆவேசமாக மலேரியாக் காய்ச்சல் வந்து தாக்கியபிறகும் டி. கே. சியின் உடம்பு பழுதுபடாமல் இருக்க முடிந்தது.

காய்ச்சலில் பச்சைத் தண்ணீரில் யார் குளிப்பார் என்று குடும்பத்தார் முதலில் பயந்தார்கள், தடுத்தார்கள். டி. கே. சி. மசியவில்லை. பிறகு உற்றார், உறவினர், நண்பர் எல்லோரும் உபதேசம் செய்து பார்த்தார்கள். ''ஒருவேளை இருந்தால் போல் ஒருவேளை இருக்காது. காய்ச்சலுக்கும் பச்சைத் தண்

ணீருக்கும் ஜன்மப்பகை. அதனால் அப்படி இப்படி என்று சிக்கல் நேர்ந்துவிடும்'' என்றெல்லாம் அறிவுரையில் பல உத்திகளைக் கையாண்டு பார்த்தார்கள்.

டி. கே. சியிடம் ஒன்றும் பலிக்கவில்லை. அனுபவத்தில் அவர்கள் கண்டுகொண்டார்கள். தணலாய்க் கொதிக்கிறது காய்ச்சல். குளிக்கக் குளிக்க அது தணிந்துவிடுகிறது. இதை அனுபவித்துப் பார்த்துவிட்டார்கள். அதன்பிறகு பச்சைத் தண்ணீர் பொல்லாதது என்றால் அது வேடிக்கையாகத்தானே இருக்கும்.

உபதேசம் பண்ணுகிறவர்களிடம் டி. கே. சி. ஒரே ஒரு பதிலைத்தான் சொன்னார்கள். ''கொல்லன் இரும்பை உலையில் வைத்துப் பழுக்கக் காய்ச்சுகிறான். உருகி ஓடும் அளவிற்கு அனல் பிழம்பாய்விடுகிறது இரும்பு. உடனே வெளியில் எடுக்கிறான். எடுத்து என்ன செய்கிறான்? பச்சைத் தண்ணீரைத் தான் அந்த அனல் பிழம்பில் கொட்டுகிறான். இரும்புக்கு டெம்பர் கூடுகிறது. குறைவது இல்லை. நமது உடம்பும் அப் படித்தான்.''

பதில் சொல்ல முடியவில்லை தடுத்தவர்களால். பன்னிரெண்டு ஆண்டும் காய்ச்சலுக்குத் தண்ணீர் வைத்தியந்தான். பன்னி ரெண்டு வருடங்களுக்குப் பிறகும் இடை இடையே வந்து எட்டிப் பார்த்தது காய்ச்சல். கடைசி வரை வைத்தியம் தண்ணீர்தான்.

காய்ச்சலில் தண்ணீரில் குளிக்கத் தயங்கியவர்கள், தடுத்த வர்கள் எல்லோருமே, இந்தப் பச்சைத் தண்ணீர் வைத்தியத்துக்கு ஒவ்வொருவராக வந்துவிட்டார்கள். டி. கே. சி. மூலம் இந்த வைத்தியம் பிரபலம் ஆனது.

காய்ச்சல் வருவது இயல்பு. ஆனால் பன்னிரெண்டு வருடங் கள் தொடர்ந்து விடாமல் ஒரு மனிதனைச் சுற்றிச் சுற்றி வந்து ஒரு காய்ச்சல் தாக்கியது என்றால் அது ஒரு அதிசயந்தான். பலபல தடவை தொடர்ந்து தாக்கிய பிறகும் அந்த மனிதனு டைய உடம்பு அணுவளவுகூட சேதப்படவில்லை என்பது அதை விட ஆச்சரியம்.

அப்படியானால் இதில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும்.

8. சோதனையில் வந்த சாதனை

பல்லாயிரக்கணக்கான வருடங்களாகப் பண்பட்டு வளர்ந்தது தமிழ். இசை, நடனம், நாடகம், கவி இப்படித் தெய்வத் தன்மையாய் இருந்தது தமிழ். வளமும் செழிப்பும் நிறைந்த தமிழினிடம் இருந்த அருள் போய்விட்டது. உயிரே இல்லை என்று சொல்லும்படி ஆகிவிட்டது. தமிழினிடம் ஒளியே இல்லை. ஒழுக்கம், பண்பாடு, ஊக்கம், பரிவு, அருமை, எளிமை, நம்பிக்கை அவ்வளவும் தமிழைவிட்டு ஓடிவிட்டன. தமிழ் மக்களுக்கு ஒரு அன்னிய மொழியாகவே ஆகிவிட்டது தமிழ். கலைகளும் அப்படித்தான்.

தமிழுக்கு உயிர்கொடுக்க வேண்டும். உணர்ச்சி ஊட்ட வேண்டும். ஒளிபாய்ச்சி, தமிழ் மக்களோடு சேர்ந்து தமிழானது குடித்தனம் நடத்தவேண்டும்.

இவ்வளவும் ஒருவன் துணிந்துவந்து செய்யவேண்டும். அவ்வளவுக்கு அவனிடம் தகுதி இருக்கவேண்டும்.

டி. கே. சியிடம் அதற்கு உரிய தகுதி இருப்பதைக் கண்டு கொண்டது எல்லாம் வல்ல விதி. ஆனல் ஜரிகைத் தலைப்பாகையும், நீள அங்கியும், பளபளக்கும் நான்கு கைக் கருப்புக் கோட்டும், வழக்கறிஞர் தொழிலும், வெள்ளைக்காரர் தோரணையுமாய் இருக்கிருர் டி. கே. சி.

இவ்வளவையும் கழற்றி வைத்துவிட்டு தமிழின் பக்கம் வா என்ருல் வருவதற்கு இடம் கொடுக்குமா வாழ்க்கை?

அதற்காக என்ன செய்தது விதி? டி. கே. சி. மேல் கொடிய விஷக் காய்ச்சலை ஏவிவிட்டது. மாறிமாறிப் பன்னிரெண்டு ஆண்டுகளும் தொடர்ந்து ஏவிவிட்டது.

ஜரிகைத் தலைப்பாகை, கோட்டு, கேஸ் கட்டு ஒவ்வொன்ருகக் கழற்றி வைத்துவிட்டது. பச்சைக் கம்பளியையும் தமிழ்ப் பாடல்களையும்—முக்கியமாகக் கம்பராமாயணத்தையுமே—கையில் கொடுத்துவிட்டது, விதி.

டி. கே. சியின் மேனியை ஒன்றும் செய்யவில்லை. அணுவளவுகூட உடம்பைக் கை வைக்கவில்லை. உணர்ச்சி, வாழ்க்கை இவற்றின் பக்கமே வரவில்லை பொல்லாத விதி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

டி. கே. சிக்குப் பச்சைத் தண்ணீரும், பச்சைக் கம்பளியும் எப்படி உற்றதுணையாய் இருந்தனவோ, அப்படியே தமிழ்ப் பாடல்களும் கம்பராமாயணமும் உற்ற நண்பர்கள் ஆகிவிட்டார் கள்.

கவிசெய்த காரியம்

பாடல்களைப் பார்க்கப் பார்க்க—அனுபவிக்க அனுபவிக்க—டி. கே. சி. ஒரு புதிய பிறவியே எடுத்துவிட்டார். எங்கும் இல்லாத அற்புதங்கள் புத்தம் புதிய ஒளிமயமாய்—தெய்வ ஒளியாய்ப் பிரகாசித்தன கவியில்.

விஷயம் வாழ்க்கையோடு ஒட்டியதாகத்தான் இருந்தது. ஆனாலும் விஷயமானது உணர்ச்சிமயமாய் பாவ உருவம் எடுத்து வரும்பொழுது அவற்றின் தோற்றமும், நடையும், பார்வையும் எல்லாம் எங்கிருந்தோ வந்தவைபோல இருந்தன. உணர்ச்சி பாவங்களே தனித்தனி வடிவெடுத்து கம்பீரத்தோடு நடந்துவரு வதைப் பார்த்தால், வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை இதய பாவமே துள்ளி நடனமாடுவது போல்தான் இருந்தது. உண்மையை உணர்ச்சிமயமாய்ப் பார்த்து அனுபவிக்கும் கவிஞரை ஒதுக்கிவைத்துவிட்டு, கவிஞரின் அனுபவத்தையும் ஆனந்தத்தை யும் பாஷையே எடுத்துச் சொல்வதுபோல் தோன்றியது. அதிலும் கம்பர் கவிகள் தனித்த நாதத்தோடு பேசுவது காதில் விழுந்தது. தனித்த கதியோடு நடக்கிறதும் கண்ணில் பட்டது.

உணர்ச்சிகள் ஆயிரம் ஆயிரம். ஒவ்வொரு உணர்ச்சியிலும் ஆயிரம் ஆயிரம் படலங்கள். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உயிர். தனித்தனி மணம், தனித்தனி நடை, உடை, பாவனை. தனித்தனி உருவங்கள். இப்படியாக ஆயிரம் ஆயிரம் வர்ண ஒளிகளில் கம்பருடைய சிருஷ்டிகள் ஜொலித்தன.

கவிகளையும் தமிழையும் டி. கே. சி. அனுபவிக்க அனுபவிக்க அவருடைய மனம், உணர்ச்சிமயமாய்ப் பொங்கி வாழ்க்கையில் ஒரு புதுமை பூத்தது. ஒரு புதிய பிறவியே எடுத்துவிட்டது.

''தமிழ்ப் பாடல் என்ருல், அதில் விஷயம் மாத்திரம் அல்ல, உணர்ச்சி மாத்திரம் அல்ல, அதில் ஒரு சிருஷ்டி தத்துவமே இருக்கிறது. சங்கீதம், நடனம், தாளம் இவைகளைக்கொண்டு உண்மைக்குப் புதிய புதிய அவதாரங்களைக் கொடுக்கிறது தமிழ்.'' இது எப்படியோ பிடிபட்டுவிட்டது டி. கே. சிக்கு.

''உண்மை அனுபவம் ஒவ்வொன்றும் புதிய புதிய கோலத் தில் பிறப்பெடுத்து வரும்பொழுது, நாடகமயமாய் வருகிறது.

பாத்திரம், கட்டம், பேச்சு, இப்படி வகுத்து வைத்துக்கொண்டு வருகிறது. ஆகவே தமிழ் என்றால் நாடகமயம், இசைமயம், அபிநயமயம், கவிமயம்.''

''உலகில் வேறு எங்குமே இல்லாத உன்னதமான இசையும், தாளமும், நாடகமும் தமிழில் இருக்கின்றன. அவைதான் தமிழ்ப்பண்பு. அந்தத் தமிழ்ப்பண்புதான் உணர்ச்சி பாவத்திற்குக் கவி உருவம் கொடுக்கிறது'' என்பது டி. கே. சிக்கு விளங்கிவிட்டது.

தமிழ், கவி, கலை, பண்பாடு இவைகளிடம் தீராத காதல் உண்டாகிவிட்டது டி. கே. சிக்கு, பக்தியே உண்டாகிவிட்டது டி. கே. சிக்கு.

உண்மையான காதல் வெறியோடும், பக்தி வெறியோடும் தமிழை அனுபவித்து வந்தார் டி. கே. சி. வேறு ஞாபகமே இல்லை என்று சொல்லும்படி தமிழ்ப் பாடல்களை அனுபவித்து ஆனந்தத்தில் திளைத்தார் டி. கே. சி.

வெறும் விஷயம், கற்பனை, வார்த்தை இவற்றை மட்டும் அல்ல, இவற்றின் பின்னால் உள்ள பேருண்மையையே பாடல்களில் பார்த்தார். அது, தமிழ்ப் பாடல்களில் நிறைந்து நிற்பதைப் பார்த்தார் டி. கே. சி.

உண்மையோடு கவியைப் பார்த்து அனுபவித்ததால் அந்தப் பாடல்கள் சிலவற்றில் விழுந்துகிடந்த பிழைகள் டி. கே. சிக்கு தெரிந்தன. டி. கே. சிக்கு மட்டுமே தெரிந்தன. வேறு யாருக்கும் இந்த உண்மை—கவியிலும் பிழை விழுந்துகிடப்பது உண்டு என்னும் உண்மை தெரிந்தது இல்லை. ஒன்றிரண்டு பேர்களுக்கு அரைகுறையாகத் தெரிந்திருந்தாலும் பாடலில் பிழை விழுந்து கிடக்கிறது என்பதை ஒருவரும் தைரியமாகச் சொல்லவில்லை; சொல்ல வேண்டும் என்னும் நினைப்பே அவர்களுக்கு வரவில்லை.

டி. கே. சிக்குப் பாடல்களில் விழுந்துகிடக்கும் பிழைகள் தெரிந்தன. இவை பிழைகள் என்று தைரியமாக எடுத்துச் சொன்னார். அதுமட்டும் அல்ல, அந்தப் பிழைகளைக் களைந்து எறிந்தார். ரணத்தை வெட்டி எறிவதுபோல் வெட்டி எறிந்தார். எறிந்ததோடு நின்றாரா? நயமான, உண்மையான திருத்தங்களை வழங்கினார்.

டி. கே. சியின் இந்தச் செயல் அருள்மயமான செயல், வீரமான செயல். உதாரணத்திற்கு ஒன்று பார்ப்போம்:

டி. கே. சிதம்பரநாத முதலியார்

கல்வியின் பெருமையைச் சொல்லவந்த குறளாசிரியர், ''உண்மையான நூல்கள் படித்தவன்தான் மனிதன். படியாதவன் மிருகந்தான்'' என்று அடித்துச் சொல்கிற கட்டம். பாட்டு எப்படி இருக்கிறது.

''விலங்கொடு மக்கள்
அனையர்;—இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை
யவர்.''

இந்தப் பாடலை விவரம் இல்லாமல் மென்று குதப்பித் தீர்த்தது தமிழ் உலகம். கல்லோ, மணலோ, ஆணியோ, பீங்கான் துண்டுகளைக்கூடச் சேர்த்து விழுங்குகிற கூட்டமாகப் போய்விட்டது தமிழ் உலகம். மென்று அரைத்து ருசித்து ரசித்துச் சாப்பிட்டால் அல்லவா? கல்லும் மணலும் பல்லைப் படுத்துகிற பாடு தெரியும்.

டி. கே. சி. பாடலை, விஷயத்தை, உணர்ச்சியை, ஓசை உருவத்தை ஒவ்வொன்றையும் ரசித்து ரசித்துப் பார்க்கிறவர். தாளத்தில் வைத்து ஒவ்வொரு சொல்லையும், ஒவ்வொரு அசையையும் அனுபவித்து அனுபவித்துப் பார்க்கிறவர். அதனால் பாடலில் பிழை விழுந்துகிடப்பது தெரிந்தது. அப்பளத்தோடு மணலை அல்லவா யாரோ தூவிவிட்டார்கள் என்பது தெரிந்தது. கற்றவர்கள் விலங்குக்கு நேர் என்றல்லவா அமைந்து கிடக்கிறது பாடல்! இது பிழை. திருவள்ளுவர் செய்த பிழை அல்ல. திருவள்ளுவர் பாடலை மாறி மாறி ஏட்டில் எடுத்து எழுதியவர்களின் கவனக்குறைவால் நேர்ந்த பிழை. திருவள்ளுவர், படியாத மூடங்களைத்தான் விலங்கோடு ஒப்பிட்டுச் சொல்வார். படித்தவர்களை விலங்குகளோடு ஒப்பிட்டு ஒருக்காலும் சொல்ல மாட்டார். அப்படியானால் வள்ளுவர் பாட்டை எப்படிச் சொல்லி இருப்பார்?

''விலங்கொடு மக்கள்
அனையர்;—இலங்குநூல்
கல்லாரோ(டு) ஏனை
யவர்''

என்றுதான் சொல்லி இருக்கவேண்டும்.

இப்படியாக தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும்—எத்தனையோ ஆயிரக்கணக்கான பாடல்களில் விழுந்த பிழைகளை நீக்கி—உண்மையான பாடங்களைக் கொடுத்துக் காப்பாற்றினார் டி. கே. சி.

இந்த மாபெரும் உதவியை டி. கே. சி. செய்யாவிட்டால், பொருளற்றவை—பொருத்தம் அற்றவை என்று ஆயிரக் கணக்கான பாடல்கள் தமிழைவிட்டு காலாவதி ஆகி இருக்கும். காலாவதி ஆகாமல் தப்பும் தவறுமாய் சண்டித்தனம் பண்ணிக் கொண்டு கிடந்தாலோ தமிழ்மொழியே திக்குமுக்காடித் தவித்துக் கொண்டிருக்கும்.

''என்னது தமிழ்? உப்பு உறைப்பில்லாமல், உணர்ச்சியே இல்லாமல், உண்மைக்கு விரோதமாக வார்த்தையை வைத்து அடுக்கி வைத்திருக்கிற காரியமாகத்தானே இருக்கிறது பாடல்கள். ஒன்றுகூட உருப்படியாக இல்லையே'' என்றுதான் கையை நெறித்திருப்பார்கள் தமிழ் மக்கள்.

அப்படியானால் தமிழ் உயிர் இல்லாத தமிழாகத்தானே போயிருக்கும்? தமிழைக் காப்பாற்றிய பெருமை டி. கே. சியைச் சேரும்.

பிழைகள் எல்லாம் ஏட்டில் எடுத்து எழுதியவர்களால் நேர்ந் தவைதான். கவிஞர்கள் யாரும் தப்பாக எழுதவில்லை. இப்படி விழுந்த பிழைகளை—அதுவும் கவியில் விழுந்த பிழைகளைக் கண்டு —இவை பிழைதான் என்று துணிந்து, அவற்றை நீக்கி உண்மை யான பாடத்தைக் கொடுப்பது என்பது சாதாரண காரியம் இல்லை. யாரும் செய்யாத காரியம். இப்படி ஒரு மாபெரும் செயலைச் செய்வதற்கு வெறும் துணிச்சல் இருந்தால் மட்டும் போதாது, உண்மையான ஞானம் இருக்கவேண்டும். தெய் வத் தன்மை வாய்ந்த புனிதமான ஞானமாக இருக்கவேண்டும். உண்மையான கவிஞனாகவே—மகா கவிஞனாக இருக்கவேண்டும்.

ஆம், உண்மைதான். டி. கே. சி. ஒரு கவிஞர். பிறவிக் கவிஞர் என்றே சொல்லவேண்டும். அப்படி அற்புதமான பாடல் கள் பல பாடி இருக்கிறார். அவர் கவிபாடும் போக்கிலேயே போயிருந்தால் பெரிய பெரிய காவியங்களை இயற்றி இருப்பார். மகா கவிஞன் என்னும் பட்டம் பெற்றிருப்பார்; நோபல் பரிசே பெற்றிருப்பார்.

ஆனால் டி. கே. சி. கவிபாடுவதையே—கவிஞன் என்று பெயர் வாங்குவதையே தியாகம் செய்துவிட்டார். கம்பர்-மாணிக்க வாசகர்-திருவள்ளுவர் போன்றவர்களின் பாடல்களை அனுபவிக்க அனுபவிக்க கவிபாடும் காரியத்தை விட்டுவிட்டார். அப்படி விட்டதற்குக் காரணம் கம்பர் போன்ற தெய்வமாக் கவிகளின் பாடல்கள்போல் தம் பாடல் இல்லை என்கிறது மட்டும் இல்லை.

''அதைப்பற்றியும் இதைப்பற்றியும் நாம் பாடல்கள் பாடிக்கொண்டிருந்தால் நமது புத்தி கவி எழுதுவதிலேயே போய்க்கொண்டிருக்கும். அப்படிப் போய்விட்டால், தெய்வீக மான தமிழ்ப் பாடல்களில் விழுந்துகிடக்கும் பிழைகளை யார் நீக்குவார்கள்? உண்மையான பாடங்களை யார் கொடுப்பார் கள்? பிறகு அக்கவிகளை அனுபவித்து அந்த ஆனந்தத்தை மக்க ளுக்கு யார் எடுத்து வழங்குவார்கள்? உண்மையான பாடல்களை மூடி மறைத்துப் போலியான பாடல்கள் செருகு கவியாய்க் கிடக் கின்றனவே? இவற்றை அப்புறப்படுத்துவது யார்? காடாக மண்டிக் கிடக்கும் களைகளை, வெட்டி எறிந்து உண்மைக் கவி என் னும் கற்பகவிருட்சங்களைப் பூத்துக் காய்த்துப் பழம் பழுக்க வைக்க வேண்டுமே! அதை யார் செய்வது?''

''இவற்றை எல்லாம் நாம் செய்யவேண்டும். செய்தே ஆகவேண்டும். அப்படி ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானல் கவிபாடுகிற காரியத்தை மூட்டை கட்டி வைத்து விட வேண்டியதுதான்'' என்று தீர்மானித்தார் டி. கே. சி.

தீர்மானித்தபடியே செயல்பட்டார். பெரிய தியாகத் தையே செய்தார். உயிரைக் கொடுத்துக் காப்பாற்றுவது என்று சொல்வார்களே அதுதான் அவர் செய்த காரியம். மகாகவிஞன் என்னும் உன்னதநிலையை—தேடிவந்த உன்னதநிலையை—தூக்கி எறிந்துவிட்டு, பழந்தமிழ்ப் பாடல்களுக்கு உயிர் கொடுக்க, பிழை திருத்தினர் என்ருல்—எது எது செருகுகவி என்று பார்த்துக் களைந்தார் என்ருல்—உண்மையான கவிகளை மக்களுக்கு எடுத்துச்சொல்லி அனுபவிக்க வைத்து சத்திய தரிசனத்தில் திளைக்க வைத்தார் என்ருல்—அதை வேறு என்னவென்று சொல் வது? தன்னையே தியாகம்பண்ணி தமிழைக் காத்த வள்ளல் என்றுதான் டி. கே. சியைச் சொல்லவேண்டும். இந்த மாபெரும் தியாகத்தைச் செய்வதற்குத் துணிச்சல் எவ்வளவோ வேண்டும், ஊக்கம் எவ்வளவோ வேண்டும். அவ்வளவும் நிறைந்திருந்தது டி. கே. சியிடம். அதுமட்டும் அல்ல, அன் பும் கருணையும் எளிமையும் அருமையும் மனதில் பொங்கவேண்டும். அப்படிப் பொங்குகிறவன் மனதில்தான் தியாக உணர்வு முளைக் கும். டி. கே. சியிடம் மேலே சொல்லிய பண்புகள் பொங்கித் ததும்பின.

தயாளமும் வீரமும் ஒரளவுக்கு இயல்பாக இருந்திருக்கலாம். ஒரு சிறிய வித்தின் அளவே-கண்ணுக்குத் தெரியாத அணுவளவே இருந்திருக்கலாம். ஆனல் அந்த வித்து தாஞக முளைத்து மரம்

ஆகிவிட முடியாது. எங்கோ ஓரிடத்தில்-அடிமனத்தின் ஒரு மூலையில் கடுகளவு இருந்த வீரமும் தயாளமும் விஸ்வரூபம் எடுத்து தமிழையே அணைத்துக் காப்பாற்ற முடிகிறது என்றால் அது முளைக்க மண்வேண்டும். உரம்வேண்டும். காற்று, வெளிச்சம், நீர் எல்லாம் வேண்டும்.

டி. கே. சியின் தியாகத்தையும் சத்திய வேட்கையையும் தமிழ் வளர்த்துவிட்டது. தமிழ்ப் பாடல்கள் முளைக்கவைத்து வளர்த்தன. மக்களையும் வாழ்க்கையையும் மதித்து அனுபவிக்கும் டி. கே. சியின் பண்பாடு தமிழ்ப் பாடல்களில் ஒன்றித் திளைக்க உரம் கொடுத்தது. ஆங்கில இலக்கியத்தின் அனுபவமும், விஞ்ஞானப் புலமையும் சேர்ந்து காற்றும் வெளிச்சமுமாய் உதவின. டி. கே. சியின் தெய்வபக்தி நீர்விட்டு வளர்ந்தது.

மொத்தத்தில் டி. கே. சியின் அன்பையும், பொறுமையையும், பக்தியையும், சீலம் மிக்க பண்பாட்டையும், உடல் பொருள் ஆவி அவ்வளவையும் தத்தம் பண்ணுகிற தியாகத்தையும் டி. கே. சியிடம் வளர்த்தது தமிழ்தான். தமிழ்ப் பாடல்கள்தான்.

தமிழ்ப் பாடல்களை அனுபவிக்க அனுபவிக்க அவர் தன்னையே பார்த்தார். தன்னைச் சுற்றி உள்ள ஒவ்வொன்றையும் பார்த்தார். அவர் உள்ளத்தில் அன்பு சுரந்தது. வள்ளன்மை பெருகியது. ஜாதி, மத, இன வேறுபாடு அணுவளவுகூட அவரிடம் இல்லாமல் மனதைத் துப்புரவாகப் பளிங்குபோல் வைத்துவிட்டது தமிழ்.

9. அருளாளர் டி. கே. சி.

ஒரு சமயம் என்னுடைய வாத்தியார் என்னைப் பார்க்க வந்திருந்தார். தஞ்சாவூரிலிருந்து வந்திருந்தார் ஆசிரியர். அவரைக் குற்றாலத்திற்கு அழைத்துப் போனேன். டி. கே. சிக்கு அறிமுகம் செய்துவைத்தேன்.

பல வருடம் ஒன்றாய்ப் பழகி-உறவாடிய நண்பனை உபசரிப்பது போல் என் ஆசிரியரை வரவேற்றார்கள். உபசரித்தார்கள். தன்னிடம் வரும் புகழ்பெற்ற பெரியவர்களிடம் எல்லாம் என் ஆசிரியரை அறிமுகப்படுத்தினார்கள். பல பாடல்களைச் சொல்லி விளக்கிக் காட்டினார்கள்.

ஒரு வாரம் ஆசிரியரைத் தன்னோடு தங்கி, தமிழை அனுபவிக்கும்படி செய்தார்கள். என்னையும் துணைக்குத் தங்கும்படி சொல்லிவிட்டார்கள்.

நல்ல சாரல் நேரம் அது. ஆசிரியர் நன்றாய் அருவியில் நீராடினார். பெரிய பெரிய மனிதர்களோடு சேர்ந்திருந்து பாடல்களை அனுபவித்தார். வாழ்நாளில் எங்கும் கேட்டறியாத உண்மையானது பல பல சாயல்களில் பாடல்களாக உருவெடுத்து வருவதை அனுபவித்தார். வேளாவேளைக்கு அருமையான சாப்பாடு. வேற்றுமை இல்லாத உறவு. அன்பான உபசரிப்பு. இவ்வளவுக்கும் மேல் பெரிய பெரிய செல்வந்தர், பண்ணையார், அரசியல் தலைவர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அதிகாரிகள், பத்திரிகை ஆசிரியர் இவர்களிடம் புகழ்ந்து பாராட்டும் புகழ்.

''கவியை நேருக்கு நேராக அனுபவிக்கிறீர்கள். இப்படி அனுபவித்தால் அல்லவா உண்மை துலங்கும். உண்மையான ஆசிரியர்தான் நீங்கள். படித்த படிப்போ, சொல்லிக் கொடுக்கும் பாடங்களோ உங்கள் மூளையைக் கலக்கவில்லை. அந்த வகையில் யோகம் செய்தவர் நீங்கள். தமிழ் பாஷை யோகம் செய்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் இப்படித் தமிழை அனுபவிக்க முடியுமா?'' என்று பாராட்டினார்கள்.

பார்த்துவிட்டுத் திரும்புவோம் என்று போனவர்களை இப்படி ஒரு வாரம் வீட்டில் வைத்து உபசரித்து, உயர்ந்த தத்துவங்களை

இனிமையாக எடுத்துச்சொல்லி ஆனந்தப்படுத்தி, மனங்குளிரப் பாராட்டுகிறவர்கள் உலகில் உண்டா? டி. கே. சி. ஒருவர்தான் உண்டு.

அதுமட்டுமா? ஆசிரியர் ஒருவாரம் இருந்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டார். டி. கே. சியை விட்டுப்போக மனம் இல்லை ஆசிரியருக்கு. டி. கே. சிக்கும் விடுவதற்கு மனம் இல்லை தான். ஆனலும் ஆசிரியர் பணிபுரியும் கல்லூரி இரண்டு நாளில் திறப்பதாக இருந்தது. அதனல் பிரியா விடைபெற்றுப் புறப் பட்டார் என் ஆசிரியர்.

அவருக்கு விடைகொடுத்து அனுப்பும்போது டி. கே. சி. ஆசிரியரைப் பலபடப் புகழ்ந்து பாராட்டினர்கள். பாராட்டிக் கொண்டே தம் காரியதரிசியை ஒரு பார்வை பார்த்தார். கண்ணை மூடி விழிப்பதற்குள் ஒரு தாம்பாளத் தட்டோடு வந் தார் காரியதரிசி. அதில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், வேஷ்டி, அங்கவஸ்திரம், இவ்வளவுக்கும் மேலே ஒரு கவர், அதில் ஐம்பது ரூபாய்.

தாம்பாளத்தட்டை டி. கே. சி. கையில் கொடுத்தார் காரிய தரிசி. டி. கே. சியோ ஆசிரியரை வாழ்த்தி தாம்பாளத்தட்டை அவர் கையில் கொடுத்தார்கள். ஆசிரியர் மனம் கனிந்து உருகி விட்டார். கூட இருந்தவர்களும் உருகிப்போனர்கள்.

''பணம் என்னத்திற்கு . . .'' என்று இழுத்தார் ஆசிரி யர். ''இருக்கட்டும். சும்மா இருக்கட்டும். தமிழ்க் கவியை நீங்கள் அனுபவிக்கிறபொழுது உங்கள் இதயத்தையே என் கையில் கொடுத்துவிடுகிறீர்களே! இந்தப் பணம் அதற்கு எந்த வகை யில் ஈடாகும்?''

''நான் ஒரு ஜமீன்தாராக இருந்தால், தமிழை நீங்கள் அனுபவிக்கிற நயத்திற்கு ஒரு கிராமத்தையே உங்களுக்கு எழுதிக் கொடுத்திருப்பேன். என்னைக் கடவுள் அப்படிப் படைக்க வில்லையே'' என்று ஏங்கினர்கள்.

இப்படி எல்லாம் டி. கே. சியைக் குழைத்துப் பிசைந்து, அருள்க் கனியாகப் பழுத்துத் தேன் கசிய வைத்துவிட்டது தமிழ்.

டி. கே. சிக்கு ஒரு தமக்கையார். பத்து ஆண்டுகளுக்கு இடையில் ஆறுவது குழந்தையாகப் பிறந்தவர். டி. கே. சியின் அன்னை மீனம்மாள் அண்ணி. அதேபோல் டி. கே. சியின் தமக்கையார் கோதை அண்ணியும் ஒரு தமையனுக்கும் ஒரு தம்பிக்கும் இடையில் பிறந்தவர்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

டி. கே. சியின் தாய் மாமனுர் பத்துப்பேரில் எல்லோருக்கும் மூத்த அம்மானுக்கு இரண்டு புதல்வர். அவர்களில் இளையவருக்கு கோதை அண்ணியைத் திருமணம் செய்து கொடுத்திருந்தது.

கோதை அண்ணியின் கணவர் பெயர் குற்ருலலிங்க முதலியார். அவரும் அவருடைய தமையனுரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தார்கள். தமையனுர் தடபுடலான செலவாளி. டாம்பீகமான பேர்வழி. ஆடம்பரமும் அட்டகாசமும் நிறைந்த வாழ்க்கை நடத்தினுர். அதனுல் பூர்வீக சொத்து முழுவதும் காலி ஆகிவிட்டது. அண்ணன் போகிற போக்கைப் பார்த்து ''உன்னுடைய பாகத்தைப் பிரித்து ஒதுங்கிக்கொள், இல்லாவிட்டால் எல்லாம் திவாலாகிவிடும். நீ குடும்பத்தோடு தெருவில் நிற்கவேண்டியதுதான்'' என்று பலபேர் தம்பி குற்ருலலிங்கத்திடம் சொன்னுர்கள். அதற்கு இடம் கொடுக்கவில்லை தம்பி. ''என் அண்ணன் என்ன செய்தாலும் சரி. நான் பங்கு கேட்டு பிரிந்து நின்று வாழமாட்டேன். கடைசியாக ஒரு திருவோடு மிஞ்சினுல் போதும். சொத்துப் பெரிதல்ல, அண்ணன்தான் எனக்கு வேண்டும்'' என்று சொல்லிவிட்டார் தம்பி குற்ருலலிங்கம்-கோதை அண்ணியின் கணவர்.

வேண்டியவர்கள் எதிர்பார்த்தபடியே நடந்துவிட்டது. சொத்து முழுவதும் போய்விட்டது. ஆனுல் அந்தக் குடும்பத்தை —தமக்கையின் குடும்பத்தை, அநாதையாய் விட்டுவிடவில்லை டி. கே. சி. தன்னுடைய நன்செய் நிலத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தார். ஒரு வீட்டையும் கொடுத்தார்.

தமக்கையின் புதல்வர் இருவரையும் வண்ணுர்பேட்டைக்கு அழைத்துப்போய் தன் வீட்டில் வைத்துக்கொண்டார். தன்னுடைய மகனேடு அவர்களும் சேர்ந்து படித்தார்கள். நல்ல படியாக முன்னேறினுர்கள்.

தமக்கையின் புதல்வர் இருவரில் மூத்தவர், பி.ஏ. வரை படித்து முடித்தார். இளையவர் பி.ஏ., எல்.டி. வரை படித்து ஆசிரியர்—தலைமை ஆசிரியராகப் பணியாற்றினுர். இருவரும் இன்று பெரும் குடும்பத்தாராய் வளமாய் வாழ்கிருர்கள்.

டி. கே. சிக்கு ஒரே மகன்தான். மகனுக்குத் தீத்தாரப்பன் என்று பெயர். தீத்தாரப்பன் பள்ளியில் நல்ல முறையில் படித்தார். பி.ஏ. வரை படித்தார். தமிழ், ஆங்கிலம், இசை, இலக்கியம் எல்லாவற்றிலும் டி. கே. சி. போலவே ஞானம் பெற்ருர்.

அருளாளர் டி. கே. சி.

வண்ணார்பேட்டையில் தன் வீட்டில் தன் மகனோடு, தமக்கையின் புதல்வர் இருவர், மைத்துனன்மார் மூவர், இவ்வளவு பேரும் தங்கி இருந்து கல்வி பயில உதவினார் டி. கே. சி.

சொந்தக்காரர் மட்டும் அல்ல, வேண்டியவர், நண்பர்கள், இலக்கிய அன்பர்கள் பலரும் நாள்தோறும் டி. கே. சி. வீட்டில் கூடுவார்கள். இலக்கியம், கலைபற்றி டி. கே. சியின் பொன்னுரை கேட்டு மகிழ்வார்கள். சொந்த வீட்டில் உண்டு மகிழ்வது போல் உண்டு மகிழ்வார்கள்.

டி. கே. சியின் குடும்பம் சிறிது (மனைவி, மகன், டி. கே. சி. ஆக மூவர்தானே குடும்பம்) தான். ஆனாலும் மைத்துனன்மார், தமக்கையின் புதல்வர் இப்படிப் பலர் இருந்து படித்ததால் டி. கே. சியின் இல்லம் திருமண இல்லம்போல் கலகலப்பாக இருந்தது. கலைமகளும், திருமகளும் களிநடம்புரியும் கொலுமண்டபமாகவே இருந்தது.

எவ்வளவுதான் சொந்தக்காரராக இருந்தாலும் ஒரு நாளைக்கு மேல் மறுநாள் தங்கி இருப்பவர்களிடம் புளித்துப் போய்விடுகிறது உலகம். ஆனால், பல வருடங்கள், உறவினர் வீட்டுக் குழந்தைகள் பலரைத் தன்னோடுவைத்து—தன் குழந்தையை உபசரிப்பதுபோல் உபசரித்து, கல்வி பயில உதவினார் என்றால் அது எவ்வளவு பெரிய காரியம்.

செயற்கரிய காரியம் பலவற்றைச் செய்தவர் டி. கே. சி. தமிழும் தமிழ்ப் பண்பாடும் அப்படிச் செய்யும்படி டி. கே. சியைத் தூண்டிக்கொண்டிருந்தன. ஏன்? தன்னுடைய ஆற்றலை, தன்னிடம் உள்ள தெய்வநலத்தை உலகிற்கே எடுத்துக்காட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டது தமிழ்.

டி. கே. சிக்கு பத்து வயது இருக்கும்பொழுதே டி. கே. சியின் தந்தையார் காலமாகிவிட்டார். தாயாரும் நீண்டநாள் இருக்கவில்லை. டி. கே. சியின் வாலிபப் பருவத்திலேயே இறந்து போனார். தமையனார் பராமரிப்பில்தான் வாழ்ந்தார் டி. கே. சி.

அந்தச் சகோதரர் குற்றாலலிங்க முதலியாரும் 1916-ல் அதாவது டி. கே. சியின் முப்பத்து ஐந்தாவது வயதில் காலமாகிவிட்டார். குடும்பப் பொறுப்பு முழுவதையும் டி. கே. சியே தாங்கவேண்டி வந்தது.

தந்தை, தாய், தமையன் அவ்வளவுபேரையும் இழந்துவிட்டால் ஒரு தவிப்பு ஏற்படத்தானே செய்யும்? ஆதரவற்ற அனாதைபோன்ற ஒரு தத்தளிப்பு உண்டாகத்தான் செய்யும்.

இந்த நிலைமையில் டி. கே. சிக்கு ஆதரவுகொடுத்து ஆசீர் வதிக்க ஒரு அன்பு விக்ரகம் வேண்டி இருக்கிறது. குடும்பத்தைச் சேர்ந்த, வயதில் மூத்த ஒருவருடைய அருள் பார்வைக்காக ஏங்குவது மனித இயல்பு. டி. கே. சிக்கு அப்படி ஒரு ஆறுதல் கொடுத்து அரவணைத்தது தமக்கையாரின் பரிவும் பாசமும்.

அடிக்கடி டி. கே. சி. தம் தமக்கையாரைத் தேடி அவர் இல்லத்திற்குப் போவார்கள். மிக்க பிரியத்தோடு பேசிக்கொண் டிருப்பார்கள். தான் பெற்ற சிறப்பு, பாராட்டு, தான் பேசிய கூட்டங்கள், பேச்சைக் கேட்டவர்களின் அனுபவம், தன்னுடைய நண்பர்கள் எல்லாவற்றையும் தமக்கையாரிடம் சொல்லிச் சொல்லி ஆனந்தம் அடைவார் டி. கே. சி.

1926-ஆம் வருடம் தம்முடைய தமக்கையாரையும், அவரு டைய குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு தமிழ்நாடு முழு வதையும் சுற்றிக் காண்பித்தார் டி. கே. சி. அது ஒரு பெரிய தலயாத்திரையாகவும், தீர்த்த யாத்திரையாகவும், வழிபாட்டு யாத்திரையாகவும் அமைந்தது. சரித்திரப் பிரசித்திபெற்ற ஒவ்வொரு இடத்தையும் சுற்றிக் காண்பித்து, அங்குள்ள வரலாறு, கலைநலம், ஓவிய நலம், விசேஷம் எல்லாவற்றையும் விளக்கிக் காட்டினார் டி. கே. சி.

டி. கே. சியின் துணைவியார் பிச்சம்மாள் அண்ணி. பிச்சம் மாள் அண்ணியின் தாய்மாமனார் ஸ்ரீவில்லிபுத்தூர் பக்கம் இருக் கிற குன்னூரில் இருந்தார். அன்னாருடைய மனையாள் பிரசவத் திற்காக திருநெல்வேலி வண்ணார்பேட்டை மருத்துவ மனையில் சேர்ந்தார். டி. கே. சி. வீட்டில் அந்த அம்மாளின் கணவருடன் ஐந்து வயது மகளும் தங்கி இருந்தார்கள். பிரசவத்தில் அந்த அம்மாள் காலமாகிவிட்டார். விசேஷம் எல்லாம் முடிந்து குன்னூர் முதலியார் ஐந்து வயது மகளுடன் ஊருக்குப் புறப் பட்டார். டி. கே. சியின் மனம் உருகிவிட்டது. மனையாளை இழந்த இவர் எப்படி இந்தப் பெண் குழந்தையை வைத்துப் பராமரிக்கப் போகிறார் என்று மனம் இளகிவிட்டது. உடனே குன்னூர் முதலியாரிடம் சொல்லி, அந்தப் பெண் குழந்தையை தானே வளர்த்துக் கவனிப்பதாக ஏற்றுக்கொண்டார்.

அந்தப் பெண் டி. கே. சியின் மகளாக வளர்ந்தாள். தன் னுடைய மைத்துனருக்கே அந்தப் பெண்ணை, சீரும் சிறப்பும் செய்து திருமணம் பண்ணிக்கொடுத்தார். அதுமட்டும் அல்ல, சொந்த மகளுக்குச் செய்வதுபோல நன்செய்நிலம் வாங்கிக் கொடுத்தார். வீடு வாங்கிக் கொடுத்தார். நகையும் பாத்தி

ரங்களும் வாங்கிக் கொடுத்தார். செய்யவேண்டிய கட்டுகளை எல்லாம் ஒன்றுவிடாமல் சீரும் சிறப்புமாகத் தொடர்ந்து செய்து வாழ்க்கைக்கு விளக்கு ஏற்றி வைத்தார்.

வண்ணுர்பேட்டையில் டி. கே. சி. இருந்த வீட்டுப் பக்கத்தில் ஒரு வீடு. அதில் ஒரு முதலியார் குடி இருந்தார். அவருடைய பெண் டி. கே. சியின் இந்த வளர்ப்புப் பெண்ணோடு வந்து பேசிக்கொண்டிருப்பாள். அடிக்கடி டி. கே. சி. வீட்டில் இந்தப் பெண்ணைப் பார்க்கலாம். ஒருநாள் டி. கே. சி. வீட்டில் வைத்தே, வளர்ப்புப் பெண் ஜானகியோடு பேசிக்கொண்டிருக்கும் பொழுதே பெரிய மனுசி ஆகிவிட்டாள் அந்த அடுத்த வீட்டுப் பெண்.

விஷயம் தெரிந்தவுடன் டி. கே. சியும் துணைவியார் பிச்சம் மாள் அண்ணியும் தாயும் தந்தையுமாக இருந்து அந்தப் பெண் ணுக்குச் சடங்கு விழாவை நடத்திஞர்கள். தங்கள் வீட்டில் வைத்து தங்கள் செலவிலேயே விழாவை நடத்திஞர்கள். தங்கள் சொந்தப் பெண்ணுக்கு நடத்துவதுபோலவே நடத்திஞர்கள்.

டி. கே. சியின் வீட்டின் எதிர்ப்புறத்தில் இரண்டு வீடு தள்ளி வக்கீல் குமஸ்தா ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி டி. கே. சி. வீட்டுக்கு வருவார். உதவி பெறுவார். ஒருநாள் அவரு டைய தம்பி பள்ளிக்கூடத் தேர்வு எழுதவேண்டிய நாள். பவுண்டன் பேஞ இல்லை. பேஞ இல்லையே என்று வருந்திஞன். விவரம் தெரிந்த டி. கே. சி. அந்தப் பையனை வரவழைத்தார். தன்னிடம் இருந்த விலை உயர்ந்த பார்க்கர் பேஞவைக் கொடுத் தார். எத்தனை நாள் வேண்டுமாஞலும் பயன்படுத்திக் கொள். தேர்வு முழுவதும் எழுதிவிட்டுக் கொடுத்தால் போதும் என்று கொடுத்துவிட்டார். பையனுக்குத் தலைகால் கொள்ளவில்லை. சக மாணவர் ஒருவரிடமும் பார்க்கர் பேஞ கிடையாது. தன் னிடந்தான் அது இருக்கிறது என்ற மகிழ்ச்சியில் போஞன்.

தேர்வு எழுதிவிட்டு வீட்டுக்கு வந்தான். வரும் வழியில் பார்க்கர் பேஞ தொலைந்துவிட்டது. ஆசையில் இடிவிழுந்தது போல் ஆகிவிட்டது. வெட்கம், பயம், கவலை எல்லாம் சேர்ந்து பையனை வாட்டியது. வீட்டில் வந்து மயங்கி மூலையில் உட் கார்ந்துவிட்டான்.

விவரம் டி. கே. சிக்குத் தெரிந்தது. பையனிடம் மளமள வென்று வந்தார்கள். ''என்னப்பா! பேஞ தொலைந்துவிட் டதா? பிறகு என்னத்திற்கு இருக்கிறது பேஞ? தொலைப்பதற் குத்தானே இருக்கிறது! சரி, போனது போகட்டும். நாளைத்

தேர்வுக்கு இதை வைத்து எழுது'' என்று இன்னெரு பார்க்கர் பேனுவைக் கொடுத்தார்கள்.

எந்தப் புத்தகத்தை விலைகொடுத்து வாங்கினுலும் அந்தப் புத்தகத்தில் நான்கு அல்லது ஐந்து பிரதிகள் வாங்குவார்கள் டி. கே. சி.

புத்தகத்தை வாசித்து முடித்தவுடன் அந்தப் புத்தகத்தில் உள்ள நயங்களை நண்பர்களிடம் எடுத்துச் சொல்வார்கள். கேட்டு அனுபவிக்கும் அன்பர்கள் ''அப்படியா! அப்படியா!'' என்று ஆனந்தத்தில் திளைப்பார்கள். இந்தப் புத்தகம் எங்கு கிடைக்கும், இதுவரை நான் அதைப் பார்த்தது இல்லையே என்று சிலர் மறுகுவார்கள். அவர்களிடம் டி. கே. சி. தாம் வாங்கி வைத்திருக்கும் பிரதிகளில் இருந்து ஒவ்வொன்றை எடுத்துக் கொடுப்பார்கள். படித்துவிட்டுத் திருப்பிக் கொடுப்பவர்களும் உண்டு. அப்படிச் செய்யாதவர்களும் உண்டு. அதுபற்றி டி. கே. சிக்குக் கவலை இல்லை. நல்ல நூலை நாலுபேர் அனுபவிக்க வைத்துவிட்டோமே என்கிற எக்களிப்புத்தான் டி. கே. சிக்கு.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த நண்பர்களில் ஒருவர், டி. கே. சியிடம் ஒரு சமயம் சொன்னுர்: ''ஏன் இப்படிப் பணத்தைக் கரி ஆக்குகிறீர்கள்? விலைக்கு வாங்கி வாங்கி வந்தவர் போனவர் எல்லாம் புத்தகங்களைக் கொண்டுபோகச் சம்மதிக்கிறீர்கள்?'' என்று. அதற்கு டி. கே. சி. சொன்னுர்கள், "ஒருவருக்குச் சாப்பாடு கொடுத்துப் பசியை ஆற்றிவிடுவது எளிது. கல்யாணம் செய்துவைப்பது மிகமிக எளிது. ஆனுல் ஒருவரைப் படிக்க வைப்பது கஷ்டமான காரியம். அதை எளிதாகச் செய்துவிடுகிறேன் நான். பெரிய சாதனை அது. நம்மிடம் புத்தகம் இருக்கிறது. அதனுல் அதை எடுத்துக்கொண்டு போகிருர்கள். எடுத்துக்கொண்டு போனதால் படிக்கிருர்கள். அனுபவிக்க முடிகிறது அவர்களால். கடையில் மட்டும் புத்தகம் இருந்தால் இது நடைபெறுகிற காரியமா? படிக்க ஆள் கிடைத்துவிட்டால் வாங்கி வாங்கி நாம் கொடுக்க வேண்டியதுதானே? அதைவிட வேறு என்னத்திற்கு இருக்கிறது புத்தகம்!'' எப்படி இருக்கிறது டி. கே. சியின் இதயம்! இதுதான் டி. கே. சி.

வீட்டில் மைத்துனர்கள் மூவர், தமக்கையார் புதல்வர் இருவர் எல்லோரும் டி. கே. சியின் வீட்டில் இருந்து தீத்தாரப்பனேடு படித்துக்கொண்டிருந்தார்கள். அதே வண்ணுர்பேட்டையைச் சேர்ந்த ஒரு இளைஞர்—காந்திமதிநாதன் என்னும் இளைஞர். இவர்களின் பள்ளித் தோழராக இருந்தார். அதனுல் தோழர்களைப் பார்க்க டி. கே. சி. வீட்டுக்கு அடிக்கடி காந்திமதிநாதன் வருவார்.

காந்திமதிநாதன் டி. கே. சியின் அன்புக்குப் பாத்திரமாகி விட்டார். அபிமான புத்திரனுகிவிட்டார். தம் மகன், மைத்துனர், மருமக்கள்மார்களுக்குத் துணிமணி எடுப்பதோடு காந்திமதிநாதனுக்கும் எடுப்பார்கள். பேஞ, பென்சில், புத்தகம், நோட்டு எல்லாம் அப்படி அப்படியே. டிபன், சாப்பாடுகூட அநேகமாக டி. கே. சி. வீட்டில்தான்.

காந்திமதிநாதன், பி. ஏ. வரை படித்துத் தேறினர். சென்னையில் அரசுப் பணியில் சேர்ந்தார். சென்னையில் தங்கினர்.

டி. கே. சியும் எம்.எல்.சியாகி, அதன்பின் அறநிலையத்துறை அதிகாரி ஆகி சென்னையில் குடி இருந்தார்கள். அப்பொழுது அடிக்கடி காந்திமதிநாதனைப் பார்க்கப்போவார்கள். பேசிக் கொண்டிருப்பார்கள். அடிக்கடி வீட்டுக்கு வரவழைத்து உபசரிப்பார்கள்.

ஒரு சமயம் காந்திமதிநாதனுக்கு உடல்நலம் இல்லை. படுத்த படுக்கையாய் இருக்கிருர் என்று தெரிந்தது. பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாய்வதுபோல் காந்திமதிநாதனைத் தேடி ரசிகமணி போனர்கள். தம்முடைய காரில் தம் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள்.

சகல வசதிகளையும் தம் வீட்டில் செய்துகொடுத்து, டாக்டரை வரவழைத்து மருத்துவம் செய்யச் சொன்னர்கள். ஒரு தாதி நோயாளிக்கு எப்படிப் பணிவிடை செய்வாளோ அப்படிச் செய்தார்கள். படுக்கையை மாற்றுவது, உடம்பை நனைத்துத் துவட்டி எடுப்பது, சாதத்தை உருட்டி உருட்டிக் கையில் கொடுப்பது, தட்டைக் கழுவி வைப்பது, மேலுக்கும் முதுகுக்கும் பவுடர் போடுவது—இப்படி பணிவிடை செய்தார்கள்.

டி. கே. சிக்கு வயது அப்போது ஐம்பத்து ஐந்து. காந்திமதிநாதனுக்கு வயது இருபத்து இரண்டு. டி. கே. சியின் படிப்பும், உத்தியோகமும், அந்தஸ்தும் இமயமலைபோல ஓங்கி நின்றது. காந்திமதிநாதன் பார்த்த வேலை ஒரு ஆபீஸ் குமாஸ்தா வேலைதான். டி. கே. சிக்கும் காந்திமதிநாதனுக்கும் ஒட்டோ, உறவோ ஒன்றும் இல்லை. ஜாதி, இனம் எல்லாமே அவரும் இவரும் வேறு. ஆனல் அன்பு என்பது தெய்வ ஊற்றுக டி. கே. சியிடம் ஊறிக் கொண்டிருந்தது. சாதாரணமானவரையும் தாய்போல் ஆதரித்துப் பணிவிடை செய்ய அந்த அன்பு தூண்டியது.

1949-ஆம் வருடம், முன்பின் தெரியாத ஒரு ஆசாமி—இருபத்து ஐந்து வயதுள்ள ஒரு வாலிபர், டி. கே. சியிடம் வந்

தார். ஆசாமியின் நடை, உடை, பாவனை எல்லாம் அவர் ஒரு போக்கிரி என்பதைக் காட்டியது. அந்த வாலிபரையும் மரியாதையாக வரவேற்று உபசரித்தார்கள் டி. கே. சி. வந்தவர் சாப்பிட்டு முடித்தார். அதன் பிறகேதான் அவரைப்பற்றி யார் என்று விசாரித்தார்கள்.

''தான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், திருவனந்தபுரம் பார்க்கப்போனதாகவும், கொண்டுவந்த பணம் செலவாகிவிட்டதாகவும், (டி. கே. சி) தங்களைப் பார்த்தால் உதவி கிடைக்கும் என்று இங்குள்ளவர்கள் சிலர் சொன்னதாகவும், அதன்பேரில் இங்கு வந்ததாகவும்'' சொன்னார்.

அப்படியா! அடடா!! என்று சிரித்துக்கொண்டே தம் காரியதரிசியைப் பக்கத்தில் வரும்படி அழைத்தார்கள். காதோடு காதாக அவரிடம் ஏதோ சொன்னார்கள். ஐந்து நிமிடங்களில் ரூபாயை எடுத்துவந்தார் காரியதரிசி. அந்த வாலிபரிடம் இருபத்து ஐந்து ரூபாயைக் கொடுத்தார்கள். அன்போடும் ஆசியோடும் வழி அனுப்பிவைத்தார்கள். ஆசாமி போய்விட்டார்.

பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த நான் சொன்னேன் டி. கே. சியிடம்: ''இந்த ஆசாமி பித்தலாட்டக்காரனாக அல்லவா தெரிகிறது. அவருக்கு இவ்வளவு மரியாதையும் கொடையும் ஏன்?'' என்று.

அவர்கள் பதில் சொன்னார்கள்:

''போக்கிரி என்று நான் கண்டுகொண்டேன். அதனால் தான் துரிதமாக மளமளவென்று அவர் விரும்பியதைச் செய்தேன். ஆனால் அதில் பெரிய லாபம் ஒன்று இருக்கிறது.

ரூபாய் இருபத்து ஐந்து கிடைத்துவிட்டதால் ஆசாமி இப்பொழுதே ரயில் ஏறி இருப்பார். குற்றாலத்தில் நடமாட மாட்டார். இல்லாவிட்டால் குற்றாலத்தையே சுற்றிச் சுற்றி வருவார். ஒவ்வொரு வீடாக ஏறி இறங்குவார். பொய்யும், புலையும் சொல்லி பணம் வேண்டுவார். அவர்களுக்கெல்லாம் சங்கடந் தானே! ஏதோ குற்றாலம் போய் அருவியில் குளித்து சாரலை அனுபவித்து நிம்மதியாக இருந்துவிட்டு வருவோம் என்று வந்திருக்கிறார்கள் ஜனங்கள். எங்கெங்கு இருந்தோ வந்திருக்கிறார்கள் ஜனங்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் இந்த ஆசாமி பணம், பணம் என்று உயிரை வாங்குவான். அவர்களுக்கு தொல்லையாக இருக்கும். குற்றாலத்தின்மேல் வெறுப்பே வந்து விடும் அவர்களுக்கு. பலபேர் இம்சைப்பட வேண்டாம். நமது

ரூபாய் இருபத்தைந்து போனல் போகட்டும் என்று கொடுத்தேன். நம்மிடம் பணம் இருக்கத்தானே செய்கிறது. தொந்தரவிலிருந்து பலரைக் காப்பாற்ற நம் பணம் பயன்படுமானல், அதைவிட வேறு என்ன சிறப்பு வேண்டி இருக்கிறது பணத்துக்கு'' இப்படிச் சொன்னர்கள் டி. கே. சி.

தன்னுடைய உதவியைப் பெற்றவர்களேயே தான் பாராட்டுகிற கருணையை டி. கே. சி. ஒருவரிடந்தான் பார்க்கமுடியும்.

இந்த இடத்தில் நான் ஒன்று சொல்லவேண்டி இருக்கிறது. அது என்னவென்ருல், டி. கே. சியால் மற்றவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது என்கிற உண்மை! ஆனல் யாரைப் பாராட்டினலும் சரி, அவரிடம் உள்ள ஒரு சிறப்பைத்தான் பாராட்டுவார்கள். இல்லாத ஒன்றை அவர்கள் பேசவேமாட்டார்கள். நமக்கே தெரியாமல் நம்மிடம் உள்ள ரசமான அம்சங்கள், டி. கே. சிக்கு மட்டும் தெரியும். அது எப்படித்தான் அவர்களுக்குத் தெரியுமோ? அதை அவர்கள் சொல்லிச் சொல்லி இன்புறுவார்கள்.

மற்றவர்களிடம் உள்ள ரசமான அம்சங்களை அவர்கள் ஆனந்தமயமாய்ப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள்.

ராஜாஜியைப்பற்றி டி. கே. சி. பாராட்டுகிறதை இதோ பாருங்கள்: ''தமிழ் மக்களைப்போல பைத்தியக்காரர்கள் உலகில் வேறு எங்கும் இல்லை. தமிழ் மக்கள் புத்திசாலிகளாக இருந்தால், என்ன செய்திருப்பார்கள்? ராஜாஜியிடம் போய் 'நாட்டையும் எங்களையும் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் இருக்கிறபொழுது எங்களுக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. நாங்கள் திருக்குறள், கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி, முத்தொள்ளாயிரம் முதலிய கவிகளை அனுபவித்துக் கொண்டிருக்கிருேம். அரசாங்க விஷயமாக எங்களை நீங்கள் தொந்தரவு செய்யக்கூடாது' என்று ஒப்படைத்திருக்கமாட்டார்களா? நம்மவர்களுக்குத்தான் சிந்திக்கிற பழக்கம் இல்லையே! இதனல் ராஜ்ய பரிபாலனத்திற்காக நான்குகோடிப் பேரும் சண்டை போட்டுக் கொண்டு, ராஜாஜியைக் கம்பராமாயணம் படிக்க வைத்துவிட்டார்கள்.''

எப்படி இருக்கிறது பாராட்டு? ராஜாஜியைச் சிற்ப வல்லுநர் என்ருே, இசைப் பேரறிஞர் என்ருே, டி. கே. சி. சொல்லமாட்டார்கள். ஆனல் நீதியும், நிர்வாக நலனும் நிறைந்த ராஜாஜியின் தேசபக்தியை டி. கே. சி. பார்த்து அனுபவிப்பது போல் யாராலும் பார்த்து அனுபவிக்க முடியாது.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

அறுபது வருடங்களுக்குமுன் திருநெல்வேலி-வண்ணார் பேட்டையில் நல்லசிவம் பிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவர் எழுதப் படிக்கத் தெரியாதவர். கோழிமுட்டை போன்ற எழுத்துக்களால் ''நல்லசவம் பிள்ளை'' என்று கையெழுத்துப்போடுவார். கையெழுத்துப்போட்டு முடிக்கப் பதினைந்து நிமிஷம் ஆகும். தனது வீட்டை டி. கே. சிக்கு ரூபாய் மூவாயிரம் என்று கிரையம் பேசிவிட்டார். பக்கத்தில் இருந்த பிரபல வழக்கறிஞர் ஒருவர், நல்லசிவம் பிள்ளை மனைவியையும் மகனையும் வரவழைத்து, ''வீட்டை நான் ரூபாய் மூவாயிரத்து முந்நூறு என்று வாங்கிக் கொள்கிறேன்'' என்று சொல்லிக் கலைத்துவிட்டார். நல்லசிவம் பிள்ளை வீட்டில் ஒரே ரகளை. முதலியாருக்கு வீடு கொடுக்கக் கூடாது, பிரபல வழக்கறிஞருக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று. நல்லசிவம் பிள்ளை மசியவில்லை. அதனால் கோபமடைந்த தர்மபத்தினி கணவனைக் கண்டபடி திட்டினாள். வசவைப் பொறுத்துக்கொண்டார். சாப்பாடு போடமாட்டேன் என்று சண்டித்தனம் பண்ணினாள். அதையும் தாங்கிக்கொண்டார். கடைசியாக பெற்று வளர்த்த புத்திரபாக்கியம் இருக்கானே, அவன் தகப்பனாரை நையப் புடைத்தான். அடி பொறுக்கமுடியாமல் ஓடிவந்த நல்லசிவம் பிள்ளை, டி. கே. சி. வீட்டினுள் நுழைந்தார். டி. கே. சியின் காலைப் பிடித்துக்கொண்டார். ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறினார். என்ன சொல்லிக் கதறினார்?

''முதலியார் ஐயா! நீங்கள் வீட்டை உடனே கிரையம் முடியுங்கள். என் மனைவியும் என் மகனும் என்னைக் கொல்லத் தீர்மானித்துவிட்டார்கள். சொன்னசொல் மாறாமல் உங்களுக்கு எழுதிக் கொடுத்துவிட்டு நான் செத்தால்தான் புண்ணியம். அதற்குமுன் செத்துவிட்டால் என் கட்டை வேகாது'' என்று கதறினார்.

இந்தச் சம்பவத்தை நினைந்து நினைந்து உருகுவார்கள் டி. கே. சி. உருகி உருகிப் பாராட்டுவார்கள். ''நல்லசிவம் பிள்ளையை மறக்கமுடியுமா? உண்மையை யார்தான் மறக்க முடியும்? நல்லசிவம் பிள்ளை போன்றவர்களைக் குறளாசிரியர் பார்த்திருக்கிறார். அனுபவித்திருக்கிறார். ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார். அவராலேயே மறக்க முடியவில்லையே? குறளாசிரியரின் உணர்ச்சியும் வேகமும் எப்படிக் குறளாய் உருவெடுக்கின்றன என்று பாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டே,

அருளாளர் டி. கே. சி.

''யாம்மெய்யாக் கண்டவற்றுள்
இல்லை; எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல
பிற''

என்று, வளைத்து வளைத்துப் பாடுவார்கள். வாழ்நாள் முழுவதும் நல்லசிவம் பிள்ளை பெருமையைச் சொல்லியே குறளை டி. கே. சி. அனுபவித்தார்கள்.

டி. கே. சியிடம் பழகுகிறவர்கள் பலர். ஒன்றிரண்டு பேர்களிடம் அவர்களைப் பாராட்டுவதற்கு அம்சம் ஒன்றுமே இருக்காது. ஆனாலும் அவர்களை மட்டும் பாராட்டாமல் டி. கே. சியால் இருக்கமுடியாது. அதனால் அவர்களிடம் ஒரு பொருளைத் தனக்கு வேண்டும் என்று டி. கே. சி. கேட்பார்கள். அந்த நபருக்கு ஒரு முருங்கைத் தோட்டம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். வண்டி வண்டியாய் முருங்கைக்காய் அதில் காய்க்கிறது, அதை விற்று அவர் சம்பாதிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த நபரிடம் இருபதோ இருபத்தைந்தோ முருங்கைக்காய் வேண்டும் என்று டி. கே. சி. கேட்பார்கள்.

முருங்கைக்காய் வந்துசேரும். டி. கே. சி. வீட்டில் விதவிதமாய், சாம்பாரில், அவியலில், கூட்டில் முருங்கைக்காய் ''கமகம'' என்று மணக்கும். விருந்தினர் ருசித்துப் புசிப்பார்கள். அப்பொழுது வரும் டி. கே. சியின் பாராட்டு.

''இந்த முருங்கைக்காய் இன்னார் அனுப்பியது. அவர் நல்ல பண்பாடுடையவர். கலா ரசிகர். என்னிடத்தில் அவருக்கு ஒரே ஈடுபாடு. விவசாயத்தை நுட்பமாய்ச் செய்கிறார். இந்த முருங்கையின் மணமும் ருசியும் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? இவ்வளவும் அவருடைய கைநேர்த்தியால் உண்டானவை. அவர் இப்படி இப்படி தோட்டத்தைப் பண்படுத்துகிறார். இப்படி இப்படி உரம் போடுகிறார். பூமாதேவிக்கே புளகாங்கிதம் வந்துவிடுகிறது. அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிக் காயாய்ச் சொரிந்துவிடுகிறது'' என்று பாராட்டிக்கொண்டே இருப்பார் டி. கே. சி. விருந்தினர் ஒவ்வொருவரிடமும் அவரைப் பாராட்டுவார். ராஜாஜி முதலிய மேதாவிகள்கூட அவரை மதிக்கும்படி பாராட்டிவிடுவார். மற்றவர்களைப் பாராட்டுவதற்காகவே அவர் ஏங்குவார்; அதற்காகவே அவர் ஒன்றை வேண்டுவார். அவருடைய வாழ்க்கையே அப்படி ஒரு கலைமயமாக இருந்தது.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

இருபத்தெட்டு வருடங்களுக்குமுன் ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். நானும், நீதிபதி மகாராஜன் அவர்களும் டி. கே. சியுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த மரகதசுப்பிரமண்ய பிள்ளை அப்பொழுது வந்தார்கள். சிறிது நேரம் எங்கள் மூவருடனும் டி. கே. சி. பேசினார்கள். மணி எட்டரை. தவசுப் பிள்ளை சங்கரன் எங்கள் மூவருக்கும் சாப்பிட இலை போட்டுவிட்டான். திருவாளர் மரகத சுப்பிரமண்ய பிள்ளை ''தனக்குச் சாப்பாடு வேண்டாம்'' என்றார்கள்! ஏன் என்றார்கள் டி. கே. சி.

சாப்பிட்டுவிட்டேன் என்றார்கள் பிள்ளையவர்கள். ''எங்கே'' என்றார்கள் ரசிகமணி. ''ஓட்டலில்'' என்றார்கள் பிள்ளைவாள். அவ்வளவுதான். டி. கே. சியின் முகம் சிவந்துவிட்டது. தீயில் விழுந்த செந்தாமரைப் பூவைப்போல வாடிவதங்கிவிட்டது டி. கே. சியின் சந்தோஷமான முகம். ''நான் என்ன செத்தா போனேன்? உயிரோடு இருக்கத்தானே செய்கிறேன்'' என்று அலறிவிட்டார்கள் டி. கே. சி.

டி. கே. சிக்கு கோபம் வரும். அந்தக் கோபம் உண்மையான கோபம். அதில் பாவலாவோ, போலியோ இருக்காது. அடி உள்ளத்திலிருந்து வருகிற கோபம் அது. கருணையில் பூத்த கோபம் அது.

சங்கரன் என்னும் தவசுப் பிள்ளையை டி.கே. சி. தம் சொந்தப் பிள்ளையாகவே நடத்திவந்தார்கள். அவனும் அவர்களிடம் அவ்வளவு பக்தியாகவே இருந்தான்.

சங்கரன் விஷயமாக டி. கே. சி. வீட்டில் சிறு ரகளையே ஒருநாள் உருவாகிவிட்டது. குற்றாலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் சங்கரன் பழக்கம் வைத்திருப்பதாகவும், வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் அங்குள்ள பொருள்களை—பணம்-பலகாரங்களை அவளுக்கு அவன் கொடுப்பதாகவும் ரகளை.

ஒருநாள் பகல் பத்து மணிக்கு டி. கே. சியை நான் பார்க்கப் போகிறேன். அவர்களுடைய முகமும், கண்களும், மீசையும் கோபத்தால் கொதித்து நர்த்தனம் ஆடுகின்றன. நான் ஒன்றும் பேசாமல் அவர்கள் எதிரில் உட்கார்ந்தேன். என்னையே கூர்மையாகப் பார்த்தார்கள் டி. கே. சி. அந்தப் பார்வையில் கனிவு இருந்தது. இரக்கம் இருந்தது. ஏதோ ஒன்றை என்னிடம் கெஞ்சிக் கேட்பதைப்போல இருந்தது அந்தப் பார்வை. பார்த்துக்கொண்டே என்னிடம் டி. கே. சி. சொன்னார்கள்:

''சிறு பையனாக இருக்கும்பொழுதே சங்கரன் நம்மிடம் வந்து சேர்ந்துவிட்டான். நம் வீட்டில் அவன் மாடாய் உழைக்கிறான். முப்பது வயது ஆகிவிட்டது. நமது சொந்த மகனாக இருந்தால், அவனுக்கு நாம் காலா காலத்தில் திருமணம் செய்திருப்போமா மாட்டோமா? அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைத்திருந்தால் அவன் இப்படி ஒரு பெண்ணிடம் உறவு வைத்துக் கொள்ளமாட்டான். கல்யாணம் செய்து வைக்காதது நம் தவறு. மன்னிக்க முடியாத தவறு. அதை நினைக்காமல் அவனைக் குறை சொல்வதில் புத்தி இருக்கிறதா? நமக்கு உழைத்து உழைத்து அவன் சாகவேண்டும். ஆனால் நம்மைப்போல அவனைச் சந்தோஷத்தில் வைப்பதற்கு மட்டும் நாம் யோசிக்க மாட்டோம். இப்படி ஒரு கோளாறு இருக்கும்வரை உலகம் உருப்படுமா? நீங்களே சொல்லுங்கள்'' என்று வேண்டினார்கள் டி. கே. சி.

என்ன சொல்லமுடியும் என்னால்? இப்படியும் அற்புத மனிதர் உண்டா என்று கரைவதைத் தவிர, பதில் சொல்ல முடியுமா என்னால்? பேசாமடந்தையாய் இருந்துவிட்டேன்.

டி. கே. சிக்கு ஒரு தமையனார் இருந்தார்கள். குடும்பச் சொத்து முழுவதும் பாகம் ஆகாமல் இருந்தது. தமையனார் காலமாகிவிட்டார். தமையனாருடைய மகன் டி. கே. சியின்மேல் வழக்குப் போட்டார். ''எனக்குரிய பாகத்தை நீதிமன்றம், டி. கே. சியிடமிருந்து வாங்கித் தரவேண்டும்'' என்பது வழக்கு. இது நடந்தது ஐம்பது வருடங்களுக்குமுன்.

விசாரணை ஆரம்பமாவதற்கு முன்பு டி. கே. சி. நீதிபதியிடம் சொன்னது இதுதான்: ''நீதிபதி அவர்களே! என் தமையனார் மகன் தனக்குரிய பாகத்தைக் கேட்பது ஞாயம். இதை என்னிடம் கேட்டே பெற்றிருக்கலாம். அனாவசியமாக அவன் பணத்தைச் செலவு செய்துவிட்டான். நடந்தது நடந்துவிட்டது. சொத்து முழுவதையும் அவனிடம் ஒப்படைத்துவிடுகிறேன். தன் பாகத்திற்கு அவன் எதை எதை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக்கொண்டு மீதத்தை எனக்கு அவனே கொடுக்கட்டும். அது போதும் எனக்கு.''

டி. கே. சியின் வாக்குமூலத்தைக் கேட்ட நீதிபதி மட்டுமல்ல, எதிரியின் அட்வகேட்டும் அசந்துபோனார்கள். ''இப்படியும் ஒரு மனிதர் உண்டா'' என்று அதிசயித்துவிட்டார்கள்.

10. உண்மைக்கு உருவம் வீரம்

ரசிகமணி டி. கே. சி. 1915 முதல் 1928 முடிய திருநெல்வேலியில்—வண்ணார்பேட்டையில் வாழ்ந்தார்கள். வீட்டு வாசலில் வழக்கறிஞர் என்று பலகை தொங்கியது. ஆனால் வீட்டுக்குள்ளே டி. கே. சி. மலேரியாக் காய்ச்சலோடுதான் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். சண்டையோ மலேரியாக் காய்ச்சலோடு, ஆறுதலோ கம்பராமாயணப் பாடல்களுடன். மேலும் தமிழ்ப் பாடல்கள் பலவற்றுடன்.

கம்பர் பாடல்களைப் படிக்கப் படிக்க—அனுபவிக்க அனுபவிக்க பேரானந்தமாக இருந்தது டி. கே. சிக்கு. அதுவே டி. கே. சியை அருளாளராகத் திருத்தியது. வீரபுருஷனாகவும் உயர்த்தியது. சத்தியமே லட்சியம், அதுவே தெய்வம் என்று டி. கே. சியை உருவாக்கியது கம்பருடைய பாடல்கள்.

கம்பருடைய தெய்வப் பாடல்களில் தன்னை மறந்து டி. கே. சி. ஈடுபட ஈடுபட பல போலியான பாடல்கள் உண்மைப் பாடல்களோடு சேர்ந்துகிடப்பது தெரிந்தது. போலிப் பாடல்கள் உண்மைப் பாடல்கள்போலவே இருந்தன. எதுகை, மோனை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றோடு அமைந்திருந்தன. உண்மைப் பாடல்களுக்கும் போலிப் பாடல்களுக்கும் வேறுபாடு காணமுடியாதபடி விருத்தப் பாடல்களாகவே கிடந்தன.

போலி என்பது எல்லாவற்றோடும் சேர்ந்து கிடக்கிறது. கரும்பில் பேய்க்கரும்பு என்று உண்டு. வெள்ளரியில் பேய் வெள்ளரி என்று உண்டு. மனிதர்களில்கூட கயவர்கள் என்றும் உண்டு. அதுபோலவே கவியிலும் போலிக்கவி என்று உண்டாகிவிட்டது. அநாதி காலந்தொட்டே உண்டாகிவிட்டது.

போலிக் கவியை ஏன் பாடிச் சேர்த்தார்கள் என்பதற்கு டி. கே. சி. மூன்று காரணம் சொல்கிறார்கள். முதலாவது காரணம், ''கம்பர் பாடிய கவிகள் அபூர்வமான உணர்ச்சி பாவம் கொண்டவையாய் இருந்ததனால், படிப்பவர்களுடைய இதயத்தைப் பற்றிக்கொண்டன. சதா பாடிக்கொண்டே இருக்கும்படி தூண்டின. அதிலிருந்து ஒரு மயக்கம் உண்டாகி, போலிச் செய்யுள்களையும் இயற்றும்படி சிலரைத் தூண்டிவிட்டன. இப்படி

இயற்றிய போலிச் செய்யுள்களைப் புத்தகத்திலே கட்டுங் கட்டமாய்ப் பார்க்கலாம்.''

இரண்டாவது காரணம்—''கம்பர் தம்முடைய பாத்திரங்களுக்கும் லட்சியங்களுக்கும் தக்கவாறு ஆங்காங்கு கதையையும் போக்கையும் மாற்றி இருக்கிறார். அப்படி மாற்றியதன் காரணமாகவே பாத்திரங்களுக்குத் தனியான வேகமும், கட்டங்களுக்குத் தனியான தெளிவும் ஏற்படுகின்றன. இதை எல்லாம் கண்டாரா அந்த ஆசாமி (வால்மீகி, துளசிதாசர் முதலியோர் எழுதிய ராமாயணக் கதையைப் படித்தவர்). தம்முடைய கோணலான குறுகிய அளவுகோலைக் கொண்டுவந்து, கம்பர் போட்ட பாதையில் வைத்தார். பொருந்தவில்லை. அப்படியே, கட்டத்தை மாற்றி எதுகை மோனைகளோடு செய்யுள்களாகக் கொட்டி நிரப்பிவிட்டார்.

மூன்றாவது காரணம்—முன்காலத்தில் ஓலைச்சுவடிகளில்தான் எழுதிவைத்தார்கள். சுவடிகள் கறையான் அரித்தும், ஈரத்தில் நனைந்தும், இற்றுப் பழுது பட்டும் போவது இயல்பு. அப்படிப் போன பகுதிகளை நிரப்ப பலர் பாடல்கள் பாடிச் சேர்த்துவிட்டார்கள். ஒரு சிலர் ஞாபகத்தில் இருந்த பாடல்களைப் போட்டார்கள். ஞாபகத்தில் இல்லாதவற்றுக்கு சுயமாகப் பாடியும் போட்டுவிட்டார்கள் அவர்கள்.

கம்பர் ராமாயணத்தில் படலம் படலமாகச் செருகு கவிகள் வந்து சேர்ந்ததற்குக் காரணம், எல்லோரும் தொடர்ந்து கம்பர் பாடல்களைப் பாடி அனுபவித்து வந்ததுதான். ஜனங்களை—சமுதாயம் முழுவதையுமே, கம்பர் கவிகள் நன்றாகப் பற்றிக்கொண்டன. பற்றி ஆட்டிவிட்டன. கம்பர் பாடல்களை விட்டு விலகிப் போகமுடியாதபடி சிக்கிக்கொண்டார்கள் மக்கள். கவிகளைப்பாடி அனுபவிப்பதில் மோகவெறியே உண்டாகிவிட்டது மக்களுக்கு. அந்த ஆசையும் மயக்கமுமே போலிப் பாடல்களுக்குக் காரணம் என்பது டி. கே. சி. சொல்வது.

ஒரு நூலில் நல்ல கவிகள் இருக்கின்றன. சாதாரணக் கவிகளும் இருக்கின்றன. அதுவல்ல இங்கு விஷயம். உண்மையோ, உணர்ச்சியோ இல்லாமல் விஷயத்தை மட்டும் வார்த்தைகளைக் கொண்டு கோர்த்து வாங்கி வைத்திருக்கிற பாடல்கள்பற்றித்தான் இங்கு விஷயம். இந்தப் பாடல்களுக்குப் போலி என்று பெயர்.

இந்தப் பாடல்கள் விஷயத்தில் இளக்காரம் கூடாது. ''போனால் போகிறது, இருந்துவிட்டுப் போகட்டுமே அது பாட்டுக்கு'' என்னும் தயை தாட்சண்யம் கூடாது. இந்தப் பாடல்கள் உண்மைக் கவிகளை அனுபவிக்க விடாமல் இருட்டடிப்புச் செய்கின்றன. உண்மைக்கும் பொய்க்கும் வேற்றுமை காண முடியாதபடி குருடாக்கிவிடுகின்றன. உண்மை உணர்ச்சி என்பதே இதயத்தில் ஊறுதபடி—ஊறிக் கசியாதபடி ஒற்றி எடுத்துவிடுகின்றன. அதனால் கலை உலகில்—அதுவும் கவி உலகில், போலி என்பது களை என்பது மட்டும் அல்ல, நஞ்சு. பொல்லாத நஞ்சு.

கம்பராமாயணத்தில் இந்த நஞ்சு—ஆலகால விஷம் மண்டிக் கிடந்தது. படலம் படலமாக இருந்தது. பாடல்களில் ஆயிரக்கணக்கான பாடல்கள்போலி.

ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும் டி. கே. சி. கம்பரைப் படித்தார். படிக்கப் படிக்க பாடலோடு பாடலாய்க் கரைந்துவிட்டார். யோகம், தவம், ஆனந்தம் என்று சொல்வார்களே அப்படியே ''தான் வேறு, கம்பர் வேறு'' என்று இல்லாமல் ஒன்றிவிட்டார். ஏதோ கம்பரை வைத்து பிழைப்பு

நடத்தவேண்டும், சம்பாதிக்க வேண்டும், தடபுடல் பண்ணவேண்டும் என்பதற்காக அவர் கம்பரைப் படிக்கவில்லை. தன்னுடைய வேலை, உத்தியோகம், வருமானம், அந்தஸ்து எல்லாவற்றையும் இழந்து—தியாகம் செய்து படித்தார். உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தத்தம் செய்தல் என்பார்களே, அப்படித் தத்தம் செய்து கம்பருடைய கவிதைகளில் மூழ்கிக் கரைந்தார் டி. கே. சி.

அப்படி ஒரு பக்தியோடும், ஞானத்தோடும் கம்பருடன் உறவாடினதால் தான், டி. கே. சிக்குக் கம்பரில் போலிப் பாடல்கள் புற்று வளர்வதுபோல் வளர்ந்து உண்மைக் கவிகளை மூடி மறைத்து நிற்பது தெரிந்தது. வேறு யாருக்கும் தெரியாதது டி. கே. சிக்குத் தெரிந்தது.

இவை இவை போலிப் பாடல்கள் என்று தெரிந்தது மட்டும் அல்ல. இந்தப் பாடல்கள் எல்லாம் கம்பர் எழுதியவை அல்ல என்று உறுதியாகத் தீர்ப்பளித்தார்.

உணர்ச்சிமயமான நேரத்தில் பாடல்கள் திடகாத்திரத்தோடு வரும். சாதாரண நிலையில் கவிஞர் பாடிய பாட்டு வெளிறிப்போய் மெலிந்து நிற்பது இயல்புதான் என்று பேரம் காட்டவில்லை டி. கே. சி.

மாவோ, வாழையோ, பலாவோ ஒரு மரத்தில் விம்மியும் புடைத்தும் திருத்தமாகவும் கனி விளையும். அதே மரத்தில் சில கனிகள் வெம்பியும், சூப்பியும், குழலாடியும், சொங்கியாய் வருவதும் உண்டுதானே என்று வாதிக்கலாம்.

ஆம், உண்மைதான்.

மாமரத்தில் மாங்கனிதான் விளையும். முற்றி விளைந்த கனியானாலும், அரைகுறையாய்ப் பழுத்த பழமானாலும் அது மாங்கனியாகத்தான் இருக்கும். மாமரத்தில் அத்திப்பழமோ, ஆலங்கனியோ உண்டாகாது. அதேபோல கம்பர் பாடல்களில் பலபல உருவ பேதங்கள் இருக்கின்றன. கதிகள் இருக்கின்றன. உச்சநிலைகளைத் தொட்டுக்காட்டுகிற பாடல்களும் வருகின்றன. சாதாரண நிலையில் பேசுகிற பாடல்களும் இருக்கின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் கவியாக இருக்கும், கவிப் பண்புக்கு—தமிழ்ப் பண்புக்கு விரோதமாக இருக்காது.

விரோதமாகப் பாடல்கள் வந்து சேர்ந்துகிடக்கின்றன, என்றால் அது பிறர் பாடிச் சேர்த்த போலிப் பாடல்கள்தாம். கம்பர் ''கவிப் பண்புக்கு விரோதமாக ஒரு கவி எழுதவேண்டும் என்று'' எழுதினாலும், அது கவிப் பண்போடுதான் வருமே ஒழிய மாறாக வராது என்று தீர்ப்பளித்தார் டி. கே. சி.

அப்படியானால் கம்பரை எப்படி அவர் தெள்ளத்தெளியச் கண்டுவிட்டார் என்று தெரிகிறது. கம்பரிடம் எப்படி எல்லை இல்லாத பக்திகொண்டிருக்கிறார் டி. கே. சி. என்றும் தெரிகிறது.

உண்மையான பக்திக் கண்கொண்டு பார்க்கிறதனால்தான் போலிப் பாடல்களைப் பாடிச் சேர்த்தவர்கள்மேல்கூட டி. கே. சிக்கு எரிச்சல் வரவில்லை. அனுதாபத்தோடு பார்க்கிறார்கள் அவர்கள் காரியத்தை ''கம்பர் பாடல்களில் விழுந்த ஈடுபாடு காரணமாக அவர்கள் பாடிவிட்டார்கள்'' என்கிறார். கம்பரின் தனித்த நிலையைப் பார்க்காமல் பூர்வ கதையை வைத்துப் பாடிவிட்டார்கள் என்கிறார். ஓலைச்சுவடிகள் பழுதுபட்டுப் போனதால், இழந்த பாடல்களை ஈடு கட்டப் பாடிவிட்டார்கள் என்கிறார். உண்மையைக் கண்டுகொண்டால் போதும், எரிச்சல் போய்விடும். கொதிப்பு நீங்கிவிடும். மன்னிக்கவே தோன்றும். ஆனால் உண்மையை விட்டுக்கொடுக்காத உறுதி வயிரமாக விளையும்.

போலிப் பாடல் பாடியவர்களை ''ஐயோ பாவம், அப்பாவிகள்'' என்று ஆசீர்வதித்தார்களே தவிர, போலிப் பாடல் ஒன்றுக்குக்கூட தாட்சண்யம் காட்டவில்லை. படலம் படலமாக மலை மலையாக போலிப் பாடல்களை வெட்டி வெளியே எறிந்துவிட்டார் டி. கே. சி.

ஆயிரக்கணக்கான பாடல்களைத் தூக்கி எறிந்துவிட்டார் டி. கே. சி.

ஆனல் மீதம் உள்ள பாடல் ஒவ்வொன்றும் இதுதான் கம்பருடைய உண்மையான கவி என்று அவர் எடுத்தாண்டிருக்கிற பாடல் ஒவ்வொன்றும்—தங்கக் கோவிலாய் இருக்கின்றன. நம் வரவிற்காக எதிர்பார்த்து ஏங்கி நின்று—நம்மைக் கண்டவுடன் ஓடோடி வந்து கட்டித்தழுவும் இஷ்ட தேவதைகளாய் இருக்கின்றன.

ஒவ்வொரு பாடலும் நம்மோடு பேசுகின்றன. நம் கண்ணைத் திறந்துவிடுகின்றன. காதையும் திறந்துவிடுகின்றன. மனத்தையே திறந்துவிடுகின்றன. தெய்வ ஒளியாய்ப் பிரகாசிக்கின்றன. நாம் செல்லும் வழியை நமக்குக் காட்டுகின்றன.

உண்மைக் கவிகளைக் கண்டு அவற்றோடு ஒன்றித் திளைத்த டி. கே. சி. தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களுக்கும் வாரி வாரி வழங்கத் துடித்தார். தம் வீட்டிற்குத் தமிழ் அன்பர்களை வரவழைத்து உபசரித்து பாடல்களைப் பாடி விளக்கினர். இதைக் கண்ட அன்பர்கள் அதிசயித்தார்கள். கம்பரில் இப்படி எல்லாம் இருந்திருக்கின்றனவே என்று வியந்தார்கள். டி. கே. சியின் இல்லம் வரவர தமிழன்பர்கள் தொடர்ந்து கூடும் தமிழ்ச் சங்கம் ஆகியது. உண்மையான தமிழ்ச் சங்கம் ஒன்றைப் பாண்டிய மன்னர்களுக்குப்பின் நிறுவி, தமிழையும் தமிழ்ப் பண்பையும் காப்பாற்றினர் டி. கே. சி.

தம் வீட்டில் டி. கே. சி. வைத்து நடத்திய தமிழ்ச் சங்கத்திற்கு ''வட்டத் தொட்டி'' என்று பெயர். 1924-ஆம் வருடம் முதல், இந்த வட்டத்தொட்டியில் தவறாமல் வந்து தமிழை அனுபவித்த அறிஞர்கள், திரு, எஸ். வையாபுரிப் பிள்ளை, ஆர். பி. சேதுப் பிள்ளை, சக்கரபாணி நம்பியார், எஸ். சுப்பையா முதலியார், ஏ. ஆவுடையப்ப பிள்ளை, தமிழ் ஆசிரியர் ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை முதலியோர் ஆவர்.

1928-ஆம் வருடத்திற்குப்பின் டி. கே. சி. அநேகமாகச் சென்னை வாசி ஆகிவிட்டார்கள். மூன்று வருடம் எம். எல். சியாக இருந்தார்கள். 1930-க்குப் பின் 1935 வரை இந்து மத பரிபாலன சபை கமிஷனர் ஆனர்கள். அந்தக் காலத்தில் தமிழ்ச் சங்கம் சென்னைக்கு டி. கே. சியோடு சேர்ந்து போய்த் தங்கியது.

1936 முதல் 1938 முடிய பழையபடி வண்ணார்ப்பேட்டை வீட்டுக்கு வந்து குடியேறினர்கள். டி. கே. சி. தமிழ்ச் சங்கம் தொடர்ந்து நடந்தது.

இந்தக் காலத்தில்தான் பேராசிரியர் சீனிவாசராகவன், ஆ. முத்துசிவன், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். மகாராஜன், சோமு, சுந்தா, இன்ஸ்பெக்டர் முத்தையா பிள்ளை, காய்கறிக் கடை கோமதிநாயகம் பிள்ளை, பி. ஸ்ரீ ஆச்சார்யா, மகரபூஷணம், சைகிள் முத்தையா பிள்ளை முதலியோர் வட்டத்தொட்டி அன்பர்களாய் இருந்து டி. கே. சியிடம் தமிழ்ப் பாட்டுகளைக் கேட்டு இன்புற்றார்கள்.

பல புலவர் பெருமக்களும் தமிழ்ப் பேராசிரியர்களும் டி. கே. சியின் வட்டத்தொட்டியில் வந்து கலந்துகொள்வார்கள். டி. கே. சி. சொல்வது தான் உண்மை என்று ஏற்றுக்கொண்டார்கள். போலிப் பாடல் என்றும்,

செருகு கவி என்றும் டி. கே. சி. கண்டு அவற்றைக் களையாவிட்டால் கம்ப ராமாயணமே காலப்போக்கில் மறைந்துவிடும். பல எண்ணிறந்த தமிழ்ப் பாடல்களும் மறைந்துவிடும்.

கம்பரையும் தமிழையும் காப்பாற்றியது டி. கே. சிதான் என்று தமிழ் அறிஞர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தங்கள் கருத்தை ஊக்கமாக எடுத்துச் சொல்லியும் வந்தார்கள்.

போலிப் பாடல், செருகு கவி, பிழை திருத்தம் இவற்றை எடுத்துக் காட்டி உண்மைக் கவியை வாய்மொழியாகச் சொல்லச் சொல்ல, அற்புதம், அற்புதம் என்று டி. கே. சியைப் பாராட்டிய தமிழ் அறிஞர்களில்—புலவர்களில் பலர், அது அச்சாகிப் புத்தகமாக வெளிவந்ததோ இல்லையோ எதிர்த்துப் போர்க்கொடி தூக்கிவிட்டார்கள்.

''கம்பரைக் கெடுத்தவர் டி. கே. சி.'' என்றார்கள். தமிழைக் கெடுத்தவர் டி. கே. சி. என்றார்கள். டி. கே. சி. ஒழிந்தால்தான் தமிழ் உருப்படும் என்றுகூடப் பிரச்சாரப் புயலைக் கிளப்பிவிட்டார்கள். டி. கே. சிக்கு முடிவு நெருங்கிவிட்டது என்று அறம் பாடினார்கள். வசை கவி பாடி அச்சிட்டு விநியோகமும் பண்ணினார்கள்.

ஒருவராவது தள்ளிய பாடல்களில்—ஒன்றை எடுத்துக்கூட இது உண்மைக் கவி என்று காட்டவில்லை. ''விஷயம், உணர்ச்சி, ஓசை, தாளம், சிருஷ்டி, தத்துவம் எல்லாம் இந்தப் பாடலில் இப்படி இப்படி அமைந்து இருக்கிறதே? அப்படியானால் ஏன் இதைப் போலிப் பாடல் என்று தள்ள வேண்டும்?'' என்று யாருமே எடுத்துச்சொல்லவில்லை. அதுபோகட்டும்;

இவைதான் உண்மையான பாடல்கள் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்களே டி. கே. சி. அந்தப் பாடல்களில் ஒன்றைக்கூட இது மட்டமான பாடல் என்று எடுத்துச்சொல்லவில்லை புலவர் பெருமக்கள். ஆனால் எல்லோரும் ஒன்றுகூடி டி. கே. சியைத் திட்டினார்கள்.

போலிப் பாடல்களைக் களைந்து எறிந்து உதவியதில் இவர்களுக்கு மகிழ்ச்சி தான். ஆனாலும், ''இந்த நல்ல காரியத்தை டி. கே. சி. எப்படிச் செய்யலாம்? நம்மால் செய்யமுடியாத ஒன்றை நம்மோடு பழகிக்கொண்டு இருக்கிறவர் எப்படிச் செய்யலாம்? ஏதோ காற்றோடு காற்றாய்ப் போகிற காரியமாய் இருந்ததால் நல்ல காரியத்தை ஆமோதித்தோம்; இப்பொழுது அதை அச்சில் ஏற்றி நிரந்தரம் ஆக்கிவிட்டாரே இந்தப் பாவி மனுஷன்!'' என்று ஆங்காரம் வந்தது. ஆலகால விஷமாய்த் திரண்டு வந்தது ஆங்காரம்.

இதே திருத்தத்தை நூறு வருடங்களுக்கு முன்போ, நூற்றைம்பது வருடங்களுக்கு முன்போ ஒருவர் செய்துவிட்டு மறைந்திருந்தால், அவரை ''ஆகா, ஓகோ'' என்று போற்றுவார்கள். அவருக்குக் கோவில் கட்டியே கும்பிடுவார்கள். இல்லை ஒரு அமெரிக்கரோ, பிரெஞ்சுக்காரரோ, ''கவிதையில் போலி'' என்று எடுத்துக்காட்டி இருந்தால் விழுந்து விழுந்து பாராட்டி இருப்பார்கள். இதைப் படித்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் வாங்கப் போட்டி போட்டு வருவார்கள். ஆனால் டி. கே. சி. உயிரோடு இருந்தார். இது முதல் குற்றம். அத்துடன் தங்களோடு இருந்தார். தங்களில் ஒருவராகவே இருந்தார். இது இரண்டாவது குற்றம்.

தங்களில் ஒருவராய், தங்களோடு வாழ்கிற ஒருவர், தாங்கள் செய்யமுடியாத காரியத்தைச்செய்தால் அதை உலகத்தால் தாங்கமுடியாது. பொறாமை என்பது அப்படி உடன்பிறந்து கொல்லும் நோய். இப்படி எல்லாம் திட்டிய பேர்வழிகளுடன் தமிழ்மேல் நம்பிக்கை இல்லாதவர்களும் சேர்ந்து கொண்டார்கள். கம்பராமாயணத்தைத் தீயிட்டு பொசுக்கவேண்டும் என்கிற கட்சி

யோடு சேர்ந்தவர்களும் ஒட்டிக்கொண்டார்கள். கம்பரையோ தமிழ்ப் பாடல்களையோ பார்த்து அறியாத பேர்வழிகளும் சேர்ந்து கொண்டார்கள்.

பொறுமைக்காரர்கள் பட்டாளம் பட்டாளமாய் அணி வகுத்து எதிர்த்து நின்றபோதும் டி. கே. சி. கலங்கவில்லை. கலங்காதது மட்டும் அல்ல, கடுகளவுகூட வருத்தப்படவில்லை அவர். அவர்கள்மேல் இரக்கப்பட்டாரே தவிர கோபப்பட வில்லை. காலப்போக்கில் திருந்துவார்கள் என்று நம்பினார். ''உண்மைதான், இன்றில்லாவிட்டாலும் நாளைக்கேனும் எழுந்து நிற்கும். நிரந்தரமாக நிலைத்து நிற்கும். பொய் அப்படி நிற்க முடியாது. ஆரவாரத்தோடு தடபுடல் பண்ணும். அட்டகாசம் புரியும். பிறகு இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்'' என்று நம்பினார்.

தம்மைக் கன்னுபின்னு என்று திட்டிக் கொக்கரித்த பொறு மைக்காரர்பற்றிச் சிரித்துக்கொண்டே, டி. கே. சி. சொல்வார்: ''பொறுமை என்பது அநாதியான ஒரு தத்துவம். எது பற்றியும் அது எழுந்து நிற்கும். என் வீட்டில் ஒரு சிந்திப் பசு இருக்கிறது. அது வேளாவேளைக்கு நான்கு படி பால் கொடுக்கிறது என்பது அடுத்த வீட்டுக்காரருக்குத் தெரிந்தால்போதும். அவருக்கு என்மேல் மட்டும் அல்ல, பசு மேலேயே கோபம் வந்துவிடும். என்னுடைய தேகத்தை என்ன பிதுக்குப் பிதிக்கினாலும் அரைக் கால் படி பால்கூட வரமாட்டேன் என்கிறது! இந்தப் பசு எப்படி நான்கு பக்கா பால் கறக்கலாம்? என்று பகையையே உண்டாக்கி விடும் பொறுமை.'' மேலும் சொல்லுவார்கள், பொறுமை தான் எல்லாத் தீமைகளுக்கும் மூலம். அதுதான் ஆணவத்தின் உருவம். அது எல்லா இடமும் விரிந்து பரந்து கிடக்கிறது. அந்த நூலாம்படையை அடித்துத் துப்புரவு பண்ணுவதற்கு வானளாவிய ஒட்டடைக்கம்பு நம்மிடம் இருக்கவா செய்கிறது? எண் சாண் உடம்பிற்குள்தானே நம்மைவைத்து ஆட்டுகிறார் கடவுள்? நாம் என்ன செய்யமுடியும் அதற்கு?'' என்பார்கள்.

நாற்பது வருஷங்களுக்குமுன் காரைக்குடியில் கம்பர் விழா நடைபெறுகிறது. தலைவர் டி. கே. சி., பெரிய பெரிய பண்டிதர் கள் பேசுகிறார்கள். அவர்களில் ஒருவர் மகாமகா உபாத்யாயா பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள். கூட்டம் நிரம்பி வழிந்தது. பண்டிதமணி ஆங்காரத்தோடு டி. கே. சியைத் தாக்கி னார். ''இவர் எப்படி செருகு கவி என்று பாடல்களைத் தள்ளலாம்? பாடல்களில் விழுந்த பிழைகளைத் திருத்தலாம்?'' என்று கண்

டித்துப் பேசினார். தலைமைதாங்கிய டி. கே. சி. சிரித்துச் சிரித்து வசவை ரசித்தார். பண்டிதமணிக்கு வெறி உண்டாகிவிட்டது. பெருஞ்சீற்றத்தோடு டி. கே. சியை நோக்கி, ''உங்களுக்குச் சிரிப்பு வேறு கேடா? சூடு சுரணை இல்லையே! மானம் இருந்தால்தானே நான் சொல்வது உரைக்கும்'' என்று சொல்லிவிட்டார். சபை கலங்கிவிட்டது. இது என்ன அநாகரிகம் என்று நொந்துபோனார்கள் செட்டிநாட்டு மக்கள்.

டி. கே. சி. நிதானமாக எழுந்தார். அன்போடு சபையை நோக்கினார். ''மதிப்பிற்குரிய பண்டிதமணி அவர்கள் தம் உள்ளக்கிடக்கையைத் தெளிவுபடுத்திவிட்டார்கள். தமிழ் அப்படி அவர்களுக்குக் கைகொடுக்கிறது. என்னை நீங்கள் மறந்துவிட வேண்டும். மறந்துவிட்டுப் பார்த்தால், தமிழ் ஒரு அற்புதமான மொழி, தெய்வீகமான மொழி, அன்பை மட்டும் அல்ல, ஆங்காரத்தைக்கூட பாவ உருவம் கொடுத்து கணகண என்று பேசுகிற மொழி; இதர மொழியில் இப்படி எரிச்சலையும் வெறுப்பையும் நேருக்குநேராகக் கொட்டமுடியுமா? தமிழ்தான் எதையும் சாதிக்கும் மொழி என்பது விளங்கும். தன்னுடைய உணர்ச்சிக்கு உருவம் கொடுத்து செட்டியார் அவர்கள் அழகாய்ப் பேசினார்கள். அதற்கு நான் உதவியாக இருந்தேன். அந்த வகையில் எனக்குப் பரம திருப்திதான்'' என்று முடித்தார்கள்.

கேட்டுக்கொண்டிருந்த சபையோர் கண்கலங்கி அழுதுவிட்டார்கள். இப்படியும் ஒரு தருமப் புண்ணியவான் உண்டா என்று மனம் குழைந்துபோனார்கள். அதுவரை டி. கே. சியை தந்தையாக மதித்த செட்டிநாட்டு அன்பர்கள் பலர், அன்றிலிருந்து டி. கே. சியைத் தெய்வமாக மதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். வெளியில் இருந்து மூர்க்கத்தனமாக எதிர்த்துப் பழித்துரையாடிய மனிதர்களை ரசித்ததுபோலவே, உள்ளுக்குள் இருந்து சதா தன்னை நச்சரித்த நோய்களையும் பார்த்துப் பார்த்து ரசித்தார் டி. கே. சி.

ஒரு சமயம் தம் நண்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ''என்னுடைய காலில் புண் கொஞ்சம் குணத்துக்கு வருகிறது. நாலைந்து நாளில் குணமாய்விடும் என்று ஏகோபித்துச் சொல்கிறார்கள். புண்ணின் காதில் அந்த வார்த்தை விழும் என்று நம்புகிறேன்.''

''இடது காலில் இருந்த புண் முற்றும் குணமாய்விட்டது. குணமாகிறது என்று ஒன்று அதற்கு இருக்கிறதே அதிசயந்தான். வலது கால் விஷயம் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் சௌகர்யப்பட்டு வருகிறது. ஆனாலும் வேண்டும்போது சேஷ்டைபண்ணி

விடுகிறது. எல்லாவற்றிற்கும் நாளாக வேண்டி இருக்கிறது. என்ன செய்யும், அப்பாவி உடல்! ஏதோ அதனால் கூடிய மட்டும் அங்கங்கே பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறது. அதன் மேல் குற்றம் இல்லை.''

ஒரு சமயம் டி. கே. சியின் உடல்நிலை மிகவும் பலஹீனம் ஆய்விட்டது. சென்னையில் இருந்து பெரிய பெரிய டாக்டர்கள் வந்து சோதித்துவிட்டுப் போனார்கள். விவரம் தெரிந்ததும் நண்பர்கள் ஓடி வந்தார்கள்: ''என்ன சொன்னார் டாக்டர்'' என்று ஆவலோடு டி. கே. சியிடம் விசாரித்தார்கள்.

''என்ன சொல்வார் டாக்டர்? வயது ஏறிவிட்டது. அப்படி ஏறவிட்டிருக்கக்கூடாது வ ய தை என்று சொன்னார். வேறு என்ன சொல்லமுடியும் டாக்டரால்'' என்று நிதானமாகச் சொன்னார் டி. கே. சி. கேட்டவர்களின் உடல்நோய், மனநோய் எல்லாம் அந்த ஆனந்தத்தில் பறந்தோடிவிட்டன. அப்படி எதையும் தாங்கும் இதயம் படைத்த வீர புருஷனாக விளங்கினார் டி. கே. சி.

போலிப் பாடல்களைக் களைந்து எறிந்ததுபற்றிப் புலவர் உலகம் சீறி எழுந்து பொங்கியது. ஆயிரந்தலை நாகம் படம் எடுத்துச் சீறுவதுபோல் சீறியது. டி. கே. சியிடம் அன்பும் பிரியமும் நிறைந்த ராஜாஜி, கல்கி, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, வெள்ளகால் சுப்பிரமண்ய முதலியார் போன்றவர்கள் இந்த ஆவேசத்தில் இருந்து விலகி நிற்க டி. கே. சியிடம் கீழ்க் கண்ட யோசனை சொன்னார்கள்:

''கம்பர் பாடல்களில் சுவைமிக்க பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து வெளியிட்டிருக்கிறேன்'' என்று ஒரு அறிக்கைவிடும்படி சொன்னார்கள்.

டி. கே. சி. ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக்கொள்ளாதது மட்டும் அல்ல, ''ராஜாஜி போன்றவர்கள் சொல்வது வேடிக்கையாக இருந்தது. உண்மையைச் சொல்கிறபொழுது எதிர்ப்பு ஏற்படும், தொல்லைகள் நேரும். ஆபத்துக்கூட வரும். இவை எல்லாம் ஏற்படாவிட்டால் உண்மைக்கு என்ன மரியாதை? அதற்காக உண்மையினிடத்துப் பேரம்பண்ணலாமா? அது மகா பெரிய பாவம்.''

''தேர்ந்தெடுக்கப்பட்ட கவி என்று பேரம் பேசினால், தேர்ந்தெடுக்கப்படாத கவிகள் (செருகு கவிகள்) கூட, கம்பர் பாடிய பாடல் என்றுதானே ஆகும்? அப்படியானால் உண்மைக்கு இதை

விட வேறு துரோகம் உண்டா?'' என்று சொல்லிவிட்டார்கள். அதுமட்டும் அல்ல, இப்படி ஒரு ஆலோசனை வந்ததை அடுத்து ஆனந்தவிகடன் முதலிய பத்திரிகைகளில் ''கம்பர் கவிக்கு வந்த வினை, செருகு கவிகளின் கொடுமை'' என்று கட்டுரைகள் எழுதி ஊர்ஜிதம் செய்தார்கள் டி. கே. சி.

போலிப் பாடல், செருகு கவி என்பனவற்றைக் கண்டு பிடித்தவர்கள் டி. கே. சிதான். அவர்கள்தான் இந்தச் சொல் தொடர்களை உண்டாக்கினார்கள்.

போலிப் பாடல் என்பது தரும் பொருள் வேறு, செருகு கவி என்பது தரும் பொருள் வேறு.

உண்மைக் கவியை அனுபவித்து ஒரு மயக்கத்தில்-ஒரு கிறுக்கில் பாடிய பாட்டு போலிப் பாட்டு. அப்படிப் பாடிய பாட்டை தக்க இடம் பார்த்து செருகிவைத்துவிடுகிறார் ஒருவர். அந்த இடத்தில் அந்தப் போலிப் பாடலுக்குச் செருகு கவி என்று பெயர்.

உண்மையில் இருந்து உண்டாகவேண்டும் சொல். உணர்ச்சியில் இருந்து உண்டாக வேண்டும் சொல். அப்பொழுதுதான் அந்தச் சொல்லுக்கு உயிர் இருக்கும்.

டி. கே. சியின் லட்சியம், புரட்சி, தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஆற்றிய சேவை எல்லாம் கம்பர் முதலிய கவிஞர்களிடம் அவர்கள் வைத்திருந்த பக்தியில் இருக்கிறது. போலிப் பாடல்கள் இவை என்று கண்டுபிடித்த ஞானத்தில் இருக்கிறது. செருகு கவிகளைக் களைந்து எறிந்ததாலும், பிழைகளைத் திருத்தியதாலும் தமிழ்ப் புலவர் அணிதிரண்டு எதிர்த்ததைக் கலங்காமல் சமாளித்த வீரத்தில் இருக்கிறது.

11. நன்றி மறவா நாயகன்

1926-ஆம் வருடம் டி. கே. சிதம்பரநாத முதலியார் தம் நாற்பத்து ஐந்தாவது வயதில் அரசியலில் ஈடுபட்டு எம். எல். சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருநெல்வேலியைச் சேர்ந்த திருவாளர் குமாரசாமி ரெட்டியார் டி. கே. சியின் நண்பர். உயிர்த் தோழர். ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் வற்புறுத்திய தன் பேரில்தான் டி. கே. சி. அரசியலில் ஈடுபட்டார்கள். எம். எல். சி. தேர்தலிலும் நின்றுர்கள்.

ரெட்டியார் அவர்களும் டி. கே. சியும் வாக்காளர்களைத் தேடிப் பல இடங்களுக்கும் போவார்கள். டி. கே. சி. கையில் கம்ப ராமாயணந்தான். போன போன இடங்களிலும் கம்பர் கவிகளைத்தான் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். வாக்காளர் களிடம் இனிமையாகப் பேசி அவர்கள் ஆதரவைத் தேடியது திரு. ரெட்டியார் அவர்கள்தான். இருவரும் 1926 முதல் 1928 வரை சென்னைக்கு அடிக்கடி போய் வந்தார்கள். அப்பொழுது காஸ்மாபாலிட்டன் கிளப்பில்தான் தங்குவார்கள். காஸ்மாபாலிட்டன் கிளப்பில் பிரமுகர்கள் பலர் தங்குவார்கள். அவர்களில் சிலர் சட்டசபையில் டி. கே. சிக்கு சக உறுப்பினர்கள்.

ரயிலில் போகிறபொழுதும் கம்ப ராமாயணந்தான். காஸ்மா பாலிட்டன் கிளப்பில் நண்பர்களிடமும் கம்பராமாயணந்தான். சட்டசபையிலும் கம்ப ராமாயணந்தான். திருநெல்வேலி வட்டத்தொட்டி சர்வ வியாபகமாய் விரிந்துவிட்டது.

சட்டசபைக் கூட்டத்திற்காக டி. கே. சி. சென்னை வருகிறுர்கள் என்றுல் நண்பர்கள் எல்லோரும் எதிர்பார்த்து நிற்பார்கள். காஸ்மாபாலிட்டன் கிளப்புக்குப் போனவுடன், முதலில் திருநெல்வேலியில் இருந்து கொண்டுபோன நயமான தோசை, மிளகுபொடி, எண்ணை முதலியவை நண்பர்களுக்கு விநியோகம் ஆகும். அதைத் தொடர்ந்து முறுக்கு, சீடை முதலிய பணியாரங்கள் வரும். தொடர்ந்து பாடல்கள் விளக்கங்களோடு தேவாமிர்தமாக வரும். தம்மை மறந்து ஆனந்தத்தில் திளைப்பார்கள் நண்பர்கள்.

சர் சி. பி. ராமஸ்வாமி ஐயர், சர் உஸ்மான் அலி, ராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதி முதலியவர்கள்

டி. கே. சியோடு மேல்சபை உறுப்பினர்களாக இருந்தார்கள். டி. கே. சியின் கவியும் விளக்கமும் இவர்களையும் ஆட்கொண்டு விட்டன.

ஆந்திரம், மலையாளத்தின் ஒரு பகுதி, கன்னடத்தின் ஒரு பகுதி ஆகியவையும் அன்றைய சென்னை மாகாணத்தோடு சேர்ந்திருந்தன. அதனால் ஆந்திர உறுப்பினர், மலையாள உறுப்பினர், கன்னட உறுப்பினர்களும் மேல்சபையில் இருந்தார்கள். அவர்களும் அனுபவிக்கும்படி கம்பர் பாடல்களை விளக்கினார் டி. கே. சி. கேட்ட அன்பர்கள் எல்லாம் ஆனந்தத்தில் திளைத்தார்கள்.

ஒரு நாள் கம்ப ராமாயணத்தில் குகப் படலத்தை நண்பர்களுக்கு டி. கே. சி. விளக்கினார்கள். ஆந்திர நாட்டைச் சேர்ந்த மேல்சபை உறுப்பினர் ஒருவரும் அங்கு இருந்தார். ''கங்கை இருகரை உடையான்'' என்னும் பாடலைப் பாடி, டி. கே. சி. விளக்க விளக்க ஆந்திர அன்பர் சொக்கிப்போனார். பாடலோடு பாடலாய்க் கரைந்தேவிட்டார். அதன்பின் டி. கே. சியைப் பார்க்கும்பொழுதெல்லாம், தம் தலைமேல் இரண்டு கரங்களையும் குவித்து, ''ஐயா! கங்கை இருகரை உடையான், நமஸ்காரம், நமஸ்காரம்'' என்று உபசரிப்பார்.

ஒருசமயம் சென்னையில் நடந்த கிரிக்கெட் விளையாட்டு விழாவிற்கு குமாரசாமி ரெட்டியார் போனார்கள். டி. கே. சியையும் உடன் வருமாறு அழைத்தார்கள். டி. கே. சிக்கு கிரிக்கெட் விழாவிற்குப் போக மனம் இல்லை. ஆனாலும் ரெட்டியாருக்காகப் போனார்கள்.

கிரிக்கெட் மைதானத்திற்கு ரெட்டியாரும் டி. கே. சியும் சேர்ந்துபோனார்கள். போன உடன் ரெட்டியார் விளையாட்டைப் பார்த்து அனுபவித்தார். டி. கே. சி. ஒரு ஒதுக்குப்புறம் போய் கம்ப ராமாயணத்தைப் பிரித்து கட்டம் கட்டமாய்ப் பாடல்களைப் பார்த்து அனுபவித்துக்கொண்டிருந்தார். நான்குமணி நேரம் ஆனபின் விளையாட்டு முடிந்தது. டி. கே. சியை ரெட்டியார் தேடிப் பார்த்தார். காணவில்லை. கூட்டம் முழுவதும் எழுந்து கலைந்துவிட்டது. கம்ப ராமாயணத்தை வைத்து அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் டி. கே. சி. அதைப் பார்த்த திரு. ரெட்டியார் அதிசயித்துவிட்டார்கள். ''விளையாட்டு முடிந்துவிட்டது, வீட்டிற்குப் போகலாம்'' என்று சொல்லி டி. கே. சியை அழைத்து வந்தார் திரு. ரெட்டியார் அவர்கள்.

டி. கே. சியின் கம்ப ராமாயண விளக்கமும் நயமும் சென்னையில் உள்ள கனதனவான்கள் பலருக்கும் தெரிந்தது. அவர்கள்

அடிக்கடி டி. கே. சியிடம் தமிழ்ப் பாடல்கள் கேட்டு அனுபவித்தார்கள். சென்னை நகரமே ஒரு வட்டத்தொட்டியாக பரிமளிக்க ஆரம்பித்துவிட்டது.

ஸ்ரீமான் வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் தலைசிறந்த வழக்கறிஞராக விளங்கினார்கள். பண்பாடும் சீலமும் நிறைந்தவர்கள் ஐயங்கார். அரண்மனை போன்ற அவர்களுடைய மாளிகைக்கு கவிஞர்களும் வித்வான்களும் வந்தவண்ணமாக இருப்பார்கள். தாய்போல வித்வான்களை ஆதரித்து உபசரித்து சன்மானம் கொடுத்து மதிக்கிறவர்கள் ஐயங்கார். சிறந்த கலாரசிகர். அவர்களுடைய மாளிகைக்கு லட்சுமி விலாசம் என்று பெயர். உண்மையில் அது லட்சுமி தேவி வசிக்கும் மாளிகைதான். புஷ்பத்தை வண்டு மொய்ப்பதுபோல கவிவாணர்களும் இசைவாணர்களும் கலைஞர்களும் ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களைச் சூழ்ந்து இருப்பார்கள்.

வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் டி. கே. சியைப் பற்றிக் கேள்விப்பட்டார். கம்பருடைய பாடல்களை நயமாக எடுத்து விளக்குகிறார் என்று கேள்விப்பட்டார். அவ்வளவுதான், தன்னுடைய மாளிகைக்கு டி. கே. சியை வரவழைத்து உபசரித்தார். டி. கே. சியிடம் கம்பர் பாடல்களைக் கேட்டு அனுபவித்தார். பேரானந்தம் அடைந்தார். இந்த ஆனந்தம் மற்றவர்களும் பெறவேண்டும் என நினைத்தார். தம் மாளிகையில் தினந்தோறும் கம்ப ராமாயணத்தை விளக்கி உபன்யாசம் செய்யும்படி டி. கே. சியை வேண்டினார். சென்னை மாநகரில் உள்ள பிரமுகர்கள் பலரை—வழக்கறிஞர்கள், நீதிபதிகள், உயர் அதிகாரிகள், டாக்டர்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் பிரமுகர்கள், பிரபுக்கள், பண்ணையார்கள் எல்லோரையும் தம் மாளிகைக்கு வந்து டி. கே. சியின் தெளிவுரை கேட்டு இன்புறுமாறு செய்தார் ஸ்ரீமான் ஐயங்கார்.

டி. கே. சியின் வாழ்க்கையில் இது ஒரு உச்சகட்டம் என்றுதான் சொல்லவேண்டும். மாதக்கணக்கில் தொடர்ந்து நடந்த டி. கே. சியின் உபன்யாசத்தைக் கேட்ட பிரமுகர்கள் எல்லோரும் டி. கே. சியை உயர்வாக மதித்தார்கள். இணையற்ற அறிஞர் என்று பாராட்டினார்கள். டி. கே. சியின் பேச்சை மேலும் மேலும் கேட்கவேண்டும் என்று அவர்கள் எல்லோரும் ஆசைப்பட்டார்கள். அதனால் பல்வேறு இடங்களில் டி. கே. சியை அழைத்துப் பேசச்சொன்னார்கள். டி. கே. சியின் புகழ் பரவியது.

''சென்னை மாநகரந்தான் தமிழ்ப் பயிர் வளர்வதற்கு ஏற்ற உரக்கால் நன்செய்'' என்று டி. கே. சி. நம்பினார்கள். அவ்வளவு அன்பர்கள்—தமிழ் ரசிகர்கள் சென்னையில் திரண்டுவிட்டார்கள். இவ்வளவும் வி. வி. சீனிவாச ஐயங்காரின் தயாளத்தால் ஆன காரியம்.

1928-ஆம் வருடம் டி. கே. சி. சென்னையில் வந்து குடி ஏறினார்கள். வட்டத்தொட்டி சென்னைக்கு வந்துவிட்டது.

டி. கே. சியின் நுட்பம், ஆராய்ச்சி, கலை உணர்வு, ஆனந்த பரவசம் இவற்றைப்பற்றி ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் பாராட்டிச் சொல்கிறபொழுது ''வார்த்தைகளைக்கொண்டு விளக்க முடியாத பேருண்மையை—உணர்ச்சி பாவங்களின் உருவ பேதங்களை நாம் ஒவ்வொருவரும் கண்டுகளிக்கும்படி செய்து விடுகிறார் முதலியார். இந்த மந்திரசக்தி முதலியாருக்கு எப்படிக் கிடைத்தது என்பதை நினைக்க நினைக்க ஆச்சர்யமாக இருக்கிறது. அந்த ஆச்சர்யமே ஆனந்தமாகவும் இருக்கிறது'' என்று வாழ்த்தினார்.

ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் டி. கே. சியின் புலமையையும் பெருமையையும் எல்லோரிடமும் சொல்லிப் பாராட்டினார்கள். ஈடும் இணையும் இல்லாத பெரியவராகிய வி. வி. சீனிவாச ஐயங்காரே புகழ்ந்து பேசுகிறார் என்றால், எல்லோரும் போட்டி போட்டு மதிக்கத்தானே செய்வார்கள்? டி. கே. சியை பலதிறப்பட்டவர்களும் அங்கீகரித்தார்கள், பாராட்டினார்கள், உபசரித்தார்கள். டி. கே. சியின் புகழ் விரிந்து பரவியது. அதனால் யோகம் கம்பருக்கும் தமிழுக்குமே.

தமிழ் என்றால் மட்டமானது, ஒன்றுக்கும் உதவாதது என்று ஒதுக்கித் தள்ளிய காலம் அது. அந்தக் காலத்தில் ஆங்கில மோகத்தில் சிக்குண்டு மயங்கிக்கிடந்த பிரமுகர்கள் தமிழை அனுபவிக்கும்படி செய்வது முடியாத காரியம். ஆனாலும் செயற்கரும் செயலை டி. கே. சி. சென்னையில் செய்தார். அதற்கு வாய்ப்பும் வசதியும் செய்து உதவியவர் ஸ்ரீமான் வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்களே.

ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதி ஆனார்கள். சீரும் சிறப்புமாய்ப் பணி ஆற்றினார்கள். ஓய்வுபெற்ற பின் பழையபடி வழக்கறிஞராகப் பணிபுரிந்தார்கள். செல்வாக்கு மிக்க ஐயங்கார் அவர்கள்தான் டி. கே. சியின் பெருமையையும் பண்பாட்டையும் தக்கவர்களிடம் எடுத்துச் சொன்னார்

கள். அவர்கள் சொல்லியதன்மூலமே டி. கே. சிக்கு இந்துமத பரிபாலனத்துறையின் கமிஷனர் பதவி கிடைத்தது.

டி. கே. சியின் உள்ளம் பளிங்குபோன்ற உள்ளம். குழந்தை உள்ளம். செய்நன்றி மறவாத உள்ளம். செருகு கவிகளை நீக்கி, பிழை திருத்தி முதல் முதல் டி. கே. சி. வெளியிட்ட கம்ப ராமா யணத்தை ஸ்ரீமான் வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்களுக்குச் சமர்ப்பித்தார்கள் டி. கே. சி.

''கம்பருடைய உள்ளத்தில் உல்லாசமாய்க் களித்துத் திரியும் ஸ்ரீமான் வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்களுக்குச் சமர்ப் பணம்'' என்று குறிப்பிட்டார்கள் டி. கே. சி.

அப்பாவுக்குச் சமர்ப்பணம், அம்மாவுக்குச் சமர்ப்பணம் என்று டி. கே. சி. குறிப்பிடவில்லை. அவர்களிடம் உள்ள ஈடு பாட்டை புத்தகத்தில் எழுதியா காட்டவேண்டும்? புத்தகத்தில் எழுதிக் காட்டவேண்டுமானால், எங்கிருந்தோ வந்து, யாதொரு தொடர்பும் இல்லாதவராய் இருந்து, வாழ்வுக்கு விளக்கேற்றி வைக்கிறவர் யாரோ அவரை அல்லவா நன்றி உணர்வோடு காட்டவேண்டும்?

அப்படி உள்ளம் உருகிப் பாராட்டினார் டி. கே. சி.

கம்ப ராமாயணம் முழுவதும் இருந்த செருகு கவிகளை டி. கே. சி. களைந்து எறிந்துவிட்டார். குல மாணிக்கங்களாக—ஜாதி வயிரங்களாகக் கம்பருடைய உண்மைக் கவிகளை எடுத்து அவற்றுக்கு விளக்கம் எழுதி வைத்திருந்தார் டி. கே. சி.

டி. கே. சி வைத்திருந்தது தமிழகம் முழுவதற்கும் எட்ட வேண்டும். தமிழர்—ஆண், பெண், குழந்தைகள், பெரியவர்கள் எல்லோரிடமும் போய்ச் சேரவேண்டும். அப்படிச் சேர்ந்து எட்டு வதற்கு உதவியவர் கல்கி ஆசிரியர், பேராசிரியர் ஆர். கிருஷ்ண மூர்த்திதான். கல்கிப் பத்திரிகையில் வாரா வாரம் தொடர்ந்து டி. கே. சியின் கட்டுரை வந்தது. ''கம்பர் தரும் காட்சி'' என்று வந்தது. பத்துப் பன்னிரெண்டு வருஷங்களாய்த் தொடர்ந்து வந்தது. லட்சக்கணக்கில் ஆடவரும் பெண்டிரும் படித்து ஆனந்தத்தில் திளைத்தார்கள். தமிழகம் முழுவதும் கம்ப ரிடத்தில் ஒரு ஈடுபாடு உண்டாகிவிட்டது.

கம்பரிடத்தும் தமிழ்ப் பாடல்களிடத்தும் தமிழ் மக்களுக்குப் பக்திவெறியே உண்டாகிவிட்டது. பாடல்களை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உணர்ச்சி, இசைப் பண்பு, தாளப் பண்பு, சிருஷ்டி தத்துவம் இவை கண்ணால் பார்க்கமுடியா

தவை. ஆனாலும் டி. கே. சி. கொடுக்கும் விளக்கமும், பாடலை அவர் சந்தத்தோடும், சீர்பிரித்தும் கொடுக்கிற வனப்பும், கையால் தொட்டுப்பார்க்கும் அளவுக்குத் தெளிவாய்த் தெரிந்தன. போலிப் பாடல்களை விலக்கி உண்மையான பாடலை சீருக்குச் சீர் வரிக்கு வரி சிக்கலோ முடிச்சோ இல்லாமல் கொடுத்து விடுவதால் மனம் அப்படியே பாடலோடு ஒட்டிக்கொள்கிறது.

ஒவ்வொரு பாடலுக்கு முன்பும் டி. கே. சி. கொடுக்கும் விளக்கமோ கவியின் இதய பாவத்தை அப்படியே கையில் எடுத்துக் கொடுப்பதுபோல இருக்கிறது. அப்படியானால் பாடல்கள் மக்களை வெறிகொள்ளும்படிதானே செய்யும்? டி. கே. சியின் கம்பர் தரும் காட்சிக் கட்டுரைகளைக் கல்கியில் படித்தவர்கள் தமிழ்மேல் பக்திகொண்டார்கள், ஆசை கொண்டார்கள், வெறியே கொண்டுவிட்டார்கள்.

பாடலுக்கு விளக்கம் என்று பாடலின் முகப்பில் கொடுக்கிற பழக்கம் டி. கே. சியின் மூலமே வந்தது. புலவர்கள் காரியம் வேறுவிதமாகத்தான் இருந்தது. பாடலை முதலில் சொல்வது. பிறகு அதன் புணர்ச்சி விதிகளை உடைத்துச் சந்தி பிரிப்பது. இதுதான் அக்காலத்துச் சாதனை. சந்தி பிரித்து வார்த்தையோடு வார்த்தையைக் கொண்டு கூட்டுவது—இது மகா பெரிய சாதனை. கடைசியாக, பதவுரை, பொழிப்புரை, இலக்கணக் குறிப்பு சொல்வது . . . இப்படியாக கவியைப்பற்றியோ, கலைப் பண்புபற்றியோ, தெய்வ நலம்பற்றியோ ஒருவரும் யோசிக்கவில்லை.

டி. கே. சி. ஒருவர்தான் யோசித்தார்.

அதனால் ஒவ்வொரு கவியின் முகப்பிலும் ஒரு விளக்கம் கொடுத்தார். விளக்கம் கவியை மூடி மறைக்கும் சொல் சிலம்பம் இல்லை. பண்டிதர் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தால் தமக்குத் தெரிந்த விஷயம் எல்லாம் கவிஞருக்கும் தெரிந்திருக்கிறது என்று காட்டுவதற்காகப் படித்த அபத்தத்தை எல்லாம் விளக்கம் என்று கொட்டுவார். அந்த விளக்கம் கவியைப் பார்க்கவிடாதபடி மூடி மறைக்கும் மூடுமந்திரமாக இருக்கும். ஆனால், டி. கே. சி. கொடுக்கிற விளக்கமோ, கவியின் இதயபாவத்தை அனுபவித்து, ஆனந்தித்து, மற்றவர்கள் அப்படியே அனுபவித்து ஆனந்திக்க விலகி இடம் கொடுக்கிற தியாகக் கண்ணாடியாக இருக்கும். டி. கே. சியின் விளக்கம் கவியின்மேல் ஒளியைப் பாய்ச்சும். கவியை அனுபவிப்போம். ஒளி குறுக்கே நிற்காது வழிவிட்டு விலகி நிற்கும்.

முதலில் அற்புத விளக்கம், பிறகு தெய்வப்பாடல், அடுத்து அப்பாடலின் உணர்ச்சிபாவம் பற்றிய சிறுகுறிப்பு. இப்படியாகக் கம்பர்தரும் காட்சி தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. தமிழகம் முழுவதும் ஒரு புதிய பரபரப்பே உண்டாகிவிட்டது. ஒரு ஆவேசமே உண்டாகிவிட்டது. தமிழகத்தின் சரித்திரத்தை எழுத ஆரம்பித்தால் கவியின்மேல் தமிழர்களுக்கு உண்டான இந்த ஆவேசத்தையும், பரபரப்பையும்பற்றிச் சொல்லாமல் முடியாது.

ரசிகமணி அப்படி ஒரு மோக வெறியைக் கவியிடத்தும், கலையிடத்தும் உண்டாக்கிவிட்டார். கல்கிப் பத்திரிகையும், கல்வி ஆசிரியருமே டி. கே. சிக்குக் கைகொடுத்து உதவினர்கள்.

கல்கி ஆசிரியர் செய்த உதவி அளவிடமுடியாத மாபெரும் உதவி. இதை மனதுள் வைத்துப் பார்த்துப் பார்த்துப் பரவசப் பட்டார் ரசிகமணி டி. கே. சி.

கம்ப ராமாயணம் அவ்வளவும்—உண்மைப் பாடல்கள் அவ்வளவும் விளக்கத்தோடு பத்திரிகையில் வெளிவந்துவிட்டன. இனி அவற்றைப் புத்தகமாக அச்சிடவேண்டியதுதான். மூன்று தொகுதிகளாக வெளியிட ஏற்பாடு செய்தார் டி. கே. சி.

கம்ப ராமாயணம் என்னும் பெயரை எடுத்துவிட்டார். கம்பர் தரும் ராமாயணம் என்று அர்த்தபுஷ்டியோடு பெயர் சூட்டினர். முதல் தொகுதியில் பால காண்டமும் அயோத்தியா காண்டமும் இருந்தன. புத்தகம் அச்சாகிவிட்டது.

வெளியீட்டு விழா 1953-ஆம் வருடம் அக்டோபர் மாதம் முப்பத்தோராம் தேதி குற்றாலத்தில் வைத்து நடந்தது. மாசு மறுவற்ற ஞானமும், கள்ளம் கபடம் இல்லாத அன்பும் நிறைந்த ராஜாஜி விழாவுக்குத் தலைமை தாங்கினர். பேரறிஞர்களும், பிரமுகர்களும் பங்கேற்றார்கள். பேசினர்கள். வெளியீட்டு விழா மங்களமாக நடந்தது.

ஆனால் ஒரே ஒரு குறை.

கம்பர்தரும் ராமாயணத்தை ''கல்கி ஆசிரியர் ஆர். கிருஷ்ண மூர்த்திக்குச் சமர்ப்பணம்'' என்று குறிப்பிட்டு தம் நன்றி உணர்வை உலகுக்குக் காட்டத்துடியாய்த் துடித்தார் டி. கே. சி.

கல்கி ஆசிரியரோ ''உயிர்போனாலும் இதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்'' என்று ஒரே நிலையில் நின்று மறுத்துவிட்டார். ''தெய்வமாக்கவி கம்பர் எங்கே, நான் எங்கே? அதற்கு டி. கே. சி. கொடுத்திருக்கிற புனிதமான விளக்கம் எங்கே? நான் எங்கே? சாதாரண மனிதன் நான். மெலிந்த பலஹீனன் நான்.

என் தோள்மீது மகான்களாலும் தாங்கமுடியாத பெரும் பளுவைத் தூக்கிவைத்தால், அதை என்னால் எவ்வாறு சுமக்க முடியும்?'' என்று மறுத்துவிட்டார் கிருஷ்ணமூர்த்தி. அது மட்டும் அல்ல, ''இப்படித் தாங்கமுடியாத சுமையை என்மேல் தூக்கிவைப்பதுதான் டி. கே. சி. என்னிடம் காட்டுகிற அன்பா'' என்று நைந்து குழைந்தார் கல்கி ஆசிரியர்.

அரங்கேற்று விழாவில் கலந்துகொண்டால், அங்கு பலபேர் கூடி, கட்டாயப்படுத்தி வற்புறுத்தக்கூடும் என்று பயந்து விழாவுக்கு வராமலே இருந்துவிட்டார் கல்கி ஆசிரியர்.

''கம்பர் தரும் காட்சியைத் தொடர்ந்து பிரசுரித்தது கல்கியின் கடமை. அதை வாசித்து அனுபவித்தது தமிழர்களின் கடமை. அதற்காக வெகுமதி பெறலாமே தவிர, தண்டனை பெறமுடியுமா?'' என்று தமக்கே உரிய நகைச்சுவையோடு மறுத்துவிட்டார் கல்கி ஆசிரியர்.

ரசிகமணி டி. கே. சிக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஏமாற்றமாகவே இருந்தது. எதற்கும் கலங்காத டி. கே. சியின் உள்ளம் இதில் கொஞ்சம் கலங்கியே தத்தளித்தது.

தன்னுடைய ஆற்றாமையை நன்றியுரையில் சோக உணர்ச்சிக்குள் பொதிந்து குறிப்பாக வெளியிட்டார் டி. கே. சி. எப்படி?

''நீங்கள் எல்லோரும் உள்ளன்போடு என்னைப் பாராட்டினீர்கள். உங்களுடைய அன்பும் ஆனந்தமும் எனக்கு ஒரு புதிய பிறவியையே கொடுத்துவிட்டது.''

''இந்திரஜித்தினுடைய பிரம்மாஸ்திரத்தால் ராமலட்சுமணர்களும் வானரவீரர்களும் மயங்கிய நிலையில் கிடக்கிறார்கள். உயிர்போய்விட்டது என்றுதான் சொல்லவேண்டும். அப்படி ஒரே மயக்கத்தில் கிடக்கிறார்கள். அனுமன் சஞ்சீவி மலைக்குப் போய் அங்கிருந்த மூலிகைகளைக் கொண்டுவந்தான். மூலிகையின் வாடைபட்ட மாத்திரத்தில் பிரம்மாஸ்திரத்தின் விஷம் போய்விட்டது. தூங்கி எழுந்தவர்கள்போல் எல்லோரும் எழுந்தார்கள். ராமனும் எழுந்தான்.

நடந்தது என்னவென்று விசாரித்துத் தெரிந்தான். ராமனுடைய உள்ளம் உருகிவிட்டது. ''தாயினும் மிக்க பரிவும் பாசமும் நிறைந்த அனுமனைக் கட்டித் தழுவினான். ஆனந்தக் கண்ணீர் உகுத்தான். ஆனால் அனுமனோ, ராமனாவது, என்னை மார்போடு சேர்த்துக் கட்டித் தழுவுவதாவது என்று நழுவினான். ஆனாலும் அன்பு மடங்கிப் பின்வாங்குமா?''

அனுமனை நோக்கிச் சொன்னான், ''அப்பனே! தசரதன் வயிற்றில் பிறந்த நாங்கள் இறந்துபோனோம். இப்பொழுது நாங்கள் உன் அருளில் நின்றே பிறந்திருக்கிறோம். எங்களுக்குத் தந்தையும் நீதான், தாயும் நீதான்'' என்று.

''நானும் உங்களுடைய அன்பிலிருந்தும் ஆர்வத்திலிருந்தும் புதுப் பிறவி எடுத்திருக்கிறேன்.'' இப்படி நன்றி உரை சொல்லி முடித்தார் டி. கே. சி. இதற்குரிய கம்பர் பாடலையும் உணர்ச்சி பாவத்தோடு பாடிக் காட்டினார். விழா மங்களகரமாக நிறைவேறியது.

டி. கே. சி. பாராட்டியது தங்களைத்தான் என்று ஒவ்வொருவரும் நினைத்துக்கொண்டார்கள். ஆனால் கல்கியின் உதவியையும், பெருந்தன்மையையும் நோக்கியே சுற்றிச் சுற்றி வட்டம்போட்டது. டி. கே. சியின் கண். அதை மனதில் வாங்கியே வார்த்தையாக வெளியிட்டார் டி. கே. சி.

கல்கி ஆசிரியர் பன்னிரெண்டு ஆண்டுகள் தொடர்ந்து வாரந்தோறும் தம் பத்திரிகையில் கம்பர் தரும் காட்சிக்கு இடம் கொடுத்தார் என்றால் அது எவ்வளவு பெரிய காரியம்? அப்படி அவர் இடம் கொடுக்காவிட்டால் கம்பர் தரும் ராமாயணம் இப்படி மேளதாள முழக்கத்தோடு வெளிவர முடியுமா? ஜனங்கள் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கும் நிலையில் அல்லவா வெளிவந்தது. அந்த ஆவலை ஜனங்களிடம் உண்டாக்கியது கல்கி. கம்பருக்கு, தனக்கு, கவிக்கு, ஒரு புத்தம் புதிய பிறவியைக் கொடுத்தார் கல்கி ஆசிரியர் என்று உருகினார் டி. கே. சி. நன்றி பாராட்டலை ஏற்றுக்கொள்ளாமல் நழுவுகிறாரே கல்கி ஆசிரியர் என்று குழைந்து தத்தளித்தார் டி. கே. சி. ஆனாலும் தன் அன்பை, இதய கரத்தாலேயே நீட்டி வழங்கினார் டி. கே. சி.

''டி. கே. சியின் நன்றி உரை, ராஜாஜியை மனம் கசியச் செய்துவிட்டது. ஒரு மனிதனுடைய ஆற்றலை—உண்மையை வெளியில் கொண்டுவந்து பிரகாசிக்கச் செய்யும் காரியம், உண்மையில் பத்து மாதம் வைத்துச் சுமந்து வளர்க்கும் தாய்மையோடு சேர்ந்த காரியந்தான்'' என்று ஒரு ஒளி பிறந்தது ராஜாஜிக்கு.

சிப்பியின் வயிற்றில் நீர்த்துளி ஒன்று ஒளிந்திருந்து முத்தாக விளைந்து வெளிவரும். அப்படியே டி. கே. சியின் கருத்து, ராஜாஜியின் இதயத்துள் தவம் கிடந்து ரசமாக ஊறி, முத்தாக வந்து பிரகாசித்தது.

டி. கே. சி. அமரர் ஆனது 1954-ல். மறு வருடம் 1955-ல் கம்பர்தரும் ராமாயணம் மூன்றும் பாகம் வெளிவந்தது. அதற்கு ராஜாஜி முன்னுரை எழுதினர். அந்த முன்னுரையில் ''ஸ்ரீராம பிரான் கம்பன் உள்ளத்தில் மற்றும் ஒருமுறை எப்படி அவதரித் தாரோ, அவ்வாறே கம்பனும் டி. கே. சியின் உள்ளத்தில் மறுபடி அவதரித்தான்'' என்று குறிப்பிட்டார்.

டி. கே. சிக்கும், கல்கி ஆசிரியருக்கும் ஏற்பட்ட தொடர்பு அதிசயமான சம்பவம்.

மகாமகோபாத்யாயா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களிடம் டி. கே. சிக்கு அளவுகடந்த மரியாதை. ''ஐயர் அவர்கள் எழுதுவதுதான் தமிழ். தமிழ்ப் பாஷையின் வேகமும், கதியும், நயமும், பண்பாடும் ஐயரவர்கள் எழுத்தில் துள்ளி விளையாடுகின்றன. ஒரு தமிழ்ப் புலவராவது ஐயரவர்கள் போல் எழுதமாட்டேன் என்கிறார்களே!'' என்று சொல்வார்கள்.

கல்லூரியில் படிக்கும்போதே டாக்டர் ஐயர் அவர்களை டி. கே. சி. பார்த்திருக்கிறார்கள். ஆனல் ஐயரவர்களுடன் டி.கே.சி. பழகியது 1927-ஆம் வருடம் முதல்தான். எம். எல். சி. ஆன பிறகுதான்.

டாக்டர் ஐயர் அவர்களும் டி. கே. சியை நன்கு மதித்தார் கள். டி. கே. சியின் அறிவு, ஆராய்ச்சி, கவியில் திளைக்கும் ஆனந்தம் எல்லாவற்றையும் மதித்தார்கள். டி. கே. சியின் அன்பு, மரியாதை, ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை ஐயரவர் கள் பார்த்துப் பார்த்து அதிசயப்பட்டார்கள்.

கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி திருச்செங்கோடு ஆசிரமத் தில் ஐம்பது வருடங்களுக்குமுன் பணிபுரிந்தார். அப்பொழுது ஏட்டிக்குப் போட்டி என்னும் கட்டுரையும், ''சாரதையின் தந்திரம்'' என்னும் பெயரில் கதையும் வெளிவந்தன. அவற்றை டி. கே. சி. படித்தார். தமிழ் வார்த்தைகள் விஷயத்தோடும் உணர்ச்சியோடும் தெளிவாய் அருவிநீர் ஓடி ஆடுவதுபோல் துள்ளி விளையாடுவதைப் பார்த்தார். ''இப்படியும் ஒருவர் தமிழில் எழுதுகிறாரே'' என்று வியந்தார்.

தம் வியப்பை நண்பர்களிடம் எல்லாம் சொல்லிப் பாராட்டி ஞர் டி. கே. சி. டாக்டர் சாமிநாத ஐயர் அவர்களிடமும் சொல்லிச் சொல்லிப் பாராட்டிஞர் டி. கே. சி.

சில வருடங்கள் கழித்து கிருஷ்ணமூர்த்தி சென்னை வந்து சேர்ந்தார். தன்னை நேரில் பார்க்காமலே தன்னைப் புகழ்ந்து

பாராட்டும் டி. கே. சியைப்பற்றிக் கேள்விப்பட்டார். டி. கே. சியைச் சந்தித்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

டி. கே. சி. என்ன செய்தார்? கல்கியை டாக்டர் ஐயர் அவர்களிடம் அழைத்துப் போனார். ''தமிழில் ஒருவர்தான் எழுதிக்கொண்டிருக்கிறார் என்று அடிக்கடி சொல்வேனே அந்த ஆசாமி இவர்தான்'' என்று அறிமுகப்படுத்தினார்.

டாக்டர் ஐயரவர்கள் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து அதிசயப் பட்டார். ''எவ்வளவு உயர்வாக எழுதுகிறார். ஆனால் எவ்வளவு குள்ளமாக இருக்கிறார். இவர் ஒரு அகத்தியர்தான்'' என்று டி. கே. சியிடம் சொல்லி மகிழ்ந்தார்.

டி. கே. சிக்கும் கல்கிக்கும் அன்றுமுதல் வாழ்நாள் முழுவதும் அன்பு வளர்ந்து ஓங்கியது. புனிதமாகவும், மங்களமாகவும் ஊறிப் பெருகியது தூய அன்பு.

12. வழிதப்பி வந்த அழகுத் தெய்வம்

ரசிகமணி டி. கே. சியைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். பார்க்கப் பார்க்க அழகு ஜொலிக்கும். உருகி ஓடும் ஆயிரம் மாத்துச் சொக்கத் தங்கம் போன்ற மேனி. தரும தேவதை கொலுவீற்றிருக்கும் கண்கள். கம்பீரமும் உபசரிப்பும் கைகோர்த்து தாண்டவம் ஆடும் முகம். அமைதியும் ஆனந்தமும் நிறைந்த முகம். பால் வழியும் முகம் என்று சொல்வார்களே அதுதான் டி. கே.சியின் முகம். அகன்ற நெற்றி, கருகருவென்று நீண்டு அடர்ந்த புருவம். பளபளவென்று ஒளிவீசும் நெற்றியையும் புருவத்தையும் பார்த்தால் கலைமகள் களி நடம் புரியும் இடம் இதுதான் என்று சொல்லத்தோன்றும். உற்றுணர்ந்து எதையும் ஊடுருவிப் பார்க்கும் நீண்ட மூக்கு. அடர்த்தியான மீசை. வெல்வெட்டுப் போன்று மிருதுவாய் நிறைந்த மீசை.

எத்தனையோ பேர்க்கு மீசை உண்டு. அந்த மீசைகள் எல்லாம் முகத்தில் உண்டான மீசைகள். ஆனால் டி. கே. சியின் முகமே அவர் மீசையில்தான் உண்டாகி இருக்கிறதோ என்று நினைப்பு வரும். அப்படி வாளித்து வகுத்துவிட்ட அடர்த்தியான பெரிய மீசை.

முழங்கால் அளவு தொங்கும் கைகள். நல்ல உயரம். எடுப்பான தோற்றம். வார்த்தெடுத்த தங்கச் சிலைபோன்ற நேரான உடம்பு. அணுவளவுகூட ஓச்சம் இல்லாத—கோணல்மாணல் இல்லாத நேரான ஒற்றை உடம்பு.

டி. கே. சியின் மேனியும், மேனியில் உள்ள ஒவ்வொரு அங்கமும் வாய்திறந்து பேசும். மனந்திறந்து பேசும். நமக்கும் அவருக்கும் உள்ள பேதத்தைக் கரைத்து நம்மையும் அவரையும் ஒன்றுபடுத்திவிடும் அவர் மேனியில் உள்ள அழகு, அந்த அழகு பேசுகிற பேச்சு.

அமிர்தம் போன்ற அவர் குரலும், அன்பில் ஊறி ஊறிக் கசிகிற அவர் வார்த்தைகளும் நம்மை ஆலிங்கனம் பண்ணும். உள்ளத்தை மட்டும் அல்ல, உடம்பையே உருக்கிக் கரைத்துவிடும்.

டி. கே. சியின் நாவிலிருந்து வருகிற ஒவ்வொரு சொல்லும் அவர் உள்ளத்திலிருந்து வருபவை. அதாவது அன்பில் விளைந்து

வருபவை. உண்மையில் விளைந்து வருபவை. அதனால் அந்த வார்த்தைகள் கேட்பவர்களை மேன்மைப்படுத்தும். கேட்பவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும். வாழ்க்கையினிடத்து பிரியத்தை உண்டாக்கும். மரியாதையையே உண்டாக்கிவிடும்.

அப்படி ஒரு அழகுத் தேவதையாக நடமாடினார் ரசிகமணி டி. கே .சி.

சுமார் அறுபது வருடங்களுக்குமுன் ஸ்ரீமான் வ. வே. சு. ஐயர் அவர்களும், சுத்தானந்த பாரதி அவர்களும் டி. கே. சியை சந்தித்தார்கள். அன்றுதான் அவர்கள் இருவரும் டி. கே. சியை நேரில் பார்க்கிறார்கள்.

டி. கே. சி. அவர்களுடன் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். இரண்டு பாடல்களைச் சொல்லி விளக்குகிறார். விடைபெற்று இருவரும் போகும்பொழுது, அவர்கள் இருவரும் டி. கே. சியிடம் கீழ்க்கண்டவாறு சொன்னார்கள்.

''ஐயா! உங்களுக்கு (சிதம்பர) நாத முதலியார் என்று பெயரிட்டார்களே உங்கள் பெற்றோர், அவர்களை வாழ்த்தி வணங்கவேண்டும். எவ்வளவு பொருத்தமாகப் பெயர்சூட்டி இருக்கிறார்கள்? தெய்வகானம் என்று போற்றக்கூடிய உண்மையின் தொனியை—மதுரமான நாதத்தை உங்களிடந்தான் நாங்கள் கேட்கமுடிந்தது. உண்மையின் அழகையும் ஆனந்தத்தையும் உங்கள் பேச்சின்மூலம் எங்கள் கண்களால் பார்த்து அனுபவிக்க முடிந்தது. நீங்கள் நாத முதலியாரேதான்'' என்று.

கேட்பவர்களின் உள்ளங்களை ஒருவருடைய சொற்கள் தூய்மைப்படுத்துகின்றன—பரவசப்படுத்துகின்றன என்றால் அது தொண்டையின் அமைப்பால் அல்ல, நாக்கின் கெட்டிக்காரத்தனத்தால் மட்டும் அல்ல, பேசுகிறவரின் இதயவளந்தான் அதற்குக் காரணம்.

டி. கே. சி. உண்மைமயமானவர். அதாவது உணர்ச்சிமயமானவர். உண்மையைக் கண்ட மாத்திரத்தில் உருகிக் கரைந்து அதனோடு அதுவாய் கலந்து மருவுகிறவர் டி. கே. சி. அதனால் அவருடைய சொற்கள் காட்டாதனவற்றை எல்லாம் காட்டிவிட்டன. கேளாதனவற்றை எல்லாம் கேட்கவைத்தன.

உண்மை ஒன்றுதான். ஆனால் அது கண்களுக்கு இரண்டு வகையாகத் தோன்றுகிறது. ஒன்று வெறும் உண்மை. மற்

றென்று முழு உண்மை. நேர்மை, ஒழுங்கு, சீலம் முதலிய பண்பு களிலிருந்து பிறக்கின்ற சான்ருண்மை இருக்கிறதே அது வெறும் உண்மை. அந்த வெறும் உண்மையே கலையாக அவதாரம் எடுக்கும்; உணர்ச்சிமயமான கலையாகவே அவதாரம் எடுக்கும். அப்படி வானுக்கும் பூமிக்குமாக நிறைந்துநிற்கிற உணர்ச்சித் தத்துவத்துள் பிரகாசிக்கிறதே ஒரு தெய்வீக அழகு அதுதான் முழு உண்மை.

சில சமயங்களில் வெறும் உண்மைக்கு முழு உண்மையைக் கண்டு கண்கள் கூசும். அப்படி ஜகஜோதியாய் நிறைந்து ஒளி வீசும் முழு உண்மை. கண்கள் கூசுவதின் காரணமாக முழு உண்மையை இது பொய்யென்றுகூட வெறும் உண்மை வாதிக் கும். ஆனுல் உணர்ச்சிமயமாய்ப் பொங்கிநிற்கிற உண்மை தான் நிரந்தரமான உண்மை. ஆனந்தமயமான உண்மை. அழகுமயமான உண்மை.

அந்த முழு உண்மையின் அவதாரந்தான் டி. கே. சி. அதனுல்தான் அவருடைய சொல், பார்வை, உருவம், தோற்றம், நடை, உடை, பாவனை, மீசை, புருவம் எல்லாம் அழகுமயமாய் ஜொலித்தன.

ஐம்பது வருடங்களுக்குமுன் அமெரிக்க நாட்டிலிருந்து ஒரு அமெரிக்கப் பாதிரியார் குற்ருலம் வந்திருந்தார். பாதர் கெய்த் தான் என்பது அவர் பெயர். அவரை பால் நாடார் என்னும் வழக்கறிஞர்—தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர்—குற்ருலத் தைக் காட்டுவதற்காக அழைத்து வந்தார்.

இருவரும் ஐந்தருவிச்சாலையில் நடந்துபோகிருர்கள். மாலை ஐந்து மணி இருக்கும். அந்த வேளையில் டி. கே. சி. ஐந்தருவிச்சாலையில் தற்செயலாக எதிர்த்துவருகிருர்கள். நூறடி தூரம் இருக்கும். டி. கே. சியின் உருவத்தை அமெரிக்கப் பாதிரியார் பார்த்துவிட்டார். பாம்பை மிதித்தவுடன் எப்படி ஒரு அச்சமும் திகைப்பும் வரும்? அப்படி ஒரு அச்சத்திற்கும் திகைப்புக்கும் முதலில் ஆளானுர் பாதிரியார். பிறகு ஆனந்த பரவசப்பட்டார். டி. கே. சியையே கண்கொட்டாமல் பார்த் தார். பார்த்துக்கொண்டே வழக்கறிஞர் பால் நாடாரிடம் சொன்னுர்: ''நண்பரே! எதிரே வருவது மனிதர் அல்ல. கந்தர்வ உலகத்தில் நடமாடும் அழகுத் தெய்வம். வழிதவறி இந்த மண்ணுலகில் வந்து நடமாடுகிறது. குற்ருலத்தில் நம் கண்ணெதிரிலேயே வந்து நடமாடுகிறது. அமெரிக்காவிலும்,

ஐரோப்பாவிலும்—ஏன், உலகம் முழுவதிலும் உள்ள லட்சக் கணக்கான மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், நம் எதிரே வரும் இந்த அழகு தேவதையைப்போல ஒருவரையும் நான் பார்த்தது இல்லை.''

இப்படிச் சொன்னார் அமெரிக்கப் பாதிரியார். இனி நம் நாட்டைச் சேர்ந்த முனிவர்கள்—பற்றற்ற ஞான சித்தர்கள்—புலர் டி. கே. சியை பார்த்து அப்படியே சொக்கி நின்றுவிட்டார்கள். முற்றுந்துறந்த முனிவர் கூட்டத்தையே டி. கே. சியின் அழகு ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

பாதிரியாரும் சித்தர்களும் இருக்கட்டும். நான் பணிபுரிந்த அலுவலகத்தில் முற்றத்தையும் உள் கட்டுகளையும் பெருக்கித் துப்புரவுசெய்யும் தோட்டிப் பெண். ஐம்பது வயதுக்காரி, எழுதப் படிக்கத் தெரியாதவள். நாகரீக வாசனையே இல்லாதவள்.

ஒருநாள் என்னைப் பார்க்க என் வீட்டிற்கு வந்தாள். டி. கே. சியின் போட்டோ சுவரில் மாட்டி இருந்தது. படத்தைப் பார்த்தவுடன் அவளுக்கு உடம்பு புல்லரித்தது. மின்சாரத்தில் கைவைத்தவள்போல தடுமாறினாள். பிறகு என்னிடம் ''இது யார்'' என்று படத்தைக் காட்டி கேட்டாள்.

''என்னுடைய தாத்தா'' என்றேன் நான்.

''அப்படியா'' என்று அதிசயித்தாள். கண்கொட்டாமல் படத்தையே பார்த்தாள். மயங்கினாள். உருகினாள். ''எவ்வளவு அழகாய் இருக்கிறார்கள்? தெய்வப்பிறவிதான் இவர்கள். அவர்களுடைய முகம் சிரிக்கிறது. கண் சிரிக்கிறது. மீசை சிரிக்கிறது. தேகம் முழுவதுமே குழந்தைபோலச் சிரிக்கிறது. அப்படியே அள்ளி எடுத்து மடியில் போட்டுக் கொஞ்சலாம் போல இருக்கிறது. அவ்வளவு அழகாய் இருக்கிறது படம்'' என்றாள். அத்துடன் நிறுத்தவில்லை அந்தத் தோட்டிப் பெண்.

''ஐயாவை நினைத்துக்கொண்டு, ஒரு கல்லையோ, ஓட்டுத் துண்டையோ கையில் எடுத்து தரையில் நாலு கோடுகள் போட்டால் போதும். அரைகுறையாய் விழுந்த ஐயா படங்கூடச் சிரித்து மகிழும். நம்மோடு பேசும்'' என்றாள்.

ஆம், உண்மைதான். டி. கே. சி. மாதிரி ஒரு பொம்மை செய்து அந்தப் பொம்மையை எந்தப் பக்கம் கிள்ளினாலும் சரி,

அது உண்மை உண்மை என்று முழங்கும். அழகு அழகு என்று சொல்லும். ஆனந்தம் ஆனந்தம் என்று துள்ளும். தமிழும் தமிழ்ப் பண்பாடும் உன்னதமானவை என்பதை விளக்கும். தமிழ்க் கவிகளை ஆனந்தமாக விளக்கிப் பாடிக்காட்டும். நம்முடைய பயத்தைப் போக்கும். வெறுப்பை நீக்கும். உண்மையை நம் கையில் வைத்து அழுத்தும். வாழ்க்கையில் ருசியையும் நம்பிக் கையையும் உண்டாக்கும்.

காரணம் என்ன?

டி. கே. சி. அழகுமயமான விக்ரமாக இருந்தார். உற்சவ மூர்த்தியாக நடமாடினார். குற்றத்தை நீக்கிக் குணத்தைப் பாராட்டும் வள்ளலாகத் திகழ்ந்தார்.

டி. கே. சியின் அழகு வெறும் தோலின் பளபளப்பில் இல்லை. வேஷம்போட்டு ஆடும் நடிகர்களின் ஜோடிப்புப்போன்ற அலங் காரத்தில் இல்லை. கலையின்—கவிதையின் தெய்வ அழகு, ரத்த மும் சதையும் கொண்ட அவர் மேனியாக அவதாரம் எடுத்தது. இசையின் இன்பமும் அமைதியும் அவருடைய அங்கங்களிலும், அங்கங்களின் துடிப்பிலும் பிரகாசித்தன. அபிநயமும், உணர்ச்சி வெளிப்பாடும், கற்பனையும் அவருடைய முகத்திலும், கண்களி லும், பார்வையிலும் பிரகாசித்தன.

உண்மையும் உணர்ச்சியுமே அவரின் உடம்பாக—நிறமாக—அழகாக ஜொலித்தது.

சங்கராபரணம், தோடி, பைரவி, அடாணு முதலிய ராகங் களைக் கண்ணால் பார்க்கமுடியாது. ஒரு ராகம் போதும். நம் உணர்ச்சிகள் அவ்வளவையும் காட்டிவிடும். அப்படி ஒரு அற்புத சக்தி நிறைந்தவை நம்முடைய ராகங்கள்.

மேலே குறிப்பிட்ட ராகங்கள்—அதாவது இசையே மனித அவதாரம் எடுத்து நம் கண்முன் நடமாடினால் எப்படி இருக்கும்? டி. கே. சியைப் பார்க்கப் பார்க்க அப்படி ஆனந்தமாக இருக்கும். அப்படி ஒரு தெய்வீக அழகு நிறைந்தவர் டி. கே. சி.

உண்மையின் பரம ரகஸ்யமான அழகுதான் டி. கே. சி. என்னும் மனித உரு எடுத்து நடமாடியது. அதனால்தான் டி. கே. சி. உண்மையைப் பார்த்துப் பார்த்து அதிசயித்தார். கரைந்து கரைந்து பரவசப்பட்டார்.

கவியிலும் சரி, இசையிலும் சரி, நடனத்திலும் சரி, நாடகத் திலும் சரி, கோபுரத்திலும் சரி, இட்டிலியிலும் சரி, அன்பிலும் சரி, வீரத்திலும் சரி, சமய வழிபாட்டிலும் சரி, விஞ்ஞான

ஆராய்ச்சியிலும் சரி, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் உண்மையைக் கண்டு கண்டு உபசரித்தார்.

உண்மையைப் பார்த்துவிட்டதால்—பார்த்து அதனோடு உறவுகொண்டுவிட்டதால் பொய்யை எதிர்த்தார். எந்த இடத்தில் பொய் இருந்தாலும் சரி, அது எவ்வளவு வலுவாக இருந்தாலும் துணிந்து அதை எதிர்த்துப் போரிட்டார்.

ஒருவன் பெரிய பாறையையே பொடிப் பொடிக் கல்லாக உடைக்கிறான். பிறகு அதைக் கூடை கூடையாய் அள்ளிச் சுமந்துகொண்டுபோய்க் கொட்டுகிறான். ஒரு குன்றோடு இப்படி அவன் உருண்டு புரண்டு மல்லுக்கட்டினாலும், அவன் தடுமாறுவது இல்லை. ஆனால் அதே மனிதன் பொரித்த அப்பளம் ஒன்றைப் பிட்டுப் பிட்டு வாயில் போடுகிறான். தண்ணீராய்க் கரைந்து ஓடுகிறது அப்பளம். அப்படி ஓடுகிற அப்பளத்துண்டில் ஒரு பொடிக்கல், கடுகைவிட மிகமிகச் சிறிய ஒரு மணல் துண்டு. அது பல்லில் பட்டுவிட்டது. தாங்கமுடியுமா மனிதனால்? அப்படியே தூவென்று அப்பளத்தையே துப்பிவிடுவான்.

வண்டி வண்டியாய்க் கல்லைச் சுமந்தவன்தானே? ஒரு மணலை அரைத்து மென்றுவிடவேண்டியதுதானே என்று சொல்ல முடியுமா?

ஒன்றை உண்மையில் அனுபவித்தால்—அனுபவிக்கிறவன், உண்மைக்கு மாறான அம்சத்தைச் சகிக்கமாட்டான். அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டான்.

அனுபவிக்காதவனுக்குக் கல்லும் ஒன்றுதான், மண்ணும் ஒன்றுதான், பாறையும் ஒன்றுதான்.

டி. கே. சி. உண்மையைப் பார்த்து அனுபவிக்கிறவர். ஆனந்திக்கிறவர். அந்த ஆனந்தத்தை எல்லோருக்கும் அள்ளி வழங்குகிறவர். அப்படி உண்மையை அனுபவித்து ஆனந்திக்கிறவர், அதோடு சேர்த்து பொய்யை மென்று விழுங்கும் என்றால் எப்படி அவரால் முடியும்?

அதனால் பொய்யை எதிர்த்துப் போராடினார், மெய்யை வழிபட்டு இணைந்து தோய்ந்தார்.

வாழ்க்கையில், கலையில், கவியில் அணுவளவு குற்றம் இருந்தாலும், சரிவு இருந்தாலும், தடுமாற்றம் இருந்தாலும் டி. கே. சியின் இதயத்தில் ஆணிகொண்டு அறைந்ததுபோல அதிர்ச்சி உண்டாகும்.

குற்றமோ, தடுமாற்றமோ வேண்டாம். ஒரு குறை இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம், அதுகூட டி. கே. சியின் உணர்ச்சியை முள் குத்துவதுபோல் குத்தும். அதை நிறைவு செய்யாமல் டி. கே. சியால் தூங்க முடியாது.

குறை நீங்கி அது நிறைவுபெற்றவுடன் டி. கே. சி. துள்ளிக் குதிப்பார். எல்லாருக்கும் அதன் பரிபூரண சௌந்தர்யத்தை அம்சம் அம்சமாக எடுத்துக்காட்டுவார். வாழ்நாள் முழுவதும் அந்த அழகைக் காட்டிக் காட்டி ஆனந்தத்தில் திளைப்பார். எல்லோரையும் ஆனந்த சாகரத்தில் திளைக்கச் செய்வார்.

இதுதான் டி. கே. சி. இதுதான் அவர் வாழ்க்கை. இதுதான் அவருடைய அற்புத அழகு.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தெய்வ கடாட்சம் பெற்ற கவிஞர். பல்லாயிரம் வருடங்களாக வளர்ந்து வந்த தமிழ்ப் பண்பு முழுவதையும், இசைப்பண்பு முழுவதையும், கவிப்பண்பு முழுவதையும் அவருடைய ஒவ்வொரு கவிதையிலும் கண்ணாரப் பார்க்கலாம். இருபதாம் நூற்றுண்டின் கவிஞர் இருவரில் ஒருவர் தேசிகவிநாயகம் பிள்ளை.

குடத்து விளக்கேபோல் ஒதுங்கிக்கிடந்த தேசிகவிநாயகம் பிள்ளையை வெளியில் கொண்டுவந்து தமிழர்களுக்கு இனங் காட்டியது டி. கே. சி. தான்.

டி. கே. சியின் மூலம்தான் கவிமணியும், கவிமணியின் கவிகளும் தமிழுக்கு ஒரு பொக்கிஷமாகக் கிடைத்தன.

தனக்கு வேண்டியவர் ஒவ்வொருவரிடமும் ராஜாஜி, கல்கி, ஆர். கே. சண்முகம் செட்டியார், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் திருமூர்த்தி, திருப்புகழ்மணி முதலியவர்களிடம் எல்லாம் கவிமணியின் கவிகளைப் பாடிக்காட்டி மதிக்க வைத்தார்கள் டி. கே. சி.

தன்னைப் பார்க்கவரும் நண்பர், அன்பர் ஒவ்வொருவரையும் கவிஞரைப் போய் பார்த்துவரும்படி சொல்வார்கள். ராஜாஜி போன்றவர்கள் எல்லாம் நாகர்கோவில் வரை சென்று—கவிமணியைப் பார்த்து மரியாதை செய்து வந்தார்கள் என்றால், அது ரசிகமணியால்தான்.

அப்படித் தமிழகம் முழுவதையும் தேசிகவிநாயகம் பிள்ளையிடம் ஈடுபாடு கொள்ளும்படி செய்தார் டி. கே. சி.

''கண்ணீரக் காண ஒரு கவிஞர்'' என்று தேசிகவிநாயகம் பிள்ளையை தமிழகம் முழுவதும் அங்கீகரிக்கும்படி டி. கே. சி. செய்தார்.

சுமார் முப்பத்தேழு வருடங்களுக்குமுன்—1947 அல்லது நாற்பத்தி எட்டாம் வருடம் என்று நினைக்கிறேன். தென்காசியில் திருவள்ளுவர் கழக ஆண்டு விழா துவங்கிய நாள். அன்றைய நிகழ்ச்சிக்கு அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை தலைமை தாங்க வந்துள்ளார்.

விழா நாள் அன்று டி. கே. சி. வீட்டில் காலை 9 மணிக்கு நானும் வேறு சில நண்பர்களும் டி. கே. சியுடன் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். அப்பொழுது முற்றத்தில் கார் ஒன்று வந்து நிற்கிறது. அரசாங்கக் கவிஞர் காரிலிருந்து இறங்கிவருகிறார். அவரைத் தொடர்ந்து இரண்டு நண்பர்கள் வருகிறார்கள். மளமளவென்று வீட்டினுள் வந்த ராமலிங்கம் பிள்ளை அவர்கள் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டிருக்கும் டி. கே. சியின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகிறார்.

டி. கே. சியின் உள்ளம் உருகிவிடுகிறது. கவிஞரை எழுந்திருக்க வேண்டுகிறார். கவிஞரும் எழுந்து அமர்கிறார். அப்பொழுது கவிஞரை எங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கிறார் டி. கே. சி.

எப்படி வருகிறது அறிமுகம்?

''ராமலிங்கம் பிள்ளை என்றால் அரசாங்கக் கவிஞர் என்பது அல்ல பொருள். அன்பும் எளிமையும் என்பதே அதற்குரிய பொருள். பிள்ளை அவர்களுடைய அன்பு, எளிமை, ஈடுபாடு ஏன்—பக்தி முழுவதுமே இவர்கள் எழுத்தில்—வசனத்தில் பிரகாசிக்கின்றன.''

'' 'என் கதை' என்று ஒரு நூல் எழுதி இருக்கிறார்கள். ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை அல்ல, ஐந்து ஆறு தடவைக்கு மேல் அதைப் படித்துவிட்டேன். படிக்கப் படிக்க ஆனந்தமாக இருக்கிறது இவர்களுடைய அனுபவமும் விளக்கமும்.''

''தமிழன்னை தன்னிடம் உள்ள கவிதா சக்தியை தேசிக விநாயகம் பிள்ளைக்கு அருளினாள். பாரதியாருக்கும் வழங்கினாள், சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரிடமும் கொடுத்தாள். பிறகு ராமலிங்கம் பிள்ளையைக் கூப்பிட்டாள். 'கோபித்துக்கொள்

ளாதே அப்பா' என்று தன்னிடம் உள்ள வசனப் பாங்கை இவர்களிடம் ஒப்படைத்து விட்டாள்.''

கவிஞரை இப்படிப் பாராட்டிவிட்டு, ''நான் சொல்வது உண்மைதானே'' என்று கவிஞரை நோக்கியே கேட்டார் டி. கே. சி.

''நூற்றுக்கு நூறு உண்மை'' என்றார் ராமலிங்கம் பிள்ளை.

''அப்படிச் சொல்லுங்கள். நீங்கள் இப்பொழுது ஏற்றுக் கொண்டீர்களே இதற்குத்தான் வீரம் என்று பெயர். உண்மை என்றும் பெயர்'' என்று கனிந்து உருகினார் டி. கே. சி.

''இப்படி வீரம் உடையவர்களையே வசன ரூபத்திலோ கவி உருவத்திலோ பாஷை தேடிவரும்'' என்று முத்தாய்ப்பு வைத்தார் டி. கே. சி.

அரசவைக் கவிஞராகவும் விடுதலை வீரராகவும் இருந்த ஒருவர் தன் காலில் வந்து விழுகிறார். அவரை ''நீங்கள் கவிஞர் அல்ல'' என்று விளக்கிக் காட்டுகிறார் டி. கே. சி. தேசிக விநாயகம் பிள்ளையை—எங்கோ இருக்கிற அப்பாவி தேசிக விநாயகம் பிள்ளையையே கவிஞர் என்று சொல்லிவிடுகிறார் டி. கே. சி.

இந்த உண்மைதான் தவங்கிடந்து தவங்கிடந்து அழகு என்னும் அவதாரம் எடுத்து டி. கே. சியோடு சேர்ந்து கிடந்தது.

மேனியின் வெறும் மினுமினுப்பு அல்ல டி. கே. சியின் அழகு. உண்மையின் சொரூபமே டி. கே. சியிடம் அழகாக அமர்ந்தது.

முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்குமுன் தமிழ் வளர்ச்சிக் கழகம், சிறந்த தமிழ் நூல்களுக்கு ஐந்நூறு ரூபாய் பரிசளித்து வந்தது. அரசாங்கச் சார்புடையது தமிழ் வளர்ச்சிக் கழகம். அதனால் அதனிடம் பரிசு பெறுவது பெரிய கௌரவமாக மதிக்கப்பட்டது. பரிசளிப்புக் குழுவின் தலைவர் டி. கே. சி. உறுப்பினர்கள் டாக்டர் திருமூர்த்தி, திருமதி சாவித்திரி அம்மாள் முதலிய நால்வர்.

மருத்துவம், பௌதீகம் முதலிய துறைகளைச் சேர்ந்த நூல்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துவிட்டது குழு. இனி, பரிசுக்கு ஏற்ற இலக்கிய நூலைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கவிமணியின் பாடல்கள் என்ற நூலும் பார்வைக்கு வந்திருந்தது. பரிசுக்குழு உறுப்பினர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. ''நமது பணி எளிதாகிவிட்டது. கவிமணியின் பாடல் நூல் வந்திருக்கிறது. வேறு ஒன்றைப் புரட்டவேண்டாம்'' என்று ஆறுதல் அடைந்தனர் பரிசுக்குழு உறுப்பினர்.

தேவியின் பாடல் நூலே சிபார்சு செய்து ரசிகமணியிடம் கொடுத்தனர் உறுப்பினர். அதை வாங்கினுர் டி. கே. சி. அப்படியே தூர எடுத்து வைத்துவிட்டார் தேவியின் பாடல் நூலே. ''பரிசுக்கு வேறு நூலேப் பாருங்கள், தேசிகவிநாயகம் பிள்ளேயை விட்டுவிடுங்கள்'' என்ருர் டி. கே. சி.

உறுப்பினர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லே. கவிமணியின் நூலே ஒதுக்கிவைப்பது ரசிகமணியா என்று நீதிபதிகள் திகைத்தனர். டாக்டர் திருமூர்த்தி டி. கே. சியை நோக்கி துணிச்சலோடு கேட்டார்: ''கவிமணியின் பாடல்களே ஒதுக்கிவிட்டு மற்றதுக்குப் பரிசு வழங்கினுல் அது எப்படி ஞாயம் ஆகும்?'' என்று.

இதைக்கேட்ட டி. கே. சி. ''அப்படிச் சொல்லுங்கள் ஐயா, அப்படிச் சொல்லுங்கள்! கவிமணியின் பாடல்தான் பாடல்கள். அதற்கு இணேயான பாடல்கள் தற்பொழுது எங்கும் இல்லே. இதை நன்ருகத் தெரிந்தவன்தான் நான். அது காரணமாகவே பரிசு விஷயத்தில் கவிமணியை ஒதுக்கிவைக்கிறேன்.''

''அருளில் விளேகிற கவியை பரிசுவைத்து அளப்பது நேராகாது.''

''பரிசு பெறுவதற்கு ஏற்ற நூலேத் தேர்ந்தெடுக்கவே நாம் கூடி இருக்கிருேம். தெய்வீக சிருஷ்டிகளே அனுபவிக்க நாம் கூடவில்லே.''

டி. கே. சியின் தீர்ப்பை நீதிபதிகள் கேட்டனர். கேட்ட பிறகுதான் டி. கே. சியின் சத்திய வேட்கையையும், அதற்காக எதையும் தியாகம் செய்யும் அவருடைய பக்தியையும் அவர்கள் பார்க்க முடிந்தது.

போலிகளிடமிருந்து உண்மையைப் பிரித்தெடுத்து அதைக் கையில் வைத்து அப்படியும் இப்படியும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறவர் டி. கே. சி. அந்த ஆனந்தத்தை மற்றவர்களுக்கும் அள்ளி அள்ளி வழங்கிய வள்ளல் அவர்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை கடவுள் தத்துவம்பற்றி ஒரு பாடல் எழுதி அதை ஆனந்த விகடன் தீபாவளி மலருக்கு அனுப்பிவைத்தார்.

கோவிலுக்குள்ளோ, சிலைகளுக்குள்ளோ கடவுள் இல்லை என்பது பாடலின் கருத்து.

''கோவில் முழுவதையும் நான் ஒன்றுவிடாமல் பார்த்தேன். கோபுரத்தின் உச்சியில்கூட ஏறிப் பார்த்துவிட்டேன். கடவுள் தென்படவில்லை. தெப்பக்குளம், தேர் உலவு ரத வீதியிலும் கடவுளைக் காணமுடியவில்லை. அலங்காரம் அபிஷேகம் ஒன்றிலும் அவனை நான் பார்க்கவில்லை'' என்று சொல்லிவிட்டு, கடைசியாக

''தில்லைப் பதியும்கண்டேன்—அங்குச்
சிற்றம் பலமும் கண்டேன்
கல்லைக் கனிசெய்வோனைத்—தோழி
கண்களால் கண்டிலனே''

என்று முடிகிறது பாடல்.

ஆனந்த விகடன் ஆசிரியர் கல்கி பாடலைப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் ஓடவில்லை. நாத்திகவாதம் அல்லவா பாடலில் உறுமுகிறது என்று தீர்மானித்தார். ஆனாலும் கவிப் பண்பும் இசைப் பண்பும், தமிழ்ப் பண்பும் பாடலில் தொனிக்கின்றனவே! என்ன செய்வது இதை என்று மயங்கினர். அப்படியே டி. கே. சி. கையில் கொடுத்துவிட்டார் பாடலை.

டி. கே. சி. பாடலைப் படித்துப் பார்த்தார்கள். ''பக்தியின் உண்மையைக் காட்டவந்த மெய்யுணர்வு, சட்டென்று திகைத்து நின்றுவிட்டதே கவிஞரிடம்'' என்று கண்டார்கள். அப்படியே இரண்டு துண்டுகளைப் பாடி அதோடு சேர்த்தார்கள்.

அந்தத் துண்டுகள் இவைதாம்:

1. ''கண்ணுக்(கு) இனியகண்டு—மனத்தைக்
காட்டில் அலையவிட்டுப்
பண்ணிடும் பூசையாலே—சகியே
பயன்ஒன்றும் இல்லையடி.''

2. ''உள்ளத்தில் உள்ளான்அடி—அதைநாம்
உணர வேண்டும்அடி
உள்ளத்தில் காண்பாயானல்—கோயில்
உள்ளேயும் காண்பாயடி.''

கண் திறக்காமல் இருந்த கவிதாதேவி இப்பொழுது கண் திறந்துவிட்டாள். விண்ணுக்கும் மண்ணுக்கும் சிறகடித்துப் பறக்கவே ஆரம்பித்துவிட்டாள். கடவுள் தத்துவத்தின் உண்மை யானது உணர்ச்சிமயமாய்ப் பொங்கி ஜகஜோதியாய்ப் பிரகாசிக் கிற விந்தையைக் கல்கி பார்த்துப் பார்த்து வியந்தார்.

அப்படியே டி. கே. சியின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டார் கல்கி. ஆனந்த விகடன் தீபாவளி மலரில் தேசிகவிநாயகம் பிள்ளை பாடல் ஜாம் ஜாம் என்று பிரசுரம் ஆகிவந்தது. கவிமணி தீபாவளி மலரைப் பார்த் தார். தம் பாடலைப் பார்த்தார். சிவலிங்கம் முளைத்ததுபோல தம் பாடலுக்கு உயிரூட்டி முளைத்து நிற்கும் இரண்டு கண்ணிகளை யும் பார்த்தார். இவை எப்படி உண்டாயின என்று அதிசயப் பட்டார். பிறகு விவரம் தெரிந்தது. ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் கவிஞர்.

பூர்த்தியாகாமல் மொட்டையாக நிற்கும் உண்மையின் மேல் டி. கே. சியின் பார்வை விழுந்தாலே போதும். அது கல்லாக இருந்தாலும் செம்பாக இருந்தாலும் களிமண்ணாக இருந்தாலும் தங்கமாக—தங்க விக்ரமாகவே எழுந்து வந்துவிடும்.

உண்மை என்பது அழகின் உருவமே.

1946-ஆம் வருடம் என்று ஞாபகம். மகாத்மா காந்தியடிகள் சென்னை வந்திருந்தார். அப்பொழுது ராஜாஜி, காந்தி மகா னுக்கு டி. கே. சியை அறிமுகப்படுத்திவைத்தார்.

பரம்பொருளின் பேராற்றல்பற்றி ஆங்கிலத்தில் தெளிவாக ஒரு விளக்கம்கொடுத்து விட்டு—அதற்கு உரிய தமிழ்ப் பாடல் ஒன்றை மத்திமாவதி ராகத்தில் சுத்தமாகப் பாடிக் காட்டினார் டி. கே. சி.

காந்திஜியின் உள்ளத்தில் ஆனந்தக்கடலே பொங்கிவிட்டது. டி. கே. சியை ஆர்வத்தோடு பார்த்தார். பிறகு ராஜாஜியை நோக்கி, ''உங்களுக்கு மிக இனிமையான அறிஞர் நண்பராகக் கிடைத்திருக்கிறார். நீங்கள் ரொம்பப் புண்ணியம் செய்தவர் கள்'' என்று வாழ்த்தினார்.

மேலும் ஒரு பாடல் சொல்லவேண்டும் என்று டி. கே. சியிடம் காந்திஜி வேண்டினார்.

ராமனுடைய சத்தியவேட்கை சம்பந்தமான இரண்டு பாடல்களை கம்ப ராமாயணத்திலிருந்து எடுத்து டி. கே. சி. பாடிக் காட்டினார். ராமபிரானை தியாகமூர்த்தியாக விளக்கிக்காட்டும் அப்பாடல்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்து பாடலை வளைத்து வளைத்து சங்கராபரணம் ராகத்தில் பாடிக் காட்டினார் டி. கே. சி.

விளக்கத்தையும் பாடலையும் ஆழ்ந்த உள்ளுணர்வோடு ஏற்று அனுபவித்தார் காந்திஜி. டி. கே. சியையும் ராஜாஜியையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு சொன்னார்:

''நீங்கள் இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் பொருத்தமான நண்பர்கள். உங்கள் நட்பு வளருமே தவிர குறையாது.''

உடனே ராஜாஜி, ''நாங்கள் இரண்டுபேரும் ஐம்பது வயதைத் தாண்டியபிறகுதான் பழகினோம். வயதானபின் உறவாடுகிற பழக்கத்தில்தான் உண்மையான காதல் இருக்கிறது'' என்றார்.

''இரண்டு உள்ளங்களை ஒன்றுபடுத்துகிற அன்பின் வேகத்தைக் காதல் என்றும் சொல்லலாம், பக்தி என்றும் சொல்லலாம்'' என்று விளக்கம் கொடுத்தார் டி. கே. சி.

எதையோ ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்த காந்திஜி டி. கே. சியைப் பார்த்து, ''நான் கம்பருடைய பாடல்களை மூலத்தில் அனுபவிக்க வேண்டும். அதற்கு வழி என்ன?'' என்று கேட்டார்.

கொஞ்சங்கூட தயங்காமல் பளிச்சென்று டி. கே. சி. சொல்லிய பதில் இதுதான்:

''கம்ப ராமாயணம் மட்டும் அல்ல, தமிழ்ப் பாடல் எதாக இருந்தாலும் அதை அனுபவிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு: அது நீங்கள் தமிழனாகப் பிறப்பதுதான்.''

இந்தப் பதில் காந்திஜியை அதிசயத்தில் திக்குமுக்காட வைத்துவிட்டது.

''கம்பரைப் படிக்கவேண்டும் நான், வழி என்ன?'' என்று காந்திமகான் ஒருவரிடம் கேட்டால் அவர் என்ன சொல்வார்? ''மூன்றே மாதத்தில் தமிழ் முழுவதையும் உங்களுக்கு நானே சொல்லிக் கொடுத்துவிடுகிறேன்'' என்றுதானே பதில் சொல்லு

வார்? யாராக இருந்தாலும் அவரிடமிருந்து பதில் மேலே சொல்லியபடிதான் வரும்.

டி. கே. சி. அப்படிச் சொல்லவில்லை. கவியை அனுபவிப்பது என்பது தாய்மொழி ஒன்றில்தான் முடியும். பிற மொழியை படித்து அதில் உள்ள பாடல்களை அனுபவிப்பது முடியாத காரியம். பாடலில் உள்ள விஷயத்தை வேண்டுமானால் ஜாடை மாடையாகத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் கவிப் பண்பையோ, உணர்ச்சி பாவத்தையோ தெரிந்துகொள்ள முடியாது.

இந்த உண்மையை மிகத் தெளிவாகத் தெரிந்தவர் டி. கே. சி. தம் அனுபவத்தை எங்கும் எப்பொழுதும் அவர் வெளிப் படுத்தத் தயங்கியதே இல்லை.

மகாத்மா காந்தி ஆயிற்றே, அவரிடம் கொஞ்சம் பேரம் பண்ணிப் பேசுவதுதான் பொருத்தம் என்று டி. கே. சியால் நினைக்கக்கூட முடியவில்லை.

எவ்வளவுதான் நீங்கள் முயன்றாலும் வேறு மொழியில் உள்ள பாடல்களை உங்களால் அனுபவிக்க முடியாது என்று காந்தி மகானிடமே சொன்னார் டி. கே. சி.

இனி, கவர்னர் ஜெனரலாக ராஜாஜி டில்லியில் இருக்கிறார். டி. கே. சி. ராஜாஜியின் விருந்தினராக மூன்று வாரம் டில்லியில் இருந்தார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேருவிடம் டி. கே. சியை ஒருநாள் அறிமுகம் செய்துவைத்தார் ராஜாஜி.

நாற்பது நிமிடம் டி. கே. சி.யோடு பண்டித நேரு பேசிக் கொண்டிருந்தார். ''எவ்வளவு பெரிய ஞானவானாக இருக்கிறார். அவ்வளவையும் தெள்ளத் தெளிய அல்லவா கண்டுவைத்திருக் கிறார்'' என்று பண்டித நேரு அதிசயப்பட்டார்.

டி. கே. சியிடம் மிக்க மரியாதை உண்டாகிவிட்டது நேரு வுக்கு. ''மறுநாளைக்கு மறுநாள் மத்தியானம் தன் வீட்டுக்கு வந்து தன்னோடு உணவருந்த வேண்டும்'' என்று டி. கே. சியை வேண்டினார் நேரு.

டி. கே. சி. ஒப்புக்கொண்டார்.

உரிய நேரத்தில் நண்பர்கள் இருவருடன் நேரு வீட்டிற்கு டி. கே. சி. வந்து சேர்ந்தார். இருவரில் ஒருவர் டி. கே. சியின்

செயலாளர், இன்னொருவர் சமையல்காரர். நேருவின் வீட்டில் அமைச்சர்கள் சிலரும், உயர் அதிகாரிகள் சிலரும் இருந்தனர். சம்பிரதாயப்படி அறிமுகம், வரவேற்பு நடைபெற்றன. ஒவ்வொருவரும் அவரவருக்குரிய இடத்தில் அமர்ந்தார்கள். அமர்ந்து விருந்தை அனுபவிக்க முனைந்தார்கள்.

நேருவின் பக்கத்தில் டி. கே. சி. அமர்ந்திருந்தார். டி. கே. சியின் சமையல்காரன் டி. கே. சியிடம் ஒரு பையைக் கொடுத்தான். அதனுள் இருந்து ஒரு பாத்திரத்தை எடுத்தார் டி. கே. சி.

பாத்திரத்தைத் திறந்தார். ஒரு தட்டில் இட்டிலி இருந்தது. இன்னொரு தட்டில் தயிர் இருந்தது. இட்டிலியில் தயிரை விட்டுப் பிசைய ஆரம்பித்தார் டி. கே. சி.

இதைப் பார்த்த நேருவுக்கு வியப்புத் தாங்கமுடியவில்லை. அதைவிட ஆத்திரம். கொஞ்சம் அதிகார தொனியோடு நேரு கேட்டார்:

''என்ன முதலியார்! நீங்கள் வறட்டு வைதீகமா?'' என்று.

கொஞ்சங்கூடத் தயங்காமல் பதில் சொன்னார் டி. கே. சி., ''இல்லை, எனக்கும் வைதீகத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆனால் என் வயிறு இருக்கிறதே அது ஒரே வைதீக மயம்'' என்று.

டி. கே. சியின் பதில் விருந்தினர்களை ஒரு குலுக்கு குலுக்கி விட்டது. பதிலின் தோரணையை ரசித்து ரசித்து அவர்கள் விருந்தைப் புசித்தார்கள். ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் புதிய புதிய சுவையை ஊட்டியது பதிலில் இருந்து ஊறிய ரசம்.

நேருவிற்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. டி. கே. சியின் தோளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினார். ''உங்களுடைய தெளிவும் ஞானமும் இந்த தட்டு, கரண்டி, மேஜை, நாற்காலி எல்லாவற்றையும் சிரிக்கவைத்துவிடுகின்றன. அப்படியானால் மனிதர்களை என்ன பாடுபடுத்தும்'' என்று தமக்கே உரிய அலங்கார மொழியில் பாராட்டினார் நேரு.

இப்படி எல்லாம் மற்றவர்களை ஆனந்தக் கடலில் மிதக்க வைத்த அழகு எங்கிருந்து கிடைத்தது டி. கே. சிக்கு? அவருடைய உணர்ச்சியிலிருந்து — உண்மைமயமான உணர்ச்சியிலிருந்தே அந்த் அழகு விளைந்தது.

வழிதப்பி வந்த அழகுத் தெய்வம்

1948-ஆம் வருடம் சென்னையில் இந்திப் பிரச்சார சபையில் மகான் விநோபா பாவே சிலநாள் தங்கி இருந்தார். பாவேயிடம் டி. கே. சியை அறிமுகம் செய்துவைத்தார் ஆசிரியர் கல்கி.

டி. கே. சியும் பாவேயும் மனந்திறந்து உறவாடினர்கள். ஒரு பாடல் சொல்லும்படி பாவே டி. கே. சியை வேண்டினர்.

இரண்யன் வதை படலத்திலிருந்து ஒரு பாடலை எடுத்து விளக்கம் கொடுத்துப் பாடினர் டி. கே. சி.

''தூணில் இருக்கிருரா நீ சொல்லும் கடவுள்'' என்று இரண்யன் பிரஹலாதனிடம் கிண்டலாகக் கேட்கிருன். அதற்குப் பிரஹலாதன் பக்தியோடு பதில் சொல்கிருன். எப்படிச் சொல் கிருன்? ''இந்தத் தூணில் நிறைந்திருப்பது கடவுள்தான். அது மட்டுமா? சாண் அளவு உள்ள சிறிய பொருளிலும் இறைவன் தான் இருக்கிருன். மகா மேரு மலை போன்ற மாபெரும் வஸ்து விலும் அவனே நிறைந்திருக்கிருன். அணுவிலும் இறைவன்தான். அணுவின் உட்பகுதியாகிய கோண் என்னும் துகளிலும் அவன் தான்.

கடவுள் எங்கிருக்கிருர் என்று ஆணவத்தோடு கேட்கிருயே, அந்த ஆணவத்துக்குள்ளும் அவன்தான் இருக்கிருன். அவன் இல்லாமல் ஒன்றும் இல்லை. நீயும் அவன்தான். நானும் அவன் தான்.''

இப்படிப் பதில் சொல்கிருன் பிரஹலாதன் என்று முதலில் விளக்கம் கொடுத்தார் ரசிகமணி. தொடர்ந்து ''சாணினும் உளன்'' என்னும் கம்பருடைய பாடலை நிறுத்தி இசையோடு பாடினர்.

பாடலை அனுபவித்துத் திளைத்தார் விநோபா பாவே.

பிறகு சொன்னர்:

''நான் வால்மீகி, துளசிதாசர் போன்ற பலருடைய ராமா யணங்களைப் படித்திருக்கிறேன். துதிப் பாடல்கள் எவ்வளவோ பார்த்திருக்கிறேன். ஆனல் தமிழ்ப் பாடலில் உள்ள மந்திர சக்தி தனி. அது உண்மையின் சந்நிதானத்திற்கே நம்மைக் கொண்டுபோய்விடுகிறது.''

''கடவுள் இல்லை என்று சொல்கிற சொல்லிலும் கடவுள்தான் இருக்கிருர்'' என்றுசொல்ல முடிகிறதே! இப்படித் தமிழ் ஒன்றில்தான் சொல்லமுடியும். கம்பர் ஒருவர்தான் இவ்வாறு உண்மைக்குத் தெளிவு கொடுக்க முடியும்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

''கவியின் மர்மங்களை எல்லாம் நன்குணர்ந்து அனுபவித்து நீங்கள் ஆனந்தத்தில் திளைக்கிறீர்கள். அந்த ஆனந்தத்தை மற்ற வர்களும் அனுபவிக்க வழங்கி விடுகிறீர்கள். தாங்கள் வெறும் ஞானி அல்ல, ''ரஸக் ஞானி'' என்று டி. கே. சியைப் பாராட்டி னார் விநோபா பாவே.

கள்ளம் கபடம் இல்லாத குழந்தை போன்றவர்கள் டி. கே. சி. குழந்தை போன்றவர்கள் என்பதைவிட குழந்தை என்று சொல்வதுதான் சரி?

எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் குழந்தையானது ஒன்றை அனுபவிக்கும். அனுபவித்து ஆனந்தத்தில் திளைக்கும். டி. கே. சியும் அப்படியே அனுபவித்துத் திளைப்பார்கள். எதைப் பற்றியும் அலட்டிக்கொள்ளமாட்டார்கள். உடல், பொருள், ஆவி அவ்வளவையும் தத்தம் செய்து அனுபவிப்பார்கள். ஆனந் தத்தில் திளைப்பார்கள்.

நண்பர்கள் சிலருக்குத் தனிப்பாடல்கள் சிலவற்றைச் சொல்லி விளக்கிக்கொண்டிருந்தார்கள் டி. கே. சி. சாரல் காலம். இரவு எட்டு மணி இருக்கும். குற்றாலத்தில் தூறல் பொசு பொசு என்று தூறிக்கொண்டிருக்கிறது. டி. கே. சி. வீட்டுமுன் ஒரு வேன் வந்து நின்றது. அதிலிருந்து பெரியார் ராமசாமி நாயக்கர் இறங்கி வீட்டினுள் மளமள என்று வந்தார். டி. கே. சி. அவரை வரவேற்று உபசரித்தார்கள்.

தனிப் பாடல்கள் இரண்டை விளக்கிப் பாடிவிட்டு திருக் குறளிலிருந்து இரண்டு பாடல்களுக்கு விளக்கம் கொடுத்துச் சொன்னார்கள். ராமசாமி நாயக்கருக்கு வியப்புத் தாங்கமுடிய வில்லை. டி. கே. சியை நோக்கிப் பெரியார் சொன்னார்: ''உங் களைப்போல் ஒருவரும் சொல்லமாட்டேன் என்கிறார்களே! நானும் பெரிய பெரிய புலவர்கள் இடம் எல்லாம் குறளைக் கேட்டிருக்கிறேன். ஒருவர்கூட உங்களைப்போல் தெளிவாகச் சொல்லவில்லையே.''

''நீங்கள் குறளைச் சொல்லும்பொழுது அப்படியே அதன் கருத்து விளங்கிவிடுகிறது. அப்படி இருந்தும் ஏன் குறளை ஜனங்கள் அனுபவிக்க முடியாமல் திணறுகிறார்கள்?''

இப்படி மனந்திறந்து கேட்டார் ராமசாமிப் பெரியார்.

உடனே டி. கே. சி. சொன்னார்கள்:

''உங்களுக்கு விளங்குகிறது. நீங்கள் ஒரு லட்சியத்தில் நின்று உழைக்கிறீர்கள். உண்மையோடு உழைக்கிறீர்கள். அதனால்

விளங்குகிறது. மற்றவர்கள் அப்படி 'உழைக்கிறார்களா? உண்மையில் நிற்கிறார்களா? இல்லையே! வெறும் சோம்பேறிப் பயல்களுக்குக் குறள் எங்கு விளங்கும்? பிறரை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறவர்களுக்கு குறள் விளங்காது.''

''நம்ம பயல்களுக்குக் கம்ப ராமாயணமே விளங்கவில்லையே? பிறகு, குறள் எப்படி விளங்கும்? ராமாயணத்தில் கதை இருக்கிறது. அது எளிதில் விளங்கக்கூடியது. அதுவே புரியவில்லை நம்மவர்க்கு. பிறகு குறள் புரியுமா?''

''குறள் புரியவேண்டுமானால் இதயத்தில் உண்மை இருக்க வேண்டும். அது லட்சிய வடிவம் பெற்று செயல்பட வேண்டும். தங்களிடம் உண்மை இருக்கிறது. லட்சியம் இருக்கிறது. செயல் வேகம் இருக்கிறது.''

''பெரும்பாலானவர்கள் அப்படி இல்லையே! தந்திரம், பித்தலாட்டம், வஞ்சகம் இவைதானே இருக்கின்றன''.

அழுத்தம்திருத்தமாக டி. கே. சி சொல்லியதைக் கேட்ட நண்பர்கள் வியந்துபோனார்கள். பெரியார் ராமசாமி நாயக்கரும் அசந்து போனார்.

கம்ப ராமாயணம் என்றால் நாயக்கருக்கு வேப்பங்காய். அதைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று படை திரட்டியவர் நாயக்கர். அவரிடமே நேருக்கு நேராக, ''கம்பரே விளங்கவில்லை என்றால் குறள் எப்படி விளங்கும்'' என்று கேட்கிறார் டி. கே. சி. யாதொரு களங்கமும் இல்லாமல் கேட்கிறார் டி. கே. சி. அப்படியானால் டி. கே. சியின் மனம் உண்மையை அனுபவிக்கும்பொழுது மிச்சம் சொச்சம் வைக்காமல் அனுபவிக்கும். அது இது என்று லாப நஷ்டம் பார்த்து அனுபவிக்கிற வேலை டி. கே. சியிடம் இல்லை.

டி. கே. சியிடம் இப்படி ஒரு உண்மை உணர்ச்சி, கள்ளம் கபடம் இல்லாத தூய உண்மை உணர்ச்சி இருந்ததனால்தான், டி. கே. சியின் சஷ்டியப்த பூர்த்தி விழா இலஞ்சிக் குமாரர் கோவிலில் நடைபெற்றாலும் அதில் வந்து கலந்துகொண்டார் ராமசாமி நாயக்கர்.

நாயக்கரின் தொண்டர்குழாம் தடுத்துப் பார்த்தது. ''முருகன் கோவிலில் வைத்து நடைபெறுகிறதே? நாம் ஏன் போக வேண்டும்'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தது.

''அறுபதாம் கல்யாணம் முதலியாருக்குத் தானப்பா நடக்கிறது. முருகனுக்கா நடக்கிறது?'' என்று தொண்டர்குழாத்

துக்குச் சமாதானம் சொல்லிவிட்டு முருகப் பெருமானுடைய சந்நிதானத்திற்கே வந்துவிட்டார் நாயக்கர்.

வந்தது மட்டும் அல்ல, எல்லோருடனும் இருந்து கோவிலில் தயாரான சித்ரா அன்னங்களைச் சாப்பிட்டார். அன்பர்களுடன் சேர்ந்து நிழற்படமும் எடுத்துக்கொண்டார்.

மகாத்மா காந்தி அடிகளும் குருதேவர் ரவீந்திரநாத் தாகூரும் ஒருவரை ஒருவர் மதித்து உறவாடினார்கள். அவர்களுடைய உறவில் தூய அன்பு இருந்தது. கனிந்து தேன் சொட்டும் பக்தி இருந்தது. உண்மையான அன்பும் பக்தியும் பரிமளிக்கும் நட்பு அமைவது எளிதான செயல் அல்ல. அதைத் தெய்வச் செயல் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆயிரம் வருடங்களுக்கு முன் மகாகவி கம்பருக்கும் சடையப்ப வள்ளலுக்கும் அப்படி ஒரு உறவு இருந்தது. அதற்கும் ஆயிரம் வருடங்களுக்குமுன் கபிலரும் பாரியும் அப்படிப் பழகினார்கள். ஒளவையாருக்கும் அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் அதே போன்ற நட்பு இருந்தது.

இத்தகைய நட்புக்கு இணையாக உலகில் வேறு எதைச் சொல்லமுடியும்?

''யாதினும் இனிய நண்ப'' என்று ராமன் குகனைப் பார்த்துச் சொல்கிறான் என்றால், அது நட்பின் அற்புதத்தைத்தானே காட்டுகிறது? இல்லாவிட்டால், ராமனுக்கும் குகனுக்கும் ஏற்பட்ட உறவைப் பார்த்து அனுபவித்த பிராட்டியார் ''வாழி நண்பு'' என்று அதைக் குறிப்பிட முடியுமா?

இப்படி ஒரு தெய்வ மணம் கமழும் நட்பை ராஜாஜி, டி. கே. சி. உறவில் நாம் கண்குளிரக் கண்டு களித்தோம்.

நாட்டுக்காக அரும்பெரும் தியாகம் செய்த புண்ணியமூர்த்தி ராஜாஜி. அவரைத் தென்னாட்டுக் காந்தி என்று சொல்வார்கள். காந்திஜியோ, ''என் மனச்சாட்சியின் காவலர் ராஜாஜி'' என்றார்.

ராஜாஜியின் அறிவும் மூளையும் அசுரத்தனமானவை. ஒவ்வொரு அம்சத்தையும் பார்த்த மாத்திரத்திலேயே எடைபோட்டு கணித்துவிடும் அற்புதச் சக்தி நிறைந்தவர் ராஜாஜி. மெய்ஞ்ஞானத்திலிருந்து விஞ்ஞானம் வரை, கவியிலிருந்து வசனம் வரை, காவியத்திலிருந்து குட்டிக் கதை வரை, தியாகத்திலிருந்து அரசியல் வரை எல்லாவற்றிலும் ஓடி ஆடித் திளைக்கிற மூளை அவர் மூளை. ஒரு நொடிப்பொழுதுகூட ராஜாஜியின் மூளை சும்மா

இருக்காது. விண்ணையும் மண்ணையும் துழாவி வலசாரி இடசாரி சுற்றிக்கொண்டே இருக்கும் அவருடைய அறிவும் தெளிவும்.

அப்பேர்ப்பட்ட ராஜாஜி, டி. கே. சி. சொல்பவற்றை சிஷ்யன்போல் அமர்ந்திருந்து கேட்டுக் கேட்டு அனுபவித்தார். அடங்காத யானைப்பசியாய் இருந்த ராஜாஜியின் அறிவுத் தாகத்தைத் தணித்து அமைதிப்படுத்தியது டி. கே. சியின் விளக்கமும் பாடலும்.

ராஜாஜி மிகப் பெரிய மனிதர். ஒரு மனிதனுக்கு அவர் உறவு எளிதில் கிடைத்துவிடாது. பெறுதற்கரிய ரத்தினம் என்று தான் அவர் உறவைச் சொல்லவேண்டும்.

டி. கே. சி ராஜாஜியை பக்தியோடு மதித்தார்கள். தசரத னுக்கும், ராமனுக்கும் நிகரானவர் ராஜாஜி என்று மதித்தார்கள். ஆனாலும் கவிபற்றிய, கலைபற்றிய தம் அனுபவங்களை ராஜாஜி யிடம் தெளிவுபடுத்தத் தவறியதே இல்லை டி. கே. சி.

நாம் சொல்வது ராஜாஜிக்கு பிடிக்குமோ, பிடிக்காதோ என்று பேரம்பண்ணியதே இல்லை டி. கே. சி.

உரிமையோடு தெள்ளத் தெளிய எடுத்துத் தம் அனுபவங் களை ராஜாஜியிடம் விளக்கினார் டி. கே. சி.

பரதநாட்டியத்தைப் பார்ப்பதுகூடப் பாவம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர் ராஜாஜி. அதே ராஜாஜியை பரதநாட்டியத் தைப் பார்த்துப் பார்த்து உள்ளம் உருகும்படி செய்தார் டி. கே. சி.

''பாகவதர்கள் பாடுகிறது உண்மையான இசை அல்ல. அது வெறும் கூப்பாடு. உண்மையான இசை உணர்ச்சிபாவத் தோடு வரவேண்டும். பொருளுணர்ந்து பாடும் சாகித்யத்தோடு பாடினால்தான் இசையில் உணர்ச்சிபாவம் வரும்'' என்பதை ராஜாஜி ஏற்றுக்கொள்ளும்படி செய்தார் டி. கே. சி. ஏற்றுக் கொண்டது மட்டும் அல்ல, தமிழிசை இயக்கத்துக்கு டி. கே. சிக்குத் தோளோடு தோள் கொடுத்தவர் ராஜாஜி. கல்கி ஆசிரி யரும் அப்படியே இணைந்து செயல்பட்டார்.

சமஸ்கிருத மொழியிலிருந்து பல சொற்கள் தமிழில் வந் துள்ளன. ஆனால் சமஸ்கிருத மொழிக்குள் பல தமிழ்ச் சொற் கள் புகுந்துள்ளன. நூற்றுக்கணக்கான தமிழ் வார்த்தைகளை சமஸ்கிருதமாக மாற்றி இருக்கிறார்கள் என்பதை ராஜாஜியிடம் எடுத்துச் சொல்வார் டி. கே. சி.

ராஜாஜி தர்க்கம் பண்ணிப் பார்ப்பார்.

கடைசியில் டி. கே. சி. சொல்வதை ஏற்றுக் கொள்வார். அர்த்தம் இல்லாத சடங்குகள், அசட்டுத்தனங்கள் பற்றிச் சொல்வதை ராஜாஜி ஏற்றுக்கொண்டார்.

கலை, கவி, பக்தி, சமுதாய இயல், அறிவியல் இப்படி ஒவ்வொரு துறையிலும் டி. கே. சி. தம் கருத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்வார். வாதம் காரசாரமாக இருக்கும். அப்படியும் நட்பு வளர்ந்ததே தவிர தேயவில்லை.

ராஜாஜி எல்லாவற்றையும் ஏற்கனவே படித்தவர்தானே? அவர் படித்த படிப்பு; ஒரு கருங்கல் கோட்டையை அவர் மூளையைச் சுற்றி எழுப்பி இருக்கத்தானே செய்யும்? அதை ரசிகமணி, தம் அனுபவம் என்னும் கடப்பாறை கொண்டு இடித்துத் தகர்க்கத் தகர்க்க அதற்கு இடம் கொடுத்தார் ராஜாஜி.

''கலை, கவி, பக்தி சம்பந்தமாக நான் சொல்வதெல்லாம் டி. கே. சியின் அபிப்பிராயத்தைத்தான். என் இதயத்திலிருந்து சொல்லாக வருவது டி. கே. சிதான். டி. கே. சிதான் எனக்கு உணர்வூட்டும் ஆசான்'' என்று மனம்திறந்து சொன்னார் ராஜாஜி.

ராஜாஜிக்கும் டி. கே. சிக்கும் இருந்த நட்பு ஒரு அற்புதம். இவர்களை இணைபிரியா நண்பர்களாக அறிமுகப்படுத்தியவர் கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி.

டி. கே. சிக்கு உண்மைதான் முக்கியம். உண்மை எங்கிருந்து வருகிறது என்பது அவருக்கு முக்கியம் இல்லை. உண்மையைக் கண்ட மாத்திரத்தில் டி. கே. சி. உருகிவிடுவார். தன்னை மறந்து விடுவார். தன்னை இழந்தே விடுவார். உண்மையோடு உண்மையாய் ஒன்றிவிடுவார் டி. கே. சி.

டி. கே. சிக்கு ஒரே மகன். குலக்கொழுந்தாக விளங்கினார் தீத்தாரப்பன். பி. ஏ. வரை படித்தவர். தேனினும் இனிய இசைஞானம் நிரம்பியவர். சிறந்த அறிஞர். பண்பாடு மிக்கவர். அன்பும் நட்புமே அவருக்கு அணிகலன்கள்.

1931-ல் தீத்தாரப்பனுக்கு திருமணம் நிச்சயம் ஆனது. பேண்ட் வாத்திய குழுவினர் வந்தனர். ''ஐயா வீட்டில் நாங்கள் வாசிக்க வேண்டும். அதற்கு ஐயா உத்தரவிட வேண்டும்'' என்று கேட்டனர்.

''பேண்ட் வாத்தியத்தில் என்ன பாடுவீர்கள்'' என்று கேட்டார் ரசிகமணி.

''தியாகராஜ சுவாமிகள் கீர்த்தனையை அட்சரம் அட்சரமாக வைத்துப் பாடுவோம்'' என்றார்கள் வாத்தியக் குழுவினர்.

''உங்கள் கச்சேரிக்குப் பணம் எவ்வளவு?'' என்றார் டி.கே.சி.

''இருபத்து ஐந்து ரூபாய்'' என்றார்கள் குழுவினர். சிறிது நேரம் மௌனம். பிறகு, தம் மீசையை மெதுவாக ஒதுக்கிய படி இனிய குரலில் சொன்னார் டி. கே. சி.:

''ஐம்பது ரூபாய் கொடுக்கிறேன் உங்களுக்கு. நீங்கள் கல் யாண வீட்டில் வாசிப்பதற்காக அல்ல; வாசிக்காமல் இருப்பதற் காக!''

வாத்தியக் குழுவினர் அப்படியே நழுவிவிட்டனர். சரஸ் வதிபாயின் நந்தனார் கதாகாலட்சேபத்தோடு தீத்தாரப்பன் திருமணம் கோலாகலமாக நடந்தது. தீத்தாரப்பனுடைய ஞானப் பொலிவையும், பண்பாட்டு நலத்தையும் பார்த்தவர்கள், டி. கே. சியை விட மேல் அவர் மகன் என்று பாராட்டினர்.

காலனுக்கு அது பொறுக்கவில்லை. தீத்தாரப்பனுக்கு முப்பத் திரண்டு வயது. அருமை மனையாளையும், மூன்று பையன்களையும் ஒரு பெண்ணையும் விட்டு விட்டு விண்ணுலகு சென்று விட்டார் தீத்தாரப்பன்.

இந்தத் துயர நிகழ்ச்சி நண்பர்கள் சுற்றத்தார், பார்த்தவர் பழகியவர் எல்லோரையும் கதறக் கதற வாட்டி விட்டது.

டி. கே. சியையும் அவர் தர்மபத்தினியையும் என்ன பாடு படுத்தி இருக்கும் இந்தக் கொடுமை?

நடக்கக்கூடாத காரியம் நடந்து விட்டது. விதியின்கொடிய விளையாட்டை எண்ணி எண்ணி தாயும் தந்தையும் உருகினார்கள்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இந்தச் சோகத்துக்கு இலக்காகித் தவித்து விட்டார். அவருடைய தவிப்பு ஒரு வெண் பாவாய் உருவெடுத்தது.

தீத்தாரப்பனுக்கு ''செல்லையா'' என்பது பட்டப்பெயர்.

கவிமணியின் பாடல்:

எப்பாரும் போற்றும்
இசைத்தமிழ்ச் செல்வா! என்
அப்பா அழகிய செல்
லையா! — இப்பாரில்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

சிந்தை குளிரச்
சிரித்தொளிரும் நின்முகத்தை
எந்தநாள் காண்பேன்
இனி.

சோகத்தில் துடித்த ரசிகமணியின் கண்களில் இப்பாடல் விழுந்தது. இதயம் திறந்து பாஷை பேசுகிற பேச்சை—கவியின் மூலம் ரசிகமணி காதாரக் கேட்டார். மகனை மறந்து விட்டார். தன்னையே மறந்து விட்டார்.

தேசிகவிநாயகம் பிள்ளைக்குக் கடிதம் எழுதினார் டி. கே. சி. கடிதத்தை நீங்களே பாருங்கள்.

எயரோ
மீனம்பாக்கம்,
25-3-41.

அருமை நண்பர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கு,

தங்கள் ஆர்வம் நிறைந்த கடிதம் கிடைத்தது. செல்லையாவிடம் தங்களுக்கு எவ்வளவோ பிரியம். தங்கள் கவியைக் கண்டவர்களில் அவன் ஒருவன். சதா மலரும் மாலையைப் படித்துக் கொண்டிருப்பான். அவன் மூலமாகத் தங்கள் கவிப்பண்பு உலகத்துக்கு வருங்காலத்தில் தெரிய வேண்டும். அப்படித் தங்களுக்குச் சேவை செய்யக்கூடியவன் போய்விட்டான். எல்லாம் கடவுள் செயல். நாம் என்ன செய்யக் கிடக்கிறது. தங்கள் உள்ளத்தின் கனிவு வெண்பாவில் தெளிந்து கிடக்கிறது. தமிழுலகில் இந்த வெண்பா எழுத ஒருவர் தான். அது தாங்கள் தான். வேறு யாருக்கும் கவி என்பது வருகிறதில்லையே. நண்பர்கள் எல்லாரும் கவியில் உள்ள சோக ரசத்தைச் சுவைத்து வியந்தார்கள். எனக்கு என்னவோ ஒரு தமிழ்க்கவி உதயமாய் வருவதைப் பார்ப்பதில் அளவிறந்த ஆனந்தம். கவிக்கு உயிரையே கொடுக்கலாம் என்று சொல்லுவது நம்மவர் மரபு. தங்கள் கவி உயிரைக் கொடுத்து வந்த மாதிரியே இருக்கிறது.

''இசைத் தமிழ்ச் செல்வா'' எவ்வளவு வாய்ப்பு! ''என் அப்பா'' எவ்வளவு கனிவோடு விளிக்கிறது. ''அழகிய செல்'' என்று நின்று மூன்றுவது சீரில், ''ஐயா'' என்று மோனையில் விழும்போது அருமைப் பாடெல்லாம் பிறந்து விடுகிறது. தமிழ் பாஷை தங்களுக்கு அருமையாய்த் துணைபுரிகிறது,

Keats சொன்னார் "Truth is Beauty'' என்று. தங்கள் பாடல் அதற்குத் தக்க இலக்கியம் என்று எல்லாருக்கும் தெரிகிறது. கல்கி, ராஜாஜி வெளியில் இருந்தால் தங்கள் வெண்பாவை ரொம்ப அனுபவிப்பார்கள்.

ஆசிய ஜோதியில் தங்கள் கவியை (மகனை இழந்த தாய்) வாசித்தேன். தாங்களும் தமிழுமாகச் சேர்ந்து எவ்வளவோ ஆறுதலைத் தருகிறீர்கள்.

உடல் நலத்துக்காக கன்யாகுமரியில் தங்குகிறதாகத் தெரிகிறது. சௌக்கியந்தானே?

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

நான் என்னும் நினைப்பு கடுகளவு இருந்தால்கூட இப்படி ஒரு கடிதம் எழுத முடியுமா? அதை நீங்களே சோதித்துப் பாருங்கள்.

13. நம்மை நமக்குக் காட்டினர்

அறுபது வருடங்களுக்கு முன்புவரை இந்தியர்களிடம் தாங்கள் மனிதர்கள் என்ற உணர்வே இல்லை. பயம் ஒன்றுதான் இந்தியர்களிடம் இருந்தது. தங்களைப்பற்றி—தங்கள் காரியம் பற்றி ஒன்றும் தெரியாது.

'பயத்துக்கும் அறியாமைக்கும் அல்லவா நாம் கட்டுப்பட்டிருக்கிறோம்' என்றுகூட இந்தியர்களால் யோசிக்க முடியவில்லை.

அப்படி ஒரு ஆழ்ந்த மயக்கத்திலும் தூக்கத்திலும் கிடந்தது இந்தியா.

காந்தி மகான் வந்தார். பயத்தை விரட்டினர். மனிதர்களுக்கு நாம் மனிதர்கள் என்னும் நினைப்பு வந்தது. பிறகு யோசனை பண்ண ஆரம்பித்தார்கள். நாம் யார் என்பது தெரிந்தது. நம் காரியம் என்ன என்பதும் மனிதர்களுக்குப் புரிந்துவிட்டது.

தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பகுதி. தென்கோடியில் உள்ள ஒரு சிறிய பகுதி. தமிழர்களும் நாம் மனிதர்கள் என்னும் நினைப்பில்லாமல்தான் இருந்தார்கள். காந்தி மகானல் தமிழர்களும் நாம் மனிதர்கள் என்று மறு அவதாரம் எடுத்தார்கள். ஆனாலும், தமிழர்களிடம் கலை உணர்வு, பண்பாட்டு உணர்வு ஆனந்த உணர்வு மூன்றும் அறவே வற்றி வறண்டுவிட்டன. துப்புரவாகத் துடைத்து எடுத்த மாதிரி—அனுபவ உணர்வே, இல்லாமல் வெற்று மரக்கட்டைகளாய் நடமாடினர்கள் தமிழ் மக்கள்.

தமிழில் பேசுவது படிப்பது எல்லாம் கேவலம் என்று நினைத்தார்கள். தமிழில் எனக்குப் பேச வராது, எழுதவும் தெரியாது என்று வெட்கம் இல்லாமல் சொல்லித் திரிந்தார்கள். மேடைமேல் நின்று சபையிலேயே சொல்லித் தீர்த்தார்கள்.

ஆரம்பப் பள்ளியிலிருந்து இங்கிலீஷிலேயே பாடங்களைப் படித்தார்கள். பசுவைப் பற்றியும் புளியமரத்தைப் பற்றியும் கூட இங்கிலீஷில்தான் படித்தார்கள். தங்கள் உடம்பில் இருக்கிற கண்ணைப் பற்றியோ, மூக்கைப் பற்றியோகூட இங்கிலீஷில் படித்தால்தான் விளங்குகிறது என்றார்கள்.

ஔவையாரைப் பற்றிய விஷயமா? திருச்செந்தூர், திருவண்ணுமலே, சிதம்பரம் கோவில்களைப் பற்றிய விபரமா? காவிரி, தாமிரபரணி பற்றிய கருத்தா, சங்கீதமா, சாஹித்யமா எல்லாம் இங்கிலீஷ் மயந்தான்.

கல்யாணப் பத்திரிகைகூட அச்சடிக்க தமிழ் லாயக்கில்லே என்று முடிவுகட்டி விட்டார்கள். கடிதங்கள்—மனைவி, மக்கள், உற்ருர் உறவினர்களுக்கு எழுதுகிற கடிதங்கள்கூட இங்கிலீஷில் தான் எழுத முடியும்; தமிழில் எழுத வராது என்று தீர்மானித்து விட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழர்கள் கண்டுபிடித்த மகத்தான உண்மை, ''தமிழில் என்ன இருக்கிறது? ஒன்றுமே இல்லே! நமக்கும் இன்னெருவனுக்கும் உள்ள விவகாரத்தை எடுத்துச் சொல்லக்கூட லாயக்கில்லே தமிழ். நம் உடம்பில் இருக்கிற நோயைப் பற்றிச் சொல்லக்கூட தமிழில் வசதி இல்லே. கதை, கவி, நாடகம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் ஒன்றும் தமிழில் இல்லே. எல்லாம் இங்கிலீஷில்தான் உண்டு'' என்பது நமது கோயில்களைப் பற்றியோ, கோபுரங்களைப் பற்றியோ அவற்றில் உள்ள ஓவியங்களைப் பற்றியோ நமக்கு ஒன்றுமே தெரியவில்லே. நமது முன்ஞேர்களைப் பற்றியோ, அவர்களுடைய வீரத்தைப் பற்றியோ, கருணையைப் பற்றியோ நாம் யோசிக்கவே இல்லே.

நம் உழவுக்கலே இருக்கிறதே, அது உலகுக்கே வழிகாட்டிய உன்னதக்கலே. அதுபற்றி நாம் யோசிக்கவில்லே. நமது கொத்தஞர்களும் தச்சர்களும் கொல்லர்களும் செயற்கரிய செயல் பல செய்துள்ளார்கள். அதுபற்றியும் நமக்கு ஞாபகம் இல்லே. நாம் கட்டும் ஆடையில் உள்ள எளிமையோ இனிமையோ, நாம் உண்ணும் உணவில் உள்ள அருமைகூட நமக்குப் புரியாமல் போய்விட்டது.

நமது குடும்பபாசம், விருந்தோம்பல், திருமணம் முதலிய விழாக்கள், இறைவழிபாட்டில் உள்ள அபிஷேக, அலங்கார அற்புதங்கள் ஒன்றுமே விளங்கவில்லே நமக்கு.

இந்த நிலேயில் மொழியின் அருமை எப்படி விளங்கும்? இசையின் இனிமையும், அபிநயத்தின் அற்புதமும் புரியவா செய்யும்? பண்பாட்டின் நயமும், பக்தியின் பெருமையும் விளங்குமா?

தமிழனுக்கு தமிழும் தமிழ்ப் பண்பாடும் விளங்காமல் இருந்தன,

இப்படி ஒரு இருட்டுக்குள் நம்மைச் சுற்றவிட்டது நமது அறிவீனம். அடிமை மோகம். இந்த அடிமை மோகத்தை வளர்த்தது ஆங்கில வெறி. சமஸ்கிருதம், தெலுங்கு முதலியன வும் இங்கிலீஷுக்குத் தூபம் காட்டின. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்ப் புலவர்களும், பண்டிதர்களும் தமிழை அடித்து நொறுக்கி, காலை ஒடித்து, கையை முறித்து, கண்ணைக் குத்தி நாக்கில் சூடு போட்டுச் சித்திரவதை செய்து தொலைத்தார்கள்.

இந்த நிலையில் ரசிகமணி டி. கே. சி. வந்தார். அவர் பி.ஏ.பி.எல் படித்துவிட்டு வந்தார். இங்கிலீஷ் பாஷையில் மூங்கிக் குளித்து நீச்சலடித்துவிட்டு வந்தார். எம். எல். சியாக இருந்தார். அறநிலையத்துறை ஆணையாளராகவும் இருந்தார்.

அப்படி இருந்து கொண்டே, தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காட்டினார். அழகாகவும் இனிமையாகவும் பாடிக் காட்டினார். கேட்ட மாத்திரத்தில் எல்லோரும் அனுபவிக்கும்படி எளிமையாக வும் தெளிவாகவும் பாடிக் காட்டினார்.

கவிகளில் பொதிந்து கிடக்கும் கருத்தை—உண்மை உணர்ச்சி யோடும் மெய்யுணர்வோடும் எடுத்து விளக்கினார். பண்பாடு, கலை, விஞ்ஞானம், சமுதாய இயல், வரலாறு, பக்தி, அன்பு, பொறுமை, வீரம், கற்பு, காதல், சோகம், ஆனந்தம் எல்லா வற்றையுமே பாடல்களுக்கு விளக்கமாக வைத்து எடுத்துச் சொன் னார்.

தமிழ் எழுந்து நின்றது. கண்ணைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தது. உணர்ச்சிகளை எல்லாம் வார்த்தைகளாய் அள்ளி அள்ளிக் கொட்டியது. துள்ளியது, குதித்தது, ஆடியது, பாடி யது, அபிநயம் பிடித்தது. உல்லாசம், களிப்பு, பெருமிதம், கம்பீரம், இப்படி விதவிதமாக நடந்து காட்டியது தமிழ்.

இந்த அற்புதத்தை ஜனங்கள் பார்த்தார்கள். தமிழ் நம் மொழியல்லவா! என்று ஆவலாய் ஓடிவந்தார்கள். நம் கருத் தையும் உணர்ச்சியையும் நம்முடைய பாஷையில்தான் நாம் எடுத்துச் சொல்ல முடியும். வேறு பாஷையில் திருத்தமாகச் சொல்ல முடியாது என்று கண்டார்கள்.

பண்டிதர்கள் பிடியில் சிக்கிய தமிழை டி. கே. சி. உதறி எடுத்தார். மக்கள் பேசுகிற பேச்சில், அவர்கள் பார்க்கிற பார் வையில், பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் எடுத்து விளக்கினார்,

ஜனங்களோடு ஜனங்களாய் தமிழ் உருண்டு புரண்டு விளையாடியது.

ஜனங்கள் தமிழையும், தமிழ்ப் பண்ணையும் கண்ணாரக் கண்டார்கள். எதையும் தமிழால் எடுத்துச் சொல்ல முடியும். தமிழால்தான் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதைக் கண்டுகொண்டார்கள் ஜனங்கள்.

இப்படியாக, டி. கே. சி. காட்டிய தமிழ் மூலம்—தமிழ்ப் பாடல்கள் மூலம், பாடல்களுக்கு அவர் கொடுத்த விளக்கங்களின் மூலம் தங்களையே பார்த்துத் தெரிந்து கொண்டார்கள் தமிழ் மக்கள்.

நாம் யார்? நம்முடைய காரியம் என்ன? நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? என்ன செய்ய வேண்டும் நாம் என்பவை ஒவ்வொன்றாக தமிழ் மக்களுக்குப் புரிய ஆரம்பித்தது. மெள்ள மெள்ள தெளிவுபட்டுப் புரிய ஆரம்பித்தது.

டி. கே. சி. அதோடு விடவில்லை.

''நமது கோபுரம் போன்ற வானளாவிய ஒரு கலைச் செல்வத்தை உலகில் வேறு எங்காவது பார்க்க முடியுமா'' என்று கேட்டார். ''நமது கோவில் போலவோ, தேர் போலவோ, திருவிழா போலவோ, வழிபாடு போலவோ உலகில் எங்காவது இருக்கின்றனவா? நமது சமயமும் வழிபாடும் நமக்குக் கலைக் களஞ்சியமாக இருக்கிறதே? இப்படி எங்காவது இருக்கிறதா'' என்றும் கேட்டார்.

''நமது தாய்மார்கள் இட்டிலி அவித்துக் கொடுக்கிறார்களே? இட்டிலியைப் போன்ற ஆரோக்கியமான சுவையான உணவு உலகில் எங்கு இருக்கிறது? நமது முன்னோர்கள் ஊறுகாயில் எத்தனை விதம், துவையலில் எத்தனை விதம் கண்டு தேடி வைத்திருக்கிறார்கள்? வற்றல், வடகம், அப்பளம் என்றெல்லாம் உணவில் சேர்த்திருக்கிறார்களே? இப்படி உணவில் கலை அழகை எந்த இனத்தாராவது கண்டது உண்டா?''

• ''மோர்க்குழம்பு போன்ற ஒரு குழம்பையோ, ரசம் போன்ற ஒரு ஆரோக்கியமான சாறையோ, பாயசம் போன்ற ஒன்றையோ, தாளித்ததையோ, மணத்தையோ, ருசியையோ நம் உணவில் அனுபவிப்பது போல் வேறு எங்கு அனுபவிக்க முடியும்?''

''நமது தோடி ராகம் போல ஒரு ராகத்தை உலகில் எங்காவது கேட்க முடியுமா? அடாணு ராகம் போல ஒரு ராகத்தைத் தான் கேட்க முடியுமா? நமது சங்கீதந்தான் சங்கீதம். பல ஆயிரம் வருடங்களாக சமுதாய உணர்ச்சி பழுத்துக் கனிந்து வந்தது நம் சங்கீதம். நமது ராகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியான களையும் சாயலும் இருக்கின்றன. இந்தக் களையும் சாயலும் எப்படியோ பல ஆயிரம் வருடங்களாக சிதையாமல் இருக்கின்றன.''

''நமது அபிநயக்கலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. உணர்ச்சி பாவத்தை அப்படியே கையில் எடுத்து கண் முன் கொண்டுவந்து காட்டி விடுகிறது நமது அபிநயக்கலை. இதுபோன்ற தெய்வீகக்கலை உலகில் வேறு எங்கிருக்கிறது?''

''நமது கவியைப் போல எதுகை, மோனை, இசை, தாளம், அபிநயம், உணர்ச்சி பாவம், உருவம் இவ்வளவும் பொருந்திய பாடல் எங்கிருக்கிறது?''

''ஒரு வெண்பாவையோ விருத்தத்தையோ நாம் வாழ் நாள் முழுவதும் பாடிப்பாடி அனுபவிக்க முடியும். கேட்பவர் களும் அனுபவிக்கமுடியும். வேறு மொழிகளில் உள்ள பாடல் களைப் பாட முடியுமா? பாடுவதற்கு ஏற்ற அங்கங்கள் அவை களில் உண்டா? கவிச்செல்வம் என்பது அரியசெல்வம். அது நம்மிடம் வளமாக இருக்கிறது. இதுபோல் வேறு எங்கும் இல்லை.''

இப்படி வந்தவர் போனவர்களிடம் எல்லாம் கேட்டார். நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி எல்லோரிடமும் கேட்டார். அழுத்தம் திருத்தமாகவே கேட்டார்.

தமிழும் தமிழ்ப் பண்பாடும் உலகில் இணை இல்லாத அற்புதச் செல்வங்கள் என்று விளக்கினார். படித்தவர்கள், ஆங்கிலக் கல்வி யில் தேறி பெரிய பெரிய பட்டம் வாங்கியவர்கள், டாக்டர்கள், இஞ்சினீயர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், அமைச்சர்கள், அதிகாரிகள், திவான்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் எல்லோ ருமே மண்டையைச் சொரிய ஆரம்பித்தார்கள். மூக்கின் மேல் விரலை வைத்தார்கள். டி. கே. சி. சொல்வது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார்கள். மெள்ள மெள்ள தமிழின் பக்கம் நகர்ந்து வந்தார்கள். தமிழ் உயர்ந்த பாஷை; எந்த விஷயத் தையும் தமிழில் பேசமுடியும், எழுத முடியும் என்று அங்கீகரித் தார்கள். அங்கீகரித்ததோடு நிற்கவில்லை. தமிழிலேயே அவர் கள் பேசினார்கள், எழுதவும் செய்தார்கள்.

தமிழர்களுக்குத் தமிழ் உணர்வு ஊட்டிய மகான் டி. கே. சி.

1928-ம் வருடம் ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் சென்னை வந்திருந்தார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியினர் பாதிரியாரை வரவேற்று உபசரித்துத் தேநீர் விருந்து அளித்தனர். விழாவுக்கு டி. கே. சியையும் வரவழைத்திருந்தார்கள்.

டி. கே. சி. கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர். மேலும் அந்த ஆண்டு சென்னை மேல்சபை உறுப்பினர் (எம். எல்.சி.) ஆக டி. கே. சி. இருந்தார்கள்.

பாதிரியாருக்கு டி. கே. சியை அறிமுகப்படுத்தி வைத்தார் கல்லூரி முதல்வர். டி. கே. சியும் பாதிரியாரும் மனம் திறந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பாதிரியார் டி. கே. சியை நோக்கி கீழ்க்கண்டவாறு ஒரு கேள்வி கேட்டார்:

''ஸ்காட்லாந்து நாட்டவராகிய நாங்கள் மரங்களிடம் மிக்க பிரியம் வைத்திருக்கிறோம். இந்தியர்களுக்கு மரங்களிடம் பிரியம் உண்டா?''

டி. கே. சியின் பதில்:

''மரங்களிடம் நாங்கள் பிரியம் வைப்பதில்லை. பக்திதான் செலுத்துவோம்.''

''ஒரு துளசிச் செடியை மூன்று தடவை சுற்றி வந்து வணங்குவோம். வாழையையும் அப்படியே வணங்குவோம். தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் கோயில் உண்டு. ஒவ்வொரு கோவிலிலும் தலவிருட்சம் என்று ஒரு மரம் வைத்திருக்கிறோம். அந்த மரத்தை முதலில் வணங்கிவிட்டுத்தான் மூர்த்தியை நாங்கள் வழிபடுவோம்.''

''ஒவ்வொரு மரமும் துளிர்ப்பதும், பூப்பதும், காய்ப்பதும், கனிவதும் எங்களுக்குப் பரவசத்தைக் கொடுத்தன. ஒவ்வொரு மரத்துள்ளும் நடைபெறுகிற ரசாயன விந்தைகளையும் பொறியியல் மர்மங்களையும் ஓவிய நுட்பங்களையும் நாங்கள் பார்த்துப் பார்த்து அதிசயித்தோம்.

''கோடான கோடி என்று சொல்லும்படி, பூண்டுகள், செடிகொடிகள், மரங்கள் என்று இருக்கின்றன. கோடான

கோடி வருடங்களாக அவை செயல்பட்டு வருகின்றன. ஆனால் ஒரு பூண்டாவது, ஒரு தடவையாவது முறை பிறழ்ந்தது இல்லை. பிச்சிச் செடி மல்லிகை மலர் பூத்தது இல்லை. மாமரம் பலாக் காய் காய்த்தது இல்லை.''

''தாவர வர்க்கத்தில் இருக்கிற ஞாபக சக்தியையும், நியதி தத்துவத்தையும் பார்த்துப் பார்த்து நாங்கள் மனம் உருகினோம். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் முன்னோர்கள் இந்த உண்மையை அனுபவித்து பக்தியில் திளைத்தார்கள். மரத்தையே தெய்வமாக பாவித்து வழிபட்டார்கள். அந்த மரத்தையே கோவிலாக மதித்து வணங்கினார்கள். இன்னமும் அதன் அடை யாளமாக மரத்தையே நாங்கள் ஒவ்வொரு கோவிலிலும் தெய்வ மாக எழுந்தருளச் செய்து வழிபடுகிறோம்.''

''மரங்களிடம் எங்களுக்குப் பக்திதான் உண்டு. பிரியம் இல்லை.''

டி. கே. சி. சொல்லியதைக் கேட்ட ஸ்காட்லாண்ட் பாதிரி யார் அன்றிலிருந்து தமிழ்ப் பண்பாட்டை மதித்துப் பேச ஆரம் பித்தார்.

ஒன்றுக்கும் உதவாதது தமிழ் என்று நினைத்துக் கொண் டிருந்த தமிழ்மக்களை எல்லாவற்றுக்கும் உகந்தது தமிழ் என்று உணரவைத்தார் டி. கே. சி. பொறி இயல், மருத்துவம், ரசாய னம், தாவரம் உடலியல், உளவியல், வான இயல், சமுதாய இயல், இறை இயல் ஆகிய ஒவ்வொரு துறையையும் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியும். தமிழில் சொல்லிக் கொடுப்பது தான் எளிது என்று விளங்கச் செய்தார்.

தம்முடைய பேச்சிலும், கட்டுரைகளிலும், நூல்களிலும் டி. கே. சி. தொட்டுக் காட்டாத துறைகளே இல்லை. விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம், உணர்ச்சி, கலை, பண்பாடு எல்லாத் துறைகளையும் எல்லோரும் புரிந்து அனுபவிக்கக் கூடிய பழகு தமிழிலேயே பேசினார். எழுதினார்.

16-2-1954-ல் காலை 6 மணி அளவில் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் இறைவன் திருவடி நிழல் எய்தினார்கள். அதற்கு முதல் நாள் காலையிலேயே அவர்கள் உடல்நிலை திடுதிப்பென்று தடுமாறிவிட்டது. டாக்டர் சேஷகிரி ராவ் பிற்பகல் இரண்டு மணியளவில் வந்து டி. கே. சியை நாடி பிடித்துப் பார்த்தார்கள்.

அப்பொழுது கூட டாக்டர் சேஷகிரி ராவிடம் டி. கே. சி. சொன்னார்: "தாகம் அதிகமாக எடுக்கிறது. எத்தனை தடவை தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்குவதாக இல்லை. நாவறட்சி கடுமையாக இருக்கிறது. அது இருக்கட்டும், நாவறட்சி என்று தமிழில் ஒரு வார்த்தை இருக்கிறதே? இதற்கு இணையான வார்த்தை இங்கிலீஷில் உண்டா?" என்று கேட்டார்கள்.

டாக்டர் சேஷகிரி ராவ் இங்கிலாந்தில் படித்தவர். ஆங்கில பாஷையில் தங்குதடை இல்லாத பழக்கம் உடையவர் டாக்டர். ஆனாலும் "நாவறட்சி" என்பதற்கு இணையான இங்கிலீஷ் வார்த்தை என்ன என்று தேடிப் பார்ப்பதில் திணறிவிட்டார்.

அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை என்றார் டாக்டர்.

உத்சாகத்தோடு டி. கே. சி. சொன்னார்கள், "சாதாரண மக்கள் பேசுகிற பேச்சில் கலைச்சொற்கள் எவ்வளவோ இருக்கின்றன. உழவர்களிடம் பேசிப் பார்த்தால் விவசாயக் கலை சம்பந்தமான சொற்கள் தமிழில் நிறைய இருப்பது தெரியும். தச்சர்களிடமும் கொல்லர்களிடமும் உறவாடினால் அல்லவா, பொறியியல் சம்பந்தமான கலைச்சொற்கள் இன்னவை என்பது விளங்கும்?

ஆனால் அரசாங்கம் என்ன செய்கிறது? கலைச்சொற்களைக் கண்டுபிடிக்க நிபுணர் குழுவை நியமிக்கிறது. அவர்கள் நாலாவது மாடியிலும் ஐந்தாவது மாடியிலும் உட்கார்ந்து கொண்டு கலைச்சொல்லை உருவாக்குகிறார்கள். எவ்வளவு கேவலமான காரியம் இது?

"புகையிலை, மிளகுவற்றல், வெடிகுண்டு, கப்பல், குடியரசு, பாராளுமன்றம், தேர்தல், மின்சாரம், சொற்பொழிவு என்றெல்லாம் சொற்கள் நடமாடுகின்றனவே, இவை நிபுணர்களால் உருவாக்கப்பட்ட சொற்களா? சமுதாய உணர்வில் தாமேபூத்து மலர்ந்த சொல் மலர்கள்.

கலையின் உண்மையை விளக்க விளக்க—மக்களுடன் கலையானது உறவாட உறவாட, கலைச்சொற்கள் தாமே உண்டாகும். அப்படி உண்டாகும் வரை, வேறு மொழியில் உள்ள கலைச்சொற்களை நாம் உபயோகிக்கலாம். அதில் ஒன்றும் தப்பில்லை.

அல்வா வேறுமொழிச் சொல்தான். அதைக் கொடுத்தால் யாரும் சாப்பிட மாட்டேன் என்று சொல்வார்களா? டேவிட்

என்பதும் வேற்று மொழிச் சொல்தான். அதற்காக அவனுடன் பழகாமல் இருக்கிறோமா? பழகத்தானே செய்கிறோம்.

உலகில் ஆங்கிலம் உள்ளிட்ட எல்லா மொழிகளிலும் அந்நியக் கலைச்சொற்கள் கலந்திருக்கவே செய்கின்றன. அதற்காக யாரும் சயன்ஸ் படிக்க மாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள்.

''தாய்மொழியில் வார்த்தைகளை எல்லாம் கண்டுபிடித்த பிறகுதான் சயன்ஸ் படிப்போம் என்பது அபத்தம். சயன்ஸைப் படிக்கப்படிக்க சயன்ஸ் சம்பந்தமான கலைச்சொற்கள் தாமே வரும்.''

''பாஷையும் மக்களின் ஆர்வமும் சேர்ந்து உண்டாக்க வேண்டும் வார்த்தையை. உத்தரவு போட்டு உண்டாக்க முடியாது வார்த்தைகளை.''

மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் பொழுதும் டி. கே. சி. தமிழ் மேல் உள்ள நம்பிக்கையை வெளியிடத் தயங்கவில்லை.

டி. கே. சியின் தெளிவையும் உறுதியையும் பார்த்த டாக்டர் அசந்து போனார்.

டாக்டர் போன பிறகு டி. கே. சியின் நாடி மெள்ள மெள்ள இறங்கியது. இரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் மயக்க நிலையே வந்துவிட்டது. இடை இடையே கண்ணை விழிப்பார்கள். சுற்றுமுற்றும் பார்ப்பார்கள். ஏதாவது சொல்வார்கள். ஒன்றிரண்டு சமயம் வார்த்தைகளில் தெளிவு இருக்கும். மற்ற வேளைகளில் என்ன சொல்கிறார்கள் என்பது விளங்காது.

இரவு ஒருமணி இருக்கும். கண்ணைத் திறந்தார்கள். கூர்மையாக என்னைப் பார்த்தார்கள். என் பக்கத்தில் நிற்பது யார் என்று கேட்டார்கள். ''குருக்களையா'' என்றேன். அது அவர்களுக்குச் சரியாக விளங்கவில்லை. மறுபடியும் யார் என்று கேட்டார்கள். ''மேலகரத்து சன்னதி மடத்துக் குருக்களையா'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன்.

''ஓ, தேசிகர்வாளா'' என்றார்கள் டி. கே. சி.

''இல்லை, குருக்களையா'' என்றேன் நான்.

''இரண்டும் ஒன்றுதான், எல்லாம் ஒரு பொருட் பன்மொழிதான். பூஜை செய்யும்போது குருக்கள். மந்திரம் சொல்லும் போது தேசிகர். தேவாரம் பாடும்போது ஓதுவார். ஆள் ஒருவர்தான். பெயர்தான் வேறு வேறு'' என்றார்கள் டி. கே. சி.

அசதியில் கண்ணை மூடிக் கொண்டார்கள். அரை மணி நேரம் கழித்து மறுபடியும் விழித்து என்னைப் பார்த்தார்கள். ''இலக்கண நியதி பாஷைக்கு உள்ளேயே இருக்கிறது. இலக்கணப் புத்தகத்தில் இல்லை. 'கல்லெறிந்தான்' என்னும்போது ஒற்று மிகும். காலொடிந்தான் என்னும்போது ஒற்று மறையும். 'அவன் வந்தானா' என்னும்போது ஒரு உணர்ச்சி, ''அவன் வந்தானே' என்னும்போது வேறொரு உணர்ச்சி. இந்த மாற்றங்களை பாஷையே செய்கிறது. இலக்கணம் செய்வதில்லை'' என்றார்கள்.

''உணர்ச்சியிலிருந்து தினுசு தினுசாக முளைக்கிற ஒவ்வொரு சாயலையும்—ஒவ்வொரு நிறத்தையும் தமிழ் அப்படியே கையில் எடுத்துப் பிடித்துக் காட்டும். இதர பாஷை எதனாலும் அப்படி நிச்சயமாய்க் காட்ட முடியாது'' என்று கடைசியாகச் சொல்லி முடித்தார்கள்.

வாழ்நாள் முழுவதும் தமிழின் ஆற்றலையும் அற்புதத்தையும் எடுத்து விளக்குவதையே வாழ்க்கையாக நடத்திவந்த மகான் டி. கே. சி.

உடல்க்கட்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து, அங்கங்களின் பொருத்தமும் ஆற்றலும் ஒவ்வொன்றாகக் கழன்று, ஞாபக சக்தி மெள்ள மெள்ளத் தேய்ந்து, பரம்பொருளோடு பரம்பொருளாய் கலந்து மருவுகிற வேளையிலும் தமிழின் எளிமையையும் அருமையையும் அன்பர்களுக்கு விளக்கிக் காட்டினார் அந்த மகான்.

அவரல்லவா ரசிகமணி!

விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் சொல்லித் தர முடியுமா? தமிழில் சொல்லிக் கொடுத்தால் அது தமிழர்களுக்கு விளங்குமா என்பதை ஆராய சர்வகலாசாலையார் 1935-ம் வருடம் ஒரு கமிஷன் நியமித்தார்கள்.

கமிஷன் முன் பிரமுகர்கள் பலர் ஆஜரானார்கள். ஒருவரும் உருப்படியாக ஒன்றும் சொல்லவில்லை. சப்பள சளபுள என்றே ஒவ்வொருவரும் சாட்சியம் சொன்னார்கள்.

அறநிலையத்துறை கமிஷனராக இருந்த டி. கே. சியையும் அபிப்ராயம் சொல்லும்படி கமிஷன் வேண்டிக் கொண்டது.

கமிஷன் முன் ஆஜரானுர் டி. கே. சி. கமிஷன் முன் ஆஜ ராகி என்ன சொன்ஞர் டி. கே. சி.

''எல்லாம் தமிழில் முடியும். தமிழில் சொல்ல முடியாத விஷயம் ஒன்றுமே இல்லே. ஆங்கிலம் முதலிய வேறு பாஷை களால் சொல்ல முடியாத நுட்பமான விஷயங்களேக் கூடத் தமிழில்(தான்) எளிதாகச் சொல்ல முடியும்''

இப்படிச் சொன்ஞர் டி. கே. சி.

இனி, கமிஷனின் கேள்வியையும், டி. கே. சியின் பதிலேயும் பார்ப்போம்.

கமிஷன் அங்கத்தினரில் ஒரு வெள்ளேக்காரர்:—

உங்கள் 'வெர்ஞகுலரில்' சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் இல்லேயல்லவா? அது உண்மைதானே?

டி. கே. சி.: இந்தக் கேள்விக்கு இடமே இல்லேயே.

கமிஷனர்: ஏன் இடமில்லே?

டி. கே. சி.: தமிழில் சயன்ஸ் இருந்தால் அல்லவா அக் கலேக் குரிய சொற்கள் இருக்கும்! கலேயே இல்லாதபோது சொற் கள் எங்கிருந்து வரும்?

கமிஷனர்: ஏது? எங்கள் வேலேயையே எளிதாக்கி விடுவீர்கள் போலிருக்கிறதே. சயன்ஸூம் இல்லே; சொற்களும் இல்லே. ஆகவே சயன்ஸை தமிழில் கற்பிக்க முடியாதென்று முடிவு கட்ட வேண்டியதுதானே?

டி. கே. சி.: ஆமாம் முடிவுகட்ட வேண்டியதுதான். நூறு நூற்றைம்பது வருஷங்களாக வெள்ளேக்காரர்களாகிய நீங்கள் வந்து எங்களுக்குக் கல்வி கற்பித்துக் கொடுத்தும் நாங்கள் கண்ட பலன் என்ன? எங்களுக்கு சயன்ஸ் கிடையாது; சயன்ஸ் தெரியாது என்பதுதானே—சரி, தமிழில் சயன்ஸ் சொற்கள் இல்லே என்று சொன்னேன். நீங்களும் தலேயை ஆட்டிவிட்டீர்கள். போகட்டும்—தமிழ் எப்படியாவது போகட்டும். உங்கள் வெர்ஞகுலரான ஆங்கிலத்தில் சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் உண்டோ?

கமிஷனர்: என்ன சார் இது? ஏன் இல்லே? இல்லாமலா இத்தனே நாளும் நாங்கள் சயன்ஸ் படித்திருக்கிறோம்; அதைப்பற்றிய ஆராய்ச்சியெல்லாம் நடத்தி வருகிறோம்?

டி. கே. சி.: ஆம் ஐயா! ஆராய்ச்சிகள் எல்லாம் பலமாய்த் தான் நடத்தி வருகிறீர்கள். அது வாஸ்தவம்தான். ஆனல் அந்த அறிவியற் கலைகளின் பெயர்களையே கொஞ்சம் பாருங் களேன்.

கமிஷனர்: பார்த்தால்?

டி. கே. சி.: உங்கள் அறிவியற்கலைகள் எல்லாம் என்ன, அரித் மெடிக், பிசிக்ஸ், பிஸியாலஜி, பையாலஜி, ஸுவாலஜி, ஸை காலஜி, இன்னும் என்ன என்ன 'யாலஜி'களெல்லாமோ சொல்கிறீர்கள். இந்தப் பெயர்கள் எல்லாம் ஆங்கிலமா? இல்லையே! கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் இருந்துவந்த பெயர்கள்தானே? கலைகளின் பெயர்களே உங்கள் வெள்ளைக்குலருக்குச் சொந்தமில்லையே, கலைகள் மட்டும் எப்படிச் சொந்தமாகிவிடும்? உங்கள் வெள்ளைக்குலரே இப்படிக் கடன் வாங்கிப் பிழைக்கும்போது எங்கள் தாய்மொழியும் இதேபோல பெயர்களைக் கடன் வாங்கினல் என்ன? பிராமிசரி நோட் எழுதிக்கொடுக்க ஸ்டாம்பும் தாளும் எங்களிடம் கிடை யாதா? இல்லை, கிரீக்கும் லத்தீனும் கடன் தரமாட்டோம் என்று சொல்லுமா? இல்லை—இந்தச் சொற்கள் உங்கள் வெள்ளைக்குலரில் வந்த பிறகு எப்படி வாயில் நுழையமுடியாது தவிக்கிறதோ அப்படியே எங்கள் தமிழிலேயும் தவிக்கட்டுமே? என்ன ஐயா குறைந்துவிடும்?

கமிஷனர்: (கொஞ்சம் திணறிப் போய் பின்னல்) நீங்கள் சொல் வதை நான் ஒப்புக் கொள்கிறேன். என்றாலும் விஞ்ஞானக் கருத்துக்களை உங்கள் தாய்மொழியில் விளங்கும்படி சொல்ல முடியாது என்பதையாவது ஒத்துக் கொள்கிறீர்கள் அல்லவா?

டி. கே. சி.: யார் ஒத்துக்கொள்கிறார்கள்? அடிப்படையான விஞ்ஞானக் கருத்து எதையுமே, அது எவ்வளவு சிக்கலான விஷயமானதாயிருந்தாலும் தமிழில் விளங்கும்படி அழகாகச் சொல்லிவிட முடியும்.

கமிஷனர்: முடியுமா?

டி. கே. சி.: முடியும் ஐயா முடியும். நீங்கள் ஏதேனும் ஒரு கடினமான விஞ்ஞானக் கருத்தை ஆங்கிலத்தில் சொல்லுங்கள். நான் அதைத் தமிழர்களுக்கெல்லாம் புரியும்படியான தமிழில், தமிழ் நடையில் சொல்கிறேன் பாருங்களேன். (எல்லோரும் மௌனம் சாதிக்கிறார்கள்)

சரி, நீங்களோ ஒன்றும் சொல்லவில்லை; நானே சொல்கிறேன். ஆங்கிலமும் சொல்லி தமிழிலும் மொழிபெயர்த்துக் காட்டுகிறேன். பையாலஜி என்ற உயிர் நூல் கலையில் ஒரு முக்கியமான உண்மை. அதாவது ' Ontogeny is the recapitulation of phylogeny' ஆங்கிலம். இதற்குத் தமிழ் சொல்கிறேன். கேளுங்கள். ''ஆண்டாஜனி என்பது பைலாஜனியைப் பிண்டமாய்க் கூறுவதாகும். என்ன விளங்குகிறதா?

கமிஷனர்: (சிரித்துவிட்டு) என்ன விசித்திரமான தமிழ் ஐயா உம்முடைய தமிழ்?

டி. கே. சி.: உங்கள் இங்கிலீஷ் மட்டும் விசித்திரமாயில்லையோ? ஆண்டாஜனி, பைலாஜனி யெல்லாம் உங்கள் பேரனுர் வீட்டு வார்த்தையா என்ன? அவை உங்கள் வெர்னுகுலரான ஆங்கிலமல்லவே!

கமிஷனர்: சரிதான் ஐயா! இந்த உண்மையை எங்கள் வெர்னுகுலரில் 'The history of the individual will reveal the history of the race' என்று சொல்லமாட்டோமா? சொல்லி எல்லோருக்கும் விளங்கச் செய்யமாட்டோமா?

டி. கே. சி.: ஓகோ! ரொம்ப சரி. பெரிய உண்மையை ஆங்கிலத்தில் சொல்லித்தான் விட்டீர்கள். நானும் தமிழில் சொல்கிறேன் கேளுங்கள். ''ஒரு பிராணியின் பிறப்பு வளர்ப்பே இனத்தின் பிறப்பு வளர்ப்பைக் காட்டும்'' என்று சொல்லலாம். அல்லவா? அப்படிச் சொன்னுல் தமிழ் பேசுகிறவர்களுக்கு எல்லாம் விஷயம் என்ன என்று விளங்கத்தானே செய்யும்?

கமிஷனர்: சரிதான்! எங்கள் வெர்னுகுலரில் எதை எதைச் சொல்லமுடிகிறதோ அதையெல்லாம் தமிழிலும் சொல்ல முடியும் என்றுதான் கூறுகிறீர்.

டி. கே. சி.: ஆமா! அதற்கும் சந்தேகமா? தமிழில் சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் இல்லைதான். அதனுல் சயன்ஸையே தமிழ்மொழியில் மாணவர்களுக்குக் கற்பித்துவிட முடியாது என்று கருதுவது எவ்வளவு தவறுனது என்று இப்போதாவது தெரிகிறதா?

இப்படி முடிந்தது சாட்சியம்.

14. தமிழிசை இயக்கம்

உலகில் உள்ள பாஷைகள் இத்தனை என்று திட்டவட்டமாகத் தெரியாது. ஆயிரத்து ஐந்நூறு பாஷைகளுக்குமேல் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இத்தனை பாஷைகளிலும் தமிழுக்கு ஒரு சிறப்பு உண்டு. வேறு எதற்கும் இல்லாத தனித்த சிறப்பு அது.

பாஷை என்றால் அதற்குரிய மக்களின் உணர்ச்சியை வெளியிடும் கருவி என்பது பொருள். மக்களின் அனுபவங்களையும் கருத்தையும் வெளியிட வார்த்தைகளும் தொடர்களும் கொண்டது பாஷை. கோபமோ, சந்தோஷமோ, வியப்போ, பயமோ, பக்தியோ மனசில் உண்டாகிற உணர்ச்சியை மற்றவர்களுக்குத் தெரியும்படி எடுத்துக்கொடுக்கிறது சொல்.

அப்படி எடுத்துக்கொடுக்கும் வார்த்தைகளுக்கும், தொடர்களுக்கும் ஒரு முறை உண்டாகி இருக்கிறது. அந்த முறையையே வழக்கு என்று சொல்கிறோம்.

வசனமாகவும் இருக்கலாம், செய்யுளாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் பாஷையானது வழக்கோடு சேர்ந்து இருக்கும். வழக்கு என்பது மக்களின் வாழ்க்கையில் இருக்கிறது. அதாவது பாஷைக்கு உள்ளேயே இருக்கிறது. அதனால், காலாவதியான சொற்களை ஒதுக்கித்தள்ளியும், தேவையான புதுச் சொற்களைச் சேர்த்துக்கொண்டும் பாஷையை நடத்திக்கொண்டு போகிறது வழக்கு. எல்லாப் பாஷைகளுக்கும் இப்படி ஒரு வழக்கு இருக்கிறது.

தமிழும் அப்படி வழக்கோடு ஒட்டிய பாஷைதான். ஆனால் தமிழில் இந்த வழக்கோடு இசையும் கூத்தும் சேர்ந்து கிடக்கின்றன. ஒவ்வொரு வார்த்தையோடும், தொடரோடும் இசைப் பண்பும் தாளப் பண்பும் சேர்ந்து கிடக்கின்றன.

இதர பாஷைகளில் இசை உண்டு, கூத்தும் உண்டு. ஆனால் அவை தனியாக இருக்கும். தமிழில் அபிநயமும் இசையும் பாஷையோடு பாஷையாய் சேர்ந்தே கிடக்கின்றன.

தமிழில் உள்ள ஒரு பாடலைப் பார்த்தால் போதும். அது வெண்பாவோ, விருத்தமோ, கட்டளைக் கலித்துறையோ, எது வானாலும் சரி, கருத்தையும் உணர்ச்சியையும் குழைத்துப் பிசைந்து பாவ உருவத்தோடு வழங்கும் இசையையும் பாடலில் பார்க்க லாம். அபிநயத்தையும் பாடலில் பார்க்கலாம்.

விஷயத்தையும் உணர்ச்சியையும் பாடலில் உள்ள சொற்கள் விளக்குகின்றன. உண்மைதான். ஆனால் அந்த வார்த்தைகளை விட அதிகமான நயத்தோடும் வேகத்தோடும் இசையும் தாளமும் சேர்ந்து விளக்குகின்றன.

இப்படிப் பாஷையோடு பாஷையாய் இசையும் அபிநயமும் சேர்ந்துகிடப்பது தமிழ் ஒன்றில்தான். அதனால்தான் தமிழை முத்தமிழ் என்று சொன்னார்கள் முன்னோர்கள்.

தமிழ் உண்டானபோதே இசை உண்டாகிவிட்டது, அபி நயமும் உண்டாகிவிட்டது. தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றும் இசை யோடும் அபிநயத்தோடும் இருக்கின்றன.

ஆனால் பாடல்களைப் பாடுவதை—பாடி அனுபவிக்கிறதை தமிழ் மக்கள் விட்டுவிட்டார்கள். தொண்ணூறு வருட கால மாகத்தான் இந்த அலங்கோலம். இது காரணமாக, ''இசை என்பது தமிழில் இல்லை, அபிநயமும் அப்படித்தான். நாடகக் கலை என்பது தமிழில் இல்லவே இல்லை'' என்றெல்லாம் முடிவு கட்டிவிட்டார்கள் தமிழர்கள்.

இசையும் நடனமும் தமிழ் நாட்டில் சர்வவியாபகம் என்பது நமது கோவில்களைப் பார்த்தால் தெரியும். நமது பாடல்களைப் பார்த்தால் தெரியும். கோவில்தோறும் நாதசுரமும் பரதநாட்டி யமும் நித்திய பூஜையோடு சேர்ந்திருந்தன. பாடல் ஒவ்வொன் றும் இசைமயமாயும் நடனமயமாயும் இருக்கின்றன.

அப்படி இருந்தும் தமிழர்களிடம் இசை உணர்ச்சியும் நடன உணர்ச்சியும் விடுபட்டுப்போயின.

சுமார் நூறு வருட காலமாக தமிழகம் எங்கும் கச்சேரிகளில் இந்துஸ்தானி இசையும் தெலுங்குப் பாடல்களுமே ஒலித்தன. பாடுகிறவர்களுக்கும் பொருள் தெரியாது, கேட்பவர்களுக்குப் விஷயம் விளங்காது.

பொருளே தெரியாவிட்டால் உணர்ச்சி எங்கிருந்து வரும்? எப்படி ரசித்து ஆனந்திக்க முடியும்?

ஆனாலும் விஷயம் விளங்கியதுபோலவும், விளங்கி உணர்ச்சி மயமாய் அனுபவிப்பதுபோலவும் தலையை ஆட்டினார்கள். குதித்தார்கள், கும்மாளம்போட்டார்கள்.

விளங்காததை விளங்கவில்லையே என்று சொல்ல மனிதனுக்குப் பயம். சமுதாயமே பயப்படுகிறது.

இந்த நிலையில், டி. கே. சிதம்பரநாத முதலியார் ஒருவர்தான் தைரியமாக எழுந்து நின்று சொன்னார்: தெலுங்குக் கீர்த்தனைகள் எனக்கு விளங்கவில்லை. ஒருவருக்கும் அது விளங்காது. தெலுங்கர்களுக்குத்தானே அவை விளங்கும். ''தெலுங்கர் அல்லாத யாருக்கும் அந்த சாகித்யங்கள் விளங்கா. அதனால் அனுபவிக்க முடியவில்லை, ஆனந்தம் பெறமுடியவில்லை'' என்று தைரியமாகச் சொன்னார்.

''தெலுங்குக் கீர்த்தனைகளில் உள்ள வார்த்தைகள்தாம் தெலுங்கு. அக் கீர்த்தனைகளில் உள்ள ராகம், இசை எல்லாம் தமிழ். தமிழ்நாட்டுக் கோயில்களில் கேட்ட ராகம், தாளம் இவற்றை அனுபவித்த தெலுங்கு பக்தர்கள் அந்த ராகத்திலும் தாளத்திலும் தங்கள் உணர்ச்சியை, தங்களுக்குச் சொந்தமான சொற்களைவைத்து யாத்திருக்கிறார்கள்.''

வார்த்தைகள் அன்னியர்களுக்கு விளங்க ஞாயம் இல்லை. ஆகவே நமது பாடல்களை நமது இசையில்பாட வேண்டும். அப்பொழுதுதான் நம்மவர்கள் அனுபவிக்கமுடியும் என்று டி. கே. சி எடுத்துச் சொன்னார்கள்.

தமிழகம் முழுவதுக்குமாக எழுந்து நின்று எடுத்துச் சொன்னார்கள். வருடக்கணக்கில் போன போன இடம் எல்லாம் தமிழிசைபற்றிச் சொன்னார்கள் டி. கே. சி.

தமிழகத்தின் செவி மெள்ள மெள்ளத் திறந்தது. தமிழகத்தில் பெரிய செல்வந்தராகவும் தொழிலதிபராகவும் சேர, சோழ, பாண்டியர் போன்ற வளமும் புகழும் நிறைந்தவராகவும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் விளங்கினார்கள். அவர்கள் செட்டி நாட்டரசர் என்று போற்றப்பட்டார்கள். இந்தியாவில் மட்டுமல்ல, தென் கிழக்காசியா முழுவதும் அவர்கள் புகழ் பரவி இருந்தது. பர்மா, மலேசியா, இலங்கை முதலிய நாடுகளில் எல்லாம் அவர்கள் ஒரு அரசராகவே மதிக்கப்பட்டார்கள்.

திருமகள் கடாட்சம் நிரம்பிய ராஜா சர் அவர்கள் கலைமகள் களிநடம்புரியும் கொலுமண்டபமாகவும் திகழ்ந்தார்கள். தமிழ்ப் புலவர்களும் இசைவாணர்களும் அவர்களை நாடி வந்த வண்ணம் இருப்பார்கள். பழுமரம் நாடிவரும் பறவை இனம் போல திரு. அண்ணுமலையாரை நாடி வித்வான்கள் சாரை சாரையாக வருவார்கள். வித்வான்களின் பாடல்களில் உள்ள நயங்களை அனுபவித்து அவர்களை உபசரித்து அவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்புவார் அண்ணுமலை வள்ளல். பழந் தமிழ் வள்ளல்களின் நேர் வாரிசாக விளங்கினுர்கள் அண்ணுமலை வள்ளல்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்களை மதித்து, கவிஞரை ராஜ உபசாரம் செய்து பாராட்டிய தமிழகத் தின் முதல் பிரபு, ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் தான்.

திரு. செட்டியார் அவர்கள் பல கோவில்களுக்குத் திருப் பணி செய்த சிவபக்தர். இந்தியத் துணைக்கண்டமே வியக்கும் படி—தனிப்பட்ட முறையில் பல்கலைக் கழகம் நிறுவிய பெருந் தகையாளர்.

தாம் நிறுவிய அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்லூரியையும், இசைக் கல்லூரியையும் கூடவே ஏற்படுத்தி ஞர்கள்.

கல்வியோடும் கலையோடும் பக்தியோடும் உருண்டு புரண்டு விளையாடும் உல்லாச உள்ளம் படைத்தவர்களாக வள்ளல், அண்ணுமலையார் விளங்கினுர்கள். அதனுல் அவர்கள் உள்ளத் திலும் இசை உலகத்தில் இருந்த குழப்பம் உறுத்தியது.

தெரியாத பாஷையில் உள்ள பாடல்களையே பாடி வித் வான்கள் கச்சேரி நடத்துகிறுர்களே! தாய்மொழியில் பாடல் கள் பாடி கச்சேரி நடத்துவதற்கு வழியே இல்லையா என்று யோசித்தார்கள்.

அப்படி ஒரு யோசனை ராஜா சர் உள்ளத்தில் குறுக்கும் நெடுக்குமாக சதா ஓடிக்கொண்டிருந்ததனுல்தான், ரசிகமணி டி. கே. சி. இசைபற்றிப் பேசுவதையும் எழுதுவதையும் அங்கீ கரித்து ஏற்றுக்கொண்டார்கள்.

ஏற்றுக்கொண்டதோடு நிற்கவில்லை. எத்தனையோ காரி யங்களில் ஈடுபட்டிருக்கும் செட்டி நாட்டரசர், அவ்வளவு காரி

யங்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு ரசிகமணியிடம் நேரில் வந்து உறவாடினார்கள்.

ரசிகமணியின் தமிழிசைக் கொள்கையை முழுமனதோடு ஏற்றுக்கொள்வதாகவும் அதை நடைமுறைப்படுத்த ஆவன செய்வதாகவும் செட்டி நாட்டரசர் ‹ லிய முன்வந்தார்கள்.

1941-ஆம் வருடம் தேவ கோட்டையில் இசை மகாநாடு நடத்தினார்கள். ரசிகமணியை அம் மகாநாட்டில் தமிழிசை சம்பந்தமாகச் சிறப்புரை ஆற்ற செட்டி நாட்டரசர் கேட்டுக் கொண்டார்கள்.

டி. கே. சி. தமிழிசை சம்பந்தமாக எடுத்து விளக்கியதைக் கேட்ட செட்டி நாட்டரசர், தமிழிசை வளர்ச்சிக்காக முப்பதாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும், காரியங்களை தொடர்ந்து ரசிகமணியே முன்னின்று நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

1942-43ல் தமிழிசை மன்றம் சென்னையில் தொடங்கி நடைபெற்றது. திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அம்மையார், இசையரசு தண்டபாணி தேசிகர் போன்ற பிரபல இசைவாணர்கள் வந்து தமிழிலேயே இசைப் பாடல்கள் பாடினார்கள்.

அந்த முதல் இசை மகாநாட்டுக்கு ரசிகமணியையே தலைமை தாங்கிச் சிறப்பிக்குமாறு ராஜா சர் அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

ரசிகமணியை ராஜா சர் அவர்கள் எழும்பூர் ரயில் நிலையம் வந்திருந்து வரவேற்று உபசரித்தார்கள்.

தமிழிசை சம்பந்தமாக டி. கே. சி. தீவிரமாகச் செயல்பட்டதாலும், ரசிகமணியின் செயல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பலன் கொடுத்ததாலும் பாகவத உலகத்துக்கு ஆத்திரம் உண்டாகியது, ஆவேசம் பெருகியது.

''டி. கே. சிக்கு என்ன தெரியும்? தமிழ்தானே தெரியும்? தமிழோடு நிற்கவேண்டியதுதானே? சங்கீதத்துள் ஏன் வருகிறார்? இவரென்ன முறையாகச் சங்கீதம் படித்தவரா என்றெல்லாம் கூப்பாடுபோட்டது பாகவத உலகம்.''

''கல்கி'' பத்திரிகை ஒன்று தவிர, வேறு எல்லாப் பத்திரிகைகளும் பாகவத உலகத்துக்கு ஒத்து ஊதியது.

ரசிகமணி ஒன்றுக்கும் கலங்கவில்லை. சண்டமாருதத்தில் இமயமலை எப்படி நிற்குமோ அப்படிக் கலங்காமல் நின்றார். அமைதியாகப் பாகவத உலகத்துக்குக் கீழ்க்கண்டபடி பதில் கூறினார்:

''நான் முறையாகச் சங்கீதம் படிக்கவில்லை, கச்சேரி பண்ணவும் எனக்குத் தெரியாதுதான். ஆனால் சங்கீதத்தை எனக்கு அனுபவிக்கத் தெரியும். இது விளங்குகிறது, இது விளங்கவில்லை என்கிற வித்தியாசமும் எனக்குத் தெரியும். எல்லோருக்குமே இது தெரியும். மற்றவர்கள் தெரிந்ததைச் சொல்லாமல் இருக்கலாம். என்னால் அப்படி இருக்கமுடியாது'' என்று சுடச்சுட பதில் கூறினார்.

மேலும் சொன்னார்: ''எனக்குத் தமிழ்தான் தெரியும், சங்கீதம் இன்னதென்று தெரியாது என்கிறார்கள். தமிழ் தெரிந்ததனால் இது உண்மையான சங்கீதம், இது பித்தலாட்டமான சங்கீதம் என்று துணிந்து சொல்கிறேன். தமிழனுக்கு சங்கீதம் தமிழோடு சேர்ந்துதான் இருக்கும்! இங்கிலீஷ்காரனுக்கு இங்கிலீஷோடு சேர்ந்துதான் சங்கீதம் இருக்கும்!! பாடல் இல்லாமல் சங்கீதம் இருப்பது பாகவதர் கூட்டத்துக்குத்தான்!!! மக்களுக்கு அல்ல'' என்றார்.

பாகவதர்களே ஒவ்வொருவராக தமிழிசையில் வந்து தமிழ்ப் பாடல்கள் பாட ஆரம்பித்துவிட்டார்கள். தமிழிசை வெற்றி நடைபோட்டு வளர்ந்தது.

ஒரு சில பாகவதர்கள் கொதித்தார்கள்.

''டி. கே. சி. சொல்வதுபோல தமிழில் பாட கீர்த்தனைகள் எங்கு இருக்கின்றன'' என்று அதட்டினார்கள்.

''இதோ இருக்கின்றன கீர்த்தனைகள்'' என்று ஆயிரக்கணக்கான சாகித்யங்களை எடுத்துக்காட்டினார் டி. கே. சி.

''இந்தக் கீர்த்தனைகளில் சுத்தமான பக்தி இல்லையே, வெறும் காதல் பாடல்களாக அல்லவா இருக்கின்றன'' என்றார்கள் பாகவதர்கள்.

''ஆம், உண்மைதான், இறைவனைப்பற்றி நாயகன் நாயகி பாவத்தில் பாடி இருக்கிற பாடல்கள்தாம் உண்மையான பக்தி மயமான சாகித்யங்கள். ஆண்டாள், மாணிக்கவாசகர், தாயு

மாணவர் போன்ற மகான்கள் நாயகன் நாயகி பாவத்தில் பாடிய பாடல்களை நாம் படிக்கவில்லையா? ஒதுக்கியாவைக்கிறோம்'' என்று கேட்டார் ரசிகமணி.

பாகவத உலகம் மேற்கொண்டு புழுதியைக் கிளப்ப முடியவில்லை. திணறிப்போய் உட்கார்ந்துவிட்டது.

ஆனால் ரசிகமணி என்ன செய்தார்கள்?

முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, ஆனை ஐயா, அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதி போன்றவர்களின் நூற்றுக்கணக்கான பாடல்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவைகளில் விழுந்த பிழைகளை நீக்கினார்கள். விரசங்களைக் களைந்தார்கள். அவைகளைக் கீர்த்தனை (தரு)கள் என்றும், பதம் என்றும் பிரித்தார்கள். ஒவ்வொரு இசைப் பாடலுக்கும் உரிய அர்த்தபாவத்தை—நயத்தை விளக்கமாக முகப்பில் எழுதினார்கள். தமிழிசைப் பாடல்கள் என்று வெளியிட்டார்கள்.

பாடல்களைப் பார்த்த பாகவதர்கள் வாயடைத்துப்போனார்கள். டி. கே. சி. இசை உணர்விலும் அசகாயசூரனாக இருக்கிறாரே, அவரிடம் விளையாடுவது சிக்கல் என்று ஒதுங்கிவிட்டார்கள்.

இன்று தமிழிசை நிலைத்துவிட்டது. தமிழர்கள் எல்லோரும் உண்மையான இசையை—உணர்ச்சிபாவத்தோடுகூடிய இசையைக் கேட்டு ஆனந்திக்கிறார்கள்.

ரசிகமணி டி. கே. சி. ஐந்து கோடி மக்களுக்கும் வழங்கிய நன்கொடை இந்தத் தமிழிசை. என்றென்றும் நிலைத்து நிற்கும் அழியாத சீதனம் இந்தத் தமிழிசை.

பரதநாட்டியம் என்பது தமிழர்களுக்கே உரிய தெய்வீகக் கலை. ஆனால் இந்தக் கலையில் உள்ள அற்புதத்தைப் பார்க்காமல் —அக்கலையைக் கையாளும் பெண்களின் உல்லாசத்தையும் களிப்பையும் பார்த்து ஏமாந்துவிட்டார்கள் தற்காலத் தமிழர்கள். தமிழர்களின் ஏமாளித்தனத்தால் புனிதமான பக்திக்கு உரிய சாதனம் விலக்கிவைக்கப்பட்டது, மறைந்தே போய்விட்டது.

தற்காலத் தமிழர்களின் மூடத்தனத்தை நேருக்கு நேர் நின்று எதிர்த்தார் டி. கே. சி. அபிநயக் கலையின் அருமையையும் பெருமையையும் தமிழ் மக்களுக்கு எடுத்து விளக்கினார். அறியாமை மெள்ள மெள்ளக் கலைந்தது. கண்ணைத் திறந்து கூசிக் கூசியே முதலில் அபிநயத்தைப் பார்த்தது தமிழ் உலகம்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

பாலசரஸ்வதியின் பரதநாட்டியத்தின் திறமையை எடுத்து விளக்கினார் டி. கே. சி. கலைத்தெய்வம் பாலசரஸ்வதி என்று வாழ்த்தினார். பாலசரஸ்வதியின் பரதநாட்டியத்தைத் தம் இல்லத்திலேயே அடிக்கடி நடத்துமாறு உதவினார். புகழ்மிக்க தம் நண்பர்களை எல்லாம் அந்த அபிநயத்தைப் பார்த்து அனுபவிக்குமாறு செய்தார்.

டி. கே. சியின் அரும்பெரும் சேவையால்—புனிதமான தியாகத்தால், இன்று பரதநாட்டியம் வானுற ஓங்கி வளர்ந்திருக்கிறது. எல்லோரும் பரதநாட்டியத்தை உன்னதமான கலை என்று அங்கீகரித்துவிட்டார்கள்.

நம் நாட்டில் மட்டும் அல்ல, உலகின் பல்வேறு நாடுகளில் நம் பரதநாட்டியக் கலை பரவி அங்குள்ளவர்களே மதிக்கும்படி செய்துவிட்டது. நம் நாட்டையே கலைப்பொக்கிஷம் என்று அமெரிக்கா உள்ளிட்ட பல தேசத்தினர் பாராட்டுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் ரசிகமணியின் தொண்டுதான்.

தேய்ந்து மாய்ந்துகிடந்த பரதநாட்டியக் கலைக்குப் புத்துயிர் கொடுத்து வாழச் செய்தார் ரசிகமணி டி. கே. சி.

திருமதி ருக்மணி அருண்டேல் அவர்கள் சிறந்த நடன சிகாமணி. அவர்களிடம் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களைப் பத்து நாட்கள் தொடர்ந்து விளக்கிக்காட்டினார்கள் ரசிகமணி டி. கே. சி.

குறவஞ்சிப் பாடல்களில் உள்ள உணர்ச்சிபாவம், இசை வளம், நாடகப் பண்பு, உணர்ச்சிபாவங்களை இடத்துக்கு இடம் அபிநயம் பிடித்துக்காட்டும் தாளப்பண்பு எல்லாவற்றையும் சுட்டிக்காட்டி விளக்கினார்கள் டி. கே. சி. பத்து நாட்களும் தொடர்ந்து கேட்டு அனுபவித்த ருக்மணிதேவி அவர்கள் குறவஞ்சியை நாட்டிய நாடகமாகத் தயாரித்தார்கள்.

குறவஞ்சி நாடகம் அமெரிக்கா வரை சென்று அரங்கேறியது. நம் தமிழிசைக்கும், அபிநயக் கலைக்கும், நம் நாட்டுக்குமே பெரும் புகழ்பெற்றுத் தந்தது குறவஞ்சி நாடகம்.

ரசிகமணியின் உழைப்பால்—தியாகத்தால் தமிழ் மக்களாகிய நாம் உண்மையான இசையையும் அபிநயக் கலையையும் அனுபவிக்கிறோம்.

15. இறந்தும் வாழ்கிற பெரியார்

"மனுச காரியம் அவ்வளவுதான். மண்ணோடு மண்ணாய், சாம்பலோடு சாம்பலாய்ப் போய்விடுகிறதுதான்" என்று அடிக்கடி சொல்வார்கள் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

"இருட்டுக்குள் வந்து துழாவுவதுபோல இவ்வுலகுக்குள் வருகிறோம். கண்ணைத் திறந்து பார்ப்பதற்கே ஐம்பது வருடம் அறுபது வருடம் என்று ஆகிவிடுகிறது. ஒன்றிரண்டு விஷயங்கள் அரைகுறையாகத் தெரிகின்றன. எதுவும் தெளிவாகத் தெரிவதில்லை. மங்கலாகவே தெரிகின்றன. சரியாக இனம் கண்டு கொள்வதற்குள் காலதேவன் சங்கை ஊதிவிடுகிறான். எல்லாம் மாயமாய் மறைந்துவிடுகிறது."

மனுச வாழ்க்கையைப்பற்றி டி. கே. சி. மேலே கண்டபடி அடிக்கடி சொல்வார்கள்.

ஆம், உண்மைதான். கோடான கோடி பேர் உலகத்தில் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், மறைகிறார்கள். நிலைத்து நிற்பவர்கள் எத்தனைபேர்? லட்சத்தில் ஒருவர், இல்லை இல்லை. கோடியில் ஒருவர்—பல கோடியில் ஒருவரோ இருவரோதான் நிலைத்து நிற்கிறார்கள். இறந்தும் இறவாமல் வாழ்கிறவர் ஒருவர் அல்லது இருவர்தான். மற்றப்படி பிறந்தவர்கள் இறந்துவிடுகிறார்களே தவிர, இறந்தவர்கள் எல்லோரும் நிலைத்து நிற்கவா செய்கிறார்கள்?

ரசிகமணி டி. கே. சி. போன்றவர்கள் இறந்தபின்பும் இருக்கிறார்கள், வாழ்கிறார்கள், வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

ரசிகமணி அவர்கள் தமிழிசையில் இருக்கிறார்கள். பரத நாட்டியத்தில் இருக்கிறார்கள். பண்பாட்டில் இருக்கிறார்கள், மெய்ஞ்ஞானம் நிறைந்த சமய வழிபாட்டில் இருக்கிறார்கள், கம்பர், மாணிக்கவாசகர், முத்தொள்ளாயிரத்தார் முதலிய தமிழ்க் கவிகளிடம் இருக்கிறார்கள்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

மேலே குறிப்பிட்ட கலையும், பண்பாடும், சமய வழிபாடும் உள்ளவரை டி. கே. சியும் இருப்பார்கள். அழியாத்தன்மை யோடு சிரஞ்சீவியாய் இருப்பார்கள்.

ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கலை, பண்பாடு, கவிநலம், சமய ஞானம் சம்பந்தமாக பல கட்டுரைகள் எழுதி உள்ளார்கள். அந்தக் கட்டுரைகள் எல்லாம் அழகிய நூல்களாக வந்துள்ளன.

இதய ஒலி, கம்பர் யார், அற்புத ரஸம் என்ற பெயரில் நூல்களாய் வெளிவந்துள்ளன. நூல் வடிவம் பெறுத கட்டுரை களும் பல உள்ளன. தமிழ்க் களஞ்சியம் என்னும் கட்டுரை களும், வேறு பல கட்டுரைகளும் இருக்கின்றன.

ரசிகமணி டி. கே.. சி அவர்களை நேருக்கு நேர் பார்க்க வேண்டுமாளுல் மேலே குறிப்பிட்ட இதய ஒலியில் பார்க்கலாம்.

'கம்பர் யார்' என்பதில் பார்க்கலாம். அற்புத ரஸம் என் னும் நூலில் பார்க்கலாம்.

தமிழ்க் களஞ்சியம் போன்ற கட்டுரைகளிலும் பார்க்கலாம். நண்பர்கள் பலருக்கு டி. கே. சி. எழுதிய நூற்றுக்கணக்கான கடிதங்களிலும் அவர்களை நேருக்கு நேராக பார்க்கலாம்.

தமிழ்ப் பாடல்கள் எல்லாவற்றையும் ரசிகமணி எடுத்து விளக்கிஞர்கள். அவர்கள் விளக்காத உண்மையான தமிழ்ப் பாடல் ஒன்றுகூட இல்லை.

ரசிகமணியை கண்ணுரைக் காணவேண்டும் என்ருல் தமிழ் பாடல்களை அவர்கள் விளக்கிக் காட்டுகிற விளக்கங்கள்தாம்.

கம்பர் தரும் ராமாயணம், என்னும் கலைக் களஞ்சியமும், முத்தொள்ளாயிரம் என்னும் கவிக்கோவிலும் ரசிகமணியின் அற்புத சிருஷ்டிகள்.

ரசிகமணி கொலுவீற்றிருக்கும் கொலு மண்டபம் மேலே குறிப்பிட்ட கம்பர் தரும் ராமாயணமும், முத்தொள்ளாயிர விளக்கமும் ஆகும்.

ரசிகமணியின் மூலமாக, ஊமையாக இருந்த தமிழ் வசனம் வாய்திறந்து கலகல என்று பேசியது. குருடு நீங்கி எல்லாவற்றை யும் கண்டு களித்தது. முடம் நீங்கி ஓடி ஆடி விளையாண்டது.

பைத்தியம் பிடித்துப் பேந்தப் பேந்த விழித்த வசனம், புத்தி தெளிந்து அனுபவித்தது, ஆனந்தித்தது. கலகலவென்று சிரித்தது. கொஞ்சியது. குலாவியது.

ரசிகமணி டி. கே. சியை தமிழ் வசனத்தின் உல்லாசத்திலும் களிப்பிலும் நேருக்குநேர் நின்று பார்க்கலாம்.

மனிதர்கள் கோடிக்கணக்கில் வந்து போகிறுர்கள். நிலேத்து நிற்கும் மனிதர்கள் ஓரிருவர் தாம். மற்றவர்கள் எல்லாம் மறைந்தது போலவே மறந்தும் போய் விடுகிறுர்கள்.

மனிதர்களேப் போல்தான் புத்தகங்களும். ஆயிரக் கணக்கில்—பதிஞயிரக்கணக்கில் வந்த வண்ணமாக இருக்கின்றன. ஒரு நூலோ இரண்டு நூலோதான் நிலேத்து நிற்கிறது. சிரஞ்சீவியாய் நிற்கின்றது. மற்றவை எல்லாம் வந்தது போலவே போய் விடுகின்றன. எழுதினவர் போவதற்கு முன்பே அவர் எழுதிய புத்தகம் காலாவதியாகி விடுகின்றது.

உண்மையான இலக்கியம் என்ருல் அது என்றும் புதிதாக இருக்க வேண்டும். ஆயிரம் வருடம் இரண்டாயிரம் வருடம் சென்ற பின்பும் அந்த நூல் புதியதாய் இருக்க வேண்டும். புத்தம் புதியதாய் இருக்க வேண்டும்.

கம்பருடைய பாடல்கள், வள்ளுவருடைய குறள், முத்தொள்ளாயிரம் முதலியவை அப்படி இருக்கின்றன. ஆழ்வார் பாசுரங்களும், நாயன்மார் பாடல்களும் அப்படி ஒரு அழியாத் தன்மையில் நிற்கின்றன. கலிங்கத்துப்பரணி, குற்ருலக் குறவஞ்சி, பல தனிப்பாடல்கள், பிள்ளேப் பெருமாள் ஐயங்கார் பாடல்கள், பழந்தமிழ்ப் பாடல்கள் சில இப்படி எத்தனேயோ தெய்வ சிருஷ்டிகள் நிலேத்து நிற்கின்றன.

இன்னும் பல நூற்ருண்டுகளுக்கு—தமிழர்களும் தமிழும் இருக்கும் வரை இந்தப் பாடல்களும் நூல்களும் நிலேத்து நிற்கும்.

மேலே குறிப்பிட்ட தெய்வ சிருஷ்டிகள் போன்றவைதாம் ரசிகமணியின் கட்டுரைகளும், நூல்களும், கடிதங்களும். அவை என்றென்றும் நிலேத்து நிற்கும். என்றென்றும் புத்தம் புதியனவாய் இருக்கும்.

ரசிகமணி டி. கே. சி. அவர்களும் இந்நூல்களில் நிலேத்து நிற்கிறுர்கள். என்றும் இளேஞராய் அழகியராய் நிலேத்து நிற்கிறுர்கள்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

1954-ம் வருடம் பிப்ரவரி மாதம் பதினாறும் தேதி, செவ்வாய்கிழமை காலை எட்டு மணிக்கு ரசிகமணி தம் பொன்னுடலை உதறி எறிந்துவிட்டு, புகழாகிய உடலுள் புகுந்தது உண்மை தான்.

அன்று பிற்பகல் ஐந்து மணி அளவில் ராஜ மரியாதையோடு அவர்கள் பொன்னுடல் தகனம் ஆனதும் உண்மைதான்.

ஆனாலும் அவர்கள் நம்மிடையே நிலைத்து நிற்கிறார்கள். தமிழுக்குள்ளும் கவிக்குள்ளும், கலைகளுக்குள்ளும், பண்பாட்டுக் குள்ளும் நிலைத்து நிற்கிறார்கள். அன்றுபோல் இன்றும் நிலைத்து நிற்கிறார்கள். இன்றுபோல் என்றும் அவர்கள் நிலைத்து நிற் பார்கள்.

அவர்கள் நின்று அருள் பாலிக்கும் விந்தையை இதோ இரண்டு கட்டுரைகளில் கீழே கொடுக்கிறேன். ஒன்று அவர்கள் நாற்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் இலக்கிய கழகத்தில் பேசிய பேச்சு. தமிழ்ப் பேச்சு.

மற்றொன்று, திரிவேணி என்னும் ஆங்கில மாத இதழுக்கு, தமிழ்க் கவிகளின் தெய்வ நலம் பற்றி எழுதிய ஆங்கிலக் கட்டுரை. இதுவும் நாற்பத்து ஐந்து வருடங்களுக்கு முன் அவர்கள் எழுதியது தான்.

16. அற்புத ரஸம்

(கட்டுரை வடிவில் வந்த பேச்சு)

திருநெல்வேலியிலிருந்து ரயிலில் வந்து கொண்டிருந்தேன். ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றது. அங்கே இரண்டு வார்த்தை களை ஒரு விளம்பரப் பலகையில் பார்த்தேன். ''நவ ரஸ'' என்ற இரண்டு வார்த்தைகளும் கண்ணுக்குத் தெரிந்தன. ''அடடே, இங்கே கலைச் சங்கம் கட்டியிருக்கிறார்களா?'' என்று நினைத்துக் கொண்டேயிருந்தேன். ரயில் நகர்ந்தது, ''கிளப்'' என்ற வார்த்தையும் தெரிந்தது. சரி, 'நவரஸ கிளப்' தான்' சங்கம் அல்ல என்று தெரிந்து கொண்டேன்.

நம்முடைய சகோதரிகள் பரிமாறுகையிலே ஆறு ரஸம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆறு அல்ல, அறுபது ரஸங்களைப் பார்க் கிறோம். எத்தனையோ ரஸங்கள் அருமையாக வருகின்றன. கிளப்காரர் நவரஸம் என்று ஒன்பதோடு நிறுத்திக் கொண்டார்; ரொம்ப அடக்கமுள்ளவர்தான்.

நாம் பேச எடுத்துக் கொண்ட ரஸம் வேறு துறையில். நாவினால் அல்ல, உள்ளத்தினால் அனுபவிக்கும் ஒன்பது ரஸங்கள் அவை. உண்மையில் ஒன்பது அல்ல. ஷேக்ஸ்பியர், கம்பர் முதலானவர்கள் எண்ணிறந்த ரஸங்களைக் கொடுக்கிறார்கள். பாகு பாடு பண்ணினால் ஒவ்வொரு ரஸத்திலுமே எத்தனையோ சாயல் கள் தோன்றும். சௌகரியத்துக்காக நம்முடைய முன்னோர் களைப் போல், நாமும் ஒன்பதென்றே வைத்துக் கொள்வோம்.

நவரஸங்களில் அற்புதம் ஒன்று. அற்புதத்தைப் பற்றிப் பேசுகையில் மற்ற ரஸங்களும் வந்து ஊடாடலாம். ஆனால், அற்புதத்தையே பார்க்க வேண்டும். மற்ற ரஸத்தை மனக் கண்ணில் படாதபடி அகற்ற வேண்டும்.

சண்பக மரம் ஒன்று இருக்கிறது. அந்த மரத்தின் மீது முல்லைக் கொடியும் வளமாகப் படர்ந்து பூத்துக் கிடக்கிறது. முல்லைப் பூக்களைப் பற்றிப் பேசும் போது உள்ளே பொதிபட்டுக் கிடக்கும் சண்பகப் பூவை மறந்துவிட வேண்டியதுதான். ஒரு உணர்ச்சியை விட்டு விட்டு மேலே வந்து திகழும் மற்றொரு உணர்ச்சியையே பார்க்க வேண்டும்.

சரி, 'அற்புதம்' என்றால் என்ன? சாமானியமாய் அல்லாத காரியம் ஒன்றைக் கண்ட மாத்திரத்தில், உள்ளத்தில் எழுகிற உணர்ச்சிதான்; சிலவேளைகளில் எக்களிப்பும் உண்டாகும். அதுவும் அற்புதத்தோடு ஒட்டும்.

அற்புதத்தைப் பார்க்க வேணுமா? எங்கே பார்த்தாலும் அற்புதந்தான்.

இருட்டிய உடன் முற்றத்திற்கு வருகிறோம். ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. செவ்வாய் கிரகத்தைப் பார்க்கிறோம், இன்ன தேதி இன்ன நிமிஷம் உச்சிக்கு வரவேண்டுமென்று பஞ்சாங்கத்தில் சொல்லியிருக்கிறது. அப்படியே வந்து விடுகிறது. செவ்வாய்க் கிரகத்தினிடம் ஏதாவது 'காலண்டர்' உண்டா? இப்படி எல்லாம் நினைத்தால் அற்புதந்தான்.

மழை பெய்கிறது. பெய்த உடனே அந்தப் பருவத்துக்குரிய எத்தனையோ புல் பூண்டுகள் துளிர்த்துப் பூத்து நிற்கின்றன. போன போன இடத்திலெல்லாம் அவைகளைக் காண்கிறோம். ''அடடா! இவைகளுக்கும் 'காலண்டர்' தெரியுமோ?'' என்று எண்ணுகையில் அற்புதந்தான்.

பூனையானது குட்டி போடுகிறது. அது முன்னமேயே ஒரு நல்ல இடத்தைப் பார்த்து வைத்திருக்கிறது. குட்டி போட்டதும் பாதுகாக்க ரொம்ப வசதியெல்லாம் செய்து கொள்கிறது. ஆண் பூனை வராமலும் பார்த்துக் கொள்கிறது. இது மட்டுமா? பூனை தன் குட்டியைத் தூக்கும் சமர்த்தே சமர்த்து! குட்டியை மெதுவாகக் கௌவிப் போகிறதைப் பார்த்தால் அதிசயமாக இருக்கும். கௌவிப் பிடிப்பதில் தனியான லாவகம். சுவர்களையும், விட்டங்களையும் தாவிப் போய் குட்டியை மெள்ள வைத்து விடுவதும் அற்புதந்தான்.

மனுஷன் இருக்கிறான்; அவனிடம் எத்தனையோ அற்புதங்கள். சிப்பாய் தன் உயிரையே கொடுக்கப் போகிறான்! எதற்காகப் போகிறான்? அது அற்புதந்தான்!

பொய் சொல்வது என்று ஒரு காரியம். அது வெறுப்பான காரியம். ஆனாலும் உண்மையை மறைத்து விட வேண்டும் என்று கச்சைக் கட்டிக் கொண்டு கோர்ட்டுக் கூண்டில் ஏறுவான். ஏறியதும் உண்மை சொல்கிறதாகச் சத்தியம் செய்வான். அவ்வளவுதான். உண்மை அப்படியே வெளி வந்து விடும்! இதுவும் ஒரு அற்புதம்.

சர். ஸி. வி. ராமன் தனது ஆராய்ச்சிகளை எடுத்துச் சொல்லுகையில் ஒரே வியப்புத்தான். அறிகலை (சையன்ஸ்) நிபுணர்கள் நிமிஷந் தோறும் அற்புதங்களைக் கண்டு கொட்டிக் கொண்டு தானிருக்கிறார்கள்.

ஆனால், இந்த அற்புதங்கள், இப்போது நாம் நடத்தும் பரிசிலனைக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல. நாம் பேசப்போவது வேறு விஷயம், அது விஷயத்தோடு நிற்பதல்ல, உணர்ச்சியோடும் நிற்பதல்ல. உள்ளத்தில் உண்டான உணர்ச்சியைத்தான் (வியப்பைத்தான்) வெளியிடும் முறையைக் குறித்து நிற்பதே. அதாவது நாம் பேசப்புகுவது சையன்ஸ் அல்ல; ஆனால் ஆர்ட்டு. ஆர்ட்டு என்றால் அனுபவ வெளியீட்டுக்கலை என்று சொல்லலாம். இதற்கு மட்டுமே கலை என்ற வார்த்தையை உபயோகப்படுத்துவது நல்லது. சையன்ஸ்களை இயல்கள் என்று வைத்துக் கொள்ளலாம். ஸைக்காலஜியை உளஇயல் என்றும், எஞ்சினீரிங் சையன்ஸைத் தச்சியல் என்றும் சொன்னால் பொருந்தும்.

இனி கலைக்கு நேராக வரலாம். ஒரு ரசிகன் ஒரு விஷயத்தைப் பார்த்து அதிசயிக்கிறான். உள்ளத்திலே எத்தனை வருஷமானாலும் இருந்து கொண்டே இருக்கும் அது. அந்த ஆனந்தத்தை அற்புதத்தை வெளியிடுகிறான். கவியாக வெளியிடுகிறான். கவி பிறந்துவிட்டால் அந்த அதிசயத்துக்கு உருவம் ஏற்பட்டு விடுகிறது. உருவம் ஏற்படுவதுதான் கலை.

பரத நாட்டியத்தில் பாவங்களை முகத்தில் வெளியீடுகிறார்கள். உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகள் முகத்தில் தெரியவேண்டும். அப்போதும் பாவம் வருகிறது என்கிறோம். நாட்டிய இலக்கணத்தைப் படித்து அல்ல; கண்ணிலும், உதட்டிலும், புருவத்திலும் எல்லா அங்கங்களிலும் உள்ளுணர்ச்சி பிரவேசித்து வருகையில் தான் கலை ஆகிறது. அதுதான் 'மெய்ப்பாடு'. அபிநயம்—இது ஒரு கலை.

இதைவிட நுட்பமான கலை சங்கீதம். அற்புத உணர்ச்சி என்றால் அது சங்கீதத்தில் வெளிப்படவேண்டும். சங்கீதத்துக்குப் பாவந்தான் பிரதானமானது. இதய பாவம் இல்லாது போனால் மட்டமான சங்கீதந்தான். நம்முடைய முன்னோர்கள் பாவத்தையே முக்கிய அம்சமாக எண்ணினார்கள். மேல் நாட்டார் கூட எண்ணுகிறார்கள். அடையாற்றிலே ஒரு டச்சுக்கார அம்மையார் இருந்தார். மேல் நாட்டு சங்கீதத்தை பாவத்தோடு பயின்றவர். அந்த அம்மையாருக்கு நம் சங்கீதத்தைக் கேட்க வேண்டுமென்ற ஆவல். வீணை தனம்மாள் வீட்டுக்குப் போய், சங்கீதத்தைக்

கேட்டு ரொம்பவும் அனுபவித்தார், வியந்தார். பிறகு, அந்த அம்மையார், ''இந்த நாட்டு வழக்கப்படி நான் என் ஆனந்தத்தைத் தெரிவிக்கிறேன்'' என்று சொல்லித் தனம்மாளுக்கு நமஸ்காரம் செய்தார்.

நம் சங்கீதத்தை டச்சு தேசத்து அம்மையார் அனுபவித்து விட்டாரே என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. சங்கீதம் வேறு நாட்டுக்குக் கொண்டு போகக் கூடியதல்லதான். ஆனாலும் மேல் நாட்டார் கூட பாவத்தை வைத்தே சங்கீதத்தின் பண்பை பார்க்கிறார்கள் என்று தெரியவந்தது.

இனி கவி. கவி என்பது தானாக வரவேண்டிய அரிய வஸ்து. முன்னோர்கள் ரொம்ப நன்றாகச் சொன்னார்கள். ஆயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் கவிஞன் பிறப்பான் என்று.

கவிக்கு உருவம் அமைய வேண்டும். அமைந்து விட்டால் பிரமாதமான காரியந்தான்.

கவியில் உருவத்தைத்தான் ஆங்கிலேயர்களும் பாராட்டுகிறார்கள். ஆனால், ஆங்கிலத்தில் நாம் இதை அனுபவிக்க முடியுமா? ரொம்பக் கஷ்டம். முடியாது என்றே சொல்லலாம். விஷயம் விளங்கும். நானும் எவ்வளவோ முயற்சித்துப் பார்க்கிறேன். தத்துவங்கொல்லாம்—ஏ.ஸி. பிராட்லிக்குத் தெரிவதைவிட, ஷேக்ஸ்பியரில் வரும் ஞானிகள் சொல்வதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. வசனமாக விஷயம் தெரிகிறதே ஒழிய கவியை அனுபவிப்பது கஷ்டமாய்த்தான் இருக்கிறது.

தமிழுக்கு வருவோம். செய்யுளிலே பாவமான உருவம் அமைந்து வரவேணும். சும்மா எதுகை மோனை வைத்துக் கட்டி விட்டால் கவி ஆய்விடும் என்று எண்ணி விடக்கூடாது. ரோஜாப் புஷ்பத்தை இதழ் வேறு, காம்பு வேறாகப் பிய்த்து உரலில் போட்டு இடித்து எடுத்து வந்து, ''இந்தாருங்கள் ரோஜாப்பூ'' என்று சொன்னால் நமக்கு எப்படி இருக்கும்?

உருவம் என்றால் உணர்ச்சியின் சாயல் வரவேண்டும். விஷயத்தை சொன்னால் காணாது. விஷயம் அல்ல முக்கியம். உணர்ச்சியும் அல்ல. விஷயமும் உணர்ச்சியும் உருவத்துக்காக உபயோகப்படும் காரியங்கள். உரம், மண், தண்ணீர் எல்லாம் எப்படி புஷ்பத்துக்காக உதவுகின்றனவோ அதே மாதிரி, விஷயம், உணர்ச்சி, சிருஷ்டி செய்வதில் ஏற்படுகிற உற்சாகம், எல்லாம்

சேர்ந்து உருவத்தை உண்டாக்கித்தந்தன என்றுதான் சொல்ல வேண்டும்.

தாகூரது நூல்களைப் படித்தால் இந்த உண்மை நன்றாய்த் தெரிய வரும். ஒரு செய்யுளை நாம் பார்ப்போம். முருகன் எழுந்தருளிய ஒரு குன்று. குன்றின் வளத்தைப் பார்த்திருந்தால் தெரியும். (எங்கள் ஊர் குற்றால மலைக்குப் பக்கம்) நானும் நண்பர்களும் குற்றால மலையில் சண்பகாடவி அருவியைப் பார்த்து விட்டு வந்தோம். நேரம் அந்திப்பொழுது; வரும்போது ஓரிடத்தில் திரும்பினோம். ஒரே வாசனை, எதனுடைய வாசனை? காட்டு மல்லிகையின் வாசனை. இப்போது நான் சொல்வது ஒரு பூர்வமான பழையபாட்டு. பாட்டென்றால் எப்படி வர வேண்டும்? உருவம் வருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் 'மௌவல்' என்று காட்டு மல்லிகைக்குப் பெயர். முருகன் குன்றம் எப்படி இருக்கிறது?

மாலை மணம்கமழ
மௌவல் முகைவிரியும்
—எந்தை குன்றம்!

இதைச் சொன்ன மாத்திரத்திலே உருவமே, அதாவது அற்புதத்தின் சாயலே வந்துவிட்டது. எங்கள் இறைவன் முருகன் இப்பேர்ப்பட்ட குன்றில் அல்லவா இருக்கிறான் என்று வியந்து சொல்லும் பாவம் தெரிகிறது.

காலை மணிக்குவளை,
காதலர்போல் கண்விழிக்கும்
—எந்தை குன்றம்

காதலர் ஒருவர் மற்றவரை விழுங்குகிற மாதிரி அப்படியே வெறித்துப் பார்ப்பார்கள். குவளை மலரும் அப்படிப் பார்க்கிறது! இனி:

மூங்கில்கள் அங்கே காற்றினால் அப்படியும் இப்படியுமாக வாள் வீசுவதுபோல ஆடும். விஷயத்தை விளங்க வைக்க வேண்டி, டெனிஸனிலிருந்து ஒரு உதாரணம். டெனிஸன் இம்மாதிரி காட்சிகளைக் கண்டு அனுபவித்தவர். நன்றாகச் சொன்னார்.

''ஒரு சிறு மேகக் குஞ்சு கையை நீள விட்டு விட்டு, மரம் மரமாக மெள்ளத் தவழுகிறது.''

' A tender cloud puts forth an arm and creeps from pine to pine.'

எனக்குச் செய்யுளில் இருக்கும் விஷயந்தான் தெரிகிறது. கவி உருவத்தின் நயம் தெரியவில்லை. இங்கிலாந்து தேசத்துக்குப் போய் பயின்ற காரணத்தால் புரபசர் சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியவரும்.

முருகன் குன்றத்திற்கு வருவோம். அங்கேயும் ஒரு மேகக் குஞ்சு; பக்கத்தில் நின்ற மூங்கில் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது; ஆடும்போது என்ன நேர்ந்தது?

ஆடு கழைகிழிக்கும்
அந்தண் புயலிற்றே
—எந்தை குன்றம்!

(கழை—மூங்கில்; அந்தண் புயல்—அழகியதாயும், ஜில் என்றும் இருக்கிற மேகம்; புயலிற்றே—புயலை உடையது.)

நேரம் சாயங்காலம். ஆறுமணி. பிறைச் சந்திரன் உச்சியில் தோன்றுகிறது.

நீடு கழை மேல்
நிலா மதியம் நிற்குமே
—எந்தைகுன்றம்!

இப்போது கவியை முழு உருவத்தோடு பார்க்கலாம்.

''மாலை மணங்கமழ
மௌவல் முகைவிரியும்
—எந்தைகுன்றம்!

காலை மணிக்குவளை
காதலர் போல் கண்விழிக்கும்
—எந்தைகுன்றம்!

ஆடு கழைகிழிக்கும்
அந்தண் புயலிற்றே
—எந்தைகுன்றம்!

நீடு கழை மேல்
நிலாமதியம் நிற்குமே
—எந்தைகுன்றம்!

இந்தக் கவியில் உருவம் இருக்கிறது. அற்புத பாவம் இருக்கிறது. அபிநயம் காட்டும்போது முகத்தில் அற்புத பாவம் இருக்கிறது என்று சொல்வதுபோல.

இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டால் நலம். மேலே சொன்ன கவியில் அற்புதம் தெளிவாய் இருக்கிறது. அந்த உணர்ச்சி வெளியே வந்து துலாம்பரமாய்த் தெரிகிறது. கவிக்குள் வருகிற விஷயத்தைப் பார்த்தால் பக்தி அனுபவமும் வர்ணனை அனுபவமும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் உருவத்தைப் பார்த்தால் அற்புத பாவமே விளங்குகிறது. சண்பக மரத்தின் மீது முல்லைக் கொடி படர்ந்து ஒரே வெண்மை மயமாய்ப் பூத்திருப்பத்தைப் பார்ப்பதுபோல் அற்புத உருவத்தை மாத்திரம் பார்க்கிறோம்.

நம்முடைய பள்ளிக்கூடங்களில் கவியைப் பற்றிப் பேசும் போது, உருவத்தை விட்டுவிட்டு விஷயத்தை மட்டும் பார்க்கிறோம். அது காரணமாகவே கவிஉருவம் என்பது கொஞ்சமும் இல்லாத செய்யுள்களையே கவியென்று எண்ணியும் பாராட்டியும் வர நேர்ந்துவிட்டது. ஆகவே கவிக்கும் கவி அல்லாத வெற்றுச் செய்யுளுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது. இப்படிப் பேசிமுடித்தார்கள் ரசிகமணி, டி. கே. சி.

17. The Song World in Tamil—A Glimpse*

THE Tamil language has, through the course of thousands of years, developed wonderful poetic forms. The forms are the outcome of the pulsating rhythm and music that pervade the song as a spirit ; and it would be no exaggeration to say that to miss that spirit is to miss the whole poem ; and, further, that the forms thus evolved are untranslatable. An attempt, however, has been made to indicate, in English prose, how the Tamil poets have been trying to express their emotional realities. In the process of rendering, names of places and **deities** have been omitted, lest these things, gritty to the unaccustomed ear, should stand in the way of appreciating the sense of the poem. Again, to give the prose rendering the simplicity of the song, the narrative forms in the original have been changed, when needed, to vocative forms. The originals are also included.

1

PEACE BE WITH YOU

The joy that comes of temple worship has been and is a living reality for the pious. Those that have gone through that pious experience, by strewing flowers at the feet of the Deity and doing obeisance before the **sanctum sanctorum**, can easily understand the depth of the feeling that found expression in the following song. (Some three hundred or four hundred years ago.)

Why art thou restless, my heart ?
　　Peace be with you :
The Lord's feet are there
　　and there are the Sage's Songs in praise of them.
And there is the mouth to sing
　　and the hands are there to strew flowers
And, to low homage to the twin feet
　　there is the head :
Why are thou restless, my heart ?
　　Peace be with you.

* இது திரிவேணியில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை.

மாலுண்டு நெஞ்சே
வருந்துவதென், பால்வண்ணன்
காலுண்(டு) அடியார்
கனிந்திசைத்த — நூலுண்டு;
வாழ்த்திட நம் வாயுண்(டு)
அலர் சொரியக் கையுண்டு
தாழ்த்திடவும் உண்டே
தலை.

2

NO GOD WHATEVER

We know that the eye reaches the very stars ; but not the ear and the other senses.

We know also that, for a girl who is married, the husband is the only one, in the world of relations, to be taken into account. When the youth goes to a distant land, perhaps never again to return, the young wife has only to follow him bidding farewell to her dear father, mother and other kindred.

Again a man may have abounding wealth. Is there any worth in all that if, in the evening of his life, he has to see his sons playing ducks and drakes with his property, thus giving him endless worry and anxiety ?

Now as for the mother's affection for her child, it is something incomprehensible.

It really transcends all considerations of self—nay, reason itself. Now the song : (1st Century A.D.)

There is no member, precious as the eye ;
No kindred close as the husband ;
No wealth covetable as wise sons ;
And, to compare unto the mother,
there is no God whatever.

கண்ணிற் சிறந்த
உறுப்பில்லை, கொண்டானில்த்
துன்னிய கேளிர்
பிறரில்லை, மைந்தரில்

ஒண்மையவாய்ச் சான்ற
    பொருளில்லை, ஈன்றாளோ(டு)
எண்ணக் கடவுளும்
    இல்.

3

BIRTH IS COVETABLE

The image of Nataraja, its transcendent beauty, and the interpretative art enshrined therein are now familiar to the entire Art-world. Through the dancing pose of the Deity at Chidambaram, we have to see a vast figure, filling the very heavens, dancing and whirling in ecstatic joy : and again, through this cosmic image, one has to perceive the oneness and harmony that governs the whole universe, and thus realise the joy infinite. Here is a glimpse of such a realisation :

Thy matted locks waving in the skies,
Thy complexion resplendent ;
The milk-white ashes besmeared thereon,
The arched brow, Thy ruddy lips.
The smile mysterious,
And, above all, Thy lifted foot
    dripping as though with honey,
These, O Lord ! if one could have a vision of,
Even the birth, on this earth, as a human mortal is
    Worth striving for.

(Found in the Hymns of Appar, 7th Century A.D.)

பனித்த சடையும்
    பவளம் போல் மேனியும்
        பால் வெண்ணீறும்
குனித்த புருவமும்
    கொவ்வைச் செவ் வாயும்
        குமிண் சிரிப்பும்
இனித்தம் கசிய
    எடுத்த பொற் பாதமும்,
        காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும்
    வேண்டுவதே இந்த
        மானிலத்தே.

4

THE THREE WORLDS DO HEAR

Man's life on this earth has never been an easy one. From Adam down to the present-day coolie, man had to live by the sweat of his brow. The land of plenty and the land of drought are often things far apart. The rich and the poor seem to be also eternal entities. Under these circumstances the bountiful heart feels the need of giving relief to the poor and out of true charity, gives. This gift finds response in the grateful hearts of thousands. No wonder when people go from place to place, (pilgrimage was such a common thing in those ancient days) from Cape Comerin to the very Mount Kailas, they found an inexhaustible theme in the acts of charity they witnessed or heard of. Even today a munificent gift made in this country finds recognition in the columns of a New-York newspaper the next morning. Now let us see how the poet sings of this grateful appreciation of a gift. Here is an old song. (1st Century A.D.)

The beat of the Drum is heard miles afar ;
The thunder in the clouds is heard for tens of miles
But all the three worlds do hear
The praise that a gift was made
Though, on this earth.

கடிப்படி கண்முரசம்
காதத்தோர் கேட்பர்;
இடித்து முழங்கியது
யோசனையோர் கேட்பர்;
அடுக்கிய மூவுலகும்
கேட்குமே—ஈண்டு
கொடுத்தார் எனப்படும்
சொல்.

5

HINGERES WEAR OUT

Here is a love-song of the twelfth century (A.D.). The lady-love expects her lover to return in the evening. She is alone in the house and is waiting till it is almost midnight. Then she goes

to bed. But she is restless, walks to the door and opens it to see if her lover is coming. The lover is not seen. She closes the door and returns to her bed. Again in a few minutes she goes to the door and in despair returns to the bed. This going and returning goes on incessantly till sunrise. All this is expressed in a couplet :

Expectancy opens and Despair shuts
And thus swings the door from eve to morn
Thereby wearing out the hinges.

வருவார் கொழுநர்
    எனத்திறந் தும்
வாரார் கொழு நர்
    என அடைத் தும்
திருகு குடுமி
    விடியள வும்
தேயும் கபாடம்
    திறமி னே.

6

SON'S DUTY

It is indeed difficult to realise fully all the psychological implications of war, as it was a couple of thousand years ago. People never had the long periods of peace which have been prevailing of late. In the present-day warfare, it is not any soul force but only a mechanical force operating against the one on the other side.

The operative force being mechanical, war has only a depressing effect upon the people. Whereas, in those ancient days war brought out the innate heroism in men and also women. We will see how a woman felt the supreme need of war-like spirit in a land subject to constant attacks from neighbouring states. It would almost seem as though her attitude to her son was unmotherly:

My duty as mother is to bring forth and to bring up ;
To educate is the father's duty ;
To make manful is the King's duty ;
To give the spear is the duty of the blacksmith ;

And my son's duty is—
To plunge into the battle-field,
To pierce the elephant in the enemy's line,
And return triumphant.

ஈன்று புரந்தருதல்
    என்தலைக் கடனே,
சான்றோன் ஆக்குதல்
    தந்தைக்குக் கடனே.
நன்னடை நல்கல்
    வேந்தற்குக் கடனே.
வேல்வடித்துக் கொடுத்தல்
    கொல்லற்குக் கடனே:
ஒளிறுவாள் அருஞ்சமர்
    முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
    காளைக்குக் கடனே.

7

TO MORE LEARNING

Till very recently, Art and Poetry had to be fostered, practically all the world over, by patrons. For thousands of years the Tamil Country was fortunate enough to have munificent patrons. But for such patronage, the poet's lot would have been a melancholy one, and "chill penury" would have frozen "the genial current of his soul".

In one of the eastern ports of Tamilnad (Kayalpatnam) some two hundred years back, there was a merchant prince, Seyd Khadar by name. He had such a fine sense of poetry that he had always about him poets and scholars of taste and learning, and his munificient gifts to the poets was the talk of everybody in the land. A number of poets as a result of his patronage put forth their best endeavours in bringing out poems. In the midst of all this bounty and poetic adventure, the patron died, and that suddenly. The despair that must have overtaken those patronized, may easily be imagined. Now—for the voice of despair.

The goddess of wealth is there ;
The goddess of Earth with all her bounty is there ;
The goddess of the muses also is there ;
We ourselves are, O Poets, all alive here ;
What avails all this
When our patron Lord is now no more.—
Learning, O brethren, is dead, dead, for ever dead.

பூமா(து) இருந்தென்
புமிமா(து) இருந்தென் இப்
பூதலத் தில்
நாமா(து) இருந்தென்ன
நாமும் இருந்தென்ன
நாவலர்க்குக்
கோமான், அழகமர்
மால்சீதக் காதி,
கொடைக் கரத்துச்
சீமான் இறந்திட்ட
போதே புலமையும்
செத்தது வே.

8

GOD'S DWELLING

It would be no exaggeration to say that thousands of years ago, why tens of thousands of years ago, some great souls had discovered the truth God was all-pervasive, and that in the inmost heart of every human being the spirit of God was present.

We will see how a Tamil song sung by a woman saint (Karaikal Ammaiyar—5th Century A.D.) bursts with that every joy of realisation.

There are those who say that Lord God is with the
celestials, let them say so ;

There are again people to say that he is with the king
of the celestials, by all means let them too say so ;

But " God is within me ", say I.

The song is simple but profound.

வானத்தான் என்பாரும்
என்க, மற்(று) உம்பர்கோன்
தானத்தான் என்பாரும்
தாமென்க—ஞானத்தான்
முன்நஞ்சத் தாலிருண்ட
மொய்யொளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத் தான் என்பன்
யான்.

(பேச்சிலும் எழுத்திலும் அப்படி நிலைபெற்று நிற்கிறார்கள் ரசிகமணி டி. கே. சி.)

ரசிகமணி டி. கே. சி. வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : 18-8-1881 வியாழக்கிழமை
ஸ்ரீ விஷ்ணு வருஷம், ஆவணி மீ 4உ
கொல்லம் ஆண்டு 1057
ரோகிணி நட்சத்திரம் (ஸ்ரீ ஜயந்தி தினம்)

திருமணம் : 11-5-1908—மனைவி பிச்சம்மாள் அண்ணி

மகன் பிறப்பு : 1909—ஒரே மகன் தீத்தாரப்பன் (தீபன்) (1909—1941)

மணி விழா : நண்பர்கள் ஏற்பாடு செய்து மணி விழா கொண்டாடிய நாள்—13-9-1942

31-10-1953 : ''கம்பர் தரும் ராமாயணம்'' வெளியீட்டு விழா —தமிழக முதல்வர் ராஜாஜி அவர்கள் தலைமை வகித்து நூலை வெளியிட்டார்கள்

16-2-1954 : மறைவு தினம் (செவ்வாய்க்கிழமை).

தென்காசியில் ஆரம்பக் கல்வி.
திருச்சி செயிண்ட் ஜோசஃப் கல்லூரியில்—F. A.
சென்னை கிறிஸ்தவ கல்லூரியில்—B. A.
சட்டக் கல்லூரியில்—B. L.

1915 முதல் சில ஆண்டுகள் திருநெல்வேலியில் வழக்குறைஞர் தொழில்.

வெளிவந்த நூல்கள்

இதய ஒலி— ஜனவரி 1941 (பின்னர் மூன்று பதிப்புகள்).
கம்பர் யார்?—14-12-1941 (பின்னர் ஒரு பதிப்பு).
முத்தொள்ளாயிரம்—14-1-1943 (பின்னர் இரண்டு பதிப்புகள்).

அற்புத ரஸம்—ஜனவரி 1944.
கடிதங்கள் (தொகுப்பு)—1961.
ரசிகமணி கடிதங்கள்

ரசிகமணி டி. கே. சி. வாழ்க்கைக் குறிப்பு

(ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களுக்கு எழுதியவை)—1979.

ரஸனையின் ஒலி

(G. C. பட்டாபிராம் அவர்களுக்கு எழுதிய கடிதங்கள்)
—டிஸம்பர் 1984

கம்ப ராமாயணம்

பால—அயோத்யா காண்டங்கள்—1-4-1942.
ஆரண்ய காண்டம்—31-12-1943.

கம்பர் தரும் ராமாயணம்

முதல் பாகம்—31-10-1953.
இரண்டாம் பாகம்—1954.
மூன்றும் பாகம்—1955.

மலேரியா காய்ச்சல் காரணமாக வழக்குறைஞர் தொழிலை விட்டுவிட நேர்ந்தது. அதுசமயம் கம்ப ராமாயணம் படித்து அதில் ஈடுபட்டு கம்பன் கவியின் நயத்தை உணர்ந்தார்கள்.

அதன்பின் வாழ்க்கையின் குறிக்கோள் கம்பன், பண்பாடு, தமிழ் இலக்கியம், தமிழ் இசை என்று ஆயிற்று.

1927—1930 M. L. C. பதவி.

1930—1935 இந்து அறநிலையத்துறை ஆணையர்.

1942 முதல் பல ஆண்டுகள் "கல்கி"யில் தொடர்ந்து "கம்பர் தரும் காட்சி" எழுதினார்கள். அந்தக் கட்டுரைகளே "கம்பர் தரும் ராமாயணம்" என்ற தலைப்பில் பின்னர் வெளிவந்தது.

1943 முதல் தமிழ் இசை விழாவுக்குத் தலைமை ஏற்றார்கள்.

1947—ராஜா சர் அண்ணாமலை செட்டியார் சார்பில், சாந்தி நிகேதன் விஸ்வபாரதி பல்கலைக் கழகத்துக்கு ரூ. 10,000/- பெறுமான தமிழ் நூல்களை ஒப்படைத்தார்கள்.

"'ரசிகமணி' என்றாலே தமிழ், தமிழ் இலக்கியம்" என்னும்படி தமிழ் மொழியின் உயர்வையும் தமிழ் இலக்கியத்தின் தனிச் சிறப்புகளையும் தாம் அனுபவித்து, பிறருக்கும் உணர்த்துவதையே வாழ்க்கை நெறியாக இருந்தவர் டி.கே. சிதம்பரநாதர் (1882 - 1954). கல்வி மான். அரசாங்கப் பதவிகள் வகித்தவர். ஆனால் "வட்டத்தொட்டி" என்ற இலக்கிய அமைப்பின் வழியே படித்தவரையும் பாமரரையும் பரவசத்தில் ஆழ்த்திப் புகழ் பெற்றவர். இலக்கிய இன்பங்களை "இதய ஒலி" என்ற கட்டுரைத் தொகுப்பில் அறிமுகப் படுத்தியவர். கம்பன் கவிதைகளைத் தரம் அறிந்து அனுபவிக்கக் கற்றுக்கொடுத்தவர். பண்பாட்டின் உறைவிடம் என வாழ்ந்துகாட்டிய பெரியவர். ராஜாஜியின் வாக்குப்படி, "ரசிகமணியே ஒரு அரிய தமிழ்க் கவிதை." இவரது வாக்கும் எழுத்தும் ஒரு புதிய தலைமுறை ரசிகர் குழு வுக்கு ஆதாரமாக விளங்கின. இவரது கம்ப ராமாயண, முத்தொள்ளாயிரப் பதிப்புகள் புகழ்பெற்றவை.

நூலாசிரியர் ல. சண்முகசுந்தரம் அவர்கள் ரசிக மணியை நேரில் அறிந்து நெருங்கிப் பழகியவர். சிறந்த எழுத்தாளரும் ஆராய்ச்சியாளருமான இவரது படைப்பு, ரசிகமணியை ரசித்து உணரும் அறிமுகமாக அமைந் துள்ளது. இதனை சாகித்திய அக்காதெமி பெருமையுடன் வெளியிடுகிறது.

சாகித்திய அக்காதெமி

ரூ. 12